2719

T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: L NO: 1 and 2

April 16th 18

1983

D
V211,31 N83
N83.50.1&2
136039

வெளியீடு 10–11–1983] [Issued 10-11-1983

ஆணையர்
...டு ஆவணக்காப்பகம் மற்றும்
...வரலாற்று ஆராய்ச்சி
10 சன 1984
2719
...ழ்நாடு ஆவணக்காப்பகம்
...ம்பூர், சென்னை-600 008

(8)

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## அணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

சனிக்கிழமை ஏப்ரல் 16, 1983—தொகுதி L எண் 1

Saturday 16th April 1983—Volume L No. 1

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை–600 009

**Legislative Assembly Department, Fort St. George**
**Madras-600009**

விலை ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 Paise

V2l1,31.N83
N83.50.1982
136039
சென்னை-600 008

உள்ளடக்கம்.

1983 ஏப்ரல் 16

| | பக்கங்கள் |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும். | i |
| (ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. | v |
| (iii) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற) பெயர்ப் பட்டியல் .. .. .. — .. | ix |
| 1. வினாக்கள்—விடைகள் : | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 1—39 |
| 2. தகவல் கோரல் : | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள். | 39—40 |
| 3. ஒத்திவைப்புத் தீர்மானம் : | |
| சென்னைக்கு கிருஷ்ணா நதிநீர் வழங்குவது குறித்த பேச்சு வார்த்தை .. .. | 41—57 |
| 4. அறிக்கை அளித்தல் : | |
| மதிப்பீட்டுக் குழு — — — — | 57—58 |
| 5. வரவு–செலவுத் திட்டம் 1983—84 வாக்கெடுப்பு | |
| கோரிக்கை எண். 15—காவல் துறை .. | 58—70 |
| கோரிக்கை எண். 16—தீயணைப்புப்பணிகள் | |
| திரு. என். எஸ். வி. சித்தன் | 58—71 |
| திரு. துரைமுருகன் | 71—90 |
| 6. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் : | 90 |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர்லால் குரானா

*அமைச்சரவையின் உறுப்பினர்கள்:*

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரை பாகு கழிவு, தொல்பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் ராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்)—கிராம குடிசை சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத் துறை, முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த்துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்பட தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத்துறை, வனங்கள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக்கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி, கைத்தறி

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்)— வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு—சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித்துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் நிவாரணம், பூமிதானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர் வீட்டுவசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளிவிவரங்கள் தமிழ்நாடு, குடிநீர்வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர் பாசனத்துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃப்.

14. மாண்புமிகு திரு சு. முத்துசாமி (போக்குவரத்துத்துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்)—பெருந்தொழில்கள், சுரங்கங்கள், கனிப்பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்)—கதர், மது அனுமதி சீட்டு வழங்கல், நீங்கலாக மது விலக்கு பயண இசைவுச் சீட்டு பொதுப் பணித்துறை மற்றும் பொதுப்பணித்துறை அலுவல்கள் சம்பந்தமாக.



17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள், அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சு காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர் பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்புப் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதிசினிவாசன் (சமூகநலத்துறை அமைச்சர்)—மகளிர் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம் கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அநாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டவர்கள் நலம் சீர்திருத்த நிர்வாகம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## Governor of Tamil Nadu.

Thiru S. SUNDAR LAL KURANA.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M. G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collector, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN(Minister for finance),—Finance, Legislature, Election, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY, (Minister for Rural Industries)— Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6 Hon. Thiru R M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)— Information and Publicity, Film Techno-logy, Tourism, Torism Development Corporation, Cirematograpy Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and grant of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAKAM (Minister for Education)—Education including Technical Education, Official Langu-age and Handlooms.

8. Hon. Dr. K. KALIMUTHU (Minister for Agriculture) Agriculture, Agriculture Refinance, Agricultural Engineering wing and Agro Engeneering.

9. Hon. Thiru C. PONNAIAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Mea-sures, Registration of Companies Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Localt Administration), Municipal Administration Panchayats and Panchayat Unions,Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways,

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Watter Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H. V. HANDE (Minister for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation —Agro Service Co-operative Societies, Irrigation iucluding Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines aad Minerals and Textiles.

16. Hon. Thiru S. N. RAJEDRAN (Minister for Public Works and Khadi) Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits, Passports Public Works Department and Establishment matter relating to Public Works Department.

17. Hon. Thiru M. VIJAYASARATHI (Minister for Adi-Dravidar Welfare)—Adi-Dravidar Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)—Social welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத்தலைவர்:

*மாண்புமிகு திரு. க. இராசாராம்.

### பேரவைத் துணைத்தலைவர்:

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### **மாற்றுத்தலைவர்கள் பட்டியல்.

1. திரு. க. பாலசுப்பிரமணியன்.
2. திரு. ஆர். டி. கோபாலன்.
3. திரு. ப. பொன்னுரங்கம்.
4. திருமதி தா. இராசாம்பாள்.
5. திரு. கு. ரமணி.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி. ஏ. பி. எல்.

### துணைச் செயலாளர்கள்,

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.
திரு. கா. சீனிவாசன், பி.எஸ்.சி. (குழு அலுவலர்)
திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல். (சார்புச் செயலாளர்
திரு. பெ. பள்ளிக்கொண்ட பெருமாள், பி.ஏ.,பி.எல். (சார்புச் செயலாளர்.)
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ.,பி.எல். (சார்புச்செயலாளர்.)
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம். (சார்புச் செயலாளர்.)
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ. (சார்புச் செயலாளர்.)
திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல். (எஜ்டேட் அலுவலர்.
திரு. பி. கோதண்டராமன், பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.)

திரு. சி. பாலசுப்பிரமணியன் (தலைமை நிருபர்.)

### (விவாதப் பதிப்பாளர்.)

திரு. வி. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்.பி.

---

*21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
**27—1—1983 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பெற்ற) பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 1 | அங்குசாமி, திரு. ச. | திருவாடானை |
| 2 | அண்ணாதாசன், திரு. எம். | திருவரும்பூர் |
| 3 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4 | அப்பாதுரை, திரு. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6 | அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 7 | அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ.வ.) |
| 8 | அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 9 | அரங்கராசன், திரு. வெ. | உப்பிலியாபுரம் |
| 10 | அருணகிரி, திரு. இரா. | திருப்பத்தூர் |
| 11 | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 12 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 13 | அன்பழகன், திரு. க. | புரசைவாக்கம் |
| 14 | அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 15 | அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 16 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 17 | ஆண்டித்தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 18 | ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ.வ.) |
| 19 | சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்–2 |
| 20 | ஆறுமுகம், திரு. த. | அரியலூர் |
| 21 | அனூர் ஜெகதீசன், திரு. பு. கே. | செங்கல்பட்டு |
| 22 | இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 23 | இராச குமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 24 | இராசமாணிக்கம், திரு. இ. ரெ. | குத்தாலம் |
| 25 | இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 26 | இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ.) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 27 | இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 28 | இராமாராமன் திரு. எஸ். | பாபநாசம் |
| 29 | இராசு, திரு. ஜே. எஸ், | பெரம்பலூர் (செ.வ.) |
| 30 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 31 | இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | மதுரை (மேற்கு) |
| 32 | இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 33 | இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 34 | இராமச்சந்திரன், திரு. செஞ்சி, ந. | செஞ்சி |
| 35 | இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 36 | இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 37 | இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீவைகுண்டம் |
| 38 | இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் (செ.வ.) |
| 39 | இராமலிங்கம், டாக்டர். கே. பி. | இராசிபுரம் |
| 40 | இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 41 | இராஜசேகரன், திரு. வே. | இராதாகிருஷ்ணநகர் |
| 42 | இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 43 | இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 44 | இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 45 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 46 | உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 47 | உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 48 | உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி(செ.வ) |
| 49 | உமாநாத், திரு. ரா. | நாகை |
| 50 | கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 51 | கணபதி, திரு.கே. ஆர். | சிதம்பரம் |
| 52 | கணேசன், திரு. இ. | இடப்பாடி |
| 53 | கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 54 | கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 55 | கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 56 | கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 57 | கருணாநிதி, டாக்டர் மு. | அண்ணாநகர் |
| 58 | கருப்பசாமிப்பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 59 | கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 60 | கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை |
| 61 | கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 62 | கலிதீர்த்தான், திரு. கோ. | சங்கராபுரம் |
| 63 | கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ.வ.) |
| 64 | கலையரசன், திரு. நன்னிலம் அ. | நன்னிலம் (செ.வ.) |
| 65 | காளிமுத்து, டாக்டர். கா. | திருப்பரங்குன்றம் |
| 66 | கிட்டப்பா, திரு. எஸ். | மாயவரம் |
| 67 | கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 68 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு |
| 69 | கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆண்டி மடம் |
| 70 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம் |
| 71 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்—1 |
| 72 | கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 73 | குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 74 | குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 75 | குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ.வ.) |
| 76 | குமரி அனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 77 | குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ.வ.) |
| 78 | குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 79 | குலசேகரப்பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 80 | குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 81 | அமிர்தராஜ், திரு (வெற்றிடம்) | திருச்செந்தூர் |
| 82 | கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 83 | கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 84 | கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |

| | தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 85 | கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கை (செ.வ.) |
| 86 | கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 87 | கோவைத்தம்பி, திரு. | பேரூர் |
| 88 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 89 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 90 | சட்டநாத கரையாளர், திரு. கி. | தென்காசி |
| 91 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 92 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 93 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 94 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |
| 95 | சபாபதி, திரு. சி. | ஆரூர் (செ.வ.) |
| 96 | சமரசம், டாக்டர், கே. | காவேரிப்பட்டிணம் |
| 97 | சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 98 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 99 | சித்தன், திரு. என், எஸ். வி. | திருமங்கலம் |
| 100 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 101 | சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 102 | சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 103 | சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (செ.வ.) |
| 104 | சிவப்பெருமாள், திரு மு. | ஓமலூர் |
| 105 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 106 | சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 107 | சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |
| 108 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 109 | சின்னராசு, திரு. மா. | தொண்டாமுத்தூர் |
| 110 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 111 | சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 112 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 113 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர் |
| 114 | சுந்தரராஜ், திரு. நா. | திருமயம் |
| 115 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 116 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 117 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாயக்கனூர் |



| | தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 118 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 119 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர் |
| 120 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 121 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 122 | செங்கோட்டையன், திரு. அ. | கோபிசெட்டிப்பாளையம் |
| 123 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 124 | செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ.வ.) |
| 125 | செல்வராஜன், திரு. அ. | துறைமுகம் |
| 126 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 127 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 128 | சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர் |
| 129 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 130 | சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 131 | சௌந்திரராஜன், திரு. கே. | திருச்சி—2 |
| 132 | சௌரிராஜன், டாக்டர்: திரு. கே. | தி. நகர் |
| 133 | தங்கமணி, திரு. | திண்டிவனம் |
| 134 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 135 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 136 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 137 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ.வ.) |
| 138 | தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 139 | தனுக்கோடித்தேவர், திரு. கே. | முதுகளத்தூர் |
| 140 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 141 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 142 | திருச்சி சௌந்திரராசன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 143 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 144 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 145 | திருமான், திரு. இரா. | ஏற்காடு (செ.வ.) |
| 146 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 147 | தீர்த்தராமன, திரு. ப. | பென்னகரம் |
| 148 | துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 149 | துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 150 | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 151 | துரைராஜ், திரு. பி. | சங்கரநயினார் கோவில் (செ.வ.) |
| 152 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 153 | நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 154 | நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 155 | நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 156 | நவநீதகிருஷ்ண பாண்டியன், திரு. ஆர். | ஆலங்குளம் |
| 157 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 158 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 159 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 160 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா | திருநெல்வேலி |
| 161 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 162 | பக்கீர் முகமது, திரு. இ. என். எம். | கும்பகோணம் |
| 163 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 164 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 165 | பரமசிவகவுண்டர் திரு. பி. எஸ். | பல்லடம் |
| 166 | பலராமன், திரு. இல. | போளூர் |
| 167 | பழனிசாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 168 | பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 169 | பழனியப்பன், திரு. கு. பா. | விழுப்புரம் |
| 170 | பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 171 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 172 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 173 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 174 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.) |
| 175 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 176 | பாலகிருஷ்ணன், திரு. பி. | சிவகாசி |
| 177 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 178 | பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 179 | பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 180 | பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 181 | பிச்சை, திரு. எம் | அருப்புக்கோட்டை |
| 182 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 183 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை சென். |
| 184 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 185 | பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ.வ.) |
| 186 | பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் (செ.வ.) |
| 187 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 188 | பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |
| 189 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 190 | பொன்னுரங்கம், திரு. ப. | இராயபுரம், சென்னை. |
| 191 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 192 | மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 193 | மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 194 | மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 195 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.) |
| 196 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம் |
| 197 | முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி—1 |
| 198 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 199 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 200 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 201 | முத்துவேல், திரு. என். | வானூர் (செ.வ.) |
| 202 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 203 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 204 | முனுசாமி, திரு. மு. ப. | பாலக்கோடு |
| 205 | மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 206 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 207 | யசோதா, திருமதி, டி. | ஸ்ரீபெரும்புத்தூர் (செ.வ.) |
| 208 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 209 | ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 210 | ரங்கசாமி, திரு. சு. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 211 | ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 212 ராம்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 213 ராஜமாணிக்கம், திரு. எம்.கே. | முசிறி |
| 214 ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 215 வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |
| 216 விசயலட்சுமி, செல்வி. வி. | வீரபாண்டி |
| 217 வின்சென்ட், திரு. மி. | நாகர்கோவில் |
| 218 விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ.) |
| 219 விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 220 விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 221 விஸ்வநாதன், திரு. கொ. | அணைக்கட்டு |
| 222 வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 223 வீராணம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 224 வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சிபுரம் |
| 225 வெங்கடரெட்டி, திரு. டி. | ஒசூர் |
| 226 வெங்கடேசன், திரு. பி. எம், | பெரணமல்லூர் |
| 227 வெள்ளைச்சாமி, திரு. ஆ. | ஆத்தூர் |
| 228 வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு |
| 229 வேலப்பன், திரு. சி. வி. | கபிலர்மலை |
| 230 ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 231 ஜான் வின்சென்ட், திரு. மு. | நான்குனேரி |
| 232 ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 233 ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 234 ஹேமசந்திரன், திரு. ஜே. | திருவட்டார் |
| 235 மார்கரெட்எலிசபெத்பிலிக்ஸ், திருமதி | நியமன (உறுப்பினர்) |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்க

1 மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்—அமைச்சர்
2 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்
3 மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்
4 மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது—அமைச்சர்
5 திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1983 ஏப்ரல் 16.

சித்திரை 3, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :
''வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு
அனைவரையும் ஆராய்வது ஒற்று.''

தம்முடைய தொழிலைச் செய்கின்றவர், தம் சுற்றத்தார், தம் பகைவர் என்று கூறப்படும் எல்லோரையும் ஆராய்வதே ஒற்றரின் தொழிலாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### மதுராந்தகம் கூட்டுறவு பால் வழங்குப் சங்கம்.

*வினா எண். 697—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் கூட்டுறவுபால் சங்கத்தில் உற்பத்தியாகும் பாலை தனியார்கள் வாங்கி அதிக விலைக்கு சென்னை நகருக்கு அனுப்புவதை அரசு அறியுமா ?

(ஆ) அதனால் அச்சங்கம் பாதிக்கும் நிலை உள்ளது உண்மையா ?

(இ) தவறு செய்பவர்கள் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ கிருஷ்ணசாமி : (அ) மதுராந்தகம் கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கம் பாலை நேரடியாக தனியார் வியாபாரிகளுக்கு விற்பனை செய்யவில்லை.

(ஆ) மற்றும் (இ): இவ்வினாக்கள் எழாது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் கூட்டுறவு பால் விற்பனை சங்கத்தில் நாள்தோறும் சுமார் 1,800 லிட்டர் பால் உற்பத்தியாகின்றது. அதில் சுமார் ஆயிரம் லிட்டர் பால் மதுராந்தகத்தில் விற்கப்பட்டு, மேற்கொண்டு இருப்பது தனியார்களுக்கு விற்கப்படுகிறது என்பதை

அரசு அறியுமா? அது மட்டுமல்லாமல் அதைப் பற்றி புகார் எழுந்தபோது அதிகாரிகள் துணையோடு சங்கத்தில் கடன் பெற்ற சிலர் தனியாகப் பிரிந்து சென்று பால் உற்பத்தி செய்து அந்தப் பாலை சென்னை போன்ற நகரங்களுக்கு அனுப்புவதை அரசு அறியுமா? இப்படி சங்கத்திற்கு மோசடி செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவர் அவர்களே, 1981-ஆம் ஆண்டு அப்படிப்பட்ட ஒரு புகார் வந்து அரசு துரிதமாக நடவடிக்கை எடுத்தது. அதன் காரணமாக இன்றைய தினம் அங்கு உற்பத்தி ஆகின்ற 1,007 லிட்டரையும் அந்தக் கூட்டுறவு சங்கமே நேரடியாக விற்பனை செய்கின்றது. குறிப்பாக சில்லரையாக 617 லிட்டரும், கடன் மூலமாக 15 லிட்டரும், வாடிக்கையாளர்களுக்கு 13 லிட்டரும், மருத்துவமனைக்கு 38 லிட்டரும், யூனியனுக்கு 217 லிட்டரும் என்ற வகையில் இன்றைய தினம் உள்ளூர் பொது மக்களுடைய தேவைகள் அனைத்திற்கும் இந்தக் கூட்டுறவுச் சங்கம் விற்பனை செய்துகொண்டிருக்கிறது. தனியார்களுக்கு அல்ல.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981-ஆம் ஆண்டு கடன் வழங்கப்பட்ட சுமார் 72 பேர்கள் தற்போது தனியாகப் பிரிந்து சங்கத்திற்கு பாலைக் கொடுக்காமல் தனியாக விற்பதை அரசு அறியுமா? அதேபோல் 1966 ஆம் ஆண்டு முதல் அந்தச் சங்கத்தின் கணக்குகள் தணிக்கை செய்யப்படாமல் இருப்பதால் இதுபோன்று அவர்கள் பிரிந்து இருக்கிறார்கள் என்று கூறப்படுவது உண்மையா? அப்படியானால் அந்தச் சங்கத்தினுடைய கணக்குகளை தணிக்கை செய்து போனஸ் போன்ற இதர வசதிகளை அரசு செய்து கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன விவரங்களுக்கு என்னிடம் குறிப்புகள் இல்லை. இப்போது அவர்கள் சொன்ன அந்த விவரங்களை வைத்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தி செய்யும் கூட்டுறவு சங்கத்திற்கு அந்தச் சங்கத்திலுள்ள பால் கறவை செய்கின்ற உறுப்பினர்கள் பால் அளிக்கவில்லை என்றாலும், கூட்டுறவு பால் சங்கம் ஒன்றியத்திற்கு பால் கொடுக்கவில்லை என்றாலும், தற்போது உள்ள விதிகளின்படி தண்டிப்பதற்கு வழியில்லை என்பதை உத்தேசித்து தண்டிக்கிற அளவுக்கு சட்டங்களைத் திருத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கு இது ஒட்டிவராத காரணத்தாலும், அதுபற்றிய விவரங்களை அளிக்க வேண்டியிருக்கிற காரணத்தாலும் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

### தஞ்சை புறநகர் பகுதிகளில் தொழிற் கூடங்கள் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 698—**திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை புறநகர் பகுதிகளில் தொழில் கூடங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயலுக்கு வரும்?

(இ) எவ்வளவு தொகை செலவில் தொழில் கூடங்கள் அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** (அ) இல்லை. ஆனால் தற்போதுள்ள தேவை அடிப்படையில், தஞ்சாவூரில் 22 தொழில் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. தேவைக்கேற்ப சிட்கோ நிறுவனம் தொடர் திட்டமாக தேவையான தொழில் கூடங்களைக் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளும்.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாவிற்கு இடமில்லை

### டான்சி மூலம் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு I.S.I முத்திரை பெறும் திட்டம்.

வினா எண். 699—**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டான்சி மூலம் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு I.S.I. முத்திரை பெறப்பட்டுள்ளதா?

(ஆ) இல்லையெனில் விற்பனையை உயர்த்த இம்முத்திரை பெறப்படுமா?

***மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** (அ) மற்றும் (ஆ) டான்சி பாலீஷ் தொழில் பிரிவில் தயாராகும் கேஸ்கட் ஷெல்லாக் என்ற பொருளுக்கு மட்டுமே இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் முத்திரை பெறப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

[1983 ஏப்ரல் 16

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டான்சி நிறுவனத்தின் மூலம் செய்யப்படுகின்ற பொருள்களைப் பொறுத்த வரையில் அங்கு உற்பத்தி செய்யப் படுகிற பொருள்கள் அரசாங்கத் தேவையைக் கூட பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லாமல் இருப்பதாகச் சொல்லு கிறார்கள். எனவே உற்பத்தியை கூடுதலாக்க அரசு ஏதேனும் முயற்சிகளை மேற்கொண்டு உள்ளதா என்பதை அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் கூடுமான அளவில் அரசுக்கு இருக்கும் தேவைகளை நிறைவேற்றும் வகையில் விரிவாக்க முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. கடந்த 1982-83 ஆம் ஆண்டில் கூட டான்சி உற்பத்தி இலக்கு 28 கோடி ரூபாய் என குறியீடாக வைக்கப்பட்டு செயலாற்றியிருக்கிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நிறுவனங்களில் செய்யப்படுகின்ற பொருள் களைக் காட்டிலும் டான்சி நிறுவனத்தின் பொருள்களின் விலை கூடுதலாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். இதற்குக் காரணம் டான்சி நிறுவனத்தின் பொருள்கள் மீது விதிக்கப்படும் எக்சைஸ் ட்யூட்டி என்று சொல்லப்படுகிறது. ஆகவே, டான்சி நிறுவனத்தால் தயாரிக்கப்படும் பொருள்களுக்கு எக்சைஸ் ட்யூட்டி யிலிருந்து விதிவிலக்கு பெறுவதற்கு மாநில அரசு மைய அரசை வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் ஆலோசனை சட்டபூர்வமாக சாத்தியமானதுதானா என்பதைப் பரிசீலித்து, அரசு அதைப் பெறுவதற்கு முயலும்.

திரு. இல. பலராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தொடர்புடைய நிறுவனமான டான்சி 'ஐ.எஸ்.ஐ. சர்டிபி கேட்' பெறுகின்ற அளவிற்கு அது தயாரிக்கும் எல்லாப் பொருள் களின் தரத்தையும் உயர்த்தாமல் பின்தங்கிய நிலையில் இருப் பதற்கான காரணம் என்ன? அதை அந்த அளவிற்கு உயர்த்த அரசு ஏதாகிலும் அந்த நிறுவனத்திற்கு அறிவுரை வழங்கியிருக் கிறதா ? மேலும், தரமான பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்று அந்த நிறுவனத்திற்கு அரசு ஏதாகிலும் அறிவுரை வழங்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தர நிர்ணய முத்திரை பெற்றுத்தான் அவர்கள் தங்களுடைய விற்பனையை அதிகப்படுத்தும் வாய்ப்பு பெற வேண்டும் என்று இல்லை. அந்த நிறுவனம் தயாரிக்கும் பல பொருள்கள் — மேஜை, நாற்காலி, இரும்புப் பொருள்கள் ஆகியவை பெருத்த அளவில் விற்பனை



1983 ஏப்ரல் 16]

பெறும் வாய்ப்பைப் பெற்று இருப்பதால், அதைப் பெறுவதற் கான முயற்சிகளை அரசு எடுக்கவில்லை. ஆனாலும், அந்தத் தரக்கட்டுப்பாடு நிறுவனம் அந்த முத்திரை தர என்னென்ன விதிமுறைகளைக் கையாள்கிறார்களோ, அதையெல்லாம் நாங்களே அங்கே பின்பற்றி வருகிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு அரசின் டான்சி நிறுவனம் சிறு தொழில்களுக்கு ஆலோசனை வழங்கும் அமைப்பாக ஆரம்பிக்கப்பட்டது என்றும், ஆனால் அந்த சிறு தொழில்களில் செய்யப்படுகின்ற பொருள் களை டான்சி நிறுவனம் உற்பத்தி செய்துவருவதால் சிறு தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் சிறு தொழில் சங்கம் கூறியுள்ளது. ஆகவே, அவர்களுடைய கோரிக்கையின் படி மீண்டும் அந்த டான்சி நிறுவனத்தை ஆலோசனை வழங்கும் நிறுவனமாகவே மாற்றியமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற அடிப்படையில் என்னிடத்தில் முழுத் தகவல் இல்லை.. இன்றையதினம் சிறுதொழில்களுக்குப் போட்டியாக அந்த டான்சி நிறுவனம் இயங்கவில்லை. அந்த டான்சி நிறுவனம் சிறு தொழில்கள் செய்ய முடியாது என்று சொல்கின்ற பல பொருள் களைத்தான் — அதுவும் குறிப்பாக அரசுத்துறைக்கு தேவைப் படும் பல முக்கியமான பொருள்களைத்தான் — அது உற்பத்தி செய்து வருகிறது. குறிப்பாக இப்போது தண்ணீர் பஞ்சம் இருக்கும் இந்த நேரத்தில், நாம் அதிக அளவில் ஹேண்ட் பம்ப் போட்டு வருகிறோம். அந்த ஹேண்ட் பம்பு தயார் செய்ய தனியார் மறுக்கிறார்கள். ஏதோ ஒரு நோக்கத்தோடு அல்லது சில காரணங்களுக்காக அவர்கள் மறுக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட மிக முக்கியமான பொருள்களை — ஹேண்ட் பம்பு போன்ற பொருள்களை போர்க்கால நடவடிக்கை என்ற அடிப்படையில், விரைவாக அதனைத் தயாரிக்கும் பொறுப்பை இந்த டான்சி நிறுவனம் ஏற்றுக்கொண்டு இருக்கிறது. இப்படிப் பட்ட நல்ல முறையில் இந்த நிறுவனம் செயல்படுவதால் தான் சிறு தொழில்கள் கட்டுக்கோப்பாக இருக்கின்றன. ஆகவே' அந்த நிறுவனங்கள் கட்டுக்கோப்பாக இருப்பதற்கும் இது உதவியாக இருக்கிறது. இது லாபநோக்கத்தோடு செயல்பட வில்லை.

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவர் அவர்களே, டான்சி நிறுவனம் உற்பத்தி செய்யும் பொருள்களை தமிழக அரசுத் துறைகள் வாங்காமல் வெளிமார்க்கெட்டில் வாங்கப்படுவதாக சொல்லப்படுகிறது. இதை அரசு பரிசீலித்து, எல்லாத் துறை களும் அங்கேயிருந்து வாங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1983 ஏப்ரல் 16

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் உணர்வுகள் கவனத்தில் கொள்ளப்படும்.

திரு த. வேணுகோபால் : பேரவைத் தலைவர் அவர்களே, டான்சி உற்பத்தி செய்கிற ஒரு பொருளுக்கு ஐ.எஸ்.ஐ. மார்க் பெறுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஐ.எஸ்.ஐ. மார்க் போடாத சில பொருள்கள் டான்சி பொருள்கள் என்று போலியாக விற்பனை செய்யப்படுவது அரசுக்குத் தெரியுமா? அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசிடத்தில் தற்போது தகவல் இல்லை. உறுப்பினரிடத்தில் தகவல் இருந்தால் அதை அளிக்கலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகள், ஊராட்சிகள், மற்றும் ஸ்தல ஸ்தாபனங்கள் ஆகியவற்றிற்குத் தேவையான டஸ்ட்-பின்—தகரத்தால் செய்யப் படும் குப்பைத் தொட்டிகள், சாக்கடை சுத்தம் செய்யப்பயன் படும் மண்வெட்டிகள், மற்றும் முறம் போன்ற இரும்பு சாமான் களை டான்சி மூலமாகத்தான் வாங்கவேண்டும் என்று மாண்பு மிகு ஊரகத் துறை அமைச்சர் அவர்கள் அந்தத் துறை மூலமாக ஆணை பிறப்பிக்க முயற்சிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, உறுதி கூற முடியாது. ஆனால் பரிசீலிக்கப்படும்.

### கூட்டுறவு அமைப்புகளில் உறுப்பினராக இல்லாத கைத்தறி நெசவாளர்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டம்.

* வினா எண். 769—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கைத்தறித் தொழிலில் கூட்டுறவு அமைப்புகளில் உறுப்பினராக இல்லாத நெசவாளர்களுக்கு நிதி உதவி அளித்து அவர்களை லேவாதேவிக்காரர்களின் பிடியிலிருந்து விடுவிக்க அரசிடம் செயல் திட்டம் ஏதாவது உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) நெசவாளர்கள் குறைந்த வட்டி விகிதத்தில் நாட்டு டமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடன் பெற்று, தங்களது முந்தைய கடன் சுமையை அகற்றிக் கொள்ள ஒரு திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டத்தின் கீழும் அவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டு வருகிறது.



1983 ஏப்ரல் 16]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே, கூட்டுறவுத் துறையிலே வராத கைத்தறி நெசவாளர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஏற்கெனவே மாஸ்டர் வீவர்களிடம் மாட்டிக்கொண்டு அடிமைகளாக இருக்கிறார்கள். அவர்கள் கொத்தடிமைபோல் நடத்தப்படுகிறார்கள். மாஸ்டர் வீவர்களிடம் பெற்ற கடனைக் கட்டிவிட்டு, அவர்களை அந்தக் கொடுமைகளிலிருந்து காப்பாற்ற, அவர்களைக் கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டுவர அரசு உத்தேசித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்தக் கடன் சுமையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிலிருந்து விடுதலை தந்து, அவர்களை பக்கத்திலே இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக ஆக்கி பாதுகாக்க வேண்டு மென்ற முறையிலேதான் இந்தத் திட்டத்தை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் இதைப்போன்ற நெசவாளர்களுக்கு உதவி அளிப்பதாகக் கூறியிருக்கிறார்கள். எங்களுடைய செங்கை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அந்த தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் இதைப்போன்ற திட்டங்களுக்கு உதவுவதை நிறுத்திவிட்டதாக நாங்கள் நேரில் கேட்டபோது தெரிவித்தார்கள். ஆகவே, அரசு அந்த வங்கிகளோடு தொடர்பு கொண்டு இந்தத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அரசு ஆவன செய்யும்.

திரு. கோவைத்தம்பி : தலைவரவர்களே, லேவாதேவிக் காரர்களிடமிருந்து நெசவாளர்களைக் காப்பாற்றுகின்ற பிரச்சனையாக இருந்தாலும் தற்போது தொழில் அபிவிருத்தியில் எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டுவிட்டது. ஆனால் நெசவாளர்கள் இன்னும் பழைய முறையிலேயே நெசவு செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த முறையை மாற்றியமைக்க அரசு முன்வருமா? கதர் துறையில் ராட்டையில் கூட நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அவர்களுடைய தொழிலில் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்தி லேவாதேவிக்காரர்களிட மிருந்து நெசவாளர்களைக் காப்பாற்ற அவர்களுக்கு கூலி உயர்வு பெற்றுத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, கைத்தறி நெசவாளர்களுடைய உற்பத்தித் திறனை அதிகமாக்கு வதன் மூலம் அவர்களுக்கு இந்தக் கடன் சுமையிலிருந்து பாது காப்பு அளிக்க முடியும். தொடர்ந்து அவர்கள் இந்தத் தொழிலில் நல்ல ஊதியம் பெறும் நிலைமையை ஏற்படுத்த இந்த அரசு விரும்புகிறது. அந்த முறையிலே தறிகளை நவீனப்படுத்துவது, நல்ல நூலைத் தருவது, அவர்களுக்குத் தேவையான இதரப் பொருள்களை நல்ல விலையில், கட்டுப்படியாகும் விலையில் பெற்றுத்தருவது ஆகியவற்றில் அவர்களுக்கு இந்த அரசு உதவ விரும்புகிறது.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவரவர்களே, கைத்தறி நெசவாளர்களுடைய தினசரி வருமானம் மிகவும் குறைவாக இருப்பதால் அவர்கள் லேவாதேவிக்காரர்களிடம்சிக்கித்தவிக்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, அவர்கள் அந்த லேவாதேவிக் காரர்கள் பிடியிலிருந்து விடுபட்டு, மேம்பாடு அடைய அவர் களுடைய வருமானத்தை அதிகப்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அவர்களுக்குத் தரப்படுகிற அந்தக் கூலியை நல்ல முறையில் பெற்றுத்தர அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது. அதோடு உற்பத்தித் திறனை அதிகப்படுத்த பழைய முறையிலே இயங்கி வரும் தறிகளை மாற்றியமைக்கச் சொல்லிவருகிறது அரசு. பல இடங்களில் அத்தகைய மாற்றங்களைச் செய்கிறார்கள். இந்த மாற்றத்திற்கு நெசவாளர்களுடைய ஒத்துழைப்பும் அதிக மாகத் தேவைப்படுகிறது.

### தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரின் கலைக் களஞ்சியம் வெளியிடும் பணி.

*வினா எண். 770—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரின் கலைக்களஞ்சியம் வெளியிடும் பணி கைவிடப்பட்டு விட்டதா ?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ): தமிழ் வளர்ச்சிக் கழகம், கலைக் களஞ்சியத்தின் இரண்டாம் பதிப்பு வெளியிடும் பணியை தொடர இயலாது என்று அரசுக்குத் தெரிவித்ததால் அதனை அரசே வெளியிட உத்தேசித்துள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் கலைக் களஞ்சியம் இரண்டாவது பதிப்பு வெளியிடப்படுகின்ற நிலையில் அந்த கலைக் களஞ்சியத்தில் என்னென்ன பொருள்கள் அடங்கிய நிலை இருக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, கலைக் களஞ்சியத்தைப் பொறுத்த மட்டில் இரண்டாவது பதிப்பு வெளியிடப்படுகின்ற நிலையில், அதிலே ஏற்கெனவே வெளியிடப்பட்ட முதல் பதிப்பில் குறை பாடுகள் இருக்கின்றன என்கிற புகார்களும் வந்திருக்கின்றன. அந்த அடிப்படையிலே இரண்டாவது பதிப்பு வெளியிடப்படுகிற போது, நல்ல முறையிலே திருத்தி வெளியிட வேண்டிய நிலையில் இருக்கிறோம். அரசுத் துறை இதனை எடுத்துக் கொண்டால் இதனை வெளியிடுவதிலே பல சிரமங்கள் இருக்கும் என்பதோடு மட்டும் அல்லாமல், நல்ல முறையில் அமையக்கூடிய வகையிலும் இருக்காது. ஆனால் இப்படிப்பட்ட பதிப்புகள் நல்லமுறையில் தான் வெளியிடப்பட்டாக வேண்டும் என்கிற காரணத்தால் இந்தப் பணியினை தமிழ் பல்கலைக் கழகத்திடம் ஒப்படைத்து விடலாமா என்று அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் கலைக் களஞ்சியம் இரண்டாவது பதிப்பை வெளியிடுவது என்பது மிகப் பெரிய பணி. ஆகவே அந்தப் பணியை தமிழ் பல்கலைக் கழகத்திடம் ஒப்படைத்துவிடலாமா என்று அரசு ஆலோசிப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார் கள். அதற்கென தனியாக பேரறிஞர்களைக் கொண்ட குழுவை அமைக்க அரசு உத்தேசித்து இருக்கிறதா ? இதற்கு முன்பு வெளியிடப்பட்ட கலைக் களஞ்சியத்திற்கு எத்தகைய குழு அமைக்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, முந்தையப் பணியில், மதிப்பிற்குரிய மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களுடைய தலைமையில், தமிழ்வளர்ச்சிக்கழகம் தான் அந்தப் பதிப்பை வெளியிட்டார்கள். அது தனியார்கள் சிலர் சேர்ந்து அமைத்துக்கொண்ட அமைப்பாகும். அதற்கு அரசு உதவி செய்து வந்தது. அப்படி உதவி செய்கிற நேரத்தில், அவர்கள் அதற் காக 75 லட்சம் ரூபாய் தேவைப்படும் என்று சொன்னார்கள். அரசுக்கும் இந்தப் பணியில் பொறுப்பு இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டது. பிறகு அவர்கள், பணம் தர கொஞ்சம் காலதாமதம் ஆகியதால் அங்கே வேலை செய்து கொண்டி ருந்த பணியாளர்களை வெளியேற்றி வேலையை இடையில் நிறுத்திவிட்டார்கள். இத்தகைய பணி விடுபடக் கூடாது என்று அரசே எடுத்து நடத்த முடிவு செய்தோம்.

ஆனால் இப்போது தமிழ் பல்கலைக் கழகம் என்று தனியாக தமிழுக்காகவே ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற காரணத்தால், அவர் கள் இதுபோன்ற காரியங்களைச் செய்வதுதான் சிறப்பாக இருக் கும் என்ற அடிப்படையில், இந்தப் பணியை அவர்கள் வசம் ஒப்படைக்கலாமா என்று அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு முடிவு எடுத்ததற்குப் பிறகு, அங்கேயுள்ள அறிஞர் பெருமக்களை வைத்து இந்தப் பணி அங்கே

விரைவாக நடைபெறும் என்பது மட்டும் அல்லாமல், முன்பு வெளியிடப்பட்ட பதிப்பிலே சொல்லப்பட்ட குறைபாடுகளும் நிச்சயமாக தற்போது வெளியிடப்படும் பதிப்பிலே இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பாலியஸ்டர் ரகத் துணிகள் உற்பத்தி செய்யும் திட்டம்.

*வினா எண். 771—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நெசவாளர் கூட்டுறவுச்சங்கங்களில் பாலியஸ்டர் ரகத் துணிகள் உற்பத்தி செய்ய அனுமதி வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் கைத்தறி பாலியஸ்டர் துணிஉற்பத்தியை அபிவிருத்தி செய்யும் திட்டம் அமுல் செய்யப்பட்டு வருகின்றது.

(ஆ) இத்திட்டத்தின் கீழ் முதன்முதலில் பாலியஸ்டர் ரகத்தில் சட்டைத் துணிகள் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டு, தற்பொழுது பாலியஸ்டர் சட்டைத் துணி, சேலைகள், ஸ்பன் ரகம், (பாலியஸ்டர்) சூட்டிங் மற்றும் பாலியஸ்டர் வேட்டிகள் முதலியவை உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் நெய்யப்படும் பாலியஸ்டர் ரகத்தில் 80-க்கும் குறைவான நூல் கொடுக்கப்பட்டதன் விளைவாக குறைந்த இழை போட்டு நெய்ததால், பெரும் அளவில் துணிகள் வீணாகி பல இடங்களில் கோடிக் கணக்கான ரூபாய் பெறுமான துணிகள் தேங்கிக் கிடந்து வீணாவது அரசுக்குத் தெரியுமா ? இப்படிப்பட்ட தரக் குறைவான துணிகளை நெய்த சங்கத்தின் மீதும், கொள்முதல் செய்யப்பட்ட அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல கோடி ரூபாய் நஷ்டமாகப் போய்விட்டது என்கிற விவரம் என்னிடத்திலே இல்லை. ஆனால் இதிலே குறிப்பிடப்பட்டிருப்பது— இத்திட்டத்தை நிறைவேற்றும்பொருட்டு, முதன் முதலில் மாதிரி உற்பத்தி' ஸ்ரீவில்லிப்புத்தூரில் 2/60 மற்றும்2/80 நூல்களில்''மெர்சிடைஸ்ட்'' நூல், பாவு போடுவதற்கும் பாலியஸ்டர் பிலமெண்ட் ஊடைக்குமாக கோர்த்து நெய்யப்பட்டன. மேலும்



விலையைக் குறைக்கும் வகையில் 50 நெ. பாலியஸ்டர் நூலினை பதப்படுத்தி அதனை ஸ்ரீவில்லிப்புத்தூரில் உற்பத்தி செய்து வந்தனர். ஆனால், கைத்தறி நெசவாளர்களால் அதனை நெய்ய இயலாமல் போகவே பாலியஸ்டர் மற்றும் பருத்தி 67 : 33 என்ற விகிதத்திலே கலக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்ட 2/80 பாலியஸ்டர் நூலை உபயோகித்து பாலியஸ்டர் கைத்தறித் துணி நெய்யப்பட்டு வந்தது.

(முற்பகல் 9-20)

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் தரமான பாலியஸ்டர் துணிகளை தமிழ்நாட்டிலேயே அதிக அளவில் தயாரிக்கக்கூடிய ஸ்ரீவில்லிப்புத்தூர். சுந்தரபாளயம் ஆகிய சங்கங்களிலேதான் 1 கோடி ரூபாய் பெறுமான பாலியஸ்டர் துணிகள் விற்பனை செய்யாமல் தேங்கிக் கிடக்கின்றன.

ஆகவே, அந்தத் துணிகளைக் கொள்முதல் செய்வதற்கு, திறமையாக பாலியஸ்டர் துணிகளை நெய்யக்கூடிய அந்தப் பகுதிக்கு மீண்டும் ஆர்டர் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, முதலிலே கொள்முதல் செய்யப்பட்ட துணிகள் விற்கின்ற போதுதான் மறுபடியும் கொள்முதல் செய்ய முடியும். இப்போது இந்த வறட்சி நிலையில் பாலியஸ்டர் ரகத் துணிகள் மட்டுமல்ல, எல்லா வகையான துணிகளின் விற்பனையும் குறைந்திருக்கின்றன. எனவே இப்போது இருக்கின்ற அந்த பிரத்தியேகமான சூழ்நிலையில் அதற்கேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டி இருக்கின்றது. நெய்வதை எல்லாம் வாங்குகின்ற சூழ்நிலையிலே இப்போது இல்லை. கொள்முதல் செய்யப்பட்ட துணிகளுக்கே முழுமையாகப் பணத்தைத் தரவில்லை என்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே விற்பனை ஓரளவுக்கு நடைபெறுகின்றபோதுதான் மறுபடியும் கொள்முதல் செய்ய முடியும். பாலியஸ்டர் துணிகளைப் பொறுத்தவரையில் தேக்கம் அதிகம்.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்கள் 1982-83 ஆம் ஆண்டில் பாலியஸ்டர் வேட்டி, சேலைகளை எவ்வளவு தொகை மதிப்பீட்டிற்கு தயாரித்திருக்கிறார்கள் ? சில பாலியஸ்டர் வேட்டிகள் பெரியவர்கள் வாங்கிக் கட்டுகின்ற அளவுக்கு அல்லாமல் உயரத்திலும் அகலத்திலும் குறைந்திருக்கின்றது என்பதை அறிந்து நெசவாளர்கள் சரியான அளவுக்கு நெசவு செய்கின்ற வகையில் அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே 1982-83 ஆம் ஆண்டுக்கு கோ-ஆப்டெக்ஸ் துணி விற்பனை 100 கோடியாக இருக்குமென திட்டமிடப்பட்டது. அதிலே பாலி

யஸ்டர் துணிகள் ஓரளவுக்கு அதிக விலை உள்ள காரணத்தால் அதனுடைய மதிப்பு கொஞ்சம் அதிகம். எவ்வளவு என்ற விவரம் இங்கே இல்லை. அடுத்து நெய்யப்படுகின்ற துணிகளில் இருக்கின்ற குறைகளைப் போக்கி மக்கள் விரும்புகின்ற அளவுக்கு துணிகளை நெய்ய வேண்டும் என்பதற்காக பெரு முயற்சியினை துறையும் எடுத்து வருகின்றது. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும் எடுத்து வருகின்றது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது பாலியஸ்டர் துணிகள் அதிகமாக தேக்கம் இருப்பதாகச் சொன்னார்கள். இப்போது பருத்தி நூலில் தயாரிக்கப்பட்ட துணிகளே பரமக்குடி போன்ற ஊர்களில் 75 இலட்சம் ரூபாய் பெறுமான அளவுக்குத் தேங்கிக் கிடக்கின்றன. முன்னாலே வாங்கிய துணிகளுக்கு 30 இலட்சம் ரூபாய் வரவில்லை என்று ஹர்த்தால் கூடச் செய்யப் போகிறார்கள். ஆகவே, பாலியஸ்டர் துணிகள் நெய்வதை நிறுத்தலாம். ஏனென்றால், அவை மில் துணியோடு போட்டி போட முடியாது. ஆகவே பாலியஸ்டர் உற்பத்தியை நிறுத்திவிட்டு மற்ற துணிகளின் தேக்கத்தைப் போக்கி ரெகுலராக அந்த நெசவாளர்களுக்கு வேலை கொடுக்க வேண்டிய துரிதமான நடவடிக்கையை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, கைத்தறி கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திலும் அதிகமான தேக்கம் இருக்கின்றது. பரமக்குடி நெசவாளர் கூட்டுறவு சொசைட்டியிலேயும் தேக்கம் அதிகம் இருக்கின்றது என்பது உண்மை. பொதுவாக வறட்சி நிலைமை காரணத்தால் எல்லா வகையான தொழில்களும் பாதிக்கப்பட்டு இருப்பதைப்போல் கைத்தறித் தொழிலும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இந்த கைத்தறி நெசவாளர்களுக்கு எவ்வாறு உதவுவது என்பது குறித்து ஆலோசித்த பிறகுதான் கைத்தறித் துறையிலே தயாரிக்கப்பட்ட ஜனதாவேட்டிகளையும், சேலைகளையும் அரசே வாங்கி நிலம் இல்லாத விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்குத் தருவது என்ற முடிவை எடுத்திருப்பதன் மூலமாக பெருமளவுக்குத் தேக்கத்தைக் குறைத்திருக்கிறோம். அதே நேரத்தில் புதிதாக நெசவாளர்களுக்கு வேலை கொடுக்கின்ற நிலைமையையும் நாம் ஏற்படுத்தி இருக்கிறோம், அப்படிப்பட்ட நல்ல திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்ததால் கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்க்கையில் ஒரு பெரிய உதவியைச் செய்திருக்கிறார்கள்.

பாலியஸ்டர் துணிகளைப் பொறுத்தமட்டில் மில் துணியோடு போட்டி போட முடியாது என்பது மட்டுமல்ல. அதனுடைய. விலை அதிகமாக உள்ள காரணத்தால் அதிகமான பணம் அதிலே முடங்கிவிடுகின்றது. ஆகவே தற்போதைய நிலைமையில் நாம் பாலியஸ்டர் துணி நெய்வதை ஊக்கப்படுத்துவதாக இல்லை. அவர்கள் வேறு ரகம் நெய்ய முன்வந்தால் அதற்கு அவர்களுக்கு





உதவி செய்வதற்கும் அந்த வகையில் அவர்கள் வேறு ரகங்களை நெய்யவேண்டும் என்றும் இந்தத் துறை விரும்புகின்றது. அந்த யோசனையை பரிசீலிக்க வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறோம். ஏற்கெனவே பரிசீலித்துக் கொண்டும் இருக்கிறோம்.

திரு. ஏ. தங்கராசு : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நெசவாளர்கள் பாலியஸ்டர் ரகங்களை உற்பத்தி செய்வதாக அறிவித்தார்கள். எந்தெந்த மாவட்டங்களில் எந்தெந்த ரகங்களை உற்பத்தி செய்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பாலியஸ்டர் சேலைகள் கோயம்புத்தூர், அருப்புக்கோட்டை, ராஜபாளையம், சேலம், நாகர்கோவில் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பாலியஸ்டர் ஸ்பன் ஷர்டிங் மதுரை மாவட்டத்திலும், திருத்தணி, ராஜபாளையம் ஆகிய இடங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன. பாலியஸ்டர் சூட்டிங் ஈரோடு, சென்னிமலை ஆகிய இடங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன. பாலியஸ்டர் வேட்டிகள் சேலம், இராமநாதபுரம், செங்கல்பட்டு, நாகர்கோவில் ஆகிய பகுதிகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்த வறட்சி ஆண்டைத் தவிர பொதுவாகவே கைத்தறித் துணிகளில் ஒரு சிறிய தேக்கம் இருக்கிறது. வெளி மாநிலங்களில் அல்லது வெளி நாடுகளுக்கு நம் மாநிலத்திலிருந்து இந்த ரகங்கள் என்னென்ன தேவைப்படுகின்றன என்பதைப் பற்றி ஏற்கனவே அரசாங்கம் ஆலோசித்ததா ? இல்லாவிடில் இனிமேலாவது ஆலோசித்து ரகங்களை முறைப்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது வறடசி காலத்தில் ஏற்பட்டிருக்கிற இந்தப் பிரச்சினையை மில் துணிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கிற போது கைத்தறித் துணிகள் பரவாயில்லை என்று சொல்லக் கூடிய அளவிற்கு வியாபாரமாகிக் கொண்டிருக்கிறது. இப்போது போன ஆண்டு விற்பனையையொட்டிப் பார்க்கிற போது கைத்தறித் துறையைப் பொறுத்த வரையில் அதிகமாக விற்றிருக்கிறோம். மில் துணியை எடுத்துக் கொண்டால் போன ஆண்டைவிட மில் துணிகள் விற்பனை குறைவாக இருந்திருக்கிறது என்று பல்வேறுயிடங்களிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அது மட்டுமல்ல. ஆண்டுக்காண்டு விற்பனைக் குறியீட்டை அதிகப்படுத்தி நாம் அந்தளவிற்கு விற்பனை செய்ய முயற்சி எடுத்து பெரும்பாலான அளவிற்கு அதில் வெற்றி பெற்றிருக்கிறோம். சென்ற ஆண்டு 75 கோடி ரூபாய் என்றிருந்ததை இந்த ஆண்டு 100 கோடி என்று வைத்திருக்கிறோம். அப்படி 100 கோடி ரூபாய் என்று வைத்து 75 கோடியைத் தாண்டி விட்டோம். 100 கோர்டி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்ய நாம் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இப்போது நம்

அரசு பத்து கோடி ரூபாய் அளவிற்கு விவசாயத் தொழிலாளர்களுக்காக வாங்குவதன் மூலம் அந்தக் குறியீட்டை நாம் நெருங்குவதற்கான ஒரு வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். ஆகவே கைத்தறித் துறையைப் பொறுத்தமட்டில் வறட்சி காலத்தில்கூட முடிந்த அளவிற்கு ஒரு நல்லசாதனையை ஏற்படுத்தியிருக்கிறோம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். தேக்கம் என்றால், ஜவுளிக் கடை என்றால் துணி இருந்தால் தான் அதற்குப் பெயர் ஜவுளிக் கடை, துணிகள் இல்லை என்றால் அதற்குப் பெயர் ஜவுளிக் கடை அல்ல. விற்பனைக்காக துணிகள் இருக்கத்தான் வேண்டும். அதற்காக இருக்கிற தேக்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். 100 கோடி ரூபாய் அளவிற்கு ஒரு குறியீட்டை வைத்துக் கொண்டு ஓரளவு தேக்கத்தை பெரிய அளவிற்குப் பார்த்து பயப்பட வேண்டியதில்லை. ஆனால் விற்றுக் கொண்டுதான் இருக்க வேண்டும். அங்கே நெய்யக் கூடியவர்களுக்கு வாய்ப்பு இருந்து கொண்டிருக்க வேண்டும். இப்போது விற்பனையில் ஒரு தடை ஏற்பட்டு விட்டதால் நெசவாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதற்கு சிறப்பான நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிற போது கைத்தறி நெசவாளர்கள் பாலியஸ்டர் துணி நெய்ததால் நட்டம் வந்திருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே அந்தத் துணி நெய்வதினால் நஷ்டம் என்று தெரிந்த பிறகும் கூட, அது மில் துணிகளோடு போட்டி போட தகுதியில்லையென்று தெரிந்தும் ஏன் மீண்டும் அதை கைத்தறியிடம் கொடுக்க வேண்டும் ? இந்த நஷ்டம் எவ்வாறு ஏற்படுகிறது ? ஏற்பட்டிருக்கிற நஷ்டம் எவ்வளவு ?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே நஷ்டம் வருகிறது என்று நான் சொல்லவில்லை. அப்படி நஷ்டம் வந்திருப்பதாகவும் சொல்லவில்லை. விற்காமல் இருக்கிறது என்று சொன்னேன். மில் துணிகளும் வறட்சியினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. நெசவாளர்கள் பாலியஸ்டர் துணிகளை நெய்ய விரும்புகிறார்கள். காரணம் இதில் அதிகக் கூலி அவர்களுக்குக் கிடைக்கிறது. ஆகவே இப்போதுள்ள சங்கடமான சூழ்நிலையில் கொஞ்சம் மாற்றிக் கொள்ளுங்கள் என்று சொன்னால் கூட நெசவாளர்கள் மாற்றிக் கொள்ள விரும்பாத காரணம், இந்தத் துணிகள் நெய்தால் கூலி அதிகம் கிடைக்கிறது. மில் துணிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது இது ஓரளவு விலை குறைவாகத்தானிருக்கிறது. மில் துணிகளோடு போட்டி போட வேண்டுமானால் நாம் உற்பத்தியில் பல மாறுதல்களைச் செய்ய வேண்டும். வடிவமைப்பில் பல மாறுதல்களைச் செய்து மில் துணிகளோடு போட்டி போடவும் தயாராகிக் கொண்டிருக்கிறோம்.





திரு. சி. கோபால் : தலைவர் அவர்களே, கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் தயாரிக்கப்படுகிற பாலியஸ்டர் துணிகளில் தேக்கம் இருப்பதாகக் கூறப்படுகிறது. அதன் காரணமாக கொள் முதல் செய்ய முடியாத நிலை பலயிடங்களில் இருக்கிறதா ? அதன் மீது அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநரயகம் : தலைவர் அவர்களே, பாலியஸ்டரில் தேக்கம் இருக்கிறது. அதன் மதிப்பும் அதிகம். ஆகவே நாம் மேற்கொண்டு கொள்முதல் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஆகவே கைத்தறி நெசவாளர்கள் பாலியஸ்டர் நெய்வதிலிருந்து கொஞ்சம் பேர்களாவது வேறு ரகங்களுக்கு மாற்றிக் கொள்ள வேண்டுமென்று நாம் கேட்டுக் கொள்வதோடு அதில் சில முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். இப்போதிருக்கிற நிலைமை இதுதான்.

**சென்னை பாரிமுனைக்கு அருகில் சட்டப்படும் பல அடுக்கு மாடிக் கட்டிடம்**

*வினா எண் 772— திரு. சி. கோபால் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சென்னை நகரில் பாரிமுனைக்கு அருகில் என்.எஸ்.சி. போஸ் சாலையில் மாநகராட்சியின் உத்தரவு இன்றி பல அடுக்கு மாடிகள் கட்டுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

(முற்பகல் 9.30)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; (அ) மற்றும் (ஆ); சென்னை பாரிமுனைக்கு அருகில் N.SC Bose சாலையில் மாநகராட்சியின் உத்தரவு இன்றி பல அடுக்கு மாடிகள் கட்டுவது பற்றிய தகவல் சென்னை மாநகராட்சி ஆணையரால் அரசின் பார்வைக்குக் கொண்டு வரப்பட்டது. இது தொடர்பாக சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின்கீழ் கட்டிடச் சொந்தக்காரர் மீது வழக்கு தொடர்ந்து ஐந்து முறை அபராதம் விதிக்கப்பட்டு, ஒவ்வொரு முறையும் ரூ. 500 அபராதத் தொகை வசூலிக்கப்பட்டது. தற்போது சென்னை மாநகராட்சி சட்டம் பிரிவு 244ஏ-ன் கீழ் அனுமதியின்றி கட்டப்பட்ட 27,144 சதுர அடிகள் பரப்பளவில் கட்டப்பட்ட கட்டிடங்கள் மீது அதிகப்படியான அபராதத் தொகை வசூலிப்பதற்கான நடவடிக்கை, சென்னை மாநகராட்சியால் எடுக்கப்பட்டுள்ளது.

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாரிமுனையில் என். எஸ்.சி. போஸ் சாலையில் போக்குவரத்து காரணமாக, மக்கள் நெரிசல் அதிகமாக இருக்கிறது. அதே போல், பாரிமுனையில், என்.எஸ்.சி. போஸ்.

ரோடில் பல இடங்களில் பல அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டுவதன் மூலம் மக்கள் நெரிசல் அதிகமாகி இருக்கிறது. அதனால் போக்குவரத்து பாதிக்கப்படுகின்றது. எனவே, மக்களுடைய நலனைக் கருதி, இனிமேலாவது அங்கே பல அடுக்கு மாளிகைகள் கட்டக் கூடாது என்பதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பல அடுக்கு மாடிகள் கட்டக் கூடாது என்ற தடை அரசின் மூலமாக விதிக்கப்பட்டிருக்கிறது. எப்படி நடவடிக்கை எடுத்தாலும், அரசின் அனுமதியோடு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று உத்தரவு போடப் பட்டுள்ளது.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலேயே பாரீ முனையில் இருக்கின்ற என். எஸ். சி. போஸ் ரோடு என்று எழுதியிருக்கிறார்கள். ஒரு பெரிய தலைவருடைய பெயரை, இப்படிச் சுருக்கி, அதுவும் தனிப்பட்டவர்கள் எழுதினாலும் பரவாயில்லை அரசாங்கமே இப்படி எழுதுவது, அந்தத் தலைவரின் பெயரையும் புகழையும் குறைக்கின்ற அளவில் இருப்பதால், முழுப் பெயரையும் எழுதுவதற்கு அரசாங்கம் முன்வருமா? அதே போன்று, உரிமங்கள் பெறாமல், பல அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டப்பட்டால், அதை இடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா? ஏனென்று சொன்னால், ஏழைகள் அப்படி குடிசைகள் கட்டினால் மட்டும், அவைகளைப் பிரித்து எறிந்து விடுகிறார்கள் என்ற நிலை இருக்கிறது. இப்படிப் பணக்காரர்கள் கட்டினால், அதற்கு 10 முறை, 5 முறை என்று அபராதம் விதிக்கப்படுகின்றது. எனவே, அப்படி கட்டக் கூடாது என்றும், அப்படிக் கட்டினால், அதை இடிப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா? என்பதை விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் தலைவரின் பெயர்— என். எஸ். சி. போஸ் ரோடு என்று எழுதப்பட்டிருக்கிறது. அதைச் சொல்வதற்கு மிக நீளமாக இருக்கின்றது என்பதற்காக அப்படி சுருக்கி எழுதப்பட்டிருக்கின்றதே தவிர, வேறல்ல ஆகவே, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்கள் பெயரை அவமானப்படுத்தவோ அல்லது குறைத்து வெளியிட வேண்டுமென்ற எண்ணமோ, இந்த அரசுக்கு இல்லையென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, பல அடுக்கு மாடிக் கட்டிடங்களை,





அந்த இடத்திற்குச் சொந்தமானவர்கள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், குடிசைகளைப் போடுகின்றவர்கள் அந்த இடம் அரசாங்கத்திற்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்கிறார்கள் என்பதற்காக அகற்றப்படுகிறார்கள். ஆகவே, அவர்கள் சொந்த இடத்திலே கட்டினால், என்னென்ன விதி முறையோ, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், அதற்கு மாறாக அவர்கள் ஆக்கிரமிப்பு செய்யும்போது, அந்தக் குற்றத்திற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதே நேரத்தில் மாநகராட்சி சட்டத்திலேகூட, அப்படிப்பட்ட கட்டிடங்களை இடித்துத் தள்ளுவதற்கான பிரிவும் இருக்கிறது. அப்படி இடித்துத் தள்ளுகின்ற நிலை மாநகராட்சி சட்டத்தின்மூலம் எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல அடுக்கு மாளிகைக் கட்டிடங்களை என். எஸ். சி. போஸ் ரோடில் எத்தனை பேர்கள் கட்டியிருக்கிறார்கள்? அப்படி எத்தனை அடுக்கு மாளிகைகள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க முன் வருவார்களா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்புகள் என்னிடத்தில் இல்லை.

திரு. இரா. நாமனைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னைக் கடற்கரையில் உயர்ந்த கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்ற காரணத்தால், அந்தக் கடற் காற்று சென்னை நகர பொது மக்களுக்கும், பக்கத்திலுள்ள எம்.எல்.ஏ. ஆஸ்டலுக்கும் குளிர்ந்தகாற்று வராமல் தடுக்கப்படுகின்ற அளவில் இருப்பதால், உயர்ந்த பல அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு அனுமதி மறுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் தவிர, புதுக் கட்டிடங்கள் இனிமேல் கட்டக் கூடாது என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். ஆகவே, காமராஜ் சாலை, மெரினா பகுதியில் புதியதாக பல மாடிக் கட்டிடங்கள் இனிமேல் வராது. அதே நேரத்திலே, இருக்கின்ற நிலையிலே கட்டிடங்கள் இருக்குமே தவிர, மேலும் உயர்த்திக் கட்டுவதற்கும் தடையிருக்கிறது. ஆனால், சட்ட மன்றத்தைப் பொறுத்த அளவில், இப்போது 4, 5-வது மாடிகளில் அதிகமான காற்று வருகின்றது என்பதுதான். எனக்குத் தகவல். 3-வது அடுக்கு மாடியில் நான் 20 நாட்கள் இருந்தேன். அப்போது கூட, அங்கே அதிகமான காற்று வந்து, இருக்கின்ற துணி வகைகளை அடித்துச் செல்கின்ற அளவிலே காற்று இருந்தது. ஆகவே, தடுக்கின்ற நோக்கம் இல்லை.

[1983 ஏப்ரல் 16

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையிலே பல மாடிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசாங்கம் தடை செய்து இருக்கிறது. பாரத பெருந் தலைவர் காமராஜ் அவர்கள் பெயராலே தேனாம்பேட்டையில் பல மாடி கட்டிடங்கள் கட்டுவதற்கு இந்தச் சட்டம் தடையாக இருக்கிறது என்று நான் அறிகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது அரசு ஆணையை மீறி பல மாடிக் கட்டிடங்கள் கட்டப்படுபவர்களிடம் அபராதம் வசூலிக்கப்படுவதாகச் சொன்னார்கள். மாநகராட்சியில் அதிகாரிகளும், ஊழியர்களும் இருக்கின்ற காரணத்தால் கட்டிவிட்டு இடிப்பதை விட, அப்படி அபராதம் விதிக்கப்படுவதை வி இது ஏதோ ஒரு மணி நேரத்திலோ ஒரு நாளிலோ செய்கின்ற காரியம் இல்லை இது. ஆகவே இனிமேலாவது இந்த மாதிரி புதிதாக கட்டிடம் கட்டாமல் பார்த்துக்கொள்ள சிறப்பு நடவடிக்கைகளை மாநகராட்சி எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி அனுமதி இன்றி கட்டக் கூடிய கட்டிடங்களை எல்லாம் உடனடியாக பார்ப்பதற்கும் அப்படி கட்டும் போதே தடை செய்வதற்கும் அதற்காக ஸ்பெஷல் ஸ்குவாடு என்ற முறையில் மாநகராட்சி ஒரு பிரிவை ஏற்படுத்த இருக்கிறது. இப்படி செய்வதன் மூலம் இவைகளை தவிர்க்க முடியும். இல்லை என்று சொன்னால் அண்டு ஆண்டு "இன் கிளவ்" என்று சொல்கின்ற அளவிலே அந்த நிலச் சொந்தக்காரர்களும், கட்டிடச் சொந்தக்காரர்களும் அதிகாரிகளும் எங்கே கூட்டுச் சேர்ந்து விடுகிறார்களோ என்ற நிலைகள் எல்லாம் இருந்துக்கொண்டு இருக்கிறது. இவைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதற்காக அப்படிப்பட்ட நிலையை அரசு எடுக்க முன்வந்துள்ளது.

ஊராட்சி ஒன்றியங்களின் பணிகள் மற்றும் பொறுப்புக்களைத் திருத்தி அமைக்கும் திட்டம்.

* வினா எண். 773 திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊராட்சி ஒன்றியங்களின் பணிகள் மற்றும் பொறுப்புகளை திருத்தியமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

(இ) அதற்கான காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) கேள்விக்கு இடமில்லை



1983 ஏப்ரல் 16]

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள் இவைகளில் இப்போது தேர்தல் இல்லாத காரணத்தால் அதனுடைய தலைவர், உறுப்பினர்கள் இல்லாத நேரத்தில் பல்வேறு மாறுதல்களை அரசு செய்து கொண்டு வருவது சரிதானா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, கேட்கப்பட்ட கேள்வி பணிகள் மற்றும் பொறுப்புக்களை திருத்தியமைக்கும் செயற் குறிப்புப் ஏதேனும் அரசிடம் இருக்கிறதா என்பது. பணி மற்றும் பொறுப்புகள் 1958 ஆம் ஆண்டிலே என்னென்ன பணிகளும், பொறுப்புகளும் கொடுக்கப்பட்டதோ அதே பணிகளும் பொறுப்புகளும் இது வரை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அதை திருத்தி அமைக்கும் செயற் குறிப்பு அரசினுடைய பரிசிலனையில் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. த. மாரிமுத்து :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் கிராம நல அலுவலராக பணிபுரிந்து வந்தவர்களில் சிலரை விரிவாக்க அலுவலராக விவசாயத் துறைக்கு பணி மாற்றம் செய்யப்பட்டு உள்ளது. அவர்களை மறுபடியும் ஊராட்சி ஒன்றியங்களின் பணி முக்கியத்துவம் கருதி மீண்டும் கிராம நல அலுவலராக பணி அமர்த்த ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1958 ஆம் ஆண்டு ஊராட்சிச் சட்டத்தின் படி ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள் நடைபெறுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். 1958 ஆம் ஆண்டு சட்டத்தில் தான் வேளாண்மை, உணவு உற்பத்தி குடிநீர் இவைகள் எல்லாம் ஒன்றியங்களில் இருந்து வந்தனவே அந்தச் சட்டத்திற்கு முரணாக இன்றைய தினம் வேளாண்மை, ஒன்றியங்களிலிருந்து எடுக்கப்பட்டு விட்டது. குடிநீர் பிரச்சனையும் குடிநீர் வடிகால் வாரியத்திலும் கொடுக்கப்பட்டு விட்டது. இது அரசு எடுத்து இருக்கின்ற முரணான நடவடிக்கை இல்லையா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, 1958 ஆம் ஆண்டு பஞ்சாயத்துகள் சட்டம் 65-வது பிரிவின்படி நீங்கள் சொல்வதைப் போல் விவசாயம், கல்வி இவைகள் கொடுக்கப்படவில்லை. அதைத்தான் குறிப்பிடுகிறேன். ஏன் என்றால் நீங்கள் கேட்ட கேள்வியிலும் பணிகளும், பொறுப்புகளும் என்று அந்த முறையில் கேட்டு

இருக்கிறீர்கள். 65-வது விதிமுறையின்படி அப்படிப்பட்ட விவசாயம், கல்வி போன்றவைகள் வருவது இல்லை. ஆகவே பணிகளும் பொறுப்புகளும் என்று எடுத்துக் கொண்டால் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சி ஒன்றிய சாலைகள் அமைத்தலும், செப்பனிடுதலும், பராமரித்தலும், மருந்தகங்கள் ஏற்படுத்துதலும் அவைகளை பராமரித்தலும், தாய் சேய் இல்லங்களை ஏற்படுத்துதலும் அவைகளை பராமரித்தலும், அனாதை மற்றும் ஏழை விடுதிகள் கட்டுதலும் மற்றும் பராமரித்தலும், ஆரம்பப் பள்ளிகளை திறத்தலும், பராமரித்தலும், தொத்து நோய்கள் தடுத்தலும் அது பரவவிடாமல் செய்தலும் ஊராட்சி ஒன்றியங்கள் அறிவித்துள்ள திருமண திருவிழாக்களை ஏற்று நடத்துதலும், பொது அங்காடிகளை ஏற்படுத்துதலும், பராமரித்தலும், பிறப்பு, இறப்பு கணக்குகளை நிர்வகித்தலும் இவைகள் தான் பொறுப்புகளும் பணிகளும்.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் பணிகள் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில விஷயங்களை இங்கே படித்தார்கள். இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்ற கூடியவர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமுல்படுத்துவதற்காக அந்தத் துறையில் உள்ள எல்லோருக்கும் பொறுப்புகள் நிச்சயிக்கப்பட்டு அந்த வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இது அந்தப் பணிகளில் ஒன்றா அல்லது தற்காலிகமான ஏற்பாடா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-40].

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர் அவர்களே, அது பணிகளிலே வருவதில்லை. ஆனாலும் கூட குடும்பக் கட்டுப்பாடு என்பது மத்திய அரசினுடைய தேசிய இயக்கமாக நடந்து கொண்டிருக்கிற காரணத்தினால் எல்லா அலுவலர்களும் அதிலே ஈடுபட வேண்டும் என்ற பொது அடிப்படையில் அவை செயல்பட்டு வருகின்றன.

மாவட்டங்களில் நடத்தப்படும் நீர்ப்பாசனக் கருத்தரங்குகள்

*வினா எண். 774— **திரு. எம். சின்னசாமி :** மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீர்ப்பாசன கருத்தரங்குகள் எந்தெந்த மாவட்டங்களில் நடத்தப்பட்டன?

(ஆ) மேற்படி கருத்தரங்குகள் இடையில் நிறுத்தப்பட்டனவா ?

(இ) ஆம் எனில் அதற்கான காரணம் என்ன ?



**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** (அ). (ஆ) மற்றும் (இ) நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் சிபார்சின்படி நீர்ப்பாசனக் கருத்தரங்குகளை மாவட்டம் தோறும் அரையாண்டிற்கு ஒரு முறை நடத்த வேண்டும் என்று அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அரசு ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ளது. எனினும் அநேக மாவட்டங்களில் இக்கருத்தரங்குகள் சரிவர நடத்தப்படவில்லை. நீர்ப்பாசனக் கருத்தரங்குகள் அரையாண்டிற்கு ஒரு முறை இனிமேல் ஒழுங்காக நடத்த வேண்டும் என்று அரசு மாவட்ட ஆட்சியர்களுக்குத் தகுந்த அறிவுரைகளை வழங்கியுள்ளது.

மேலும் மாவட்டங்கள் தோறும் நீர்ப்பாசன கருத்தரங்குகளை அமைச்சர் (பாசனம்) அவர்களது தலைமையில் 1983-ஆம் ஆண்டு ஏப்ரல், மே, ஜூன், மற்றும் ஜூலை மாதங்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நீர்ப்பாசனக் கருத்தரங்குகளில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள், சட்டமன்றப் பேரவை மற்றும் சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொதுப்பணித் துறை கண்காணிப்புப் பொறியாளர்கள் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

**திரு. எம். சின்னசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நீர்ப்பாசனக் கருத்தரங்குகள் இதுவரையில் எந்த எந்த மாவட்டங்களில் நடைபெற்று இருக்கின்றன. அதிலே என்ன என்ன திட்டங்கள் பற்றி விவாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதைஅமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** துணைத் தலைவர் அவர்களே, நான் விடையிலே குறிப்பிட்டதைப் போல நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் சிபார்சின்படி நீர்ப்பாசனக் கருத்தரங்குகளை 6 மாதத்திற்கு ஒரு முறை ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அங்கே உள்ள சட்ட மன்ற உறுப்பினர்களை அழைத்து நடத்த வேண்டுமென்று ஏற்கெனவே அறிவுறுத்தியிருக்கிறது. அதிலே கிட்டத்தட்ட 70 சதவீதம் மாவட்டங்களில் அந்த முறை பின்பற்றப்படவில்லை. சில மாவட்டங்களில் ஏதோ 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்தக் கருத்தரங்குகள் நடந்திருக்கின்றன. மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியபோது இதை ஒரு குறையாக சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அரசு மட்டத்திலே நானே தலைமையேற்று ஏப்ரல், மே, ஜூன், ஜூலை மாதங்களில் அனைத்து மாவட்டங்களிலும் நடத்த ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் அனுமதியுடன் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மதுரை, முகவை மாவட்டங்களில் இந்த மாதம் 27, 28, 29-இல் நடத்துவதாக இருந்தது, ஆனால், மதுரை சித்திரை திருவிழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருப்பதன் காரணமாக இந்த ஏப்ரலில் நடை

பெறக்கூடிய அந்தக் கருத்தரங்கு மே இறுதி வாரத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டு மற்ற மாவட்டங்களிலே ஏற்கெனவே நாம் திர்ணயித்த அந்தக் தேதிகளில் கருத்தரங்குகளை நடத்த இருக்கிறோம். கருத்தரங்குகளின் மூலமாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களின் அரிய ஆலோசனைகளைப் பெற்று உடனுக்குடன் அவைகளைப் பரிசீலனை செய்து இந்தத் திட்டங்களை நிறைவேற்ற இந்தக் கருத்தரங்குகளின் மூலமாக நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. மி. வின்செண்ட் : துணைத் தலைவர் அவர்களே, இந்த நீர்ப்பாசனக் கருத்தரங்குகள் கூடின கலைந்தன என்று இல்லாமல் அப்படி இத்தகைய கருத்தரங்குகளின் மூலமாக என்ன என்ன ஆக்கப்பூர்வமான பணிகள் நடைபெறுகின்றன ? நீர்ப்பாசனத்தைப் பெருக்க இத்தகைய கருத்தரங்குகள் எந்த அளவுக்கு பயன்பட்டு இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: துணைத் தலைவர் அவர்களே, பொதுவாகக் கருத்தரங்குகள் நடத்துவது என்பதே அதிகாரிகள் மட்டத்திலே தெரிவிக்கப்படுகிற கருத்தரங்குகளை மட்டுமே நாம் ஏற்றுக் கொண்டு சில திட்டங்களை ஏற்றுக் கொள்ளுவதோ அல்லது வேண்டாமென்று ஒதுக்கிவிடுவதோ கூடாது என்ற நிலை கூடாது என்ற அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துக்கொண்டு தொகுதி மக்களுடைய நீண்டகால கோரிக்கைகளை எடுத்துவைக்கிறபோது அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் கருத்தரங்குகளை நடத்துகிறோம். இன்னொரு முக்கியமான நன்மை இருக்கிறது. ஒரு பற்றாக்குறை மாநிலமாக இருக்கிற தமிழ் நாட்டில் நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு பாசனத் திட்டங்களை ஏற்றுக்கொள்ளப் போகிற போது கூட விவசாயிகள் நில ஆர்ஜிதம் என்று வருகிறபோது கோர்ட்டுகளுக்குச் சென்று தடை பெற்று விடுகிறார்கள். பல்வேறு திட்டங்கள் அதன் காரணமாக எடுக்க முடியாமல் போகின்றன. அவற்றையெல்லாம் தடுப்பதற்காக இந்தக் கருத்தரங்குகள் ஒத்துழைந்து வருகின்றன. சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை ஏற்று விரைவாக செயலாக்குவதற்காக இந்தக் கருத்தரங்குகள் ஆக்கப்பூர்வமான வழிவகைகள் செய்து கொடுக்கின்றன.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நீர்ப்பாசன கருத்தரங்குகள் உண்மையிலேயே உதவிகரமாக இருக்கும். ஒரு மாவட்டத்திற்கு ஒரு நாள்'என்று நிச்சயிக்கிறபோது சில மணி நேரங்கள் தான் உபயோகப்படும் அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய பல்வேறு விவசாய சங்கங்கள் , பல்வேறு அமைப்புகளைக் கொண்டு ஒரு நாள் கருத்தரங்கு நடத்தி, விவரங்களையெல்லாம் தெரிந்து கொண்டு, அதற்கு பின்னாலே அலுவலர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் அமைச்சர் அவர்களும் உட்கார்ந்து விவாதித்தால் பயனுள்ளதாக இருக்காதா ? ஆகவே இப்போது போட்டிருக்கிற திட்டத்தை மாற்றியமைக்க அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்..



மாண்புமிகு திரு. கே இராஜாமுகமது : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போது போடப்பட்டிருப்பது கூட கண்காணிப்பு பொறியாளரும், மாவட்ட ஆட்சித்தலைவரும சேர்ந்து ஒரு குறிப்பிட்ட மாவட்டத்திலே, இந்த நாளில் பாசன கருத்தரங்கு நடைபெறுகிறது என்று அறிவிக்கிறார்கள், முதலாவது நாளில் அந்த மாவட்டத்திலே இருக்கிற விவசாய சங்கங்கள், சட்டமன்ற உறுப்பினர்களோடு ஒரு பிரிலிமினரி டிஸ்கஷன் நடக்கிறது. அப்போது அங்கே சொல்லப்படுகிற கருத்துக்களை எல்லாம் கேட்டு அதற்கு தக்க விடைகளை தயாரித்து விடுகிறார்கள். மறுநாள் காலையிலே அதிகாரபூர்வமாக கருத்தரங்கு துவங்குகிறது. அப்போது ஒரு பகல்பொழுது வரையில், அதாவது கிட்டத்தட்ட ஐந்து மணி நேரம் வரையில் முதல் நாள் தெரிவித்த கருத்துக்களையொட்டி விவாதம் நடைபெறுகிறது. பிறகு மாலை நேரத்தில் உடனுக்குடன் முடிவுகள் எடுத்து இந்தெந்த திட்டங்களை இந்த ஆண்டிலே நாங்கள் எடுத்துக் கொள்கிறோம், என்று மாவட்ட ஆட்சித் தலைவர், பொதுப் பணித் துறையின் முக்கிய அலுவலர்களும் சேர்ந்து முடிவெடுத்து அறிவிக்கிறார்கள் அந்த அடிப்படையிலே தான் நாங்கள் கலந்து பேசி இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தும் கூட இதோடு ஒட்டித்தான் வருகிறது. நடைமுறை படுத்துகிறபோது இவைகளையெல்லாம் கவனத்திலே கொண்டு மாவட்டத்திலேயிருக்கிற அனைத்து விவசாயச் சங்கங்களும், அதனுடைய பிரதிநிதிகளும் பங்கேற்கிற அளவிற்கு இந்த கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரணப் பணிகளில் வாய்க்கால்களை தூர் எடுத்தல் போன்ற பணிகள் இந்த ஆண்டு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? பொதுப் பணித் துறை மீண்டும் இந்த வறட்சிப் பணியில், நீர்ப்பாசன கருத்தரங்குகள் நடத்துவதற்கு முன்பு, விவசாயிகள் பெரிதும் விரும்புகின்ற நீர் செல்கிற அந்த வாய்க்கால்களை ஆழப்படுத்த அல்லது சுத்தப்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்காக சட்டமன்றத் தொடர் கூட்டம் முடிந்த பின்னால் அமைச்சர் அவர்கள் எல்லா மாவட்டங்களுக்குப் வந்து இந்த கருத்தரங்குகளை நடத்த முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வறட்சிப் பணியில் எவ்வளவு துரிதமாக அனைத்துப் பணிகளும் எடுத்து செய்யப்பட்டு வருகிறது என்பதை நாம் அவ்வப்போது அறிக்கையிலே கொடுத்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது எனக்கு மிகவும் ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. எப்படி வரத்து வாய்க்கால்களை எல்லாம் புதுப்பிக்காமல் வறட்சிப் பணிகளை எடுப்பதென்று தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்று கேட்டிருக்கிறார்கள். நான் அறியேன்.

காரணம் அனைத்து குளங்களும், கண்மாய்களும் புதுப்பிக்கப்பட வேண்டும். ஸ்டாண்டர்டைஸ் செய்யவேண்டும். டி. சி. ஆர். ஸ்கமிலே எடுத்துக் கொள்ளப்படவேண்டும். அதிலேவரத்துக் கால்வாய்கள், சப்ளை சேனல்ஸ் எல்லாமே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நாம் உத்தரவு போட்டிருக்கிறோம். எக்ஸ்சிடிங் டாங்க்குகளையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.. தஞ்சை மாவட்டத்திலே காவிரி டெல்டா பகுதியிலே இருக்கக்கூடிய கால்வாய்களை செப்பனிட வேண்டுமென்று அதற்காக 21 லட்சம் ரூபாய் தனியாக ஒதுக்கீடு செய்திருக்கிறோம். ஆகவே எப்படி வறட்சிப் பணிகளிலே அது சேர்க்கப்வில்லை என்று சொல்கிறார் என்று தெரியவில்லை. எந்த வேலை குறிப்பாக எந்த இடத்திலே எடுக்கப்படவில்லை என்கிற தகவல் இருந்தால் என்னிடத்திலே கொடுக்கலாம். உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம். காரணம் இந்த அரசினுடைய கருத்தல்ல அது. எல்லா இடங்களிலும் அந்த வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம். அப்படி ஏதாவது அவரது தொகுதியிலே அல்லது பக்கத்து பகுதிகளிலே குறைபாடுகள் இருக்குமென்று கருதினால் நேரடியாக என்னிடத்தில் எழுதிக்கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

திரு க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்டந்தோறும் கருத்தரங்குகள் நடத்துவது சம்பந்தமாக சொல்கிறபோது, இந்த மாதக் கடைசியிலும், அடுத்த மாதத்திலும், ஜூன், ஜூலை ஆகிய மாதங்களிலும் கருத்தரங்குகள் நடத்த இருப்பதாகச் சொன்னார்கள். தஞ்சை மாவட்டம் என்பது மேலத் தஞ்சை, கீழத் தஞ்சை என்று இரண்டாக பிரிந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் நீங்கலாக. ஏனைய அனைத்து துறைகளும் தனியாகச் செயல்படுகின்றன. ஆகவே தஞ்சை மாவட்டத்திற்கு இரண்டு பிரிவுகளாக கருத்தரங்குகள் நடத்துவதற்கு, மேலத் தஞ்சையில் ஒரு நாளும், கீழத் தஞ்சையில் ஒரு நாளும் நடத்துவதற்கு, அமைச்சர் அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இப்போது நாங்கள் ஏற்கெனவே எடுத்த முடிவின்படி 18–5–1983 அன்று திருச்சி, புதுக்கோட்டை தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் பாசனக் கருத்தரங்குகளை நடத்தலாம் என்று முடிவு எடுத்திருக்கிறோம். ஆகவே மொத்தமாக மூன்று மாவட்டங்களுக்கு என்று ஒரு இடத்தை தேர்ந்தெடுத்தோம். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது அவர்களுடைய தஞ்சை மாவட்டத்தை இரண்டாக பிரித்து இரண்டு நாட்கள் கருத்தரங்குகள் நடக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதுகுறித்து உடனடியாக பரிசீலனை செய்து—கருத்தரங்கு அந்தந் தேதியிலே நடக்கும்—அதோடு ஒட்டி இன்னுமொரு இரண்டு நாட்களைச் சேர்த்து கீழத்தஞ்சையில் ஒரு நாள், மேலத்தஞ்சையில் ஒரு நாள், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களுக்கு ஒரு நாளாக வைத்து, மொத்தம் மூன்று நாட்கள் ஒதுக்கி வைத்து அதை செயல்படுத்தலாம் என்று கருதுகிறேன்.



(முற்பகல் 9-50)

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீர்ப் பாசனக் கருத்தரங்குகள் சம்பந்தமாக, அந்தக் கருத்தரங்குகளிலே எடுக்கக் கூடிய பரிந்துரைகள் எந்த அளவுக்கு அமுலாக்கப்படுகின்றன? குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்திலே நடந்த கருத்தரங்கிலே விளாத்துறை லிப்ட் இரிகேஷனில் தண்ணீர் இருக்கிறது, இயந்திரங்களைப் பொருத்த வேண்டிய வேலை மட்டும் தான் இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது. அந்தப் பரிந்துரைகளை எந்தக் கால கட்டத்திற்குள்ளே அமுலாக்க முடியும் என்பதை அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்திலே 1982 ஆம் ஆண்டு ஒரு கருத்தரங்கை நாம் நடத்தினோம், அதிகாரிகள் மட்டத்திலே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் அழைத்து, அவர்கள் எல்லாம் செய்திருக்கிற பரிந்துரைகளில், சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுகின்ற பரிந்துரை இடம் பெற்றிருக்கிறது என்றுதான் கருதுகிறேன். ஆனால், அதை நிறைவேற்றுவதில் சில சிக்கல்கள் இருக்கின்றன என்று கருதுகிறேன். குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் நாம் நிறைவேற்றும்போது, கொஞ்சம் கவனமாகச் செயல்படுத்த வேண்டியதாக இருக்கிறது. காரணம், அங்கே நிலத்தினுடைய மதிப்பு ரொம்ப அதிகமாக இருக்கிறது. 1/ ஏக்கர் ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்றால் கூட, பல்வேறு பிரச்சினைகள் வந்து விடுகின்றன. அந்த அடிப்படையிலே ஏதாவது காரணங்கள் இருக்கலாமே தவிர, நிதிக் காரணமாகவோ அல்லது வேறு பற்றாக்குறை காரணமாகவோ எந்தத் திட்டத்தையும், பாசனத் திட்டத்தைப் பொறுத்த அளவிலே நிறுத்தி வைக்கக்கூடாது என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, நிதி ஒரு காரணமாக இருக்க முடியாது. எவ்வளவு நிதி வேண்டுமானாலும் அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. வேறு காரணங்கள் ஏதாவது இருக்கிறதா என்று நான் தெரிந்து மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவிக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்று உணரல் பாற்று'

என்று திருவள்ளுவர் கூறியதோடு மட்டும் அல்லாமல், 'நீரின்றி அமையாது உலகம்' என்றும் கூறி உள்ளார்கள். எனவே, நீரினுடைய முக்கியத்துவத்தைப் புரிந்துதான் இந்தப் பாசனக் கருத்தரங்குகள் அவசியம் என்று கருதப்பட்டு அறிவிக்கப் பட்டிருக்கின்றன. ஆனால், இவைகள் நடக்காத மெத்தன போக்கிற்கான காரணம் யார்?

அதோடு மட்டுமல்லாமல், கல்லணைக் கால்வாய்க்கு ரூ. 21 இலட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த வறட்சி நேரத்திலே தஞ்சை மாவட்டத்தில், அவர்களுக்குச் சட்டப்படியான சம்பளம் கொடுக்காத நிலையிருக்கிறதே, அதன்மீது அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. இராஜாமுகம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வியின் ஒரு பகுதிக்கு நான் இங்கே விடை தருகிறேன். கருத்தரங்கை ஏன் நடத்தவில்லையென்பதை அரசு வன்மையாகக் கண்டித்திருக்கிறது. காரணம், நிர்வாகச் சீர்திருத்தக் குழுவினுடைய ஒரு முக்கியமான பரிந்துரையின்படி 6 மாதத்திற்கு ஒரு முறை நடத்தி இருக்க வேண்டும். ஆனால், இரண்டு ஆண்டுக் காலமாக, தமிழகத்திலே நிறைவேற்றப்பட்டு வருகிற பல்வேறு சமூகநலத் திட்டங்களின் காரணமாக, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இதிலே அதிகக் கவனம் செலுத்தியிருக்க முடியாது என்கிற கருத்தின் அடிப்படையில் இதுவரை ஏன் நடத்தவில்லையென்பதை நாம் போய் பார்த்து விசாரணை செய்து கொண்டிருப்பதைவிட இனிமேல் நாம் நிச்சயமாக 6 மாதத்திற்கு ஒரு முறை மாவட்டங்கள்தோறும் பாசனக் கருத்தரங்கு நடத்தப்பட வேண்டும். மாவட்டத் ஆட்சித் தலைவருக்குப் பல்வேறு பொறுப்புகள் இருந்தாலும்கூட, நம்முடைய தலைமைப் பொறியாளரும், கண்காணிப்புப் பொறியாளரும் போய் அங்கே நடத்த வேண்டும். கூடுமான வரை அனைத்துக் கருத்தரங்குகளிலும் பாசனத் துறை அமைச்சர் கலந்து கொள்ள வேண்டுமென்று நாங்களாகவே ஒரு முடிவெடுத்து, இப்பொழுது ஆக்கபூர்வமான பணிகளிலே ஈடுபட்டிருக்கிறோம். இனிமேல், தொடர்ந்து நல்லமுறையில் கருத்தரங்கு நடத்தப்படும்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டந்தோறும் நீர்ப்பாசனக் கருத்தரங்குகள் நடத்தப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். எங்களுடைய பெரியார் மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே, அந்த மாவட்டத்திலே, கீழ்பவானிப் பாசனம், மற்றும் காளிங்கராயன் கல்வாய்ப் பாசனம், அமராவதி கால்வாய்ப் பாசனம், பி.ஏ.பி. கால்வாய்ப் பாசனம் என்று பல வழிகளிலே பாசனம் நடைபெற்று





வருகிறது. அவர்களுக்கு ஒட்டுமொத்தமாக கருத்தரங்கு நடத்தப் படுமானால், ஒவ்வொருவருடைய பிரச்னைகளையும் அங்கே பேச முடியாது. எனவே, ஒவ்வொரு ஆயக்கட்டின் மூலமாகப் பாசனம் பெறுகின்ற விவசாயிகளுக்குத் தனித்தனியாக கருத்தரங்கை நடத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. இராஜாமுகம்மது: தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னதைப் போல, முதலாவது—பிரிலிமினரி—டிஸ்கஷன் நடக்கிற பொழுதே ஒவ்வொரு பாசனப் பகுதிகளும் தனித்தனியாக எடுத்துக் கொள்ளப்பட்டுத்தான் விவாதிக்கப்படுகின்றன. மறு நாள் அனைத்துக் கருத்துக்களுக்கும் பதில் சொல்லக்கூடிய வகையில் கருத்தரங்கு நடைபெறுகிறது. மாலை நேரத்தில், உடனடியாக எடுத்துக் கொள்ளக் கூடிய திட்டங்கள் குறித்து—காரணம் ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்பு மாவட்ட ஆட்சியாளருடைய கருத்தைக் கேட்கிறோம். பிறகு, கண்காணிப்புப் பொறியாளருடைய பரிந்துரையை எதிர்பார்க்கிறோம். இரண்டு பேர்களுடைய பரிந்துரைகளும் வந்ததற்குப் பிறகு அரசு அதை ஆய்வு செய்கிறது. இந்தப் பணியினை நாம் அந்த இடத்திலேயே முடித்துவிடுகிறோம். அதன் காரணமாக, விரைவாகத் திட்டங்களை எடுத்துச் செயல்படுத்துவதற்கு, எடுத்து நடத்துவதற்கு வாய்ப்பிருக்கிறது என்ற அடிப்படையில்தான் பல்வேறு கருத்தரங்குகளை நடத்துகிறோம். மற்றபடி பி.ஏ.பி.க்கு ஒரு நாள், காளிங்கராயனுக்கு ஒரு நாள் என்று தனித்தனியாக ஒதுக்குவோமானால், கிட்டதட்ட, தமிழ் நாட்டிலே இந்தக் கருத்தரங்கு மட்டுமே நாம் நடத்திக் கொண்டிருக்க வேண்டிய நிலைமை வந்து விடும். எனவே, கூடுமானவரை நாம் நேரங்களை, 5 மணி நேரம் அதிகமாக வேண்டுமானால் கூட ஒதுக்கி, இரண்டு நாட்கள் என்று வைத்துக்கொள்வதுதான் சரி என்ற நிலைமையை நாம் ஒத்துக் கொள்வது நல்லது என்று கருதுகிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கருத்தரங்கு நடத்துவதைப் பற்றிச் சொன்னார்கள். திருச்சி, புதுக்கோட்டை என்று சொல்லி, தென்னார்க்காடு, செங்கல்பட்டு என்று சொல்கிறார்கள். ஆனால் குறிப்பாகத் தென்னார்க்காடு, தஞ்சை, திருச்சி ஆகிய இந்த மூன்று ஜில்லாக்களையும் சேர்த்துப் பார்க்கும்பொழுது, லோயர் அணைக்கட்டு இருக்கிறது. அந்தப் பகுதியில் கொள்ளிடத்தில் வெள்ளக் காலங்களில் வருகின்ற அதிகப்படியான நீர் வங்காள விரிகுடாவில் போய் விழுகிறது. அமைச்சரவர்கள் சொன்ன யோசனை நல்ல யோசனைதான். ஒன்றுகூடிப் பேசலாம் என்று சொல்கிற பொழுது, திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் பகுதியில் உள்ள பொன்னேரியிலும், தென்னார்க்காடு மாவட்

டத்திலுள்ள வீராணம் ஏரியிலும், தஞ்சை மாவட்டத்தில் உள்ள லோயர் அணைக்கட்டில் கொள்ளிடத்தில் அதிக நீர் வரும்பொழுது அது வீணாகிறது. ஆகவே, இந்த மூன்று ஜில்லாக்களின் அதிகாரிகளையும், என்ஜினியர்களையும் கூட்டி, மாவட்டக் கலெக்டர் அல்லது விவசாயப் பெருமக்களின் அனுபவ ரீதியான முறைகளைக் கேட்டு நல்ல நீர்த் தேக்கத்தை உண்டாக்கி, தண்ணீர் வீனாகப் போகின்ற பிரச்னையைத் தீர்ப்பதற்காக ஒரு கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்வார்களா? அவ்வாறு செய்தால் திருச்சி, தென்னார்க்காடு மாவட்டங்களுக்கு உதவியாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பிறகு எனக்கு இன்னும் ஒரு யோசனை கூட வருகிறது. மாவட்ட அளவில் கருத்தரங்கு நடத்துவதற்குப் பதிலாக பேசின் வைஸ் என்று நடத்தலாமா என்று பரிசீலனை செய்து, காவிரி டெல்டா பகுதி, காளிங்கராயன், பி.ஏ.பி. என்று ஒவ்வொரு பாசனப் பகுதியாகப் பிரித்து நடத்தினால் அது சரியாக இருக்குமானால் அவ்வாறு செய்யலாம். அல்லது மாவட்ட அளவில் என்று இப்பொழுது அறிவித்தபடியே நடத்தி, இப்பொழுது தென்னார்க்காடு மாவட்டம் பற்றி நடக்கும்பொழுது அதில் செங்கல்பட்டு மாவட்டம் சேர்க்கப்படவில்லை. தென்னார்காடு மாவட்டத்தில் 26—6—1983 ஆம் தேதியன்று ஒதுக்கப்பட்டிருக்கிறது; 3—7—1983 ஆம் தேதி செங்கல்பட்டு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிழக்குத் தஞ்சை, மேற்குத் தஞ்சைக்கு நடக்கும் பொழுது தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள ஒரு பகுதி விவசாயிகளையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் அங்கே அழைத்தும், தென்னார்க்காடு மாவட்டக் கருத்தரங்கு நடத்தும்பொழுது தஞ்சைப் பகுதியிலுள்ளவர்களை அழைத்தும், தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள இன்னொரு பகுதி சட்டமன்ற உறுப்பினர்களை திருச்சி மாவட்டக் கருத்தரங்கு நடக்கும்பொழுது கலந்து கொள்ள அழைத்தும், இப்படி இன்னொரு நாள் அதிகப்படியாக ஆனாலும்கூட திட்டமிட்டு நடத்தலாம். எனவே இந்த இரண்டுக் கருத்துக்களையும் பரிசீலனை செய்து முடிவு எடுப்போம். ஆனால், திட்டமிட்டப்படி இந்தத் தேதிகளில் கருத்தரங்கு நடக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடகனாறு அணை.

* வினா எண். 775—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடகனாறு அணை மீண்டும் கட்டப்படும்போது எவ்வளவு ஏக்கர் நிலம் பாசனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்?



(ஆ) திருச்சி மாவட்டத்தில் எவ்வளவு ஏக்கர் பாசனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ): பாசனத்திற்கு உத்தேசிக்கப்படும் நிலங்கள் பற்றி ஆய்வு செய்ய வேண்டியுள்ளது என்றும், ஆய்விற்குப் பின்னர் தான் எவ்வளவு ஏக்கர் பயன்பெறும் என்பது தெரியுமென்றும் பாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

* வினா எண். 776—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மற்றும் திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977 ஆம் ஆண்டு வெள்ளத்தால் உடைந்த, வேடசந்தூர் தாலுகாவில் உள்ள குடகனாறு அணையை மீண்டும் கட்ட அரசு முடிவெடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) ஆம்.

(ஆ) அதற்கான திட்ட அறிக்கை தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் திட்டத்தில் முன்பு திருச்சி மாவட்டம் அரவக்குறிச்சி ஒன்றியம் இயக்குநத்தம், அம்மாப்பேட்டை கிராமங்களில் வாய்க்கால் வெட்டப்பட்டு, அதில் பாசனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆகவே, இப்பொழுது செயல்படுத்தும்பொழுது அங்கேயுள்ள சுமார் 6,000 ஏக்கர்கள் பாசனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, முன்பு குடகனாறு திட்டம் திட்டப்பட்டபொழுது நொய்யல் திட்டம் என்ற ஒன்று இல்லாமல் இருந்தது. இப்பொழுது அந்தக் குடகனாறு மூலமாக முதலில் எதிர்பார்த்ததைப் போலவே, சில பகுதிகளுக்குக் கிடைக்காமல் பாதிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலும்கூட, நொய்யல் திட்டத்தின் மூலமாக இரண்டு கட்டங்களாக நாம் அதைச் செயல்படுத்தி, கரூர் வட்டத்திலே பத்தாயிரம் ஏக்கர்கள் பயன்படக்கூடிய அளவிற்குக் கிட்டதட்ட ஏழுகோடி ரூபாய்க்கு மேலே அதற்கு ஒரு திட்டத்தை ஒதுக்கி அதை நாம் செயல்படுத்தப் போகிறோம். ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையில் அல்லது இந்தத் துறையைப் பொறுத்த அளவில் இந்த மாவட்டத்திற்குத்தான் அதிகப் பாசன வசதி கொடுக்க வேண்டுமென்ற ஒரு குறுகிய நோக்கம் கிடையாது. கிட்டதட்ட ஃபேர் அண்ட் ஈகுடபிள் டிஸ்ட்ரிப்யூஷன் என்ற முறையைத்தான் நாங்கள் நிச்சயமாகப் பின்பற்றுவோம்

அதற்காகத்தான் ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. அதுகுறித்து உடனடியாக விவாதம் செய்து முடிவெடுக்கும்பொழுது மாண்புமிகு உறுப்பினரின் தொகுதியின் நலன் கிட்டதட்ட புறக்கணிக்கப்படாத அளவிற்குப் பார்த்துக் கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, அந்தக் குடகனாறு அணை மீண்டும் கட்டப்பட்டு, அதன் நீரை விநியோகிக்கும் பொழுது ஃபேர் அன்ட் ஈகுடபில் டிஸ்ட்ரிபியூஷன் இருக்கும் என்று அமைச்சரவர்கள் உறுதி சொன்னார்கள். நன்றி, ஏற்கனவே மதுரை மாவட்டத்தில் வேடசந்தூர் பகுதியில் இந்த ஆறு ஓடுகிறது. இது மிக வறண்ட பகுதி. அந்த அணையின் மூலம் வேடசந்தூருக்குப் பாசன வசதி அளிக்க அமைச்சரவர்கள் உறுதி அளிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 10—00.)

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் அறிக்கை தயாரிக்கும்போது கீழ்க்கண்ட கருத்துக்களையும் பரிசீலிக்குமாறு தலைமைப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். (1) அணையை, பழைய இடத்தில் திரும்பவும் கட்டவேண்டுமா அல்லது மாற்று இடத்திலே கட்டவேண்டுமா ? (2) மதுரை மாவட்டத்தில் அணை கட்டுவதால் அந்த மாவட்டத்தில் உள்ள அதிகபட்ச நிலங்களுக்கு பாசன உறுதி அளிப்பதாக இருக்கவேண்டும். அதன் பின்னர் எஞ்சிய நீரை அண்டை மாவட்டங்களுக்கு அளிக்க வகை செய்யலாம் என்ற ஒரு கருத்தை பரிசீலிக்கும்படி சொல்லியிருக்கிறோம். காரணம் இந்த மாவட்டத்தில் குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப் போல வேடசந்தூர். பகுதியிலேதான் அந்த அணை கட்டப்படுகிறது. காரணம்இது மிகவும் வறண்ட பகுதி என்ற காரணத்தால். அந்தப் பகுதியில் அதிகமான பாசன நிலங்கள் பயன்பெற வாய்ப்பு இருக்கிறதா என்று பார்க்கச் சொல்லியிருக்கிறோம். (3) திண்டுக்கல் வேடசந்தூர் பகுதிகளில் உள்ள குடிநீர்ப் பிரச்னையை இந்த நீர்த்தேக்கத்தின் மூலம் தீர்க்கலாமா என்றும் அதையும் சேர்த்து பரிசீலனை செய்யச் சொல்லி மூன்று விதமான கருத்துருகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. பரிசீலனைகள் எல்லாம் செய்து வந்திருக்கிறது. விவாதித்து பிறகு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடகனாறு திட்டம் ஏற்கனவே இருக்கிற பழைய திட்டங்களின்படி கரூர் தாலுக்காவில், வெள்ளியணை, உப்பளம் போன்ற பகுதிகளில் இருக்கின்ற அந்தக் குளங்களுக்கு எல்லாம் தண்ணீர் நிரப்புவதுதான் அந்தப் பழையத் திட்டம் ஆகவே இப்போது மறு ஆய்வு செய்யும்போது, அந்தப் பழைய திட்டம் பாதிக்காமல் இருப்பதற்கு அமைச்சர் அவர்கள் உறுதி அளிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு கேள்வி கேட்பார் என்பதற்காகத்தான் முதலிலேயே பதில் சொன்னேன். நொய்யல் திட்டம் என்ற ஒன்று இப்போது சேர்க்கப்பட்டு கிட்டதட்ட 9 கோடி வரை அதற்கு செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிலே 10 ஆயிரம் ஏக்கர்கள் வரை அவர்கள் குறிப்பிடுகின்ற பல்வேறு பகுதிகள் பயன் அடையக் கூடிய திட்டத்தை நிறைவேற்றி இருக்கிறோம். அங்கே கிடைக்கக்கூடிய நீரின் அளவை வைத்து இந்த மூன்று கருத்துருகளையும் நாம் பரிசீலிக்கின்றபோது மற்ற பகுதிகளுக்கும் எந்த அளவுக்கு நாம் அதிகமாக நன்மை செய்யமுடியும் என்பதையும் நிச்சயமாக அரசு கருத்திலே கொள்ளும்.

திரு.. கே. குப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது குடகனாறு அணையைக் கட்டும்போது வேடசந்தூர் தொகுதியினுடைய எல்லையை ஒட்டியிருக்கிற ஒட்டன் சத்திரம் தொகுதியினுடைய கீழ்ப்புற பகுதிகளுக்கு அதனுடைய உபரி நீரைக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன் சத்திரம் பகுதியை தனியாகப் பார்த்து வேறு திட்டங்கள் மூலமாக கவனிக்கலாம் என்று அரசு நினைக்கிறது. இப்போது உள்ள பிரச்னை இதுதான். திண்டுக்கல் வேடசந்தூர் பகுதிகளில் உள்ள குடிநீர்ப் பிரச்னையைப் போக்குவதற்கும் சேர்த்துக்கொள்ளமுடியுமா ? மதுரை மாவட்டத்தில் அணை கட்டுவதால் இந்த மாவட்டத்தில் உள்ள அதிகபட்ச நிலங்களுக்கு குறிப்பாக வேடசந்தூர் பகுதியிலே . திகமான நிலங்களுக்கு வாய்ப்பு இருக்குமா என்று, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்றபடி ஒருவேளை அந்த கோர்ஸ் ஆப் ரிவர் அந்தப் பகுதியிலே போகுமானால் அதைப்பற்றிக் கூட நிச்சயமாக அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, இந்த குடகனாறு என்னுடைய தொகுதியிலேதான் உற்பத்தியாகிறது. ஆகவே அணையை வேறு இடத்திலே அமைப்பதாக இருந்தால் என்னுடைய தொகுதியிலே அமைப்பதற்கு அரசு வழி வகுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, உற்பத்தி ஆகின்ற இடத்திலே அணையைக் கட்டினால் தண்ணீர் தேக்கி வைக்க முடியாது. எனவே கீழே வந்து தான் அணையைக் கட்டவேண்டியிருக்கிறது. எனவே அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடகனாறு உடைந்த நேரத்திலே நாமெல்லாம், 2, 3 நாட்களுக்குச் சென்று அப்போது நிவாரணத்திற்காக அதிகமாக வசதி செய்தோம். இந்தக் குடகனாறு உடைந்து பல ஆண்டுகள் ஏறக்குறைய 4, 5 ஆண்டுக்காலம் ஆகிவிட்டது. இப்போது கட்ட ஆரம்பிப்பதாகச் சொல்லுகிறார்கள். இப்போது கட்ட ஆரம்பித்துவிட்டதா? அல்லது இனிமேல்தான் கட்ட ஆரம்பிக்கப்படுமா? இவ்வளவு நாள் தாமதம் ஆனதற்கு காரணம் என்ன? அதோடு இந்த அணையை முன்னாலே எப்படி இருந்ததோ, அதே மாதிரி கட்டப்படுகிறதா அல்லது அதிலே ஏதாவது மாற்றம் செய்து முன்னாலே இருந்த பாசனத்தைவிட அதிகமான பாசன வசதி பெறக்கூடிய முறையிலே ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு வேண்டிய திட்டம் தீட்டப்பட்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடகனாறு அணையை டிசைன் செய்யப்பட்டபோது 3 லட்சம் கியூசெக்ஸ் வெள்ளம் ஏற்கக்கூடிய அளவில் ஒரு அமைப்போடுதான் கட்டப்பட்டது. ஆனால் பெரிய அளவிலே எதிர்பாராத வகையிலே வெள்ளம் வந்ததன் காரணமாக அது உடைந்திருக்கிறது. ஒன்று அப்படியே அந்தப் பகுதிகளை திரும்பவும் புதுப்பித்து, அதே கொள் அளவை மட்டும் வைத்துக்கொண்டு பயன்பெறக் கூடிய இடங்களை மட்டும் மறு ஆய்வு செய்து கூடுமான வரையில் அந்த வறண்ட பகுதிகளிலே நாம் அதிகமான பாசன வசதியைக் கொடுக்கலாமா என்று நாம் இப்போது ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம்.

எனவே, இரண்டு கருத்துக்கள் இருக்கின்றன. ஒன்று—வேறு இடத்தில் கட்ட வேண்டும் என்று வருகிறபோது, பெரிய அளவிலேதான் கட்டவேண்டும். ஆனால் இப்போது இருக்கிற இடத்திலே கட்டவேண்டுமென்று சொன்னால் ஏற்கெனவே இருந்த 3 கியூசெக்ஸ் கொள்ளளவில் உள்ளதாக இருக்கவேண்டும். இப்போது ஹைடிராலஜி பார்த்துக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது ரிப்போர்ட்டு வந்திருக்கிறது. இரண்டையும் வைத்து அரசு முடிவு செய்யும்.

திரு. என். வரதராஜன் : இந்தக் குடகனாறு அணை உடைந்து 5 ஆண்டுகள் ஆகிறது. அந்த அணையின் மண் பகுதிதான் உடைந்திருக்கிறது. அதை சீர்செய்ய அதிகமான அளவில் நிதி தேவையில்லை. அதை பூர்த்திசெய்துவிட்டு, அதற்கு அருகாமையில் ஒரு 7, 8 மைலுக்கு அப்பால் இலட்சுமணபுரப்பட்டியில் ஒரு அணையைக் கட்டினால் அது, திண்டுக்கல், வேடசந்தூர் பகுதிகளுக்கு உபயோகமாக இருக்கும். வெள்ளத் தடுப்பிற்கும் அது உதவியாக இருக்கும். இதை ஆய்வு செய்து, அமல்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்,





மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு தலைவரவர்களே, உறுப்பினர் கருதியதுபோல், லட்சுமணபுரப்பட்டியில் கட்டியிருந்தால், பிரச்சினைகள் வந்திருக்காது. அது முதலிலே பார்க்கப்பட்டது. 3 லட்சம் கியூசெக்ஸ் கொள்ளளவில் டிசைன் செய்யப்பட்டு கட்டப்பட்டது. அப்போது ஏற்பட்ட வெள்ளம், 100 ஆண்டுகளுக்கு, 500 ஆண்டுகளுக்கு முன்னால், ஏற்படாத அளவிற்கு வெள்ளம் வந்து, மண் பகுதிகள் அடித்து செல்லப்பட்டன. திரும்பவும் அந்த மண் பகுதிகளையெல்லாம் சிமெண்ட் கான்கிரீட்டினால் கட்டிவிடலாம் என்ற ஒரு கருத்து இருக்கிறது. அது வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் கருதினால், லட்சுமணபுரப்பட்டியில் கட்டவேண்டும் என்று சொன்னால், அதை யோசிக்கலாம். ஒரு வேளை இங்கேயும் கட்டி அங்கேயும் கட்ட வேண்டும் என்று சொன்னால், இந்தக் கருத்தையும் குறிப்பிலே ஏற்றுக்கொண்டு, அமைச்சரவையிலே விவாதித்து அந்தக் கருத்தைப் பரிசீலனை செய்வோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவகாசி தொகுதி சித்துராஜபுரம் கிராமம் அருகே புதிய கண்மாய் அமைக்கும் திட்டம்.

*வினா எண் .777—திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதி சித்துராஜபுரம் கிராமம் அருகே புதிய கண்மாய் அமைப்பதற்கு 1981-82-ம் ஆண்டு அரசு ஆய்வு செய்து ஆணை பிறப்பித்திருந்தும் நிறுத்தப்பட்டதற்கான காரணம் என்ன ?

(ஆ) தனியார் ஆட்சேபித்திருந்தால், உடன் அதை நீக்கிவிட்டு கண்மாய் அமைக்க அரசு முன்வருமா ?

(இ) இதனால் பாசனம் பெறும் நிலத்தின் பரப்பளவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ) அருப்புக்கோட்டை பஞ்சாயத்து ஒன்றிய வட்டத்தைச் சேர்ந்த சேதுராஜபுரம் கிராமத்தின் அருகே ஒரு புதிய கண்மாய் அமைக்க ஆய்வு செய்யப்பட்டு வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின் கீழ் இதை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) இதன் மூலம் 101 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசனம் பெறும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும்போது, அருப்புக்கோட்டை பஞ்சாயத்து ஒன்றிய வட்டத்தைச் சேர்ந்த சேதுராஜபுரத்தில் ஒரு புதிய கண்மாய் அமைக்க ஆய்வு செய்யப்பட்டுவருவதாகச் சொன்னார்கள். அது

வேறு திட்டம். சிவகாசி தொகுதி சித்துராஜபுரத்தில் அமைப்பது என்பது, இது வேறு இடம். இது சம்பந்தமாக அமைச்சரவர்கள் என்ன சொல்ல விரும்புகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, இங்கே எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற குறிப்புக்களைக் கொண்டு சொல்லியிருக்கிறேன். இருந்தாலும் உறுப்பினர் சொல்வதை விசாரிக்கிறேன்.

காஞ்சிபுரம் ஒன்றியத்திலுள்ள பொதுமக்கள் செங்கல் சூளை அமைக்க கடன் வேண்டு விடுத்துள்ள கோரிக்கை

*வினா எண் 778 —திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு கதர் மற்றும் பாதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் ஒன்றியத்திலுள்ள பொதுமக்கள் சூளை போடுவதற்கு கடன் வேண்டி அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில் இக்கோரிக்கைகள்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) இல்லை.

(ஆ) எனினும் காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து செங்கல் சூளை அமைப்பதற்கு 22 கடன் விண்ணப்பங்கள் பெறப்பட்டதாகவும் அவைகள் பரிசீலனையிலிருப்பதாகவும், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அரசுக்கு தெரிவித்துள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்த மனுக்களை எவ்வளவு காலத்திற்குள் பரிசீலனை செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.என். இராசேந்திரன்: தலைவரவர்களே தமிழக ரீதியாக 200 செங்கல் சூளைகளுக்குத் தேவையாக நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றது தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம். ஆனால், 40 செங்கல் சூளைகள் அளவிற்கு கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் காஞ்சிபுரத்தில் கொடுக்கப்பட்ட 20 மனுக்களும் சேர்க்கப்படவில்லை. 1982–83-ல் விண்ணப்பித்த அந்தக் கடன் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே இப்படி வழங்கப்படுகின்ற சூளைக் கடன்களுக்கு எவ்வளவு தொகை அரசு மானியமாக வழங்கப்படுகிறது. வேறு உதவி ஏதேனும் அளிப்பதற்குத் திட்டங்களை வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதில கடனாகத் தான் கொடுக்கப்படுகிறதே தவிர, மானியமாகக் கொடுப்பதைப்பற்றி குறிப்பில்லை. இது சம்பந்தப்பட்ட திட்டங்கள் மொத்தம் 200 செங்கல் சூளைகளுக்கு, 1982–83 ல். அதில் 40 செங்கல் சூளைகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டு, 4 இலட்சம் மட்டும், கதர்—கிராமத் தொழில் வாரியம் ஒதுக்கீடு செய்துள்ளது. 1983–84-ல் இதைவிட இன்னும் அதிகபட்ச செங்கல் சூளைகளுக்கு கடன் உதவி அளிக்கப்படும்.

*Hosur Dairy Development Board*

*Q. No. 779—THIRU T. VENKATA REDDY : Will the Hon. Minister for Social Welfare be pleased to state :—

(*a*) Whether it is a fact that the Hosur Dairy Development Board was not functioning ; and

(*b*) If so, the reasons therefor ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) மற்றும் (ஆ) : ஒசூர் கால்நடை வளர்ப்பு நிலையத்தினை நிர்வகிக்கும் பொருட்டு, ஒசூர் பால்வள வாரியம் 1860 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவு சட்டத்தின்கீழ் 1976 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 13-ஆம் நாளன்று பதிவு செய்யப்பட்டது. இவ்வாரியத்திற்கு ஓய்வு பெற்ற இராணுவத்தளபதி திரு. பி. பி. குமாரமங்கலம் அவர்கள் முதல் கவுரத் தலைவராக நியமிக்கப்பட்டார். அவரது பதவிக் காலம் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5 ஆம் நாள் வரையில் நீடிக்கப்பட்டுளளது. இந்நிலையத்தின் திட்ட அறிக்கையைப் பரிசீலிக்கும் பொருட்டு இவ்வாரியக் குழு 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் கூடி தங்களது அறிவார்ந்த கருத்துக்களைத் தெரிவித்தது. ரூபாய் 763.24 இலட்சம் செலவில் ஓசூர் கால்நடை வளர்ப்பு நிலையம் ஒன்று துவக்குவதற்காக திட்ட அறிக்கை மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் பெற்ற பின்னர் இத்திட்டத்தினை விரைவில் செயல்படுத்த இக்குழு அடிக்கடி கூடும்.

(முற்பகல் 10–10)

THIRU T. VENKATA REDDY : Sir, The Hosur Dairy Development Board was constituted about two yearsback. Why there is delay in taking the steps in constitutingthe Corporation and also giving powers to implement those recommendations ? Can the Hon'ble Minister say why there is lot of delay in giving financial assistance ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூர் கால்நடை இனப் பெருக்கத் திட்டம் 1974 ஆம் ஆண்டிலிருந்து பல மாற்றங்கள் தொடர்ந்துவருகிறது. அந்த அடிப்படையில் இங்கிலாந்து நாட்டி

மேம்பாட்டுக்குழு, இந்திய பால்பண்ணைக் கழகம், மற்றும் மத்திய அரசால் தெரிவிக்கப்பட்ட மாற்றங்களின் அடிப்படையில், அந்தத் திட்டத்தை மாற்றியமைக்கவேண்டும் என்ற அடிப்படையில், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நிதியுதவி தேவை வேண்டாம், மாநில அரசே அந்த நிதி உதவியைப் பெற்றுச் செய்யலாம் என்ற அறிக்கை கூட மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. மத்திய அரசு அதைத் திருப்பி அனுப்பி, மறுபடியும் அந்தக் குழுவில் ஆலோசனை செய்து அறிக்கையைத் திருப்பி அனுப்பச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் குழு ஆலோசனை செய்து கொண்டுஇருக்கிறது. தற்போது அந்த அறிக்கையை அனுப்பும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது.

THIRU T. VENKATA REDDY : Sir, At what time the effeetivc functioning of the Corporation will take place ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, அதைப்பற்றித்தான் நான் சொன்னேன். மத்திய அரசாங்கத்தில் இருந்து அறிக்கை வந்த பிறகு அது ஆரம்பிக்கப்படும்.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூர் கால்நடை பண்ணை விரிவாக்கம் குறித்து அறிக்கை அனுப்பப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எவ்வளவு மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்ய மத்திய அரசின் ஒப்புதலுக்கு கேட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, ரூபாய் 763.24 இலட்சம் செலவில் ஓசூர் கால்நடை இனப்பெருக்கத் திட்ட அறிக்கையை நாம் மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம்.

**1982 ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் எண்ணிக்கை**

*வினா எண். 780—திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982 ஆம் ஆண்டில் இலங்கையில் இருந்து தாயகம் திரும்பியோர் எவ்வளவு பேர் ?

(ஆ) அதில் நீலகிரிக்கு அனுப்பப்பட்டவர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) 29,121 நபர்கள் கொண்ட 7,927 குடும்பங்கள்.

(ஆ) 816 நபர்கள் கொண்ட 181 குடும்பங்கள்.

திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, இலங்கையில் இருந்து தாயகம் திரும்பியவர்களில் நீலகிரி மாவட்டத்திற்கு அனுப்பியவர்களில் எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது ? அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கடன் எவ்வளவு அளிக்கப்பட்டது ? தற்போது கொடுக்கப்பட்டு வரும் உதவித் தொகையை உயர்த்தி அதிகமாகக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா ?



மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, 1982 ஆம் ஆண்டு ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு—7,927 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. நீலகிரி தேயிலைத் தோட்டத்தில் 134 குடும்பங்களுக்கும்கூக்கல் விவசாயத்திட்டத்தின் மூலம் 60 குடும்பங்களுக்கும் தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலை மூலம் 123 குடும்பங்களுக்கும், தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கித் திட்டத்தின் மூலம் 301 குடும்பங்களுக்கும், சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் 48 குடும்பங்களுக்கும், இதர மாநிலங்களில் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் 259 குடும்பங்களுக்கும், வணிகக் கடன் மூலம் 7,002 குடும்பங்களுக்கும் ஆக மொத்தம் 7,927 குடும்பங்களுக்கும் வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி வரை, 82,732 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, அகதிகளாக ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்களில் ஏராளமானவர்கள் வேலையின்றி, அனாதைகள்போல் அந்த மாவட்டம் முழுவதும் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் புனர் வாழ்வு அளிக்கின்ற வகையில் புதிய வேலை வாய்ப்புத் திட்டம் ஒன்றை உருவாக்கி, இந்த அரசு அத் திட்டத்தைச் செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் வணிகக் கடன் மூலம் 213 நபர்களைக் கொண்ட 47 குடும்பத்தினருக்கும், தேயிலைத் தோட்டத்தில் 603 நபர்கள் கொண்ட 134 குடும்பத்தினருக்கும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போன்று இன்னொரு வணிகக்கடன் மூலம் சுய வேலை வாய்ப்புத் திட்டத்திலும் வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகமொத்தம் 816 நபர்கள் கொண்ட 181 குடும்பங்கள் நீலகிரி மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்ல. இந்த இடைக்கால முகாம் காலத்தில் வணிகக் கடன் பெற்று 7,886 நபர்கள் கொண்ட 2,045 குடும்பங்கள், தன்னிச்சையாக தொழில் தொடங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அவர்களுடைய குடும்பக் கார்டுகளில் எழுதப்பட்டிருந்தாலும் கூட அவர்கள் நீலகிரி மாவட்டத்திற்குச் சென்று வாணிபம் செய்ய, அதற்குரிய பயணச்சீட்டு பெற்றிருக்கிறார்கள்.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளுக்கு தாயகம் திரும்பிய தமிழர்கள் அனுப்பப்பட்டிருந்தும் கூட அவர்கள் எல்லாம் நீலகிரி மாவட்டத்திற்கு வந்து அடைக்கலம் புகுவது அரசுக்குத் தெரியுமா ? அப்படியானால் அங்கே வந்து தங்கியிருக்கிறவர்களுக்கு அந்த 3,000 ரூபாய் என்ற அளவில்கூட பணம் தரப்படவில்லையே. அப்படித் தரப்படாதவர்களுடைய பிரச்சனையை மறுபரிசிலனை செய்து, அவர்களுக்கு அந்தப் பணத்தை வழங்க அரசு முன்வருமா என்று றிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, கண்டியிலுள்ள ஹை கமிஷனர் அவர்களுடைய குடும்பக் கார்ட்டில் எந்த மாவட்டத்திற்கு, அல்லது எந்த எந்த மாநிலத்திற்கு சென்று என்னென்ன தொழிலில் ஈடுபட வேண்டுமென்று எழுதியிருக்கிறார்களோ அதன்படிதான் அவர்கள் செல்ல வேண்டும். அப்படிச் சென்றாலும் கூட அவர்களுக்கு சீதோஷ்ண நிலை ஒத்துக்கொள்ளவில்லை. நீலகிரி மாவட்டம்தான் எங்களுடைய உடம்புக்கு ஒத்துக்கொள்கிறது என்று சொல்லி, அங்கே செல்கிறார்கள். அப்படிச் செல்கிறவர்களுக்கு மாநில அரசு ஒன்றும் செய்ய முடியாது. மத்திய அரசுக்கு எழுதி கேட்க வேண்டும். மற்ற மாநிலங்களுக்கு அல்லது வேறு தொழில் வேண்டுமென்று கேட்டால், அவர்களுக்கு அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றால் மத்திய அரசு ஒப்புதல் பெற்றுதான் மாற்றம் செய்ய வேண்டும். அதோடு கடன் தவணையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். 3,000 ரூபாய், 2,000 ரூபாய் என்று இரண்டு தவணைகளில் கொடுக்கிறோம். முதல் தவணையாக 3,000 ரூபாயே பெறாதவர்கள் இருப்பதாகச் சொன்னார்கள். யார், யார் பெறவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால் அதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும். இதுவரையில் வணிகக் கடன் 3,000 ரூபாய், 2,000 ரூபாய் என்று இரண்டு தவணைகளில் கொடுக்கப்பட்டுவருகிறது.

திரு. கே. கல்லன்: தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் அளவுக்குமேல் 4 மடங்கு, 5 மடங்கு என்று வருவதால் அங்கே பல பிரச்னைகள் ஸ்ரீலங்காவிலிருந்து வந்தவர்களால் ஏற்படுகின்றன. அதைப் போக்க அவர்களுக்கு மற்ற மாவட்டங்களில் வசதிகள் செய்து கொடுத்து, அங்கே 'லா அண்ட் ஆர்டர் சிச்சுவேஷன்' சரியாக இருக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவரவர்களே, அதுபற்றி குறிப்பு ஒன்றும் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10-20]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் விவசாயிக்கு ஒவ்வொரு மணி அரிசிக்கும் உதவி செய்ய வேண்டும். ஆனால் இப்படிப்பட்ட சூழ்



நிலையில் அவர்கள் மின் கட்டணமாக விதிக்கப்படுகிற புதிய கட்டணங்களைக் கட்டிக் கொண்டு வருகிற நேரத்தில், அவர்கள் கட்ட வேண்டிய பழைய பாக்கிக்காக மின் இணைப்பைத் துண்டித்து அவர்களை........(மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மின் துண்டிப்பு இன்னும் நடக்கவில்லை. நீங்கள் எழுதிக்கொடுத்திருப்பதை பார்த்தேன். அது என் ஆய்வில்உள்ளது. அதை எடுத்துக் கொள்ளும்போது பேசிக்கொள்ளலாம்..........

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்கள் அத்தனைபேரும் இங்கேயிருக்கிறார்கள். அது தங்களுடைய மாவட்டம்தான். துண்டிக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டால் அவர்கள் ஆக்ஷன் எடுக்க வசதியாக இருக்கும். ஒவ்வொரு மணி அரிசிக்கும் இப்போது அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். இந்த நிலையில் மின் துண்டிப்பு கூடாது........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழகத்தில் எல்லா மாவட்டங்களும் தான் இருக்கின்றன. தலைவருடைய மாவட்டம் மட்டும் தனியாக இல்லை. நீங்கள் இந்தப் பிரச்னையை காலையில் தான் கொடுத்திருக்கிறீர்கள். இப்போதுவேறு ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். கிருஷ்ணா நதி நீர் தண்ணீரை சென்னைக்கு கொண்டு வருவது பற்றி எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு உங்களுடைய பிரச்னையை எடுத்துக் கொள்ள முடியாது. அதை எடுத்துக்கொள்ளும் போது நீங்கள் பேசலாம்.

மாண்புமிகு திரு. பா. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்று இரண்டு உரிமைப் பிரச்னைகளைப் பற்றி உங்களுடைய கவனத்திற்கு அனுப்பியிருக்கிறேன்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இன்றைக்குத்தான் கொடுத்திருக்கிறீர்கள். நான் எடுத்தபிறகுதான் அதை நீங்கள் இங்கே பேச முடியும், கொண்டு வர முடியும்........

மாண்புமிகு திரு. பா. குழந்தைவேலு: நான் அதன் உள்ளே போய் எதுவும் பேசப் போவதில்லை. அதை எப்போது எடுக்கப் போகிறீர்கள் என்றுதான் கேட்கப் போகிறேன். தயவுசெய்து கொஞ்சம் அலவ் பண்ணுங்கள். அது என்னவென்று சொல்லி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்களை நானும் தயவுசெய்து கேட்டுக் கொள்கிறேன். இந்த அவையை நான் நடத்தியாக வேண்டும். அதற்கு அவர் எனக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும். நீங்கள் கேட்க விரும்புவதை என்னுடைய அறையிலே வந்து கேட்கலாம். நான் அந்தப் பிரச்னையை எடுத்துக் கொள்ளும்போது, நீங்கள் அதைப் பற்றி பேசலாம். தயவுசெய்து அமருங்கள்.

[1983 ஏப்ரல் 16

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்

### சென்னைக்கு கிருஷ்ணா நதிநீர் வழங்குவது குறித்த பேச்சு வார்த்தை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் மு. கருணாநிதி திருவாளர்கள் ப. நெடுமாறன், எஸ். ஆண்டித்தேவர் மு. அம்பிகாபதி, என். வரதராஜன், என். எஸ். வி சித்தன், குமரி அனந்தன் ஆகியோர் ''சென்னைக்கு கிருஷ்ணா நதி நீரைக் கால்வாய் மூலம் வழங்குவது பற்றிய உடன்பாடு வரும் 18-4-1983 அன்று கையெழுத்தாகிவிடும் என்று நம்மால் உறுதிகூற முடியாது என்று ஆந்திர முதலமைச்சர் மாண்புமிகு திரு.என்.டி.ராமாராவ் அவர்கள் கூறியுள்ளதால் எழுந்துள்ள கவலை குறித்து, விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர்.

இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

*டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர் பார்த்துக் கொண்டிருந்தது ஒன்று, ஆனால் நடக்கப்போவது வேறு ஒன்று என்ற நிலைமையில் இன்றைக்கு பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. ஆந்திர மாநிலத்திலிருந்து கிருஷ்ணா ஆற்று தண்ணீரை சென்னை மாநிலத்தினுடைய மக்களின் குடிநீருக்காக வழங்குவது என்ற பேச்சு கடந்த பல ஆண்டுக் காலமாக நடைபெற்று, அன்மையிலே இந்திரா காங்கிரஸ் மந்திரிசபை அங்கே இருந்தபோது, அதனுடைய முதலைச்சர் அவர்கள், கிருஷ்ணா தண்ணீர் சென்னைக்கு தரப்படும், அது குறித்து தமிழக அரசுடன் விரைவிலே பேச்சு வார்த்தை நடைபெறும் என்று கூறி, அதன் பின்னர் சில தடங்கல்கள் ஏற்படுமோ என்கிற ஐயங்கள் எல்லாம் ஏற்பட்டு, புதிய அமைச்சரவை ஆந்திராவிலே மாண்புமிகு என். டி. ஆர். அவர்களுடைய தலைமையில் உருவான பிறகு, அவர்கள் இந்த ஒப்பந்தம் விரைவிலே ஏற்படும் என்ற ஒரு நல்ல செய்தியை, தமிழக மக்களுக்கு குறிப்பாக சென்னை மக்களுக்குத் தந்தார்கள்.

அதையொட்டி வருகிற 18 ஆம் தேதியன்று நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களும், ஆந்திர முதல் அமைச்சர் அவர்களும், ஹைதராபாத் நகரத்திலே, ஒரு உடன்பாடு செய்வார்கள்—கிருஷ்ணா நதிநீரை சென்னைக்கு வழங்குவது குறித்து—என்றெல்லாம் செய்திகள் வெளிவந்தன. ஒப்பந்தமே ஏற்பட்டுவிடும் என்று தொடங்கப்பட்டு பிறகு, பேச்சு வார்த்தை நடைபெறும் என்ற அளவிலே அது விரிவடைந்து இன்றையதினம் உடன்பாடு ஏற்படுமா என்று உறுதி அளிக்க முடியாது என்கிற ஐயப்பாடு பள்ளத்தாக்கில் இந்த செய்தி விழுந்துகிடக்கின்றது

எனவேதான் சென்னை மக்களுடைய குடிதண்ணீர் தேவையை அடிப்படையாக வைத்து இந்த மாமன்றத்திலே இதை விவாதிக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். இன்று காலையிலே பத்திரிகைச் செய்தியில் ஆந்திர மாநில முதலமைச்சர் நிருபர்களைச் சந்தித்து அளித்த பேட்டியிலே சொன்ன கருத்துக்கள்



வெளிவந்திருக்கின்றன. நிருபர்கள் கேட்டிருக்கிறார்கள். இந்த சந்திப்பில் தமிழக முதல்வரும் தாங்களும் நடத்துகின்ற இந்த சந்திப்பில் உடன்பாடு ஏற்படுமா என்று கேட்டபோது அதற்கு ஆந்திர மாநில முதலமைச்சர் இப்படி பதில் கூறி இருக்கலாம்: அப்படித்தான் நம்புகிறோம் என்று பதில் கூறியிருந்தால் நாம் நம்பிக்கையோடு இருந்திருக்கலாம். ஆனால் அதற்கு மாறாக அவர்கள் உடன்பாடு ஏற்படும் என்று உறுதியாக என்னால் சொல்ல முடியாது என்று குறிப்பிட்டு, அதைத்தொடர்ந்து இன்னொரு கருத்தையும் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இந்தப் பேச்சின் முடிவு எப்படி இருக்கும் என்று என்னால் ஹேஸ்யம் கூற முடியாது. இதன் முடிவு எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது மேலும் சந்தேகத்தை எழுப்புகின்றது. அத்துடன் கிருஷ்ணா நீரை சென்னைக்கு வழங்க மாற்று திட்டத்தையும் ஆந்திர அரசு பரிசீலிக்கும் என்று ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். கிருஷ்ணா நீரை சென்னைக்குக் கொண்டுவருவதில் என்னென்ன திட்டங்கள் இப்போது பரிசீலிக்கப்பட்டு வருகின்றன? இப்போது மாற்றுத் திட்டம் என்று ஆந்திர முதலமைச்சர் கூறுகின்ற திட்டம் என்ன திட்டம்? இவைகள் எல்லாம் இந்த அவைக்குத் தெரியாத செய்திகளாகவே இருந்துவருகின்றன. எனவே இவைகளை எல்லாம் அவைக்குத் தெரிவிக்கின்ற வகையில் இந்த அரசு ஒரு அறிக்கை தருமேயானால் அது மிகுந்த பயன் உள்ளதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

ஏற்கெனவே கர்நாடகா, ஆந்திரா, மராட்டியம் ஆகிய மூன்று மாநிலங்களும் 500 கோடி கன அடி தண்ணீரை தலா ஒவ்வொரு மாநிலமும் தருவதாக ஒப்புக்கொண்டு 1,500 கோடி கன அடித் தண்ணீர் சென்னைக்குத் தரப்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியின் ஊடே திளைத்துக் கொண்டிருக்கின்ற நமக்கு இந்தச் செய்தி வேதனையாக இருக்கின்றது. எனவே 18 ஆம் தேதி நடைபெறுகின்ற அந்தப் பேச்சுவார்த்தை எந்த அடிப்படையிலே அமைகின்றது என்பதைப் பற்றி அறிந்து கொள்ள நாங்கள் ஆவல் உள்ளவர்களாக இருக்கிறோம். அது குறித்து விவாதித்து ஒரு நல்ல முடிவை எடுக்க இந்த அரசுக்கு உதவிகரமாக இருக்க இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று தங்கள் மூலமாக அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திலே நான் பேசுவதற்கு முன்னால் வருகின்ற 18 ஆம் தேதி அன்று நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்களும், ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்களும் உட்கார்ந்து பேசி இந்தப் பிரச்சினையைப் பரிசீலனை செய்கின்ற கட்டத்தில் அந்த பேச்சுவார்த்தைக்கு உதவும்படியாக இருக்கும் வகையிலும் அதேநேரத்தில் தமிழ்நாட்டு மக்கள்'

[திரு. ப. நெடுமாறன்] [1983 ஏப்ரல் 16

குறிப்பாக சென்னை நகர மக்கள் கிருஷ்ணா நீரை எத்தகைய ஆவலுடன் எதிர்நோக்கிக்கொண்டு இருக்கின்றார்கள் என்ற உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையிலும் சிலவற்றை நான் உங்கள் முன்னாலே வைக்க விரும்புகிறேன். கிருஷ்ணா நதி நீரைத் தமிழகத்திற்குக் கொண்டுவரும் பிரச்சினை இன்று நேற்று தொடங்கியதல்ல. 1881 ஆம் ஆண்டிலேயே இது தொடங்கப் பட்டது. சர் ஆர்தர் கார்டன் என்ற ஒரு ஆங்கிலேயே அதிகாரி இந்தத் திட்டத்தை வகுத்தார். அதற்குப் பின்னாலே மேட்டூர் அணையைக் கட்டிய கர்னல் எல்லீஸ் அவர்கள் இன்னொரு திட்டத்தை ஆங்கிலேய அரசிடம் கொடுத்தார்கள். அது அப்படியே கிடப்பிலே கிடந்து இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னால் 1947 ஆம் ஆண்டிலே ஒன்றுபட்ட சென்னை மாநில அரசு இதுபற்றிய விரிவான அறிக்கையைத் தயாரிக்கவேண்டும் என்ற உத்தரவிட்டது. அதன்படி அந்த ஆண்டு விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு இருக்கின்றது. அதற்குப்பிறகு 1951 ஆம் ஆண்டிலே மற்றொரு திட்டம் வகுக்கப்பட்டது. அதைப்பற்றி விரிவாகச் சொல்வது என்றால் அதிக நேரம் ஆகும். அந்த திட்டத்தின் அடிப்படையில் ஆந்திராவில் 6 இலட்சம் ஏக்கருக்கும் தமிழகத்தில் 5 இலட்சம் ஏக்கருக்கும் பாசன வசதி அளிப்பதோடு சென்னை நகரின் குடிநீர் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப் பதற்கும் 1951 ஆம் ஆண்டு திட்டம் வகுக்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1956 ஆம் ஆண்டு ஆந்திரா மாநிலம் பிரிக்கப்பட்டதற்குப் பிறகு இந்தத் திட்டம் அப்படியே கிடப்பிலே போடப்பட்டது. அதற்குப் பின் 1961 ஆம் ஆண்டிலே இதற்காக மத்திய அரசு ஒரு குழுவை அமைத்தது. அந்தத் குழு இத்திட்டத்தை ஆராய்ந்து ஒரு அறிக்கையைக் கொடுத்தது. அந்த

(முற்பகல் 10–30)

அறிக்கையை மத்திய அரசு 23—3—1963-ல் மத்திய நாடாளுமன்றத்தில் சமர்ப்பணம் செய்தது. அந்த அறிக்கையில் சில பரிந்துரைகள் செய்யப்பட்டன. கிருஷ்ணா நதி நீரில் மகாராஷ்டிராவுக்கு 400 டி. எம். சி. தண்ணீர், கர்நாடகாவுக்கு 600 டி. எம். சி. தண்ணீர், ஆந்திராவுக்கு 800 டி.எம்.சி. தண்ணீர் நம்முடைய தமிழகத்திற்கு 15 டி. எம். சி. தண்ணீர் அளிப்பது என்று அந்த அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டு அதை மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதை ஒட்டி 1976 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் 15 ஆம் தேதி சென்னையில் கடற்கரையில் மாண்புமிகு பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் பேசும் போது ஒரு வாக்குறுதியை அளித்தார்கள். இந்த 15 டி.எம்.சி. தண்ணீர் சென்னை நகருக்கு குடிநீருக்காக அளிக்கப் படும். ஆந்திரா 5 டி.எம்,சி., கர்நாடகா 5 டி,எம்.சி., மகாராஷ்டிரா 5 டி. எம். சி. தண்ணீர் கொடுப்பதற்கு ஒப்புதல் அளித்து இருக்கிறது என்று சொல்லி அந்த மாநிலங்களின் முதலமைச்சர் கள் அதை ஏற்றுக் கொண்டு அதே மேடையில் அறிவித்தார்கள்



1983 ஏப்ரல் 16] [திரு. ப. நெடுமாறன்]

இந்த உறுதிமொழி என்பது மிக முக்கியமானது. இதற்கு பின்னால் 1977-ல் இதற்கான ஒப்பந்தம் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் அந்த ஒப்பந்தம் செய்யப்படவில்லை. அதற்கு பிறகு நான் நம்முடைய மதிப்பிற்குரிய பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கு 22—12—1980-ல் ஒரு கடிதம் எழுதினேன். கிருஷ்ணா நதி நீர் பிரச்சனையை நீங்கள் பரிசலனைச் செய்ய வேண்டும் என்று அவருக்கு ஒரு விளக்கமாக கடிதத்தை அனுப்பி வைத்தேன். அவர்கள் அந்தக் கடிதத்தை அன்றைக்கு மாண்புமிகு திரு. இசட் ஆர். அன்சாரி அவர்கள் மத்திய 'அமைச்சராக 'மினிஸ்டர் ஆப் ஸ்டேட் ஃபார் இரிகேஷன்' ஆக இருந்தார்கள். அவருக்கு அனுப்பி இருப்பதாக எனக்கு எழுதினார்கள், பிறகு மாண்புமிகு திரு. இசட். ஆர். அன்சாரி அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தில் சில முக்கியமான பகுதிகளை மட்டும் இந்த அரசின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். 1981 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 ஆம் தேதி மத்திய அமைச்சர் அவர்கள் திரு. இசட். ஆர். அன்சாரி அவர்கள் எனக்கு கடிதத்தை எழுதியிருக் கிறார்கள் அதிலே அவர்கள் என்ன எழுதியிருக்கிறார்கள் என்று சொன்னால்—

In your letter you have made a reference to the Krishna-Pennar Project prepared by the then Madras Government in 1947 which included the construction of the Madras Canal. However, this project has undergone many changes subsequently on account of the reorganisation of States and certain inter-state aspect arising in the context of the allocation of Krishna waters.

Further, you have also referred to the Commission constituted by the Government of India in May, 1961. You have presumably, in mind, the Krishna-Godavari Commission on water Resources Development of the Krishna and Godavari basins. Later in 1976, the allocation of waters among the basin States was decided by the Krishna Waters Dispute Tribunal, wherein no specific allocation of waters for supply to Madras City had been made. However, a separate agreement was reached among the states of Andhra Pradesh, Karnataka, Maharashtra and Tamil Nadu in October, 1977 to provide 15 TMC of Krishna waters for supply to Madras City.

இதிலே தெளிவாக சொல்லியிருக்கிறார்கள் 1977-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலே இந்த 4 மாநிலங்களிடையே சென்னை நகருக்கு 15 டி.எம்.சி. தண்ணீர் அளிப்பதைப் பற்றி ஒரு ஒப்பந்தம் ஏற்பாடு செய்து இருப்பதை மத்திய அரசு நமக்கு தெளிவாக மேலும் சுட்டிக்காட்டியிருக்கிறது.

The exact manner in which this water is to be conveyed has to be decided after detailed investigations are carried out by the Andhra Pradesh and Tamil Nadu State Governments. The Government of Andhra Pradesh has recently informed this ministry that in pursuance of the agreement, a Liasion Committee has been constituted which is reviewing the progress of the investigations. As per the approved revised programme of the Liasion Committee, the investigations are expected to be completed by the end of June, 1981. In view of this position, you may like to pursue the matter further with the State Government of Tamil Nadu என்று அவர்கள் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். ஆக சென்னை நகருக்கு குடிநீருக்காக 15 டி. எம். சி. அளிப்பதிலே பிரச்சினை இல்லை. அது ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று என்று மத்திய அரசின் அமைச்சருடைய கடிதம் உறுதி செய்கிறது. இதைப்பற்றி தமிழக அரசும் ஆந்திரா அரசும் இந்தத் தண்ணீரை எப்படி எடுத்துக்கொள்வது என்பதைப் பற்றி பேசி முடிவு செய்ய வேண்டி இருக்கிறது என்பது தானே தவிர இந்த தண்ணீர் உண்டா ? இல்லையா என்ற கேள்வி இன்றைக்கு தேவை இல்லாத வகையில் 2 நாட்களுக்கு முன்னால் திருப்பதியில் ஒரு சர்வ கட்சி கூட்டம் நடந்து, அதிலே இந்த தண்ணீர் அளிப்பதா இல்லையா என்பதை பற்றி பரிசீலனை செய்ய வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை அங்கே நிறைவேற்றியிருக்கிறார்கள்.

இதிலே நான் சுட்டிக்காட்ட விரும்புவது எல்லாம் ஒன்றுதான். ஆந்திர மாநில முதலமைச்சர் என்ன சொல்லியிருந்தாலும்கூட அவர் ஒன்றைச் சொல்லியிருப்பது ஓரளவுக்கு ஆறுதலாக இருக்கிறது. எனினும் சென்னைக்கு கிருஷ்ணா நீர் வழங்கப்பட வேண்டுமென்று 1976-ஆம் ஆண்டு டிரிபியூனல் முடிவை ஆந்திர மாநிலம் மதித்து நடக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது ஓரளவுக்கு நமக்கு ஆறுதல் தருகிறது. நம் மாநில முதலமைச்சர் 18-ஆம் தேதி ஆந்திர மாநில முதலமைச்சரோடு பேசுகிறபோது தமிழகம் தண்ணீரிலே பற்றாக்குறை மாநிலமாக இருப்பதையும் மற்ற சான்றுகளையும் சுட்டிக்காட்டி ஆந்திரம், மகாராட்டிரம், கர்நாடகம், போன்ற மாநிலங்கள் அளித்த வாக்குறுதிகளையும் மாண்புமிகு பிரதமர் அவர்கள் அளித்த வாக்குறுதிகளையும் மதித்து சென்னை நகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர் உதவவேண்டுமென்ற வகையிலே எடுத்து சொல்லி எப்படியாவது இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றித் தர வேண்டியது அரசாங்கத்தின் கடமை. நம்முடைய முதலமைச்சரின் கடமை என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி அதைப்பற்றி தமிழ் மக்களும், அனைத்துக் கட்சிகளும் ஒருமனதாக கருத்துக்கொண்டிருக்கிறார்கள். இதிலே அபிப்பிராய பேதத்திற்கு வழியில்லை. அண்டை மாநிலமான ஆந்திர மாநில மக்களுக்கும் நம்முடைய மாநில மக்களுக்கும் சகோதர பாவத்துடன் நீண்ட நெடுங்காலமாக பல நூற்றாண்டுகாலமாக வாழ்ந்துவருகிறார்கள்.



இந்த உறவை மேலும் உறுதிப்படுத்துகிற, வலுப்படுத்துகிற வகையிலே கிருஷ்ணா நதி நீர் சென்னை நகர மக்களுக்கு குடிநீருக்காக மனிதாபிமான அடிப்படையில் அளிக்கப்படுவதற்கு எந்தத் தடையும் அல்லது பல்வேறு உணர்வுகளும் குறுக்கீடாக அமையக் கூடாது என்பதை வலியுறுத்தி அதைப் பற்றிப் பரிபூரணமாக விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு கிடைக்கவேண்டும் என்பதில் தமிழகத்திலே இருக்கிற அனைவருடைய கருத்தும் ஒன்றாக இருக்கிறது என்பதோடு அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பிலே, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் எடுத்துத் தெரிவித்த கருத்தோடு, என்னுடைய கருத்தையும் நதி நீர்ப் பிரச்சினையிலே கூறலாம் என்று கருதுகிறேன். முன்னாள் ஆந்திர மாநில காங்கிரஸ் முதலமைச்சர் இருந்தபோது அந்த முதலமைச்சர் தமிழகத்திற்கு கிருஷ்ணா நதி நீர் வழங்கப்படும் என்றும் ஒப்பந்தந்தான் செய்ய வேண்டும் என்றும் இரண்டு முதலமைச்சர்களும் பேசி ஒப்பந்தம் தான் செய்யவேண்டுமென்ற நிலையும் இருந்தபோது இப்போது நம் முதலமைச்சர் அவர்கள் வருகிற 18 ஆம் தேதி ஹைதராபாத்திலே நடக்கிற கூட்டத்திற்குச் செல்வார்கள், அங்கே அந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்படும் என்று தமிழக மக்கள் அத்தனை பேர்களும் நிற்கிற நேரத்திலே இன்றைய தினம் பத்திரிகையைப் பார்க்கிறபோது ஆந்திர மாநில முதலமைச்சர் திருப்பதியிலே நிருபர்களிடம் பேட்டி அளிக்கிறபோது, கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு அளிக்கப்படுமா என்று கேட்ட கேள்விக்கு "Thiru N. T. Ramarao said today that an agreement on the supply of Krishna waters to the Madras City through the canals was not likely to be reached at the meeting of the Chief Ministers of the two States". என்று பதில் அளித்திருக்கிறார்கள். அதோடு அவர்கள் நின்றுவிடவில்லை. No agreement is likely to be signed. என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே திட்டவட்டமாக இப்படிச் சொல்லிவிட்டதோடு மட்டுமல்லாமல் அதற்கு மேலே இரண்டு முதலமைச்சர்களிடையே நடக்க இருக்கிற அந்த மாநாட்டிலே எந்த முடிவும் வரலாம் என்பதையும் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்வதோடு மட்டுமல்லாமல் ஆந்திராவிலே உள்ள சர்வ கட்சியினர் கூட்டம் நடந்திருக்கிறது. அதிலே தெலுங்கு தேசமும் கலந்து கொள்ளப்போய்ச் சேர்ந்திருக்கிறார்கள். சென்னை நகருக்கு கிருஷ்ணா நீரைக் கொடுக்க கூடாது என்று சர்வகட்சியினர் தீர்மானித்திருக்கிறார்கள். நாளைய மறு தினம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஹைதராபாத்திற்கு செல்ல இருக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல் சுதந்திரத்திற்கு முன்னாலிருந்தும் அதற்குப் பின்னாலும், தமிழகத்திற்கு கர்நாடகம், மகாராட்டிரம்,

ஆந்திரம் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று ஒத்துக்கொண்டிருந்தாலும் இப்போது அதற்கு மாறாக ஆந்திர மாநில முதலமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். இங்கே தமிழகத்திலே இருக்கிற அத்தனை இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் ஒன்றுபட்ட கருத்தோடு இருக்கிறோம் என்பதற்காக, சென்னைக்கு கிருஷ்ணா நீர் கிடைக்க வேண்டும், அதற்காக தமிழக அரசு என்ன என்ன முயற்சிகளைச் செய்திருக்கிறது. இப்போது எந்தக் கருத்தோடு முதலமைச்சர் அவர்கள் அங்கே சென்று பேச இருக்கிறார்கள் என்பதைத் தெரிவதற்கும் ; ''1976 ஆம் ஆண்டு ட்ரிபியூனல் டு சப்ளை கிருஷ்ணா வாட்டர் டு மெட்ராஸ்'' என்பதை ஆந்திரா முதலமைச்சர் அவர்கள் ஏற்றிருக்கிறார்கள். தமிழகத்தில் தண்ணீர் பற்றாக்குறையாக இருக்கிறது. தமிழக அரசும், தமிழக மக்களும் பாசனத்திற்காகக் கூட இப்போது தண்ணீரைக் கேட்கவில்லை. அவர்கள் குடிதண்ணீரைத் தான் கேட்கிறார்கள். குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்கு நீங்கள் வழி செய்யக் கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்பதை வலியுறுத்தி பேசி, குடிதண்ணீரை பெற வேண்டுமென்ற கருத்தை இன்னும் விரிவாக விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு என் உரையை நிறைவு செய்கிறேன்.

(முற்பகல் 10.40)

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மாண்புமிகு நெடுமாறன் அவர்களும், மாண்புமிகு ஆண்டித்தேவர் அவர்களும் கூறிய கருத்துக்களோடு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைய தினம் பத்திரிகை பார்த்த சென்னை நகர மக்கள் பெரிய அதிர்ச்சிக்கு ஆளாகியிருக்கிறார்கள். காரணம், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஹைதராபாத்திற்குச் செல்லப் போகிறார்கள். அங்கே ஆந்திராவினுடைய மாண்புமிகு முதல்வர் என். டி. ஆர். அவர்களை நம்முடைய முதலமைச்சர் சந்தித்து பேச்சுவார்த்தை நடக்கப் போகிறது. அதன் அடிப்படையிலே சென்னைக்குக் குடிதண்ணீர் வரப்போகிறது என்று மகிழ்ச்சியோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்த சென்னை மக்களுக்கு இன்றைய தினம் பத்திரிகையிலே வந்த செய்தி ஒரு அதிர்ச்சியைத் தருகிற செய்தியாக இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 18 ஆம் தேதி ஹைதராபாத்தில் ஆந்திராவின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்திக்கிற போது சென்னை நகரத்திற்கு குடிப்பதற்கான தண்ணீரைப் பெறுகிற முறையிலே 1976 ஆம் ஆண்டு ட்ரிபியூனலின் முடிவின்படி தண்ணீர் கொடுப்பது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட விஷயமாக இதிலே கூறப்பட்டிருக்கிறது.



ஆந்திரா, கர்நாடகா, மராட்டியம் ஆகிய மாநிலங்கள் தலா 500 கோடி கேலன் தண்ணீர் சென்னைக்குத் தர சம்மதம் என்பதாக அதிலே கூறப்பட்டிருக்கிறது. தண்ணீர் தருவதற்கான சம்மதம் அதிலே கூறப்பட்டிருக்கிறது. அதை எடுத்து வருகிற பிரச்னைகளைப் பற்றி பேச்சுவார்த்தைகள் இருக்குமென்று நாங்கள் கருதியிருந்தோம். ஆனால் 1976 ஆம் ஆண்டு ட்ரிபுயூனல் முடிவை நாங்கள் மதிக்கிறோம் என்று மாண்புமிகு ஆந்திரா முதல்வர் கூறியிருப்பது, பதட்டமான நிலையிலும், நமக்கு ஒரு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. நம்முடைய சென்னை நகர மக்கள் இரவு, பகலாக வாளிகளுடனும், பானைகளுடனும், அலைந்து கொண்டிருப்பது பரிதாபத்திற்குரிய காட்சியாக இருக்கிறது. இந்தக் காட்சியை நீக்குவதற்கு, சென்னை நகரத்திற்கு கிருஷ்ணா தண்ணீர் கிடைப்பதற்கு வழி காண வேண்டும். நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் கூட தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டதற்குப் பின்னால் சென்னை நகரத்தில் நடைபெற்ற கடற்கரைக் கூட்டத்தில், அந்த முதலமைச்சர்களை வைத்துக்கொண்டு சென்னை நகரத்திற்கு கிருஷ்ணா நதி நீர் கிடைக்குமென்று உறுதியளித்து இருக்கிறார்கள். அவரே இப்போது பிரதமராக இருக்கிறார்கள். மாண்புமிகு ஆந்திராவின் முதல்வர் அவர்கள் சென்னையில் இருந்தவர்கள். இங்கேயே வளர்ந்தவர்கள் ; ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 18 ஆம் தேதி அவரைச் சந்தித்துப் பேசுகிறபோது சென்னை நகர மக்களுடைய பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி, கிருஷ்ணா நதி நீர் கிடைப்பதற்கான துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, இன்னும் விரிவான முறையிலே பேசவேண்டும், இந்திய மக்களின் ஒருமைப்பாட்டைப் பற்றியும், இந்திய மக்களின் வாழ்க்கையைப் பற்றியும் விரிவாக விவாதிப்பதற்காக பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18 ஆம் தேதி நம்முடைய முதலமைச்சர் அவர்களும் ஆந்திரா முதலமைச்சர் அவர்களும் கிருஷ்ணா நதி நீர் பிரச்சினை மீது பேசவிருக்கிறார்கள். அதற்கு முன்னாலே நேற்றைக்கும் இன்றைக்கும் பத்திரிகைகளிலே வருகிற செய்தி நமக்குக் கவலையளிக்கிறது. இந்தப் பிரச்சினையிலே ஏற்கெனவே 1976 ஆம் ஆண்டு ட்ரிபியூனல் ஒரு குறிப்பிட்ட அளவிற்குத் தண்ணீரை நமக்குக் கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறது. அது மட்டுமல்லாமல் தமிழகத்தினுடைய இன்றைய நிலையில் சென்னை நகரின் குடிதண்ணீர்ப் பிரச்சினை ஒரு முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. ஆந்திரா அரசிற்கும், ஆந்திராவின் மக்களுக்கும் ஒரு தார்மீகக் கடமையிருக்கிறது என்று இந்தப் பிரச்சினையை நாம் எடுத்துச் சொல்ல வேண்டும். அந்த அடிப்படையிலே இன்றைக்கு வந்திருக்கிற தகவல்கள் அவ்வளவு சிறப்பானதாக இல்லை என்பதை இந்த அவையின் மூலம் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் துறையிலே இரண்டு அண்டை மாநிலங்கள் நட்போடு இருக்கவும், நம்முடைய அத்தியாவசியமான சென்னை நகரத்தினுடைய

குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவும், ஏற்கெனவே ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய, ஆந்திர, கர்நாடக, தமிழக, மகாராஷ்டிராவினுடைய அரசுகளுடைய கூட்டு முடிவை அமுல் நடத்தவும் இந்த முக்கியமான பிரச்சினையிலே இன்று அரசாட்சி ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு என். டி. ஆர். அவர்களும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், 18 ஆம் தேதி நடத்தும் படியான பேச்சு வார்த்தை இனிதாக முடியவேண்டுமென்பதுதான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தினுடைய மிக முக்கியமான கருத்து என்று முக்கியமாகக் கருதப்படுகிறது. அந்த அடிப்படையிலே நம்முடைய நல்லெண்ணத்தையும் நம்முடைய கடமையையும் நம்முடைய வேண்டுதலையும் ஏற்கெனவே ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய நிலையை வற்புறுத்தவும் இந்தச் சபை விவாதிக்க வேண்டும். ஆகவே, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து இது பற்றி விவாதிக்க வேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற தமிழகத்தின் தலைநகராகிய சென்னையினுடைய குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக தொலைதூர நோக்கோடு நீண்டகால அடிப்படையிலே கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் கொண்டு வரவேண்டுமென்ற திட்டம் எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டம். 1976 ஆம் ஆண்டு மாண்புமிகு இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் அந்த நல்லெண்ணத்தோடுதான் ஆந்திரா, கர்நாடக, மராட்டிய முதலமைச்சர்களுடைய ஒப்புதலோடு கொள்கை ரீதியாக சென்னைக்கு 1,500 கன அடி தண்ணீர் வழங்க வேண்டுமென்ற திட்டத்தை அறிவித்து இருந்தார்கள். அவர்கள் அறிவித்ததற்குப் பின்னாலே, ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட இந்த அரசாங்கம் கடந்த 7, 8 ஆண்டுகளிலே சற்று முனைப்பாக, அதிலே ஈடுபட்டிருக்குமேயானால், இந்நேரம் சென்னைக்குக் கிருஷ்ணா நதி தண்ணீர் வந்திருக்கக் கூடும். ஆனா , இன்றைய தினம் கடுமையான வறட்சியாலே பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே இப்பொழுது இந்தத் திட்டம் கையெழுத்தானாலுங்கூட அந்த நீர் வருவதற்கு இன்னும் 7, 8 ஆண்டுகள் ஆகலாம் என்கின்ற எண்ணத்தின் அடிப்படையில் இன்னும் எத்தனை வறட்சியைச் சென்னை நகரம் சந்திக்க வேண்டியிருக்கிறதோ அல்லது இடைப்பட்ட காலத்திலே என்ன செய்ய வேண்டியிருக்குமோ என்று எண்ணிக் கொண்டிருக்கிற இந்த வேளையிலே இன்றைக்குக் காலையிலே வந்த செய்தி நமக்கு அதிர்ச்சியைத் தருவதாக இருக்கிறது.

இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னாலே, மாவட்ட ஆட்சித் தலைவர், மாநில ஆட்சித் தலைவர் ஆகியோருடைய மானியக் கோரிக்கையின் மீது பேசும் போது, இந்தத் தரப்பிலேயிருந்து கிருஷ்ணா நதிநீர் கொண்டு வருவதற்கான முயற்சியை இந்த அரசாங்கம் முனைந்து செயல்படுத்தவில்லையென்று சொன்ன நேரத்திலே, நம்முடைய அவையின் முன்னவர் அவர்கள் மகிழ்ச்சியாக



நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திங்கட்கிழமையன்று ஹைதராபாத் சென்று அந்த ஒப்பந்தத்திலே கையெழுத்திட இருக்கிறார் என்ற செய்தியினைச் சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு ஆந்திரத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு என். டி. ஆர். அவர்கள் நாம் சற்றும் எதிர்பாராத ஒரு அதிர்ச்சி தரத்தக்க, இன்னும் சொல்லவேண்டுமானால், வேதனை தரத்தக்க செய்தியினைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ஏற்கெனவே கொள்கை ரீதியாக ஒப்புக்கொண்ட ஒரு முடிவிற்கு இதற்கு முன்னாலிருந்த காங்கிரஸ் முதலமைச்சர்கள் எல்லாம் ஆதரவு தெரிவித்த ஒரு நல்ல தீர்ப்புக்கு இன்றைய தினம் மாறுதலாக அவர்கள் சொல்கிறார்களே என்று எண்ண வேண்டிய நிலையிலே நாம் இருக்கிறோம்.

ஆந்திராவினுடைய முதலமைச்சர் மாண்புமிகு என். டி. ஆர். இங்கே தமிழகத்திலே சென்னையிலே பல்லாண்டுக்காலம் இருந்தவர்கள், தொழில் ரீதியாகத் தொடர்பு கொண்டவர்கள். நான் இன்னமும் சொல்ல விரும்புகிறேன், தமிழகத்திலே சென்னையிலேயே, ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் இன்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆக, அந்தச் சகோதரர்களுக்கும் சேர்த்துதான் இன்றைக்குத் தமிழகத்திற்குத் தண்ணீர் வரவேண்டும், கிருஷ்ணா நதி நீர் வரவேண்டுமென்று நாம் கேட்கிறோம். ஆகவே, முதலமைச்சர் அவர்களும் மிக நெருக்கமான உறவு இருக்கிற காரணத்தாலே, இதற்கு முன்னாலே இருந்த காங்கிரஸ் முதல் அமைச்சர்களைவிட, இப்பொழுதுள்ளவரோடு, நம்முடைய முதலமைச்சருக்கு மிக நெருக்கமான உறவு இருக்கிற காரணத்தாலே, பரந்த கொள்கையின் அடிப்படையிலே, ஒருமைப்பாட்டின் அடிப்படையிலே இந்த அரசு முனைந்து செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆந்திர முதலமைச்சர் அவர்கள் பேச்சின் இறுதியில், டிரிபியூனலை ஒத்துக்கொள்ளவேண்டுமென்று சொன்ன ஒரு செய்திதான் நல்ல செய்தியாக வந்திருக்கிறதே தவிர, மற்ற விஷயங்களை இந்த அரசாங்கம் சற்றுத் தீவிரமாக எண்ணிப் பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குக் காலையிலே அந்தச் செய்தி வந்த உடனேயே, நம்முடைய அரசு ஆந்திர முதலமைச்சரோடு தொடர்பு கொண்டு இதுபற்றி விவரம் விசாரித்தார்களா என்ற விவரம் நமக்குத் தெரியவில்லை. ஆகவே, திங்களன்று நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ஹைதராபாத் செல்ல இருக்கிறாரா? அதிலே ஏதாவது மாறுதல் இருக்கிறதா என்ற விவரமும் நமக்குத் தெரியவில்லை. ஆகவே, தமிழகத்தினுடைய, குறிப்பாக, சென்னையினுடைய எதிர்காலத்தை ஒட்டியிருக்கிற பிரச்சினை. மிக முக்கியமான பிரச்சினை. இன்றைக்குக் காலையிலே செய்தி வந்ததிலேயிருந்து பல நூற்றுக்கணக்கான மக்கள் எங்களோடு தொடர்பு கொண்டு கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பேரவையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைத்து இதனை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, தென் மாநில முதலமைச்சர்களிலே ஒருவராகிய ஆந்திர முதல்வர் மாண்புமிகு என். டி. ராமாராவ் அவர்கள் காலையிலே விடுத்திருக்கின்ற செய்தியில், நமது தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் 18ஆம் தேதியன்றுஅங்குசென்று நடத்துகின்ற பேச்சு வார்த்தைகளின் முடிவு எதுவாக இருக்கும் என்று சொல்ல இயலாது என்று சொன்னதின்மூலம் நம்முடைய உள்ளத்திலே பெருத்த கவலையினை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

தென்னகத்து முதலமைச்சர்களெல்லாம் பெங்களூரிலே கூடிப் பேசிய நேரத்தில், நமது மாநிலங்களுக்கிடையே இருக்கின்ற பிரச்னைகளை நாமே பேசித் தீர்த்துக் கொள்வதற்கு உரிய வழிவகைகளைக் காண முடியும் என்ற நம்பிக்கை உலகமெல்லாம் பரப்பப்பட்டு, இவர்களுக்குள்ளே நல்ல கருத்தொற்றுமை ஏற்பட்டு, அதன் மூலம் நடுவண் அரசினுடைய கருத்தையும் தங்களுக்குச் சாதகமாக ஈர்க்கின்ற முயற்சியிலே இது முதல் படி என்றெல்லாம் நாம் நினைத்தோம். அது அப்படியே இருக்க வேண்டும் என்று இப்பொழுதும் ஆசைப்படுகிறோம்.

ஆனால், இந்தியாவின் பிரதமரே ஒத்துக்கொண்டு ஒரு நிகழ்ச்சியினை, ஏன் இன்னும் சொல்லப்போனால், எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியதைப் போலவும், எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சுட்டிக் காட்டியதைப் போலவும், ஒத்துக் கொண்டிருக்கின்ற ஒரு ஒப்பந்தத்தையே இன்றைக்கு ஐயப்பாட்டிற்கு உரியதாக ஆக்குகின்ற நிலை ஏன் ஏற்பட்டது என்பதனை நாமெல்லாம் கவலையோடு இங்கே உற்று நோக்கிக் கொண்டிருக்கிறோம்.

இன்னும் சொல்லப்போனால் சென்னை மாநகரத்தினுடைய தண்ணீரின் பிரச்னை மிகக் கடுமையான அளவிற்குப் போய்க் கொண்டிருக்கிறது. பர்மிங்காம் பல்கலைக் கழகத்திலிருந்து அந்த டாக்டர் ஜே. ஆர். ரஷ்டான் என்கிறவர், இனிமேல் நிலத்தடி நீரை எடுத்து நீங்கள் பயன்படுத்துவீர்களேயானால் அடுத்த பருவமழை பெரிதாகப் பெய்தாலும்கூட, நிலத்திலே ஊறித் தேங்குவதற்கும், நிலத்தைக் கீறி வெளியே தண்ணீரைக் கொண்டு வருவதற்கும் வழியே இருக்காது என்கின்ற அளவிற்கு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் இன்று நமது அருமைக்குரிய என். டி. ஆர். அவர்களுடைய இந்த அறிவிப்பு, நிலத்தடி நீரையும் நாம் பயன்படுத்த இயலாதோ என்று அஞ்சுகிற நேரத்தில், டாக்டர் ரஷ்டான் போன்றவர்களெல்லாம், பஞ்செட்டி, மீஞ்சூர் போன்றவைகளைப் பார்த்தபிறகு பேசியதற்குப் பின்னால். நீர்ப் பஞ்சம் இவ்வளவு கடுமையாக இருக்கின்ற பொழுது, ஆந்திர மக்களுக்கும், நமக்கும் பயன் தருகின்ற



136039 600 008



திட்டமாக அது இருந்தபோதிலும்கூட, சித்தூர், நெல்லூர், கடப்பா போன்ற பகுதிகளில் ஏறத்தாழ பல இலட்சம் ஏக்கர்களுக்குப் பயன் விளைவிக்கின்ற ஒரு திட்டத்தை, அவர்களுக்கும் தண்ணீர் கொடுத்து, நமக்கும தண்ணீர் கொடுக்கின்ற திட்டத்தை ஐயப்பாட்டிற்கு உரியதாக ஆக்குவது இருக்கிறதே அது நாம் இவ்வளவு நாட்களும் கொண்டிருந்த நம்பிக்கையை, அதுவும் குறிப்பாக அண்மையிலே வளர்ந்து வந்திருக்கின்ற நம்பிக்கைக் கோபுரத்தை உடைத்தெறிவதாக இங்கே அமைகிறது.

இன்னும் சொல்லப்போனால், மேற்கு மலைத் தொடர்ச்சியிலேயிருந்து வந்து கொண்டிருக்கின்ற இந்த ஆற்றில் மகாராஷ்டிராவிற்கும் பங்கு உண்டு; கர்நாடகாவிற்கும் பங்கு உண்டு; ஆந்திராவிற்கும் பங்கு உண்டு என்று சொல்வதைவிட இந்திய மக்கள் அனைவருக்குமே உரிமை உண்டு என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்.

நாளையதினம் நமது மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய பாரதத்தின் பிரதமர் வருகிறார் ஸ்ரீஹரிகோட்டாவிற்கு. எஸ். எல். வி. விண்ணிலே பறக்கின்ற காட்சியினை அங்கிருந்து பார்க்க விருப்பத்தோடு வருகிறார். நாமெல்லாம் இது நமது மண்ணிலிருந்து விண்ணுக்குப் போகிறது என்று பெருமைப் பட்டுக் கொண்டிருக்கின்றபொழுது, இந்திய மண்ணிலே ஓடிக்கொண்டிருக்கின்ற ஒன்று, அதுவும் அண்டை மாநிலத்திலே ஓடிக் கொண்டிருக்கின்ற ஒன்று; பல்வேறு தடவைகள் பேசி முடிவு எடுத்திருக்கின்ற ஒன்று, இன்று நமக்கு வருமா என்ற ஐயப்பாட்டை, அதிலும் தமிழகத்திலே நீண்ட நெடுங்காலமாக இருந்து, நமது மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய நேசத்திற்குரியவராகவும், பாசத்திற்குரியவராகவும் இருக்கின்ற என். டி. ஆர். அவர்களே கிளப்பியிருப்பது நமக்கு வருத்தத்தைத் தருகிறது.

இந்த வகையிலே, இந்த அவையிலே இருந்து கொண்டிருக்கின்றவர்கள், கட்சிகளினுடைய எல்லைக் கோட்டுக்கு அப்பாலே நின்று இந்தக் கிருஷ்ணா நதி நீர் இங்கே வந்தாக வேண்டுமென்ற ஒரு முனைப்போடு செயல்படுவதற்குத் துடிக்கிறார்கள் என்பதனை இந்தியப் பேரரசுக்கு மட்டுமல்லாமல், அண்மையிலே இருந்து கொண்டிருக்கின்ற மாநிலங்களும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் நாம் பேசுகிறோம்.

**6–11–1982** ஆம் நாள் அன்று வெளியிடப்பட்ட ஒரு செய்தியிலே, அங்கிருக்கின்ற சீஃப் செக்ரட்டரி ராமன் அவர்கள் சொல்கிறார்கள், ஒப்பந்தம் தயாராகி விட்டது, நகல் ஒப்பந்தம் தயாராகி விட்டது என்று சொல்கிறார். அவர் யூனிலேட்டரலாக, தனியாகச் சொல்லவில்லை. நமது சீஃப் செக்ரட்டரியாக இருந்த திரவியமும், மற்றும் தொழில்

நுட்ப வல்லுநர்களும் கூடியிருந்து பேசியதற்குப் பிறகு சொல்கிறார். அந்த ''மாதிரி ஒப்பந்தம்'', டிராப்ட், தயாராகி விட்டது; அது இனிமேல் மாற்றங்களுக்கு உட்படும் என்று நான் நம்பவில்லை; கையெழுத்து நிச்சயமாக நடைபெறும் என்று சொன்ன ஒரு ஒப்பந்தம் இன்று ஐயத்திற்கிடமானது என்று நமது மாண்புமிகு ஆந்திர முதலமைச்சரவர்கள் சொல்வது மிக்க வருத்தத்தை அளிப்பதோடு மட்டுமல்லாமல், மாற்றுத் திட்டம் என்றெல்லாம் சொல்லி அதனை இன்னும் கிடப்பிலே போட்டு விடுவார்களோ என்ற அச்சம் இருக்கிற காரணத்தினாலேயும், இது விரைந்து வேகத்துடன் செயலாற்ற வேண்டிய ஒரு திட்டமாக இருக்கின்ற காரணத்தினாலேயும், நாவறண்டு கிடக்கின்ற மக்களுக்குத் தண்ணீர் கொடுக்கின்ற திட்டமாக இருக்கின்ற காரணத்தினாலேயும். அவையினுடைய இதர அலுவல்களையெல்லாம் ஒத்தி வைத்து இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தைப் பற்றி, இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களும், இந்த மன்றத்தில், தமிழகத்தின் ஒட்டுமொத்தமான மக்கள் கருத்தினை எடுத்து வைத்து, தமிழகத்திலே குறிப்பாக, தலைநகரில் இருக்கின்ற குடிநீர் நெருக்கடியைப்பற்றி எவ்வளவு தூரம் அக்கறை காட்டுகிறார்கள் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டும் வகையில், தங்களுடைய எண்ணங்களை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தினால், நான் முதலிலே நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே ஒரு வரலாறு அடங்கியிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்கின்ற வகையில், மாண்புமிகு காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த தலைவர் நெடுமாறன் அவர்கள் இங்கே ஒரு கடிதத்தைப் படித்துக் காண்பித்தார்கள். அதேபோல் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இங்கே சில எண்ணங்களை, அவர்களுக்குத் தெரிந்தவைகளைக் கருத்தாக உருவாக்கி, இங்கே கொண்டுவைத்து, இந்த மாமன்றத்திலே இருப்பவர்களுக்கும், மக்களுக்கும் உண்மை நிலைமை என்ன என்பது தெரிய வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டு, இந்தச் சூழ்நிலையில் எதையெல்லாம் நாம் வெளியே சொன்னால், சரியாக இருக்குமோ, அதை எடுத்துச் சொல்வதற்கு அவர்கள் தங்கள் எண்ணத்தின் வாயிலாக வாய்ப்புத் தருகிற முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

பேரவைத் தலைவர் மூலமாக இந்த அவைக்குச் சொல்லக் கூடிய கருத்துக்கள், குறிப்பாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, முதலில் இதைப்பற்றி அன்று ஆந்திராவினுடைய முதல்வராக இருந்த, டாக்டர் சென்னா ரெட்டியோடு தொடர்பு கொண்டோம். அவர்கள் தங்களுக்கு இருந்த ஆர்வத்தை வெளிக்காட்டுகின்ற



வகையில், இங்கே மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் எந்தக் கருத்தைக் கடிதத்தின் வாயிலாக எடுத்துக்காட்டினார்களோ அதே நிலைமையை நாங்கள் விவாதிப்பதற்கு வாய்ப்பு தந்து, ஆந்திராவின் நிலப்பரப்பின் ஊடே, தமிழகத்திற்குத் தண்ணீர் கொண்டுசேர்க்கின்றபொறுப்பையார்யார் மேற்கொள்வது, அந்தத் தண்ணீரைக்குழாய் வழியாகக் கொண்டு வருவதா, வாய்க்கால்கள் வழியாகக் கொண்டுவருவதா என்பதையெல்லாம் பரிசீலித்து, பிரச்சினைகளை அவர்களுக்குள் விவாதித்து, கர்நாடகமும், மராட்டியமும், குழாய்கள் வழியாகத்தான் கொண்டு செல்லவேண்டும் என்று வற்புறுத்துகிற சூழ்நிலை ஏற்பட்டதன் விளைவாக சிறிது காலம் தாமதப்பட்டது என்ற உண்மை அன்றையதினம் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது என்றாலும், அன்றையதினம் ஓரளவு சரியான சூழ்நிலையில் எல்லோரையும் கவனிக்கக்கூடிய நிலைமையில் அது இல்லை என்பதை நான் இங்கே சொல்ல வேண்டியிருக்கிறது. ஆனால் டாக்டர் சென்னா ரெட்டி அவர்கள் மிகுந்த அக்கறையோடு ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அந்த 10 டி. எம். சி. கர்நாடக மாநிலமும், மராட்டிய மாநிலமும் ஒத்துக்கொண்டு தந்தாலும், தருவதற்குக் கொஞ்சம் தாமதமானாலும், நான்,—அதாவது ஆந்திராவின் முதல்வர் என்கிற முறையிலும், ஆந்திராவின் மக்களுடைய பிரதிநிதி என்ற முறையிலும், அவர் குறிப்பிட்ட வாக்கிலே தான், நான் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறேன். நாங்கள் தருகிறோம். 5 டி. எம். சி. நாங்கள் கொடுக்க வேண்டியதை, சிக்கல் இல்லாமல் விரைவில் தீர்ப்பதற்கு அங்கே ஏற்பாடு செய்வோம். அதற்கான குழுக்களை அமைப்போம்; விசாரணை செய்து எந்த அளவிற்குப் பொறுப்பை ஆந்திர மாநிலத்தினுடைய அரசு ஏற்றுக் கொள்கிறது, எந்த அளவிற்குத் தமிழக அரசு ஏற்றுக் கொள்வது, இருவருமாகச் சேர்ந்து எந்த அளவிற்குச் செலவினைப் பங்குகொள்வது என்பதை எல்லாம் சொல்கின்றவகையில், சோமசீலா என்கிற அணைக்கட்டு, அந்த நீர்த்தேக்கம் இருக்கின்ற வழியில் இருக்கின்ற தண்ணீரை கண்டலேரு வரைக்கும் அவர்கள் கொண்டு வருவதற்கும், சம்மதம் தந்து, அதிலிருந்து நீங்கள் எடுத்துக் கொண்டு போங்கள் என்றால், வெகு தொலைவில் இல்லை. அதிகமான செலவு செய்ய வேண்டிய அவசியம் இராது அவர்கள் ஒத்துக்கொண்டு, பிறகு அதற்கு வேண்டிய திட்டங்கள் தீட்டி, அதையும் தாங்கள் ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள். அந்த வகையில் சென்னைக்கும் குடிநீர் வசதியைப் பெருக்க வேண்டிய நிலை வெகு காலமாக இருந்து வருகிறது. இந்தக் குறிப்பை நான் இங்கே படிப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இதற்காக சில திட்டங்கள் அவ்வப்போது ஆராயப்பட்டு வந்துள்ளன. சென்னை பெருநகர்ப் பகுதிக்கு

(முற்பகல் 11—00)

குடிநீர்த் தேவையை ஆய்வு செய்ய வந்திருந்த ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத்தின், யு.என்.டி.பி. நிபுணர்கள் ஒரு விரிவான அறிக்கையைத் தயாரித்து அளித்துள்ளார்கள். அந்த அறிக்கையில் சென்னை பெருநகர்ப் பகுதியில் 2002 ஆம் ஆண்டில் எதிர் பார்க்கப்படும் மக்கள் தொகைக்கும், தொழில் வளர்ச்சிக்கும் நாள் ஒன்றுக்கு 1,294 மில்லியன் லிட்டர்கள் நீர் தேவைப்படும் என்றும், அதில் தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களின் மூலமும், நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதன் மூலமும் நாள் ஒன்றுக்கு 299 மில்லியன் லிட்டர் நீரைத்தான் உறுதியாக்கப் பட முடியும் என்றும், துண்டு விழும் 995 மில்லியன் லிட்டர்கள் வெளியிலேயிருந்துதான் கொண்டு வர வேண்டும் என்றும் குறிப் பிட்டு இருக்கிறார்கள். அந்த அளவு தண்ணீர் கிருஷ்ணா நதி யிலிருந்து பெற முடியும். கிருஷ்ணா நதியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வரலாம் என்ற எண்ணம் பல ஆண்டு காலமாக இருந்து வருகிறது. அதற்காக முயற்சிகள் அவ்வப்போது மேற் கொள்ளப்பட்டு வந்துள்ளன. 1976 ஆம் ஆண்டு பிப்ரவரியில் பாரதப் பிரதமர் சென்னையிலே பேசும்போது ஆந்திரா, மஹா ரா்டிரா, கர்நாடகா ஆகிய 3 மாநிலங்களும் கிருஷ்ணா நதி யிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொரு மாநிலமும் 5 டி.எம்.சி. யிலிருந்து 15 டி.எம்.சி. நீர் வரையில் சென்னை நகருக்குக் குடிநீர் உபயோகத்திற்காகத் தர இணங்கியுள்ளது என்று அறிவித் தார்கள். இதனையொட்டி 1976 ஆம் ஆண்டு ஏப்ரலில் இம் மாநிலங்களும் தமிழகமும் சேர்ந்து ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டன. ஒப்பந்தத்தின்படி ஸ்ரீசைலம் நீர்த் தேக்கத் திலிருந்து ஆண்டுதோறும் ஜூலை மாதம் முதல் அக்டோபர் மாதத்திற்குள் 15 டி.எம்.சி. தண்ணீர் சென்னை குடிநீருக்காகத் தமிழ்நாடு ஏற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. இதன் பின்னர் இம் மாநிலங்களுக்கு இடையே 1977 இல் இத் திட்டத்தை நிறைவேற்ற ஆய்வு மற்றும் செயல்முறைகள் பற்றி யும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதைத்தான் நான் குறிப்பிட் டேன். 1978 ஆம் ஆண்டில் தமிழக ஆந்திர முதல் அமைச்சர்கள் இடையில் நடந்த பேச்சு வார்த்தைகளுக்குப்பின்பு இந்தத்திட்டத் திற்கான இறுதி வேலைகள் துவங்கப்பட்டன. தமிழக எல்லைக் குள் நிறைவேற்றப்பட வேண்டிய ஆய்வுகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டுவிட்டன. ஆந்திரா எல்லையிலேயும் ஆய்வு வேலைகள் முடிக்கப்பட்டு விட்டன. 1982 நவம்பர் மாதம் ஆந்திர அரசிடமிருந்து இத் திட்டத்தைப்பற்றி இறுதியாக அறிக்கை பைனல் புராஜெக்ட் ரிப்போர்ட் கொடுக்கப்பட்டது. தமிழகம் மற்றும் ஆந்திர அதிகாரிகள் இத்திட்டத்திற்காகு ஆகும் செலவை இரு மாநிலங்களும் கீழ்க்கண்ட அடிப்படையிலே.





பகிர்ந்து கொள்ளலாம் என்பது ஏற்கெனவே ஒப்புக் கொள்ளப் பட்டது. அதைப் பற்றி விரிவாகப் படிக்க வேண்டியது இல்லை என்று நான் கருதுகிறேன். முடிவாக இதிலே கையொப்பம் இட்டவர்கள், (1) எம். கோபால கிருஷ்ணன், பாசனம் மற்றும் மின்சாரத் துறைச் செயலாளர், ஆந்திர அரசு. (2) ஆர். அனந்த கிருஷ்ணன், ஆணையர்-செயலர், பொதுப் பணித்துறை மற்றும் மின்சாரத்துறை, கர்நாடக அரசு, (3) கே. ஏ. சங்கர் ராவ், பாசனத்துறை, துணைச் செயலாளர், மகாராஷ்டிரா அரசு, (4) ப. விஜயராகவன், ஆணையர்-செயலர், பொதுப் பணித்துறை, தமிழ்நாடு அரசு, மத்திய அரசின் சார்பிலே அவர் களுடைய சார்பாக, சி. சி. பட்டேல், மத்திய அரசின் செயலாளர், விவசாயம் மற்றும் பாசனத்துறை, புதுதில்லி, நாள் 28—10—1977.

இப்போது 18 ஆம் தேதி நான் போக வேண்டும் என்று முடிவு எடுத்து நான் ஆந்திர முதல் அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதிய நேரத்தில், என்.டி.ஆர். அவர்கள், ஆந்திர முதல் அமைச்சர் அவர்கள் எனக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். நான் கடிதம் எழுதிய பிறகு.

Dear Sri Ramachandran,

Sub: KRISHNA WATER SUPPLY SCHEME - Drinking water supply to Madras City.

Ref; Your D.O.Letter 56347/Special/79—1, dated 5-4-1983.

I am in receipt of your D.O.letter regarding finalisation of the project of supply of Krishna water for Madras City. I welcome you to visit Hyderabad on 18-4-1983 to finalise the agreement. On hearing from you, I shall make necessary arrangements for our meeting here.

இதுதான் அவர் எழுதிய கடிதம். ஆகவே, நான் ஒன்றை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர் என்ன சொன்னார். எந்த வகையில் இப்போது செய்தி வந்து இருக்கிறது என்பதை நானும் உங்களைப் போல் கொஞ்சம் கலக்கம் என்ற வகையில் தான் சொல்வேன். குழப்பம் என்று இல்லை. அதைப் படித்தேன். ஆனால் ஒன்றைக் குறிப்பாகச் சொல்ல விரும்பு கிறேன். நாம் ஏமாற வேண்டிய நிலைமை வராது என்பது தான் என்னுடைய எதிர்பார்ப்பு.

இங்கேயிருக்கின்ற——தமிழகத்திலேஇருக்கின்ற அனைத்திந்திய கட்சிகள் இதுபோன்ற மாநில கட்சிகள், இவைகள் எல்லாம் சேர்ந்துதான் ஆந்திராவிலும் இருக்கின்றன. இதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இங்கே மாண்புமிகு சித்தன் அவர்கள் சொல்கிறபோது அவர்களுக்கே உள்ள இயற்கையான தனத்தின் அடிப்படையின் வாயிலாக, அரசு கொஞ்சம் முயற்சி எடுத்து இருந்தால் விரைவாக முடிந்து இருக்கும் என்று சொன்னார்கள். நான் சொன்ன விளக்கத்தை கேட்.

பிறகாவது, இந்த அரசுஒழுங்காகத்தான் இருந்தது, ஆந்திரத்தில் முதல் அமைச்சர்கள் மாறிக் கொண்டே இருந்ததால்தான் இந்த நிலைமையேற்பட்டது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன்.

ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். பேசப் பட்டது 3—4 வருஷங்கள். சென்னா ரெட்டி, அஞ்சய்யா, வெங்கட்ராம், விஜயபாஸ்கர், இப்போது என்.டி.ஆர். (குறுக்கீடு) நாளைக்கு அவர் இருப்பார். சந்தேகம் வேண்டாம். அவர் இருப்பார். இதற்கு ஒரு காரணத்தை மட்டும் நான் சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட நிலையிலே குறும்புத்தனம் என்னைப் போன்றவர்களுக்கு இருக்கக் கூடாது. (குறுக்கீடு) என்னைத் தான் சொல்லிக் கொள்கிறேன். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், வெங்கட்ராம் அவர்கள் இங்கே வந்து பேசி, அதிகாரி களோடு பேசி, 7 வருஷம், 5 வருஷம் அல்லது 3 வருஷத்திற்குள் இதை முடித்துவிட வேண்டும் என்று பேச்சு வந்தது. அவர் சொன்னார், 7 ஆண்டுகள் வேண்டும் என்று நான் சொன்னேன். குறுகிய காலத்தில் 3 ஆண்டுகளுக்குள் முடித்துத் தர வேண்டும். எங்களுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை பிரச்சினை பெரிதாக வருகிறது. இதிலே அது பற்றி ஒரு குறிப்பு கூட இருக்கிறது. இப்போதுள்ள கடுமையான வறட்சி காலத்தில் கூட இந்த 15 டி.எம்.சி. தண்ணீர் சென்னைக்கு வந்து சேர வேண்டும் என்ற குறிப்பும் இதிலே இருக்கிறது. ஆகவே தான் சொன்னோம். அவசரமாகச் செய்ய வேண்டும், செலவைப் பற்றிக் கவலை இல்லை. ஆட்களை நிறைய வைத்து வேலைகள் செய்ய வேண்டும். வெளி நாடுகளில் இருந்து கருவிகள் அல்லது இயந்திரங்கள் கொண்டு வர வேண்டுமென்றாலும், கொண்டு வரலாம் என்று தான் சொன்னேன். அவர் போனார். போய் விட்டார். நாம் என்ன செய்ய முடியும்? ஆகவே, இந்த நிலை இனிமேல் வராது என்று நம்பி—நம்பிக்கையில் தான் மனிதன் வாழ்ந்து கொண்டு இருக்கிறான்—அந்த நம்பிக்கையோடு நான் செல்வேன்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சென் னைக்கு கிருஷ்ணா தண்ணீர் தருவதாகச் சொன்னவர்கள் எல் லாம் மாறி விடுகிறார்கள். அதனால் தானோ என்னவோ இப் போது என்.டி. ஆர். கொஞ்சம் தயக்கம் காட்டுகிறாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை வேடிக்கையாக எடுத்துக் கொண்டாலும், கொஞ்சம் வினயமாக நான் பதில் சொல்லிவிடு கிறேன். முன்பு இருந்தவர்கள் சொன்னார்கள்—ஆனால் அவர் கள் எல்லாம் யாரோ சொல்லி கேட்க வேண்டிய நிலையில் இருந்தார்கள். இன்று சொல்கிறார்கள். அவரே செய்ய முடியும் என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, நாம் சந்தேகப்படாமல் எதிர்பார்க்கலாம். இன்னொன்று, அவருடைய கடிதமும் சொல்



கிறது. நானும் அவரோடு பழகியிருக்கிறேன். சில முடிவுகளை எடுத்து விட்டால் கொஞ்சம் துணிச்சலோடு அதை நிறைவேற்றக் கூடியவர். இதிலே அங்கேயிருக்கிற காங்கிரஸ்காரர்கள்—அகில இந்திய காங்கிரஸ்காரர்கள்தான்—ஒரு வேளை எதிர்க் கட்சியில் இருப்பார்கள்.—அந்தக் காங்கிரஸ்காரர்கள் நிச்சயமாக எதிர்க்க மாட்டார்கள். அதற்கு சித்தன் அவர்கள் முன் உதாரணமாக இருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கவலை நமக்கு இல்லை. ஆகவே, மத்திய அரசு ஒத்துழைக்கும். பிரதம அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இதிலே நம்பிக்கையோடு இருப்போம். விரிவாகப் பேசி வெளியே இருக்கின்றவர்களுக்கு சந்தேகத்தை அதிகமாக்காமல் நம்பிக்கையோடு இருப்போம். என்.டி.ஆர். அவர்களும் அந்த அரசும் முன்னால் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மதிப்பேன் என்று சொல்லியிருக்கிறார் கள். 1976 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை நான் மதிப்பேன் என்று நேற்றையதினம் பேசிய பேச்சில் கருத்து வெளியிடப்பட்டு இருக்கிறது. ஆகவே, அதை நம்பி நான் ஆசையோடு புறப்படு வேன். உங்களுடைய ஒத்துழைப்பு இருக்கும் வரையில் இது வெற்றிகரமாக, நிச்சயமாக நடக்கும் என்று எல்லோருக்கும் சேர்த்துச் சொல்லி, இதற்காக அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதை எடுத்துச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல் களை ஒத்தி வைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை யில்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 4. அறிக்கை அளித்தல்.

### மதிப்பீட்டுக் குழு.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்ட நிர்வாகம்" பற்றிய மதிப் பீட்டுக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன். போதிய அவகாசம் இன்மையால், அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படியெடுத்த (சைக்ளோஸ்டைல்ட்) அறிக்கை அளிக்கப் பெற்றுள்ளது. ஆதலால், மேற்கண்ட அறிக் கையின் இரு பிரதிகளின் படிவங்கள் உறுப்பினர்களின் பார்வைக் காக சட்டமன்ற நூலகத்தில் வைக்கப் பெற்றுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன், அவைகள் பேரவை உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்பெறும்.

(5) வரவு-செலவுத் திட்டம் 1983–84 வாக்கெடுப்பு — தொடர்ச்சி.

கோரிக்கை எண். 15—காவல் துறை,

கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி.

(முற்பகல் 11-10)

**திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலே தாக்கல் செய்யப்பட்டிருக்கிற காவல் துறை மற்றும் தீயணைப்புப் பணிகள் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை உங்கள் முன்னாலே வைக்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

இந்த மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய உரையைத் தொடங்குவதற்கு முன்னாலே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் உங்கள் மூலமாக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடமிருந்து இரண்டு விவரங்களைப் பெற விரும்புகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல்வேறு இலாகாக்களைத் தன்னுடைய பொறுப்பிலே வைத்திருக்கிறார்கள். அவை சம்பந்தமாக அவர்கள் பல்வேறு செய்திகளை இந்த நாட்டு மக்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அடுத்து, நாங்கள் எல்லாம் காவல் துறை சம்பந்தமாக நூற்றுக் கணக்கான கேள்விகள் அனுப்பியிருக்கிறோம். அவற்றுக்கான விளக்கங்களை நாங்கள் மட்டுமல்ல, இந்த நாட்டு மக்களும் தெரிந்துகொள்ள வேண்டும். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவற்றுக்கான பதில்களை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய காவல் துறை மிகவும் திறமை வாய்ந்த ஒன்று. ஒரு காலத்திலே உலகத்திலேயே இரண்டாவது இடத்தையும் இந்தியாவிலேயே முதல் இடத்தையும் நம்முடைய காவல் துறை பெற்றிருந்தது. ஆனால் இன்றைக்கு இந்தத் துறை செயல் இழந்து, நிர்வாகத் திறன் இழந்து, செயலற்று இருக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. நிர்வாகத் திறமையும், நேர்மையும், நாணயமும் மிக்க காவல் துறை அதிகாரிகள் இருக்கிறார்கள் என்பதை நான் இன்றைக்கும் பார்க்கிறேன். இருந்தாலும் அவர்கள் முறையாக, நேர்மையாக செயல்பட முடியவில்லையோ என்ற ஐயப்பாடு எழுகிறது. ஆளும் கட்சியினரை ஆதரிப்பதே பதவி உயர்வுக்கு அடிப்படை என்றால் காவல் துறையின் சேவை மக்களுக்குப் பயன்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க் கட்சியினரை, குறிப்பாக எதிர்க் கட்சித் தலைவரை அவமதித்தால் அல்லது தரக் குறைவாக நடத்தினால் ஆளும் கட்சியினருக்கு மகிழ்ச்சி ஏற்படும் என்ற எண்ணம் காவல் துறையினருக்கு ஏற்பட இடம் அளிக்கக் கூடாது. இதைப் போன்ற ஒரு சம்பவத்தில் ஆசிய ஜோதி பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ஒரு முறை குறிப்பிட்டதை இந்த நேரத்தில் இங்கே



நினைவுபடுத்த விரும்புகிறேன். லோக் நாயக் ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களை ஒருமுறை காவல் துறை அதிகாரி தரக் குறைவாக நடத்தினார் என்பதை அறிந்த ஆசிய ஜோதி பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள், ''அவர்கள் இந்திய பிரதமராக வரக்கூடிய தகுதி பெற்றிருக்கிறார்கள், அவர்களை இந்த மாதிரி தரக்குறைவாக நடத்தக் கூடாது'' என்று கண்டித்ததை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திற்கு அளித்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பில் 33-வது பக்கத்திலே காவல் துறையின் சாதனை பற்றி குறிப்பிட்டு இருக்கிறார்கள். சொத்து குறித்து நிகழ்ந்த குற்றங்கள் ஆதாயத்திற்காக நடந்த கொலைகள் பற்றி 53 புகார்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் கண்டுபிடிக்கப்பட்டது 28 தான். ஆக இதிலிருந்து 25 கொலையாளிகள் தமிழ்நாட்டிலே சுதந்திரமாக உலாவிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

அது மட்டுமல்ல. கொள்ளை பற்றி 60 புகார்கள் வந்ததில் 27 புகார்கள் மட்டும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. வழிப்பறி பற்றி 271 புகார்கள் வந்ததில் 136 புகார்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. கன்னக் களவிலே 9,410-லே, 4,676 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த 4 இனங்களிலே ஏறத்தாழ 50 சதவீதம் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. பெரிய திருட்டுகளைப் பொறுத்த அளவிலே 25,991-லே 12,802 குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. அது 60 சதவீதமாக இருக்கிறது. கால்நடை திருட்டு, சின்னத் திருட்டு போன்றவைகளில் 75 சதவீதத்திற்கும் அதிகமாக பிடிக்கப்பட்டிருந்தாலும்கூட, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாக அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புவது, இந்தப் புள்ளி விவரங்கள் மூலமாக எங்களால் முழுமையாக விவரங்களைப் புரிந்துகொள்ள இயலவில்லை. திருட்டுகளில் பறி கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு? 1 ரூபாய் பறி கொடுத்திருந்தாலும் திருட்டுதான், 1 இலட்சம் ரூபாய் பறி போயிருந்தாலும் திருட்டுதான். ஆகவே, அதன் மூலமாக பறி கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு? மீட்கப்பட்ட தொகை எவ்வளவு என்ற விவரங்களைக் கொடுத்திருந்தால், விவரங்கள் முழுமை பெற்றிருக்கும்.

காவல் துறையைப் பொறுத்த வரையில் முன்பெல்லாம் ஒரு ஐ. ஜி. மட்டும் பொறுப்பேற்றுக் கொண்டு கவனித்துக் கொண்டிருந்தார். இப்போது, டைரக்டர் ஆப் இன்ஸ்பெக்டர் ஜெனரல் என்ற பதவி மட்டும் அல்ல, இரண்டு ஐ.ஜி.க்களும் இருக்கிறார்கள். தமிழகம் முழுவதும் 16 டி.ஐ.ஜி.க்கள், எஸ்.பி. மற்றும் டி.எஸ்.பி. என்ற வகையிலே 85 பேர்கள் இருக்கிறார்கள். முன்பு சப் இன்ஸ்பெக்டர்தான் காவல் நிலையத்திலே பொறுப்பு ஏற்றுக் கொண்டிருப்பார். இன்றைக்கு ஒவ்வொரு காவல் நிலையத்திலும் இன்ஸ்பெக்டர்களே பொறுப்பு ஏற்றுக் கொண்டு

கவனித்து வருகிறார்கள். என்றாலும்கூட குற்றங்களைக் கண்டுபிடிக்க வேண்டிய எண்ணிக்கை கணிசமாக குறையவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தமிழகத்திலே இந்த ஆண்டிலே மட்டும் 12 மாவட்டங்களில் 21 இடங்களில் துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்கிறது. தமிழ்நாடு போலீஸ் நிர்வாகம் அதன் செயல்பாடு திறன் ஆகியவை குறித்து ஆய்வு நடத்துவதற்காக ஒரு உயர் மட்ட கமிஷன் நியமிக்கப்பட வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு நடைபெற்ற காவல் துறை மானியத்திலே நான் பேசிய நேரத்திலே கூட இதைக் குறிப்பிட்டேன். குறிப்பாக போலீஸ் நிர்வாகத்தில் அரசியல் நுழையாமல், ஆளும் கட்சி தலையீடு இல்லாமல் அது தனித் தன்மையாக செயல்பட வேண்டும் என்றால், இந்தக் குழு அமைக்கப்பட வேண்டியது மிக அவசியம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த ஆட்சி பொறுப்பு ஏற்றுக் கொண்டதற்குப் பின்னாலே, போலீஸ்காரர்களுக்கு மலிவு விலையில் இன்றியமையாத பண்டங்கள் வழங்கப்பட்டு வந்தன. உயிரைத் திரணமாக மதித்து போராடுகின்ற காவல் துறைக்கு, அவர்கள் தங்களுடைய குடும்பக் கவலையை மறந்து கடமையாற்ற வேண்டும் என்பதற்காக இந்தச் சலுகை தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு, இந்தத் துறை எந்த அளவுக்கு செயல் திறன் வாய்ந்தது, திறமை வாய்ந்தது என்பதற்கு ஒரு மறு ஆய்வு நடத்தப்பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். An evaluation to find out how far this subsidised ration scheme hasimproved the efficiency of the police என்பதற்காக ஒரு மறு ஆய்வு நடத்தப்பெற வேண்டும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஏனென்றால் மேலதிகாரிகள் மட்டத்திலே எண்ணிக்கை உயர்த்தப்பட்டது போல, கீழ் மட்டத்திலே உள்ள போலீஸ்காரர்களுடைய எண்ணிக்கை உயர்த்தப்படவில்லை. அதன் விளைவு தமிழகம் முழுவதும் சங்கிலி அறுப்பு, வீடு புகுந்து திருட்டு வீடு புகுந்து கொள்ளை, கொலை போன்ற நிகழ்ச்சிகள் தமிழகத்தில் இன்று மட்டும் அல்ல, தமிழகத்தின் தலைநகராகிய சென்னையிலும் தினசரி நிகழ்ச்சியாக ஆகிவிட்டது. இன்னும் சொல்ல வேண்டும் என்றால் சென்னையை சுற்றியுள்ள புறநகர்ப் பகுதி, களில் இப்படிப்பட்ட மோசடிகள் பெரிதும் நடைபெறுவது வாடிக்கையாக ஆகிவிட்டது. சென்னையை சுற்றிய புறநகர்ப்பகுதிகளில் சில அது சென்னையைச் சேர்ந்ததா, செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்ததா என்று அதிலேயே முடிவெடுக்காத நிலையில்



அவைகள் கண்டு பிடிக்கப்படாததினாலேயே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் அதிகமாக நடைபெற்று வருகின்றன. வழி மறுப்புச் செய்வது, சைக்கிளில் அல்லது மோட்டார் சைக்கிளில் வந்து சங்கிலி அல்லது தாலி அறுப்பது போன்ற நிகழ்ச்சிகள் பெரிதும் நடைபெற்று வருகின்றன.

போலீஸ் துறையிலே ஏறத்தாழ 10 ஆயிரம் பேர்களுக்கும் அதிகமானவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்படும். அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று ஒரு அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்பு அறிவித்தார்கள். அறிவித்து பல மாதங்கள் ஆகிவிட்டன. தேர்வு நடைபெற்றது. போட்டியில் கலந்து கொண்டவர்கள் நிரந்தர சான்றிதழ்கள் வாங்கி வைத்துக் கொண்டதுதான் மிச்சமே தவிர, அவர்களுக்கு போலீஸ் வேலையும் கிடைக்கவில்லை, வேறு வேலைக்கும் போக முடியாத சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை தங்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன். இந்த 10 ஆயிரம் போலீஸ்காரர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதில், எப்போது எடுத்துக் கொள்ளப்படும் என்று திட்டவட்டமான அறிவிப்பை இந்த மன்றத்திலே சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேல் மட்டத்திலே இருக்கும் டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ், ஐ. ஜி. ஆப் போலீஸ் ஆகிய அதிகாரிகளின் எண்ணிக்கை மட்டும் அதிகரித்தால் போதாது, காவல் துறையிலே இருக்கும் காவலர்களின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல காவலர்களை வேலைக்கு எடுத்துக் கொள்கின்ற வகையிலே, ஸ்டாப் சர்வீஸ் கமிஷன், ரெக்ரூட்மெண்ட் போர்டு என்று தேர்வு அமைப்புகள் பல வகைகளிலே இருப்பதைப் போல இதற்கும் ஒரு தனி அமைப்பு உருவாக்கி, ஆட்சியாளர்கள். அல்லது அரசியல்வாதிகளின் தலையீட்டிற்கு செவி சாய்க்காத சுயஆதிக்கம்.பெற்ற தேர்வு குழுவினை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். போலீஸ் துறையிலேயும், ராணுவத்திலேயும் மெச்சத் தகுந்த பணிபுரிந்த எத்தனையோ அதிகாரிகள் தமிழகத்திலே இருக்கிறார்கள். அருள் போன்றவர்கள், பால் கிருஷ்ண ஷெட்டி போன்றவர்கள், குமாரமங்கலம் போன்றவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களைக் கொண்டு அந்த அமைப்பை ஏற்படுத்த ஏற்பாடு செய்தால் மெத்தப் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

(முற்பகல் 11–20.)

பெரிய மனிதர்கள், செல்வந்தர்கள், சமுதாய அந்தஸ்து பெற்றவர்கள் என்ற போர்வையில் பல மோசடிகள் தமிழகத்தில் நடக்கின்றன. சீட்டுக் கம்பெனி மோசடி, உம்மிடியார்ஸ் நிறுவனம் டெப்பாசிட்டுக்களை வாங்கி வைத்து அதிலே செய்யப்பட்ட மோசடி, வெளிநாடுகளிலே வேலை வாங்கித் தருவதாக சொல்லி பலர் செய்த மோசடி போன்ற குற்றங்கள் எல்லாம் நடந்திருக்கின்றன. சிலைத் திருட்டுக்கள் நடந்திருக்கின்றன. கள்ள நோட்டு தயாறிக்கின்ற குற்றங்களும் நடந்திருக்கின்றன. இப்படிப்பட்ட குற்றங்கள் எல்லாம் நடந்திருக்கின்றன. தமிழகத்தில் திருடப்பட்ட சிலை அண்மையிலே அமெரிக்க வரை கூட சென்றிருக்கின்றது என்று நான் கருதுகிறேன். ஆகவே உலகத்திலேயே மிகச் சிறந்த துறையாக இருக்கின்ற வகையில் இந்த போலீஸ் நிர்வாகம் நல்ல முறையில் செயல்படுவதற்குரிய வழிவகைகளை அரசாங்கம் முனைந்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

பல்வேறு வழக்குகளைத் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுக்கிறோம் என்று சொன்னாலும் கூட பல வழக்குகள் ஆண்டு நிறைவு நாட்களைக் கொண்டாடிக் கொண்டு இருக்கின்றன. ஷோபா கொலை வழக்கு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மறு பரிசீலனைக்கு விடப்பட்டு ஆண்டுக் கணக்காகியும் கூட மறு பரிசீலனை முடியவில்லை. பிரேமா கொலை வழக்கு சம்பந்தமாக குற்றவாளிகள் வெகு விரைவில் பிடிக்கப்படுவார்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததை எண்ணிப் பார்க்கிறேன். அந்தக் கொலை வழக்கு சம்பந்தமான முடிவு தெரியவில்லை. திரு. சுப்பிரமணியபிள்ளை கொலை பற்றி பால் கமிஷன் அளித்த அறிக்கையை ஒட்டி குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க மாநில குற்றப் புலனாய்வுத்துறைக்கு உத்தரவிட்டு 18 மாதங்கள் ஆகிவிட்டன. இதுவரையில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக விவரம் இல்லை. அதுமட்டுமல்ல, இந்த மன்றத்திலே உறுப்பினராக இருந்த திரு. கேசவ ஆதித்தன் அவர்களுடைய மரணம் பற்றியும் புலனாய்வுத்துறை ஆய்வு செய்யும் என்று முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்ததை நான் நினைத்துப் பார்க்கிறேன். அவை எல்லாம் என்ன ஆனது ? மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில மாதங்களுக்கு முன்பாக என்னுடைய தொகுதியாகிய திருமங்கலத்திலே நடைபெற்ற ஒரு துயர நிகழ்ச்சியை உங்கள் மூலமாக இந்த அவைக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசாங்கத்தினுடைய மருத்துவ அதிகாரியாக இருந்த ஒருவருடைய வீட்டிலே ஒரு ஏழை அரிசனப் பெண் சின்ன பாப்பா என்பவர் ஒரு நாள் மாலையிலே தற்கொலை செய்துகொண்டார் என்ற செய்தி



கிடைத்தது. ஆனால் நடைபெற்ற நிகழ்ச்சி என்னவென்றால் அந்த இளம் பெண் அந்த மருத்துவ அதிகாரியினுடைய மகன்களால் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறார். இது சம்பந்தமாக போலீஸ் துறையை ஆளுகின்ற கட்சியைத் தவிர மற்ற அனைத்துக் கட்சிகளும் ஒன்றாகக கூடி தீர்மானம் போட்டு வலியுறுத்தியதற்குப் பிறகு ஒரு மாதத்திற்குப் பிறகு தான் எடுத்தார்கள். இடைப்பட்ட காலத்தில், அவர் வசதி வாய்ந்த ஒரு மருத்துவ அதிகாரியாக இருந்ததன் காரணத்தால் பலருடைய வாய்கள் அடைக்கப்பட்டன. பிரேதப் பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்ட பிரேதம் ஒருநாள் தாமதிக்கப்பட்டு அந்த மருத்துவ அதிகாரிக்கு வேண்டியவர்கள் வந்ததற்குப் • பிறகு பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டது. இப்படிப் பல குற்றங்கள் நடந்திருக்கின்றன. இதிலேமுதலமைச்சர் அவர்களைநான்கேட்டுக் கொள்கிறேன். அந்தக் குற்றவாளிகள் இன்றைக்கு சுதந்திரமாக உலாவிக் கொண்டிருக்கிறார்கள். அந்த இளம் பெண்ணை இழந்து தவிக்கின்ற அந்த அரிசனப் பெற்றோரின் நிலைமை நெஞ்சை உருக்குவதாக இருக்கின்றது. எனவே இது குறித்து விசாரித்து குற்றவாளிகள் மீது தகுந்த கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்திலே, அருப்புக்கோட்டையிலே ஜனவரி மாதம் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றைச் சொல்கிறேன். அந்த ஊரிலே கணேசன் என்பவர் சிவாஜி மன்றத்தைச் சேர்ந்தவர். அந்த இளைஞருக்கு 17–1—1983 அன்று திருமணம் என்று முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. திருமணப் பத்திரிக்கையை அச்சடித்து ஒவ்வொருவருக்கும் கொடுத்துக் கொண்டிருக்கும்போது காவல் துறையினர் அழைக்கிறார்கள் என்று சொல்லி 11—1—1983 அன்று இரவு அழைத்துச் செல்லப் படுகிறார் ஏதோ வழக்கு சம்பந்தமாக விசாரிப்பதற்கு. 12-ஆம் தேதி மதியம் 2 மணிக்கு அருப்புக்கோட்டை போலீஸ் நிலையத்திலே உள்ள கிணற்றிலே பிணமாக அவர் மிதக்கிறார். நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். லாக்—அப்பிற்குள்ளே கிணறு இருக்கின்றதா ? அல்லது கிணற்றைச் சுற்றி லாக்-அப் வைத்திருக்கிறீர்களா ? விசாரிக்கப்படுவதற்காகச் சென்றவர், நீச்சல் தெரிந்தவர். மறு நாள் பிணமாக மிதந்திருக்கிறார். இது பற்றி பல முறை அந்தப் பகுதியிலே உள்ள சர்வ கட்சியினைச் சேர்ந்தவர்களும் மனு கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மனு கொடுக்கப்பட்டிருக்கின்றது. என்னுடைய கையிலே அதற்கான ஆதாரம் இருக்கிறது. அந்தத் திருமணப் பத்திரிக்கை இருக்கின்றது. அதை உங்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கணேசன் மணமாலை அணிந்து வருவார், மணப்பெண் முத்துலட்சுமியின் அருகிலே அமர்ந்திருப்பார் என்று எண்ணிக்கொண்டிருந்த பெற்றோர் முன்பு பிணமாக வந்து சேர்ந்தது உள்ளபடியே நெஞ்சை உருக்குவதாக இருக்கின்றது. நான் இன்னும் சொல்கிறேன். அந்த நிகழ்ச்சிக்குப் பின்னால் ஆர். டி. ஓ. அவர்கள் விசாரணை நடத்தியிருக்கிறார்கள். என்ன விசாரணை ? அவர் தப்பி ஓடும்போது தவறி கிணற்றிலே விழுந்துவிட்டார் என்று விசாரணையின் முடிவில்

[திரு என். எஸ். வி. சித்தன்] [1983 எப்ரல் 16

சொல்கிறார்கள். இந்த மாதிரி விசாரணை எல்லாம் தேவைதானா ? அதிகாரிகள் சொல்வதை அப்படியே ஒத்துக் கொள்கின்ற முறை சரிதானா ? அந்த ஊரிலே உள்ள சர்வ கட்சிகளையும் சேர்ந்தவர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். முதலமைச்சருக்கும் அனுப்பியிருக்கிறார்கள். கூட்டங்கள் போட்டு இருக்கிறார்கள். நான் உங்கள் மூலமாக கேட்டுக் கொள்வது எல்லாம் இது காவல் நிலையத்திலே லாக்—அப்பிலே நடைபெற்ற ஒரு கொலை, நம்முடைய மாண்புமிகு இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னதைப் போல் காவல் நிலையங்களில் லாக்—அப்பில் மரணம் என்று சொன்னால் அதை துர்மரணம் என்று தான் எடுத்துக் கொள்ள வேண்டும். அது தற்கொலை என்று சொன்னால் கூட கொலையாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உடனடியாக சஸ்பெண்டு செய்து அதன் மூலமாக விசாரணை நடத்தினால் தான் மக்களுக்கு நீதி கிடைக்கும், என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய காவல் துறையைப் பொறுத்தவரையில் இன்னும் அதனுடைய போக்கை மாற்றிக் கொள்ளவில்லை. சிறிது நாட்களுக்கு முன்னால் 'இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி' பத்திரிக்கையில் கூட வந்தது. இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் காவல் நிலையத்திலே செத்தவர்கள் அதிகம், 182 என்று கூட நான் எண்ணிப்பார்க்கிறேன். அந்த அளவுக்கு இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது என்பதை பார்க்கும் போது இவைகள் காவல் நிலையங்களா அல்லது கசாப்புடைகளா என்று கேட்கத் தோன்றுகிறது. ஆகவே மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டையில் இன்றைக்கு சாகடிக்கப்பட்ட கணேசன் சம்பந்தமாக ஒரு முழுமையான நீதி விசாரணை ஏற்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக வேலை நீக்கம் செய்யப்பட வேண்டும். அதன் மூலமாக அந்த பகுதியில் நீதி வழங்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தப்படியாக நம்முடைய மாண்புமிகு இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் திரு. சங்கரய்யா அவர்கள் பேசியதற்கு பின்னால் 2 நாட்களுக்கு முன்பு பத்திரிகையில் வந்தது. இந்த மாதம் 10ம் தேதி அன்று ராஜமங்கலத்திலே போலீஸிலே ஒப்படைக்கப்பட்ட 3 குற்றவாளிகளில் ஒருவர், உஷார் கமிட்டியில் பிடித்துக் கொடுக்கப்பட்டவர், மருத்துவ மனைக்கு போகின்ற வழியில் கோவிந்தன் என்பவர் இறந்து இருக்கிறார். இன்னும் 2 பேரும் மருத்துவ மனையில் ஆபத்தான நிலையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆக, இது ஒரு நிகழ்ச்சி அல்ல—வட ஆற்காடு மாவட்டத்தில் எங்களுடைய கட்சியினுடைய கொரடா திரு. பலராமன் அவர்கள் சொன்னார்கள். மாடப்பள்ளியில் அரிசன வகுப்பைச் சேர்ந்த சிறுவனை போலீஸில் பிடித்துப் போய் இருக்கிறார்கள். அவன் உயிரோடு இருக்கிறானா? எங்கே இருக்கிறான்? என்ற விவரம் நமக்கு இன்றுவரை தெரியவில்லை.



1983 ஏப்ரல் 16] [திரு என். எஸ். வி. சித்தன்]

அது மட்டும் அல்ல, வட ஆற்காடு மாவட்டம் கலவையில் ரிக்ஷா தொழிலாளி கார்த்திகேயன் என்பவரை காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள். அங்கே கொல்லப்பட்ட காரணத்தினால் ஊர் மக்கள் திரண்டு காவல் நிலையத்தை மறித்துக்கொண்டதற்கு பிறகு போலீஸார் வானை நோக்கி சுட்டு இருக்கிறார்கள். ஆக இது மாதிரியான நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று கொண்டு இருக்கின்ற காரணத்தினால், நான் உங்கள் மூலமாக இந்த அரசை கேட்டுக்கொள்வது எல்லாம், போலீஸார் குற்றவாளிகளை சந்தேகிக்கின்ற அணுகுமுறையில் ஒரு மாறுதல் இருக்கவேண்டும். ஏதோ • விசாரிக்கிறேன் என்ற பெயரால் இவர்களுக்கு தீர்ப்பு வழங்கப்படுவதும், தண்டனை வழங்கப்படுவதும், நிச்சயமாக இருக்கக் கூடாது. இந்தமுறை மாற்றப்படவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, இந்த மாமன்றத்திலே சில நாட்களுக்கு முன்னால் நம்முடைய எதிர் வரிசையிலே இருக்கின்ற அத்தனைக் கட்சி உறுப்பினர்களும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருந்தோம். இங்கே நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மன்றத்தைச் சேர்ந்தவர்கள் சென்னையில் மக்களுடைய பிரச்சனைகளுக்காக ஊர்வலம், கலெக்டர் அலுவலகத்திற்கு முன்னால் மறியல் போராட்டம் என்று அறிவித்து இருந்தார்கள். ஆனால் நான் அன்றைக்கே சொன்னேன். இன்று மீண்டும் சொல்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலவையில் முதல் நாள் அறிவிக்கிறார். மறுநாள் உண்ணாவிரதம் இருக்க போகிறேன் என்று சட்டசபை நடந்துகொண்டிருக்கிற இந்த நேரத்தில் சட்டசபைக்கு அருகிலே காமராஜர் சாலையில் அவர் உண்ணாவிரதம் இருக்க அனுமதிக்கப்படுகிறார். அதைப்போலவே ஆட்சிக்கட்சி மத்திய அரசை எதிர்த்து ஒரு ஊர்வலத்தை நடத்துகிறார்கள். அதற்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. தொழிலாளர் பேரணி ஆளுகின்ற கட்சியினால் நடத்தப்படுகிறது. அதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. அதேநேரத்தில் சிவாஜி மன்றத்தினர் தங்களுடைய பிரச்சினைக்காக அல்ல, மக்களுடைய பிரச்சனைக்காக ஊர்வலம் நடத்தவேண்டும் என்று கேட்ட நேரத்தில், மறியல் நடத்தவேண்டும் என்று சொன்ன நேரத்தில் இந்த ஜனநாயக உரிமை மறுக்கப்படுவது ஏன்? அது மட்டும் அல்ல, இது சம்பந்தமாக பத்திரிகையில் வந்த படங்களை நானும் பார்த்தேன். இங்கே இருக்கின்ற மற்ற உறுப்பினர்களும் பார்த்து இருப்பார்கள் என்று கருதுகிறேன். ஊர்வலம் போகின்றவர்களை போலீஸார் என்ன செய்து இருக்கவேண்டும்? ஊர்வலத்திற்கு அனுமதி கொடுத்து இருக்கவேண்டும். இல்லை என்றால் ஊர்வலத்தில் போகிறவர்களை கைது செய்து இருக்கவேண்டும். ஆனால் மதுரையில் ஊர்வலம் போகிறவர்களை எதிர்த்து குறுக்கே நின்று மறிக்கிறார்கள். ஆக இவர்களும் சேர்ந்து சிவாஜி மன்றத்தோடு சேர்ந்து மறியல் செய்கிறார்களா என்று எனக்கு, விளங்கவில்லை. ஆக ஊர்வலம்

போவதை போலீஸார் ஏன் மறிக்க வேண்டும்? படம் வந்திருக்கிறது பத்திரிகையில். அது மட்டும் அல்ல, அங்கே வந்த புகைப்படக்காரர்களை ஏன் பிடிக்க வேண்டும்? புகைப்படக் கருவிகளை பிடுங்கிக்கொண்டு புகைப்படச் சுருள்களை எடுத்துவிட்டு கொடுத்து இருக்கிறார்கள். சென்னையில் கூட மாலை முரசு நிருபர் தாக்கப்பட்டு இருக்கிறார். ஆனால் ஆளும் கட்சியினருக்கு ஒரு மாதிரியாகவும், எதிர்க்கட்சியினருக்கு ஒரு மாதிரியாகவும் நடந்து கொள்கிறார்கள். இது மாற்றான் தாய் மனப்பான்மை ஆகாதா? கொடைக்கானலிலே கூட ஒரு வாரத்திற்கு முன்னால் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. இராஜா முகமது அவர்களும், மாண்புமிகு அமைச்சர் திரு. ஆர்.எம். வீரப்பன் அவர்களும் கலந்து கொள்கிற ஒரு நிகழ்ச்சியில் ஆளும் கட்சியை சேர்ந்தவர்களுடைய பெயரை அந்த அழைப்பிதழில் போடாத காரணத்தால் அந்த ஊரில் இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா தி.மு.க.—வைச் சேர்ந்தவர்கள் மறியல் செய்து இருக்கிறார்கள். பத்திரிகையில் படம் வந்திருக்கிறது. கைது செய்யப்பட்டார்களா? சாலையில் உட்கார்ந்து போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்கின்ற முறையில் இருந்தார்கள் கைது செய்யப்பட்டார்களா? கைது செய்யப்படவில்லை. இன்றைக்கு நம்முடைய உறுப்பினராக இருக்கின்ற, திரு. விஜயராகவன் அவர்கள் ஒரு ஊர்வலத்தை நடத்தினார்கள். ஜாலியன் வாலா பாக் படுகொலை நடந்த தினத்தன்று அஸ்ஸாம் படுகொலையைக் கண்டித்து ஒரு ஊர்வலத்தை நடத்தினார்கள். கைது செய்யப்பட்டார்கள். பின்னால் விடுதலை செய்யப்பட்டார்கள். ஆனால் இந்த மாமன்றத்தைச் சேர்ந்த உறுப்பினர் மாமன்றத்தில் கலந்து கொள்ள முடியாத அளவுக்கு இன்றைக்கும் சிறையில் வைக்கப்பட்டு இருக்கிறார். ஏன் என்று இந்த வினாவை நான் கேட்க விரும்புகிறேன். இது மாற்றாந்தாய் மனப்பான்மை ஆகாதா? பழி வாங்கும் முறையாக இருக்காதா? நம்முடைய நாவலர் அவர்கள் அன்றைய தினம் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்து பேசியபோது என்ன சொன்னார் தெரியுமா? சிவாஜி மன்றத்தினர் ஊர்வலத்திற்கு முன்னால் போராட்டம் நடத்துவதற்கு முதல் நாள் 56 பேர்களை சமுதாய விரோதிகளை அரசாங்கம் கைது செய்தது. முதல் நாள் 7 மணிக்கு கைது செய்து மறு நாள் காலையில் விட்டு விட்டோம் என்று சொன்னார்கள். எனக்கு அங்கேயிருந்து நிறைய கடிதங்கள் வந்து இருக்கின்றன.

(முற்பகல் 11-30)

மாண்புமிகு முதலமைச்சரிடம் நான் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். எங்கள் கட்சியிலே இருக்கிறவர்கள் இன்னும் சொல்ல வேண்டுமானால், தென் சென்னை மாவட்ட காங்கிரஸ் செயலாளர், வடசென்னை துணைத் தலைவர், தென் சென்னை இளைஞர் காங்கிரஸ் தலைவர், ஆறாவது வட்ட காங்கிரஸ் தலைவர் அத்தனை பேர்களையும் முன்னெச்சரிக்கையாக கைது செய்திருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்திலே அவை முன்னவர்





அவர்கள் இந்த மன்றத்திலே சொல்கிறபோது சமுதாய விரோதிகள் 56 பேர்கள் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்கள் என்று சொன்னார்கள். நான் கேட்க விரும்புகிறேன். உங்கள் கட்சியில் எப்படியோ? எங்கள் கட்சியில் சமுதாய விரோதிகளை ஏற்றுக்கொள்வதில்லை. பொது வாழ்க்கையிலே உள்ளவர்களை, குறிப்பாக எதிர்க்கட்சியிலே உள்ளவர்களை சமுதாய விரோதிகள் என்று சொல்வது என்ன நியாயம்? இந்த அவைக்கு அவை முன்னவர் தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார் என்று என்னால் கூறமுடியும். ஒன்று கேட்க விரும்புகிறேன். இதுபோன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன.......

திரு. ஏ. சி. சண்முகம்: பாயின்ட் ஆப் ஆர்டர். காங்கிரஸ் கட்சியிலே சமுதாய விரோதி இல்லை என்று சொன்னார்கள். தங்கபாலு ஒரு பொறுப்பிலே இருக்கிறாரே அவரை எந்த லிஸ்ட்டிலே வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?

**திரு. என்.எஸ்.வி. சித்தன்:** இதுபாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை, இந்த மன்றத்திலே அவரும் இல்லை, இது சம்மந்தமில்லாத பிரச்சினை, அரசாங்கத் தரப்பிலே செய்தியை அவருக்குச் சொல்வார்கள், கேட்டுக்கொள்ளுங்கள் வேண்டுமானால். இனக் கலவரங்கள், சாதிக் கலவரங்கள் இன்றைக்கு தமிழகத்திலே அதிகமாக இருந்து வருகின்றன. இதற்கு முன்னாலே இருந்த ஆட்சியிலே இல்லாத அளவுக்கு இனக்கலவரங்களும் சாதிக் கலவரங்களும் இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அறிக்கைகளைப் பார்க்கிறபோது காவல் துறையினர் இது போன்ற கலவரங்கள் வந்தபோது அடக்கியதாக செய்தி வருகிறதே தவிர இனக்கலவரங்களை. சாதிக் கலவரங்களை முன்னாலேயே அறிந்து தடுப்பதற்கான செய்திகள் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை.

நம்முடைய சட்டசபையிலே லாபியிலே நிறைய போலீசார் குற்றப்புலன் ஆய்வுத் துறையைச் சேர்ந்தவர்கள், ரகசியப் போலீஸ்கள் மப்டி உடையிலே இருக்கிறார்கள். நாங்கள் பத்திரிகையாளரிடமோ, வேறு யாரிடத்திலுமோ பேசமுடியாத நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது, இப்போதும் கூட அவர்கள் நின்றுகொண்டிருக்கிறார்கள். இன்னொன்றையும் சொல்லவிரும்புகிறேன். இரவு நேரங்களிலே பஸ் நிலையங்களிலும், இரயில்வே நிலையங்களிலேயும், கிராமங்களிலே இருக்கிற பொது சாவடிகளிலேயும் தங்கியிருக்கிறவர்களை சந்தேக கேஸ் என்று போட்டு கைதுசெய்கிற கொடுமையான, அநாகரிகமான வழக்கம் இருந்துகொண்டிருக்கிறது. அதை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்னையிலே சட்டம் ஒழுங்கு நிலையைக் காப்பாற்ற காவலர் எண்ணிக்கை போதாது. டிராபிக் சிக்னல்ஸ் தவிர வேறு இடங்களிலே போலீஸார் இருப்பதை நான் காணமுடியவில்லை. இன்னமும் சொல்வேன், போலீஸார் சரியான நடவடிக்கை எடுக்காத

காரணத்தினால் சென்னையில் இருக்கக்கூடிய தெருக்கள் எல்லாம் மார்க்கெட்டுகளாக, பஜார்களாக ஆகியிருக்கின்றன. உதாரணமாக பீச் ஸ்டேஷனிலிருந்து ரிசர்வ் பேங்க் வரை கடைகள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மாநகராட்சியின் தனி அதிகாரி, அவைகள் எல்லாம் போக்குவரத்து இடைஞ்சலாக இருக்கிறது என்று சொல்லி காலி செய்தார். காலி செய்து என்ன பிரயோசனம்? ஒருவாரத்திற்குள்ளே அந்த கடைகளை யார் யார் வைத்திருந்தார்களோ அவர்களே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த மாதிரியான விஷயங்களிலே போலீஸார் தெளிவாக நடந்துகொள்ள வேண்டும்.

ஆளுங்கட்சித் தலையீடு இருக்கக்கூடாது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். அது மட்டுமல்ல, தமிழகத்திலே மதுக்கடைகளைத் திறந்ததற்குப் பின்னாலே கள்ளச்சாராயம் இன்றைக்குப் பெருகியிருக்கிறது. ஒரு நியாயமான கடை இருக்குமானால் அரசாங்கக் கடை இருக்குமானால் அதைச் சுற்றிப் பல்வேறு கள்ளசாராய கடைகள் இருக்கிற காரணத்தினால் காவல் துறையினருக்கு மாமூல் கொடுப்பதற்கு வசதி இருப்பதால் பல்வேறு தவறுகள் நடப்பதற்கு வசதியாக இருக்கின்றன. சில வாரங்களுக்கு முன்னாலே நான் கேள்விப்பட்டேன், கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த டி.எஸ்.பி. ஒருவரிடம் வழிப்பறி செய்யப்பட்டதாக செய்தி. கே.கே. நகரிலே இந்து பத்திரிகை நிருபர் திரு. ரகுநாதன் அவர்களை நெஞ்சிலே கத்தியைக் காட்டி வழிப்பறி என்று செய்தி வந்திருக்கிறது. இன்னொன்றையும் சொல்கிறேன். சென்னையிலே சென்ட்ரல் போலீஸ் நிலையத்திலே இருக்கிற காவல்நிலையம் மாடியிலே இருந்துகொண்டிருக்கிறது. நான் அறிந்தவரையில் மாடியிலே இருக்கிற காவல் நிலையம் அது ஒன்றுதான் என்று நினைக்கிறேன். மாடியிலே இருக்கிற காரணத்தினால் விசாரணைக் கைதிகளை அழைத்துச் செல்கிற நேரத்திலே 2 முறை, 3 முறை தப்பியோடியதாகக்கூடச் சொல்கிறார்கள். ஆகவே மாடியிலே இருக்கிற அந்த காவல் நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்னையிலே சில மாதங்களுக்கு முன்னாலே சௌகார்பேட்டையிலே ஒரு மார்வாடி வீட்டிலே வேலை செய்த பெண் கற்பழித்து கொலை செய்யப்பட்டாள். பெண்ணின் தந்தை புகார் செய்தார். அதிகாரிகளைப் பார்க்க வேண்டியவர்கள் பார்த்தார்கள். பெண் மாரடைப்பிலே இறந்ததாக போலீஸ் பதிவு செய்துகொண்டு தந்தையை அனுப்பிவிட்டார்கள். பல்வேறு கொலைகள் நடந்திருக்கின்றன. தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெடுநாட்களுக்கு முன்பாகப் போடப்பட்ட ஆம்னி பஸ் வழக்கு என்ன ஆயிற்று? 1980-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடந்தது. சஸ்பென்ட் செய்யப்பட்டார்கள், மீண்டும் அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வழக்கு என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்வேன், ஆம்னிபஸ்கள் இன்றைக்கு ஓடாத பெரிய ஊர் தமிழகத்திலே உண்டா? சென்னையிலே, மதுரையிலே, திருச்சியிலே, சேலத்திலே



எந்த ஊரை பார்த்தாலும் ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு போகத்தான் செய்கின்றன. இது அரசாங்கத்திற்கு விடப்பட்ட சவால் இல்லையா? பல லட்சக்கணக்கான ரூபாய் வரி இன்றைக்கு ஏய்க்கப்படுகிறதே! அதை ஏற்றுக்கொள்ள முடியுமா? ஏன் இதைப்பார்த்துக்கொண்டு காவல் துறை சும்மா இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். இதே மன்றத்தில் இதற்கு முன்னாலே சொல்லியிருக்கிறார்கள், திருவொற்றியூரில் பாமோலின் எண்ணெய் 2½ கோடி ரூபாய் பெறுமானமுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த வழக்கு என்னவாயிற்று? மணலியிலிருந்து திருவொற்றியூர் வழியாக துளைபோட்டு இந்தியன் ஆயில் கம்பெனிக்குச் சொந்தமான எண்ணெய், பேரல், பேரலாக பிடித்துக் கொண்டார்களே, அந்த வழக்கு என்ன வாயிற்று? இப்படி பல்வேறு வழக்குகளை பேசமுடியும். அவைகள் கோல்ட் ஸ்டோரேஜில், குளிர் சாதனப் பெட்டியில் இருக்கிறதா என்று என்னால் கேட்காமல் இருக்க முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பஸ்களில் ஓவர்-டிக்கெட் என்பது சர்வ சாதாரணமாகிவிட்டது. இதனால் விபத்துகள் ஏற்படுகின்றன. இன்னும் பல்வேறு விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன. ஏன் காவல் துறை இதிலே சரியான நடவடிக்கை எடுக்கவில்லை. சென்னையை எடுத்துக்கொண்டால் டாக்சிகள், ஆட்டோக்கள் ஓடுகின்றன. ஆனால் எந்த இரண்டு டாக்சி மீட்டரும், அல்லது எந்த இரண்டு ஆட்டோ மீட்டரும் ஒன்றாக இருப்பதில்லை. 'நோ டு வட்சஸ் அக்ரி' என்று சொல்வார்கள். ஆனால் இங்கே 'நோ டு மீட்டர்ஸ் அக்ரி' என்ற அளவில் இருக்கிறது. இதன் மீது போலீஸ் துறை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். இப்படி பல்வேறு நிகழ்ச்சிகள் இருக்கின்றன. காவல் துறை இன்னும் நல்லமுறையிலே செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

மாவட்டங்களில் மாவட்ட வளர்ச்சி மன்றக் குழு இருப்பதைப் போல ஒவ்வொரு மாவட்டத்திற்கும் காவல் துறையைப் பொறுத்தவரையில் ஒரு குழு இருக்கவேண்டும். அதிலே மக்கள் பிரதிநிதிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு காவல்துறை செயலாற்றுவதைப் பற்றி விவாதித்து, ஆலோசனை சொல்வதற்கு உதவியாக இருக்கும். இப்போது மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களுக்கு காவல்துறை அதிகாரிகள் வருவதே இல்லை. இந்த முறையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே எத்தனை குறைபாடுகள் இருந்தாலும், காவல்துறையில் இருப்பவர்கள் மக்களுக்கு செய்கின்ற சேவையை எண்ணி இன்றைக்கு பல்வேறு உதவிகளை அவர்களுக்கு அரசாங்கம் செய்ய வேண்டும். குற்றங்களை நல்லமுறையில் கண்டுபிடிப்பதற்கு உதவியாக எல்லா காவல் நிலையங்களுக்கும் குறைந்தபட்சம் ஒரு மோட்டார்-பைக் கொடுக்க வேண்டும். முடியுமானால் மோட்டார் வாகனம் கொடுக்க வேண்டும். மோட்டார் வாகனம் வழங்கப்படுகிற நேரத்தில், அது போலீஸ் துறைக்கென்றே ஸ்பெஷலாக டிசைன் செய்யப்பட்டதாக

[திரு என். எஸ். வி. சித்தன்] [1983 ஏப்ரல் 16

முன்பக்கத்திலே இருந்து கொண்டு பின்னாலே இருப்பதை பார்ப்பதற்கும், உள்ளேயிருந்து கொண்டு வெளியே சுற்றிலும் பார்ப்பதற்கும் வசதிகள் இருக்கவேண்டும். எதிர்பாராத வகையில் திடீரென தாக்குதல் வந்தால் அதை சமாளிப்பதற்கு, வெளி நாடுகளிலே இருப்பதைப் போல, ஸ்பெஷலாக டிசைன் செய்யப்பட்ட போலீஸ் வாகனங்களை வழங்க வேண்டும். எங்களுடைய கட்சித் தலைவர் ஹாஜா செரீப் அவர்கள் சொல்கிறார்கள். அந்த வாகனத்தில் சொல்லப்பட்ட வசதிகளோடு வயர்—லெஸ் இணைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த வசதியும் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல சப்—இன்ஸ்பெக்டர்களைப் பொறுத்தவரையில் சீலிங் டி.ஏ. மாதத்திற்கு 150 ரூபாய்தான் என்று சொல்லப் படுகிறது. ரெவின்யூ போன்ற மற்ற துறைகளில் இருப்பவர்கள் மாதத்தில் 30 நாட்களும் டி. ஏ. வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு 150 ரூபாய் கொடுப்பது மிகக்குறைவாக இருக்கிறது. சப்—இன்ஸ்பெக்டர்களைப் பொறுத்தவரையில், இன்ஸ்பெக்டர்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்டங்களில் பணியாற்றலாகாது என்கிற முறை இருப்பதாக அறிகிறேன். அதை மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டு வாடகையைப் பொறுத்தவரையில் 100 ரூபாய்தான் கொடுக்கிறார்கள் என்று அறிகிறேன். சம்பளம் 300-லிருந்து 700 ரூபாய் வரை பெறுகிறவர்களுக்கு, வீடு கொடுக்கப்படாதவர்களுக்கு வாடகைப் பணம் 100 மட்டுமே கொடுக்கப்படுவதாக அறிகிறேன். இது மிகமிகக் குறைவு. சென்னையைப் போன்ற பெரிய நகரங்களில் 100 ரூபாய்க்கும், 200 ரூபாய்க்கும் வீடுகள் கிடைக்காது. இன்னும் கேள்விப்படுகிறேன். காவல் துறையிலே இருக்கிற பெரிய அதிகாரிகளுக்குகூட சென்னையில் குவார்ட்டர்ஸ் கிடையாது. ஐ.ஜி. அவர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். கமிஷனர் அவர்களுக்கு கூட கொடுக்கப்படவில்லையென்றும் அறிகிறேன். இந்த நிலை மாற்றப்பட்டு அவர்களுக்கு விரைவில் குவார்ட்டர்ஸ் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உடுப்புகளுக்காக கொடுக்கப்படுகிற துணி கூட தரமான துணியாக இல்லையென்று கேள்விப்படுகிறேன். அவர்களுக்கு தரமான துணியைக் கொடுக்கவேண்டும்; அல்லது அதற்கான பணத்தை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறைக்கு புகார் செய்ய செல்கின்றவர்களுக்கு தகுந்த மரியாதை அளிக்கப்படவேண்டும். பொதுமக்களின் பிரதிநிதிகள் சென்றாலும் சரி, அல்லது மக்கள் புகார் செய்யச் சென்றாலும் சரி, அவர்களை தகுந்த மரியாதையோடு வரவேற்று, அமரச் செய்து, அவர்களுடைய குறையை கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு காவல்துறை மானியத்தில் பேசுகிற போது



1983 ஏப்ரல் 16 [திரு என். எஸ். வி. சித்தன்]

ஒரு அறிவிப்பைச் செய்தார்கள். காவல் துறையிலே இருக்கிறவர்கள் மனம் மகிழத்தக்க வகையிலே, ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலே, அவர்களுடைய சம்பள விகிதம், பதவி உயர்வு இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக அறிவிக்கப்படும் என்று சொன்னார்கள். இப்போது ஓராண்டுதான் ஆகிறது. இன்னும் ஓராண்டு இருக்கிறதென்றாலும் கூட, இன்னும் ஓராண்டு வரையில் காத்திருக்காமல், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோழுதே எல்லோரும் ஏற்றுக்கொள்கிற வகையிலே, மகிழ்ச்சியான செய்தியை வெளியிடுவார்கள் என்று நம்புகிறேன். காவலர்களுக்கு பதவி உயர்வு மற்றும் ஊதிய உயர்வு குறித்து இந்த ஆண்டு, இன்றைக்கே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டு உரை நிகழ்த்துகிற போது மதுரையிலே காவலர்களுக்காக ஒரு மருத்துவமனை கட்டப்படும் என்று சொன்னார்கள். அந்தமாதிரியான முயற்சி ஆரம்பித்திருப்பதாகத் தெரியவில்லை. ஆரம்பித்திருந்தால் முதலமைச்சக் அவர்கள் அதை அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல போலீஸ் துறையிலே அளிக்கப்படுகிற பயிற்சி இன்னமும் பழைய முறையிலேதான் கொடுக்கப்படுவதாக அறிகிறேன். இன்றைக்கு நடைமுறையில் எவ்வளவோ மாறுதல்கள் வந்திருக்கின்றன. மாறி வருகிற சூழ்நிலைகளுக்கேற்ப பயிற்சி முறையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போலீஸ்காரர்களைப் பொறுத்தவரையில் கூட்டங்களை கலைக்கிற அளவுதான் அவர்களுக்கு ட்ரெயினிங் கொடுக்கப்படுகிறது. அந்த 'மாப்-டிஸ்பர்சல் ட்ரெயினிங்' தேவையில்லை. 'மாப் மானேஜ்மென்ட் ட்ரெயினிங்' தான் அவர்களுக்கு தேவையென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பழைய முறைகளே இருப்பதின் விளைவுதான் சிவாஜி மன்றங்களை தாக்கி மதுரையிலே, சென்னையிலே, திருச்சியிலே, காஞ்சியிலே இன்னும் பலயிடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகள். ஆகவே அந்த முறையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11—40.)

நம்முடைய அரசாங்கம் பெண் போலீஸ்காரர்களை நியமித்திருக்கிறது. பெண் போலீஸ்காரர்களைப் பொறுத்தவரையிலே, உடைகளை பொறுத்தவரையிலே மாற்றங்கள் செய்யலாம் என்று நான் அரசுக்குச் சொல்லிக் கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்துவிட்டதாகச் சொல்கிறார்கள், நன்றி.

அதைப் போலவே, டிரெயினிங். பெண் போலீசாரைப் பொறுத்த அளவிலே ஆண்களுக்குக் கொடுக்கப்படுகிற அதே டிரெயினிங் இவர்களுக்கும் கொடுக்கப்படுவதாக நான் கேள்விப்படுகிறேன். பெண்களுக்காக தனியான டிரெயினிங், அவர்களுடைய உடலமைப்புக்கேற்ற வகையிலே, நம்முடைய நாகரீகத்திற்கு, பண்பாட்டிற்கு ஏற்றவகையிலே டிரெயினிங் கொடுக்க வேண்டும்.

பெண் காவலர்களைப் பொறுத்தவரையிலே, சாலை ஓரத்திலே, டிராபிக் சிக்னல் பணிதான் அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்றில்லை. அவர்களுக்கேற்ற வரவேற்பாளர்களாக, டைப்பிஸ்ட்களாக, டெலிபோன் ஆப்பரேட்டர்களாக, மருத்துவ மனைகளிலே இருப்பவர்களாக, திருவிழாக்களிலே கூட்டத்தைச் சீர் செய்கின்றவர்களாக, இன்னும் வேலைக்குச் செல்கின்றவர்களுடைய குழந்தைகளைப் பாதுகாப்பவர்களாக, இது போன்ற பணிகளுக்கெல்லாம் பெண் போலீஸ்காரர்களை நியமனம் செய்யலாம் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சிதம்பரத்திலே கூட ஒரு நிகழ்ச்சி : இன்றைக்கு பெண் போலீஸ்காரர்கள், ஆண் பொலீஸ்கார்களுடைய கண்காணிப்பிலே இருக்கிற காரணத்தாலே, சிதம்பரத்திலே 20 பெண் போலீஸ்காரர்கள், தாங்கள் இருந்த ஹாஸ்டலின் 6 ஆண் போலீஸ்அதிகாரிகளின் தொல்லையைப்பொறுக்கமுடியாமல், அதை காலி செய்துவிட்டதாகக்கூட எனக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. ஆகவே, பெண் போலீஸ் கான்ஸ்டபிள்களை, பெண் போலீஸ் அதிகாரிகளுடைய கண்காணிப்பிலே, அவர்களின் கீழ் பணியாற்றுவதற்கான முறையினை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, காவல் துறை அமைச்சுப் பணியாளர்கள் பல்வேறுகோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். கடந்த ஆண்டு இந்த மானியக் கோரிக்கையிலே பேசும்பொழுது நான் சொன்னேன், அவர்களுக்கு வேலைப் பளு அதிகமாக இருக்கிற காரணத்தாலே ஏறத்தாழ 900 பதவிகள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 200 பதவிகளைச் சென்ற ஆண்டு அறிவித்தார்கள் என்று நான் நினைவுபடுத்துகிறேன். மீதமிருக்கிற 700 பதவிகளை அவர்களுக்கு வழங்கிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வீடு கட்டும் திட்டத்தை இந்தக் காவல் துறையிலே இருக்கிற அமைச்சுப் பணியாளர்களுக்கு விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாட்டில் சுதந்திரத்தைப் காப்பது ராணுவமாக இருக்கிறது; மக்களுடைய உயிரினையும் உடைமையையும் காப்பது போலீஸாக இருக்கிற காரணத்தாலே, அந்தப் போலீஸ் சுதந்திரமாகச் செயலாற்றுவதற்கு அரசு அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீயணைப்புத் துறையைப் பற்றி ஒரு வார்த்தை. இன்றைக்கு தீயணைப்பு நிலையங்கள் தமிழகத்திலே இருந்தாலும்கூட, தீயணைப்புத் துறையிலே இருக்கிற வண்டிகள் எல்லாம் பழைய காலத்து வண்டிகளாகவே இருக்கின்றன. ஆகவே, தீயணைப்புகளைத் தீவிரமாக்குகின்ற வகையிலே, விரைவாக அணைக்கின்ற முறையிலே, புதிய வண்டிகளாக வாங்க வேண்டும். இன்னும் தேவையான வண்டிகள் இல்லை. அதிலேயும்கூட, தண்ணீர் நிறைந்த வண்டிகளாக பல்வேறு இடங்களிலே இல்லை என்ற விவரங்கள் எல்லாம் என்னிடம் இருக்கின்றன. ஆகவே, அந்தத் துறையைப் புதுப்பிக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.



தீயணைப்புத் துறையிலே இருக்கிற அதிகாரிகளுக்கு ஸ்டேஷன் பையர் ஆபீசர்களுக்கு மாதம் ரூ. 400 தான் சம்பளமாகக் கொடுப்பதாக நான் கேள்விப்படுகிறேன். காவல் துறையிலே இருக்கிற சப் இன்ஸ்பெக்டர்களுக்குக் கொடுக்கப்படுவதைப் போல் ரூ. 450-ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு அரசாங்கம் கொடுத்த கொள்கைவிளக்கக்குறிப்பிலே, தமிழகத்திலே 16 இடங்களிலே தீயணைப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்படும் என்று குறிப்பிட்டு, இரண்டாவதாக திருமங்கலம் பெயர் இருந்தது, நான் கூட திருமங்கலத்திலே சொல்லி, இந்த அரசுக்கு நன்றி சொல்லி, இந்த ஆண்டிலே, திருமங்கலத்திலேயே, தீயணைப்பு நிலையம் வரும் என்று நம்பியிருந்தேன். ஆனால், இந்த ஆண்டுக் கொள்கை விளக்கக் குறிப்பைப் பார்க்கிறேன். எந்த இரண்டாவது இடத்திலே சென்ற ஆண்டு திருமங்கலம் இருந்ததோ, அந்த இரண்டாவது இடத்திலே, அப்படியே அழியாமல் இருக்கிறது, இந்த ஆண்டும். 16, 19 ஆகக்கூடியிருக்கிறது. ஆக, 16-லே ஆரம்பித்து, ஏதாவது குறைந்திருக்குமா என்று பார்த்தேன். 16, 19ஆகக் குட்டிப்போட்டுவிட்டது.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாக முதலமைச்சரைக் கேட்டுக் கொள்வதெல்லாம், திருமங்கலம் வளர்ந்து வருகிற நகரமாக இருந்து வருகிற காரணத்தாலே, அந்தப் பகுதியில் தொழில் பேட்டைகள் ஏற்படுகிற காரணத்தாலே, திருமங்கலத்திலே தீயணைப்பு நிலையம் ஒன்றை ஆரம்பிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்குக் கூட நிலம் வாங்குவதற்கான முயற்சியிலே அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது என்று கூட அரசுத் தரப்பில் சொல்லலாம். திருமங்கலத்திலேஒரு வாரச்சந்தையிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் கூட கடந்த தேர்தலிலே அந்தச் சந்தையிலேயிருந்து பேசினார்கள். நிறைய இடம் காலியாக இருக்கிறது. உடனடியாக, அங்கு நிலையத்தை ஆரம்பிக்க இடம் இருக்கிறது என்று சொல்லி, முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலேயே ஆரம்பிப்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சின்ன சேலம் சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவராமன் ஒரு கோரிக்கை கொடுத்திருக்கிறார். கள்ளக்குறிச்சித் தீயணைப்பு நிலையத்திலே இருக்கிற வாகனம் பழுதடைந்த வாகனமாக இருப்பதால், ஓராண்டுக்காலமாக அது செயல்படவில்லை. அங்கு பல கிராமங்கள் தீ விபத்துக்குள்ளாகியிருக்கின்றன. எனவே, பழுதடைந்த வாகனத்தைச் சீர் செய்ய வேண்டும் அல்லது புதிய வாகனத்தை வாங்கவேண்டும். அந்த முயற்சியிலே அரசாங்கம் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அந்த அளவிலே என்னுடைய உரையை நிறைவாக்கிக் கொள்கிறேன். ஜெய் ஹிந்த்.

**திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, 1983-84 ஆம் ஆண்டிற்கான காவல் துறை குறித்த மானியத்தை முதலமைச்சரவர்கள் இந்த மாமன்றத்திலே வைத்திருக்கிறார்கள். அதிலே என்னுடைய கட்சியின் சார்பில் நான் சில கருத்துக்களை வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஏற்கனவே, சென்ற வாரமே இந்த மானியக் கோரிக்கையின் மீது விவாதம் நடைபெற்று முடிந்திருக்க வேண்டும். ஆனால் அதற்கு ஒரு இடைவெளி கொடுத்து, மீண்டும் இன்றைக்கு இந்த விவாதம் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. போலிஸ் மானியத்திலே மற்ற நண்பர்கள் என்ன பேசினார்கள் என்பது பல பேருக்கு மறந்து போய்விட்டது. தொடர் கதை எழுதுகின்றவர்கள் முன் கதைச் சுருக்கம் எழுதுவதைப்போல, சென்ற வாரம் என்னென்ன பேசினார்கள் என்ற ஒரு குறிப்பையும் கையிலே கொடுத்திருக்கலாம். ஆனால் இந்த ஆண்டு மட்டும் திடீரென்று ஏற்பட்ட ஒரு விபத்து அல்ல இது. என்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே ஏறி உட்கார்ந்ததோ அன்றையிலிருந்தே போலீஸ் இலாக்காவினுடைய விவாதங்கள் இப்படித் தள்ளிப் போடப்பட்டுக் கொண்டிருப்பது வாடிக்கையாகிப் போய்விட்டது. இருந்தாலும் சொல்ல வேண்டிய கருத்துக்களை நண்பர்கள் பலர் இங்கே எடுத்துக் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சியிலே இருக்கின்ற உறுப்பினர்கள் பேசுகின்ற பொழுது, போலீஸ் இலாக்கா எப்படி நெறி கெட்டு, தறி கெட்டு ஓடியிருக்கிறது. குறிப்பாக எதிர்க் கட்சிகளை எப்படிப் பழி வாங்கியிருக்கிறது; எப்படி அது நல்லமுறையில் செயல்படவில்லை என்பதற்கான காரண காரிய விளக்கங்களை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

ஆளுங்கட்சியிலே இருக்கின்றவர்கள், அந்தக் கட்சியிலே இருக்கின்ற காரணத்தினாலே, போலீஸ் இலாக்கா இந்த ஆட்சியிலே இருப்பதைப்போல வேறு எந்த ஆட்சியிலேயும் இருந்தது கிடையாது; உலகத்திலேயே சிறந்த போலீஸ் என்று சொல்லப்படுகின்ற ஸ்காட்லாந்து போலீசுக்கு அடுத்தது தமிழ் நாடு போலீஸ்தான்; இதற்கு ஈடு இல்லை, எடுப்பில்லை என்றெல்லாம் அதற்குப் புகழாரங்களைச் சூட்டி மகிழ்ந்திருக்கிறார்கள். எனக்கொன்றும், தமிழ் நாட்டுப் போலீஸ் ரொம்ப மோசம் என்று சொல்ல வேண்டுமென்ற விருப்பம் இல்லை. அதற்கு ஒரு காலம் இருந்தது. தமிழ்நாட்டு போலீஸ் உலகத்திலேயே சிறந்த போலீஸ் என்று எண்ணக்கூடிய வரிசையிலே இரண்டாவது இடத்தைப் பெற்றிருந்த காலம் ஒன்று உண்டு. அதற்காக, இன்டர்போலிலே கூட நம்முடைய முன்னாள் ஐ. ஜி. அருள் அவர்கள் வைஸ் சேர்மனாகப் பதவி வகிக்கக் கூடிய அளவிற்குப் பெருமை பெற்றிருந்தது. ஆனால், அவையெல்லாம் பொய்யாய், பழங் கதையாய்ப் போனதுவே என்கிற அளவிற்கு, அதெல்லாம் once upon a time என்கிற அளவிற்கு, gone are that golden days என்பதைப்போல அந்த நல்ல கனவுகளெல்லாம் போய் விட்டன.

இன்றைக்கு இந்த இலாக்கா உள்நாட்டிலே மட்டும், தமிழ் நாட்டிலே மட்டும் தன்னுடைய கெட்ட பெயரை வாங்கவில்லை. இந்தியத் துணைக்கண்டத்திற்கு மட்டுமல்ல; அகில உலகத்திலே இன்றைக்குத் தமிழ் நாட்டுப் போலீஸ் இலாக்கா மிக மோசமான போலீஸ் இலாக்கா என்ற கெட்ட பெயரை வாங்கி வைத்திருக்கிறது. உங்களுக்கு நான் பல்வேறு விளக்கங்களைச் சொல்ல முடியும்.



சமீபத்திலே, Indian Express பத்திரிகையிலே, ஒரு கட்டுரை வந்திருக்கிறது. Amnesty inter-national Liberty அது வெளியிட்டிருக்கிறது. inter-national liberty என்பது சர்வ தேச அரங்கிலே இயங்குகின்ற ஒரு ஸ்தாபனம். அது எந்தெந்த நாட்டிலே யார் யார் கொடுமைப் படுத்துகிறார்கள்; ஆட்சிப் பீடத்திலே ஏறி உட்கார்ந்து விடுகின்றவர்கள் எதிர்த்துக் கருத்துக்களைச் சொல்லுகின்றவர்களெல்லாம் எப்படிக் கொன்று குவித்திருக்கிறார்கள். என்ற வரலாற்றை உலகத்திலே இஸ்ரேல் நாட்டிலே ஆரம்பித்து, கம்பூச்சியாவிற்குப் போய், சிசிலிக்குப் போய், இப்படிப் பல்வேறு நாடுகளிலே எப்படி அந்த அராஜகம் நடந்தது என்பதைக் குறிப்பிட்டு விட்டு, கடைசியாக, இந்தியத் துணைக் கண்டத்தின் பக்கம் அதன் பார்வை திரும்புகிறது. அப்படித் திரும்புகின்றபொழுது அது சொல்கிறது; in a chapter headed "the encounter killing in India" the report stated that since 1953 killing the left wing exermists while encounters with the police or while trying to escape has been reported from 8 of the 22 Indian States, viz Andhra Pradesh, West Bengal and more recently an AIADMK Government, from Tamil Nadu are worst violated in perspect, The report castigated for the failure of the State Government to pursue the enquiry and take measures to prevent the State encounter killings and suggested that the Central Government should set up an Independent Judicial Mechanism. என்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அதனால், இப்படி என்கவுண்டர் என்ற தீயரியைப் பயன்படுத்தி மக்களைக் கொன்று குவிப்பதில், இந்தியாவிலே தமிழ்நாட்டிலே அந்த வேலை அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று, தமிழ் நாட்டிற்கு மட்டுமல்ல ; அகில இந்தியாவிலேயே அகில உலகிலே தலை குனிய வைத்த பெருமை உடையது இன்றைய போலீஸ் இலாக்கா ; அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியின் கையிலே இருக்கின்ற போலீஸ் இலாக்கா என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிலே இன்னும்கூட ரொம்ப அழகாகச் சொல்கிறார்கள். எப்படி அந்த நாடுகளிலேயெல்லாம் தனக்கு எதிராகக் கருத்துக்களைச் சொல்பவர்களை அடித்து நொறுக்குவார்கள், கொன்று குவிப்பார்கள் என்பதற்கு கம்பூச்சியாவிலே பின் பற்றுகின்ற வழி என்ன தெரியுமா ?

For want of better identification those who are in spectacles were often labelled as intellectual and killed கண்ணாடி போட்டவனெல்லாம் அறிவாளி என்று சொல்லி கொன்றுவிடுவார்களாம் அந்த நாட்டிலே. எப்படி, நம் ஊரிலே பச்சைத் துண்டு போட்டவனெல்லாம் விவசாய சங்கத்தைச் சேர்ந்தவன என்று திருச்சியிலே அடித்தார்களோ அந்த மாதிரி. சேம் மெதேட். கொஞ்சம் மாற்றி மாற்றி வைத்திருக்கிறார்கள்.

எனவே, சர்வ தேச அரங்கிலே ஒரு அவப் பெயரைத் தேடி வைத்ததற்காக, இந்தியாவைக் கொண்டு போய் தலை குனிய வைத்ததற்காக, Non-alignment countries மாநாடு ஒன்றை நடத்தி, உலகத்திலே நாங்கள் சிறந்தவர்கள் என்று இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பேசிக் கொண்டிருக்கின்ற நேரத்திலே, அகில உலக அரங்கிலே கம்பூச்சியாவிற்கும், இஸ்ரேலுக்கும் ஈடாக நம்முடைய தமிழ்நாட்டை வைத்திருக்கிறதே, தலை குனிய வைத்திருக்கிறதே இந்தப் போலீஸ் இலாகா என்று என்னுடைய கண்டனத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சரி இன்டர் நேஷனல் லெவலிலே எப்படித் தலை குனிய வைத்தது என்பதற்காகச் சொல்கிறேன்.

(முற்பகல் 11-50)

உள்நாட்டிலே எப்படி இந்த போலீஸ் இலாகா செயல்படுகிறது, இங்கே எப்படி அது நடந்து கொள்கிறது. மொராலிட்டி கெட்டு எப்படி நடக்கிறது என்பதற்கு பல்வேறு காரணங்களை இங்கே சுட்டிக்காட்ட முடியும். அதற்கும் ஒரு இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையை தான் என்னுடைய வாதத்திற்கு எடுத்துக்கொள்கிறேன். இந்த போலீஸ் இலாகா எப்படி இருக்கிறது என்பதற்கு அவர்கள் ஒரு ஆர்ட்டிகிள் எழுதியிருக்கிறார்கள். அதில் முதலிலே கூறுகிறார்கள். The Tamil Nadu can boast of at least half a dozen Officers of D.I.G men who are without someweakness or other. இவ்வளவு பெரிய போலீஸ் இலாகாவிலே ஒரு அரை டஜன் டி.ஐ.ஜி.கள் தான் தப்பு, தண்டா இல்லாமல் இருக்கிறார்கள். இந்த மாதிரி தப்பு, தண்டா, கரப்ஷன் இல்லாமல் ஒரு அரை டஜன் டி.ஐ.ஜி.கள் இருக்கிறார்கள் என்று சொன்னால், இந்தப் போலீஸ் இலாகா எப்படி புரையோடிப் போயிருக்கிறது என்பதற்கு, இதை விட வேறு என்ன எடுத்துக் காட்டு வேண்டும். அதுமட்டுமல்ல கடைசியாகச் சொல்லியிருக்கிறார்கள் Above all the determined political will is necessary to set right things 'பொலிடிகல்வில்' தேவை, ஒரு ஸ்டெபிலிட்டி தேவை. யாரிடத்தில் ஆளுகின்ற கட்சியிடத்திலே, இலாகாவை கையில் ஏந்தியிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இடத்திலே போலீஸ்இலாகா மேலும் புரையோடிப் போகாமல், தடுத்து நிறுத்த, அதில் ஒரு ஸ்டெடி மைண்டெட்னெஸ் இல்லாமல் தேவை—என்று அந்தப் பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது. இது ஒரு பத்திரிகை ஆதாரம்.

இரண்டாவது சமீபத்தில் நம்முடைய ராமமூர்த்தி தலைமையிலே திருநெல்வேலி மாவட்டத்திற்கு ஒரு விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டது. அவர்களுடைய ரிப்போர்ட்டில் சொல்கிறார்கள்—இந்தப் போலீஸ் இலாகா நடந்து கொள்கிறதைப் பற்றி சொல்கிறார்கள்—நீதிபதி ராமமூர்த்தி எப்படிப்பட்டவர்கள் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. அவர்கள் சொல்கிறார்கள்—நேர்மையான காவல்துறை அதிகாரி ஒருவரால்



உரியவாறு புலன் விசாரணை செய்திருந்தால், சாத்தான்குளத்திலே முடிவு வேறு விதமாக அமைந்திருக்கும். காவல் துறை அதிகாரி உரியவாறு விசாரித்திருந்தால், தொடர்புடைய முக்கியமான, நேர்மையான சம்பவங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும்.

திசயன்விளை காவல் நிலையத்தில் உள்ள காவல்துறை அதிகாரிகள் அனைவரும் திறமையற்றவர்கள், கோழைகள், என்றும், ஒரு வகுப்பினரின் கட்டளையின் பேரில் அவர்களிடம் உடந்தையாக இருந்து, செயல்பட்டு வந்தனர் என்றும் நான் நம்புகிறேன் என்று நீதிபதி சொல்கிறார்கள். திசயன்விளைக் காவல் நிலையத்தில் அத்தகைய ஒரு அவலநிலை தொடர்ந்து நடந்து வருவது, பெருத்த அவமானமாகும்.

அதுமட்டுமல்ல. வள்ளியூர் காவல்துறை உதவி சூப்பிரண்டென்டு அலுவலகம் இன்றைக்குச் சளைத்ததல்ல. கள்ளத்தனமாகச் சாராயம் வடித்து, இறக்குவது பெரிய அளவில் நடைபெற்று வருவது என்பது இந்தக் கிராமத்திலே நான் சென்று பார்வையிட்டபோது தெரியவந்தது. கவனமின்மைக் காரணமாக இவ்வளவும் நடைபெற்று வருகிறது. இக்கிராமத்திற்குப் பலமுறை நான் சென்று வந்த போது, பல இடங்களில் சாராயம் வடித்து, இறக்கப்படுவதை நான் கண்டேன். காவல்துறையினர் கவனமாக நடவடிக்கை எடுத்து, கள்ளத்தனமாகச் சாராயம் வடித்து, இறக்குவதை, இன்றைக்கு அடிக்கடி திடீர் சோதனைகள் மேற்கொள்ள வேண்டுமென்று அன்று நம்முடைய நீதிபதி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது ஒரு சான்று, இந்தப் போலீஸ் இலாகா எப்படிச் செயலற்றுப் போய் இருக்கிறது. கள்ளச் சாராயம் வியாபாரத்திற்கு உடந்தையாக இருக்கிறது என்பதற்கு நீங்கள் அமைத்த நீதிபதிகளே இதற்கு சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார்கள்.

அடுத்து, இன்னொன்று.—போலீஸ் இலாகா நெறி கெட்டுப் போய் விட்டது என்பதற்காக—மதுரையிலே தார்குண்டேவை அடித்த சம்பவம் அகில இந்தியா முழுவதும் கொண்டு போய்க் காட்டியது. அவர் ஒரு முன்னாள் நீதிபதி, இந்நாள் சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு பெரிய வழக்கறிஞர். போலீஸ் இடத்திலே பர்மிஷன் வாங்கி, மௌன ஊர்வலம் நடத்தியிருக்கிறார்கள். அந்த மௌன ஊர்வலத்திலே அடித்து, நொறுக்கி கண்ணாடி விழுந்துக் கடைசியில் காவல் நிலையத்தில் தள்ளிய பிறகு, நம்முடைய முதலமைச்சர், ஹோம் செக்ரட்ரியை அனுப்பி மன்னிப்பு கேட்கச் சொல்கிறார்கள். மன்னிப்பு கேட்டால் மட்டும் முடியுமா? சுப்ரீம் கோர்ட்டிலேயிருந்து டைரக்‌ஷன் கொடுக்கிறார்கள். வாட் ஹேப்பண்டு தேர்? அதே போல பாராளுமன்றத்திலே கேட்டார்கள். இந்தியா முழுவதும் கண்டனம் தெரிவித்தது. போலீஸ் இலாகா இந்த அரசிற்கு தலைகுனிவு ஏற்படுத்தியிருப்பதற்கு தார்குண்டேயின் நிகழ்ச்சியும் ஒரு காரணம் என்று சொல்கிறேன்.

அதுமட்டுமல்ல., வடாற்காடு, தர்மபுரி மாவட்டங்களில் இது நடத்தியிருக்கின்ற ஒரு பெரிய போலீஸ் பார்பரீசம் என்று சொல்கிறார்களே, காட்டுமிராண்டித் தன்மையாக எத்தனை பத்திரிகைகள், எத்தனை விளம்பரங்கள், எத்தனை பொதுமக்களுடைய நிறுவனங்கள்; இதிலே நம்பிக்கை கொண்டவர்கள் இன்றைக்குக் கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட அசோசியேஷன்களையெல்லாம் அங்கே சென்று பார்த்து, என்ன நிலைமை என்று கண்டறிந்து, இன்றைக்கு இண்டர் நேஷனல் அளவிற்கு அந்த ரிப்போர்ட்டை அனுப்பியிருக்கிறார்கள். இதில் ராமச்சந்திரன் தலைமையில், சுரேந்திர மோகன் எம்.பி., மிசஸ் மிர்லான் குரே, சுவாமி அந்துலே, கண்ணப்பன் ஆகியோரைக் கொண்ட குழு, இந்த மாவட்டங்களிலே தொடர்ந்து இன்னும், எவ்வளவு போலீஸ் அட்டுழியங்கள் நடைபெற்றிருக்கின்றன, மனித உரிமைகளுக்குப் புறம்பான செயல்களை எப்படிச் செய்திருக்கிறார்கள் என்ற விவரங்களை யெல்லாம் சேகரித்து, அவர்கள் ஒரு ரிப்போர்ட்டை சமீபத்தில் தந்திருக்கிறார்கள். அகிலம் முழுவதும் ரிப்போர்ட் செல்லுகிறது. எனவே அகிலம் முழுவதும் இந்த போலீஸ் துறையினுடைய அட்டூழியங்கள், அக்கிரமங்கள், அடக்குமுறைகள், காட்டு மிராண்டித்தனமாக நடந்து கொள்கிற அந்த பார்பேரியனிசம் அகில உலத்திற்கே எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கிறது. இவ்வளவையும் செய்து வைத்திருக்கிற இந்த போலீஸ் இலாக்கா, இதுவரையிலே எந்த விதமான ஒரு நற்பெயரையும் உங்களுக்கு ஈட்டித்தரவில்லை என்று நான் சொல்லவிரும்புகிறேன். இன்டர்னல், அண்ட் எக்ஸ்டர்னல், ஆகிய இரண்டு இடங்களிலேயும் இந்த அவப்பெயரை பெற்ற காரணத்தாலேதான் அகில உலகத்திலே நம்முடைய போலீஸ் இலாக்கா ஸ்காட்லாந்து யார்ட்டுக்கு அடுத்தப்படி என்று இருந்த போலீஸ் இலாக்கா கடைசியிலே வந்து நிற்கிற நிலைமைகள் இன்று உருவாகியிருக்கிறது. ஏன்? அதைத் தான் இந்தியன் எக்ஸ்பிரஸ் சொல்லுகிறது. Political stab lity and de ermined mind வேண்டும். ஆனால் நீங்களே கொஞ்சம் இந்த போலீஸ் இலாக்காவை ஏவி விடுகீறீர்கள். காவல்துறை உங்களுடைய ஏவல் துறையாக மாற்றப்படுகிறது. எப்படி? சொல்கிறார்கள். inte nat onal amnes y report சொல்லுகிறது. எதிரிகளை அடக்க வேண்டும் என்று இந்த கவர்ன்மென்ட் ஆர்டர் எப்படி போடுமாம். Sometimes the kill ngs are ordered at the h ghest lev l of the Government. என்று கம்பூச்சியாவிலே போடுவார்கள் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அதைக் கொஞ்சம் மாற்றிச் சொல்லுகிறார்கள். எப்படி?
Put down anti–S cial elements with a strong hand without wo rying about the criticism in the press



பிரஸ் என்றால் பத்திரிகை. பத்திரிகை என்ன சொல்கிறது? மக்கள் மன்றம் என்ன சொல்கிறது? சிவில் லிபர்டிஸ் என்ன? சொல்கிறது? சட்டமன்றம் என்ன சொல்கிறது? நீதி அறிந்தவர்கள், நெறி அறிந்தவர்கள் நாட்டு மக்களின் உரிமைகளிலே நம்பிக்கை கொண்டவர்கள், நாணயமான மனிதர்கள், சான்றோர்கள் என்ன சொல்கிறார்கள்? கவலைப் படாதே, பட்டையை உரித்துவிடு, சுட்டுத்தள்ளு என்று, அதைத்தான் With strong hand put down the anti-social clemen s என்று சொல்லுகிறார்கள். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கேட்கலாம். துரைமுருகன் படித்தவர்தானே, ஒரு வார்த்தை ஆன்ட்டி சோசியல் என்று சேர்த்து இருக்கிறோமே. சமுதாய விரோதிகளைத்தானே நாங்கள் அடக்கச் சொல்லியிருக்கிறோம் எனவே என்னைப் பார்த்து மக்களைக் கொன்று குவிக்கின்றவர்களோடு ஒப்பிடுகிறாரே இது முறையா என்று கேட்கலாம். ஆனால் நீங்கள் ஆன்ட்டி சோசியல் எலிமென்ட் என்று இவ்வளவு சொன்னாலே போதும், யார் யாரைப் பிடிக்கவில்லையோ போலீசுக்கு, எல்லோரையும் ஆன்ட்டி சோசியல் எலிமென்ட்லே சேர்த்துவிடுவார்கள். நான் இங்கே முன்னாலே சொன்னதைப் போல நம்முடைய காயல்பட்டினத்திலே 60 வயதான பெரியவர் ஒருவர், ஹாஜிக்குப் போய் வந்தவர், பள்ளிவாசலிலே இருந்த அவரைப் பிடித்து ஜெயிலிலே போட்டு விட்டார்கள், காயல் பட்டினத்திலே திருச்செந்தூர் தேர்தலுக்குப் பிறகு, ஏன் என்று கேட்டால் ஆன்ட்டி சோசியல் எலிமென்ட் என்று சொல்லுகிறார்கள். நீங்கள் கொஞ்சம் கண் ஜாடை காட்டினாலே போதும். அவர்களுக்கு யார் மாமூல் கொடுக்கவில்லையோ, யார் கீழ் படிந்து நடக்கவில்லையோ, யார் சல்யூட் அடிக்கவில்லையோ, யார் அவர்கள் பெண்டாட்டியை சினிமாக் கொட்டகையிலேயிருந்து ரிக்ஷாவிலே வீட்டுக்கு கூட்டிக்கொண்டு வரவில்லையோ, எல்லோரையும் ஆன்ட்டி சோசியல் எலிமென்ட் என்று சொல்லுவார்கள். தன்னுடைய மனைவியே சினிமாக் கொட்டகையிலேயிருந்து ரிக்ஷாவிலே வீட்டிற்குக் கொண்டுவரமாட்டேன் என்று கலவையிலே சொன்ன ஒரு ரிக்ஷாக்காரன், இன்று அவனை அடித்துக் கொன்று, செத்து விட்டான் என்று அந்த மாதிரி நிலைமை உருவாகிக் கொண்டு இருக்கிறது. எனவே நீங்கள் தான் அதற்குக் காரணம். போலீஸ் இலாக்கா ஒரு நெறிக்கெட்டு ஓடுகிற குதிரை மாதிரி. அதனுடைய கடிவாளத்தை கையில் எடுத்து அதை நிறுத்த வேண்டும். அந்தக் கடிவாளத்தை மிகச் ஜாக்கிரதையாக இழுத்துப் பிடிக்க வேண்டும், அந்த இலாக்காவை கையிலே வைத்து இருப்பவர்கள். அது அடிக்கடி திமிறிக் கொண்டுதான் ஓடும். ஏன் என்றால் நீண்ட நாட்களாக இருக்கிறது பிரிட்டிஷ்காரர்களுடைய ஏவல் படையாக இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக இப்போது மாடர்னைஸ் பண்ணிக் கொண்டு வருகிறோம். இருந்தாலும் அது திமிரும். அதற்கு என்ன செய்யவேண்டும். அடிக்கடி லகானை இழுத்துப் பிடித்து, பக்கு பக்கு என்று அதைப் பக்கத்திலே இழுக்க வேண்டும். குதிரை

ஒட்டுவது நம்முடைய முதல் அமைச்சருக்குத் தெரியும். எந்த முறையோடு ஓட்ட வேண்டும் என்று, அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்பார்கள். இந்த மன்றத்திலே கேள்வி நேரத்திலே 2 கேள்விகளாவது போலீஸ் இலாக்காவைப் பற்றி வந்து தீர வேண்டும். அப்போதுதான் நாங்கள் கேள்வி கேட்போம், உடனே நீங்கள் அவர்களைக் கேட்கலாம். இப்படி எங்களை மன்றத்திலே துளைத்து எடுக்கிறார்களே நியாயமா என்று நீங்கள் கேட்டால், மன்ற உறுப்பினர்கள் கேட்பார்களே, முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டுமே, மாட்டிக் கொள்வோமே என்ற பயம் அவர்களுக்கு இருக்கும். அவர்களுக்கு இது தீபாவளி மாதிரி வருஷாவருஷம் ஒரு நாள் போலீஸ் இலாக்கா மானியம் வருகிறது. அதற்குப் பிறகு நாங்கள் சொன்ன உடனே நீங்கள் ஆவன செய்யப்படும், யாராக இருந்தாலும் சட்டத்தின் பிடியிலே இருந்து தப்ப முடியாது, இது அண்ணா தி.மு.க. வின் அரசு என்று நீங்கள் சொல்லிவிடுவீர்கள். உங்கள் பின்னாலே இருப்பவர்கள் கை தட்டிவிடுவார்கள், பத்திரிகையிலே முதல் அமைச்சர் எடுத்த உறுதி என்று போட்டு விடுவார்கள். அடுத்த வருஷம் முதல் அமைச்சர் இப்படி சொன்னாரே, செய்தார்களா, இப்படிச் சொன்னாரே, செய்தார்களா என்று நாங்கள் படித்து முடிப்பதற்குள், அரை மணி நேரம் ஆகி விடும், அதற்குள் பெல் அடித்து விடுவீர்கள். இன்றைக்கு நீங்கள் அடிக்கமாட்டீர்கள். ஆகவே என்ன நிலைமை? ஆண்டுக்கு ஒரு முறை வருகிற தீபாவளி மாதிரி போலீஸ் இலாக்காவினுடைய மானியம் வருகிறது. போலீஸ் இலாக்காவினுடைய கேள்விகள் சட்டமன்றத்திலே வருவதில்லை. இதனால் முதல் அமைச்சருக்கே கூட ஒரு கெட்ட பெயர். கேள்வி நேரத்திலே வராத முதல் அமைச்சர், கேள்விகளுக்கு பதில் சொல்லாத முதல் அமைச்சர் இந்திய துணைக் கண்டத்திலே நம்முடைய தமிழ்நாட்டு முதல் அமைச்சர் என்ற அவப் பெயர் உங்களுக்கு வருகிறது. இது நியாயம் தானா? எனவே முதல் அமைச்சர் அவர்கள் இன்று முதல் ஒரு சபதத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். என்னுடைய தம்பி துரைமுருகன் சொல்லியிருக்கிறார். நாளைக்கு நான் கேள்வி நேரத்திற்கு வருவேன். பதில் சொல்வேன் என்று சொன்னால், உங்களுக்கும் பெருமை, சொன்னதற்கு எனக்கும் பெருமை இருக்கும் என்று சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன்.



(நண்பகல் 12—00).

இங்கே கூட சொன்னார்கள்; ஆன்ட்டி-சோசியல் எலிமென்ட்ஸ் இருக்கிறார்கள். அவர்கள் மீது நாங்கள் நடவடிக்கை எடுத்தால் என்ன தவறு என்று சொல்கிறார்கள். ஆன்ட்டி சோசியல் எலிமென்ட்ஸ் என்று யாரை வேண்டுமானாலும் தேர்ந்தெடுத்து, இவர்கள் எல்லாம் அரசாங்கத்திற்கு எதிர்ப்பாக இருந்தார்கள்; இவர்கள் ராஜதுரோகம் செய்தார்கள் என்று 124 (ஏ) போட்டு, அவர்கள் மீது வழக்குத்' தொடுத்து விடுவதா? அதற்கும் எனக்கு இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை தான் கை கொடுக்கிறது. 13—8—1982-ல் சுமார் 40 கியு பிராஞ்ச் சேர்ந்த சி.ஐ.டி. போலீசார் சதானந்த மேனன் என்ற பத்திரிகையாளர் வீட்டையும், சந்திரலேகா என்கிற பரதநாட்டியக்காரி வீட்டையும் ரெய்டு செய்கிறார்கள். சோதனை வாரண்ட் இருப்பதாகக் கூறினார்களே தவிர அதை யாரிடத்திலும் காட்டவும் இல்லை, படிக்கவும் இல்லை. அந்த வீட்டில் உள்ள எல்லாப்பகுதிகளையும் சோதனையிட்டார்கள். ஏதோ பயங்கர குற்றவாளி அந்த வீட்டில் பதுங்கியிருப்பதைப்போல், அந்த வீட்டை ரெய்டு செய்தார்கள். போலீஸ்காரர்கள் ரெய்ட் செய்கிறார்கள் என்றால் அந்த வீடு எப்படி இருக்கும் என்பது நமக்குத் தெரியும். அந்த அளவிற்கு அவர்கள் அராஜகத்தோடு நடந்து கொண்டார்கள். பிறகு அவர்கள் கோர்ட்டுக்குப் போய் இருக்கிறார்கள். அங்கே வழக்கு நடைபெறுகிறது. அந்த வழக்கு தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நேரத்தில், திடீரென்று ஒரு நாள் அந்த வழக்கை நாங்கள் வாபஸ் வாங்கிக் கொள்கிறோம் என்று கோர்ட்டிலே போலீசார் கவுன்டர் அபிடெவிட் கொடுத்து இருக்கிறார்கள். அது பற்றி இந்தியன் எக்ஸ்பிரஸ் ஒரு கட்டுரை எழுதி இருக்கிறது.

"How free–Are we"

என்ற தலைப்பிட்டு ஒரு அழகான கட்டுரை எழுதியிருக்கிறார்கள். தாங்களும் அதைப் படிக்கவேண்டும். அதிலே அவர்கள் சொல்கிறார்கள்.

The case took a sudden and interesting turn as the hearing was nearing its final stage.The Police filed and additional counter affidavit stating that following an analysis of the interrogation, they were dropping all the proceedings against the petitioner and wanted that the writ petition be dismissed as infructuous.

நான் கேட்கிறேன், இவ்வளவு காலம் பொறுத்து கிட்டத்தட்ட 6 மாத காலம் அவர்களை இழுத்து அடித்து, 28 முறை, 38 முறை போலீஸ் ஸ்டேசனுக்கு காலையிலும், சாயங்காலத்திலும் வரவழைத்து, உட்காரவைத்து, அவர்களைக்

கொடுமைப்படுத்தி, நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளில் அவர்கள் ஏறியபிறகு, அந்த வழக்கு உச்சக்கட்டத்தை அடைகின்ற நேரத்தில் திடீரென்று இப்படி கவுண்டர்-அபிடெவிட் போட்டு நாங்கள் அதை வாபஸ் வாங்கிக் கொள் கிறோம் என்று சொன்னார்கள் என்றால், எதற்காக இப்படி செய்தார்கள்? அதையும் அந்தப் பத்திரிகையிலே சுட்டிக் காட்டியிருக்கிறது ஏனென்று கேட்டால்

Commenting that this was a wise and diplomatic action, a visibly relieved Justice V. Ramaswami, said

அப்போதுதான் சொல்கிறார், 'ஒயிஸ்லாக' புத்திசாலித்தனமாக இந்தக் காரியத்தை இந்தப்போலீஸ் இப்போது செய்து இருக்கிறது என்று நீதிபதி கூறுகிறார். ஏன்? அந்த வழக்கு தொடர்ந்து நடைபெற்றால் நீதிமன்றத்தின் கண்டனத்திற்கு ஆளாகவேண்டுமென்று கருதியதன் விளைவாக அதை வாபஸ் வாங்கிக்கொண்டார்கள். 124 ஐ.பி.சி. போடுவது என்பது சாதாரணமா? அது எவ்வளவு பெரிய செக்ஷன்? அந்த செக்ஷனைப்போட்டு, இந்த அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்று சொல்லி ஒரு தனி மனிதனின் 'பண்டமென்டல் ரைட்ஸை' முடக்கிவிட்டதற்குப் பிறகு நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளில் ஏறி வழக்குப் போட்டபிறகு அந்த வழக்கை வாபஸ்வாங்கிக் கொள்கிறோம் என்று சொன்னால் அது போலீஸ் இலாக்காவின் கையாலாகாதத் தனத்திற்கு சான்றாக இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். இப்படி நடைபெற்ற சம்பவத்திற்கு யார் பொறுப்பு? அந்த கியு பிராஞ்ச்சை தண்டிப்பதற்கு உரிமை உண்டா? ஒரு தனி மனிதனை காலையில் இருந்து மாலை வரையில் போலீஸ் நிலையத்தில் உட்கார வைத்து, அடக்கி வைத்திருந்தார்களே அதற்கு யார் பொறுப்பு? முதலமைச்சர் நடவடிக்கை எடுக்கத் தயாரா? யார் அந்த போலீஸ்காரர்கள்? கியு பிராஞ்ச் யாருடைய தலைமையில் போனது? கியு பிராஞ்ச் யாருடைய தலைமையில் போனதோ அந்த அதிகாரியை சஸ்பெண்ட் செய்யத் தயாரா? 6 மாதகாலம், அவர்கள் நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளில் ஏறி அலைக்கப்பட்டு இருக்கிறார்களே அதற்கு யார் பொறுப்பு? 124 போடுவது உங்களுக்கு எப்படி இருக்கிறது என்றால், "சிதம்பரத்து வேந்தனுக்கு பொழுதுபோக்கு—ஆனால் நமக்கோ உயிரின் வாதை" என்றான் பாரதிதாசன்.

அப்படி 124 போடுவது போலீஸ் இலாக்காவுக்கு பொழுபோக்கு சித்ரவதை படுவது இந்த நாட்டின் தனி மனிதன் ஏழை எளியவர்களில் எத்தனையோ ஏழைகள் மீது இன்றைக்கு 124 போட்டு இருக்கிறீர்கள். ஆனால் இன்னும் சார்ஜ் ஷீட் கொடுக்கவில்லை, நான் அவர்கள் பெயர்களையெல்லாம் சொல்கிறேன்.





பி. வி. நரசிம்மன், அக்டோபர் 10, 1980; 124 பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார். ஆனால் இன்னும் சார்ஜ்ஷீட் கொடுக்கவில்லை. அதேபோல், விந்திய வேந்தன், ஜனவரி 11, 1982 தருமபுரியில் 124 (ஏ) கீழ் கைது செய்யப்படுகிறார். இன்று வரையில் அவர் மீது சார்ஜ்ஷீட் கொடுக்கவில்லை. கண்ணன், ஜூனியர் அசிஸ்டெண்ட், அவர் மீது 124 (ஏ) 6—11—1982 அன்று போடுகிறார்கள். இன்று வரையில், சார்ஜ் ஷீட் கொடுக்கவில்லை. நந்தகுமார் செகன்டரி கிரேடு டீச்சர், மேல்பட்டி வில்லேஜ், குடியாத்தம் தாலுக்கா. வடாற்காடு மாவட்டம், மார்ச மாதம் 29-ம் தேதி 124 (ஏ) போடுகிறார்கள். இன்று வரையில் சார்ஜ் ஷீட் போடவில்லை குறிச்சிலம்பட்டி ஆறுமுகம் என்ற 13 வயது பையன் பேரில் 124 (ஏ) போட்டு இருக்கிறார்கள். துணைச்சபாநாயகர் அவர்களே, நீங்கள் சட்டம் படித்தவர், உங்களுக்குத் தெரியும், 124 (ஏ) போடுவது என்று சொன்னால், எவ்வளவு பெரிய ப்ரொடக்ஷன் எடுக்கவேண்டும். காந்தி பேரிலே, நேரு பேரிலே அந்தக் காலத்தில் ராஜதுவேஷம் என்று வழக்குப்போட்டார்கள். இந்த 13 வயது பையன் மேலே போடுகிறார்கள். ஆனால் இன்றுவரை இரண்டாண்டு காலம் ஆனபிறகும் சார்ஜ்ஷீட் கொடுக்கவில்லை. அதைப்போல சதாசிவம், ஆன் ஆக்டிவிஸ்ட் ஆஃப் ரேடிகல் யூத். அவர் மேலே மே மாதம் 6-ந்தேதி 1982-லே 124-ஏ போடுகிறார்கள். இன்றுவரையில் சார்ஜ்ஷீட் கொடுக்கவில்லை. இளங்கோவன், அம்பேத்கார்நகர், கிருஷ்ணகிரி who is the Secretary of Dharmapuri District radical Students. UNION அவர் மேலே ஜூலை 10-ந்தேதி 1982-ல் 124-ஏ போடுகிறார்கள். இன்றுவரையில் சார்ஜ்ஷீட் கொடுக்கவில்லை. அதைப்போன்று, காவேரி கவுண்டர்.

Yelagiri village is physically deformed. He has only a stump for an arm அவர் ஒரு நொண்டி கையிலே கட்டை வைத்து நடக்கிறார். அவர் மீது 124-ஏ போடுகிறார்கள், இன்று வரையில் சார்ஜ் ஷீட் கொடுக்கவில்லை இப்படிகிட்டத்தட்ட வடாற்காடு, தர்மபுரி மாவட்டங்களில் மட்டும் 125 பேர்கள் மீது 124-ஏ போடுகிறார்கள். 124-ஏ 125 பேர்கள் மீது ஒன்று கூடி விட்டது. இப்படி வழக்குகளைப் போட்டிருக்கிறார்களே, அதிலே நியாயமான நடவடிக்கை எடுத்ததுண்டா? அவர்கள் என்ன செய்கிறார்கள்? ஆசிரியர் மீது வழக்கு, சஸ்பெண்ட் வேலைகெட்டு வீட்டுக்குப் போகிறார். அவருக்கு சம்பளமும், கெட்டு, எல்லாம் கெட்டு, வாடிக் கொண்டிருக்கிறார். போலீஸ் இலாகாவில் இத்தகைய அராஜகப் போக்கு, மனிதாபிமானத் தன்மைக்கு அப்பாற்பட்ட மிருக வெறி இருக்கிறது என்றால் அதைக் கண்டிக்க வேண்டாமா ?

அது மட்டுமல்ல. பொய் வழக்குப் போடுகிறார்கள். யார் பொய் வழக்குப் போடுகிறாரோ அவரை நீங்கள் ஆதரிக்கிறீர்கள் வரவேற்கிறீர்கள். உங்களுக்குத் தெரியும், தர்மபுரி மாவட்டத்திலே ஜீவகன் என்பவர் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் தேதி கைது செய்யப்படுகிறார். ஆனால் கோர்ட்டில்

கொண்டு வந்து நிறுத்தியது செப்டம்பர் 29 ஆம் தேதி. இந்த இடைப்பட்ட காலத்தில் அவரைப் பிடித்து, அடைத்து, அடித்து, அடக்கி, ஆறுகால பூஜை தினமும் நடந்திருக்கும். எல்லாம் நடந்து முடிந்த பிறகு கோர்ட்டுக்குப் போனார்கள். கோர்ட்டில் நீதிபதி சொல்கிறார், It is patently clear that there was an illegal and unauthorised aetention of J:evaken in Police custody. Indeed itis deplorable and heart-rending to note that the police in the present casehad adopted a coercive method in disregard end flagrant breach of the provisions of he Constitution as well as the General Law and taken the law in their own hands, using theirmighty power and without the least respect for the individual's right guaranteed under the Constitution. It might be that D.W.I. being overzealous in enforcing the law had over-stepped his limits as a police Officer. The fact remains that he had by exercise of his vast power in an arbitrary and capricious manner successfully infringed the fundamental right guaranteed to the detenu under the Constitution. That exhibited a total lack of respect for the law. என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்வளவு சொல்லியிருக்கிறார்கள். சொல்லப்பட்டவர் யார்? அந்த பி. டபிள்யூ 1 யார்? அவர்தான் காவேரிப்பட்டினம் இன்ஸ்பெக்டர் வெள்ளையன். சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டார். தன் இச்சையாகச் செயல்பட்டார். சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு காட்டு மிராண்டித் தனமாக நடந்துக் கொண்டார்; போலீஸ் அதிகாரிக்குள்ள அருகதை இல்லாதவர் என்று நீதிபதியால் கண்டனம் செய்யப்பட்ட இன்ஸ்பெக்டர் வெள்ளையன். ஆனால் முதலமைச்சர் என்ன சொல்கிறார் தெரியுமா? This Inspector has shown boldness and hence, deserves Chief Minister's medal. என்று சொல்லி, உடனே சீப் மினிஸ்டர் மெடலை தருகிறார்கள். என்ன ஆகும்? நீதிபதி, இவ்வளவு கொடுமையாக, காட்டுமிராண்டித்தனமாக போலீஸ்இன்ஸ்பெக்டர் நடந்து கொண்டார் என்று கண்டனம் தெரிவிக்கிறார். ஆனால் நீங்கள் தங்கப்பதக்கத்தை மார்பிலே அணிவிக்கிறீர்கள். இப்படி இருந்தால்கோர்ட் என்ன கோர்ட். நீதிபதி என்ன நீதிபதி, நீதிஎன்ன நீதி. இப்படி எல்லாம் செய்தால் முதலமைச்சர் தங்கப் பதக்கம் கிடைக்கும், பின்னால் வாழ்வு சிறக்கும் என்று எண்ணத் தோன்றாதா? இப்படிப்பட்ட காரியங்களில் இறங்க போலீஸ் இலாகாவுக்கு துணிவு வருமா? வராதா என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. காவல்துறை மானியத்தில் பொதுவாக அளிக்கப்பட்டிருக்கிற கொள்கைக் குறிப்பிலே ஏற்கெனவே பிடிபட்ட சம்பவங்களைச் சுட்டிக் காட்டுவது முறை என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் நீண்ட காலமாக அந்த வழக்குகள் என்னவாயிற்று என்று தெரியாமல் இருக்கிற வழக்குகளை இந்த காவல்துறை மானியத்தில் நீங்கள் சுட்டிக்காட்டியிருக்க வேண்டும்



(பிற்பகல் 12-10)

எத்தனையோ வழக்குகள், கேட்டால் கர்ண பரம்பரை கதையாகப் போய்விட்டது. இந்திரா நகர் பிரேமா கொலை வழக்கு என்ன ஆயிற்று? இதுவரையில் தெரியாது. தஞ்சை மாவட்டத்திலே வெங்கடாஜலம் என்கிற பொது உடமைக் கட்சித் தோழர்—அவரைக் கொன்றவர் யார்? அவர் வாழ்கின்றாரா? இல்லையா நேதாஜிசுபாஷ்சந்திரபோஸ் இருக்கின்றாரா இல்லையா என்று சொல்லுங்கள் என்று கேட்பது போல, வெங்கடாஜலத்தைக் கொன்றவர் இருக்கின்றாரா இல்லையா என்று தெரியாது. மதுரையில் கழகத் தோழர், பாலன் இளஞ்செழியனைக் கொலை செய்தார்கள். அந்தக் கொலையாளிகள் என்ன ஆனார்கள்? தூக்கிலே தொங்கினார்களா இல்லையா? யாம் அறியோம் பராபரமே. அ.தி.மு.க. தொண்டர், காண்டிராக்டர் குண்டலூர் தண்டபாணி கொலை செய்யப்பட்டார். அதற்கான ஆதாரங்களை எடுத்து அடுக்கடுக்காக கலைஞர் அவர்கள் இதே மன்றத்திலே கூறினார்கள். முதலமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். ஆண்டுகள் ஆனதே தவிர கண்ட பலன் ஒன்றில்லை காண்.**

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சினை இன்றும் வழக்கு மன்றத்திலே முடியாமல் இருக்கிறது என்பது தெரியும். அது பற்றி பேசுவது சரியல்ல என்பது என்னுடைய கருத்து. உங்களுடைய தீர்ப்பு தேவை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தப் பிரச்சினை வழக்கு மன்றத்திலே பெண்டிங்காக இருப்பதினால், அது குறித்து அவைக் குறிப்பில் இருக்க வேண்டாம் என்று உத்தரவு இடுகிறேன்.

**திரு. துரைமுருகன்:** அது என்ன ஆச்சு என்று கேட்டேனே தவிர வேறு ஒன்றும் கிடையாது.**

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, **
ஆகவே, அதுபற்றி இப்படிச் சொல்வது அந்த வழக்குக்கு சரியானதல்ல என்றுதான் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்:** நான் ஏற்கெனவே சொல்லி விட்டேன். ஆகவே, இதையும் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சார்ஜ் ஷீட் போடப்பட்டிருக்கிறது. * * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தயவு செய்து நான் சொல்வதை ஒரு நிமிடம் கேளுங்கள். கோர்ட்டிலே கேஸ் நடந்துக் கொண்டிருக்கிறது. அப்போது சாட்சியங்களை அழைத்து விசாரிப்பார்கள். அந்த சார்ஜ் ஷீட் மீது விவாதம் பண்ணப் போகிறார்கள். அதை இங்கேயே பேசி முடிவுக்கு வந்து விட்டால், கோர்ட்டே தேவையில்லாமல் போய் விடும். அந்த சப்ஜெக்ட்டை இங்கே விவாதிப்பதால் அந்த வழக்குக்கு பாதிப்பு ஏற்படும், அதனால் அதனுடைய விவாதம் இங்கே தேவையில்லை. அதை நீக்க உத்தரவிட்டிருக்கிறேன்.

அதனால் அந்த மேட்டரில் டிஸ்கஷன் வேண்டாம். கோர்ட்டிலே (குறுக்கீடு). ** இருப்பதாக நீங்களும் ஒப்புக் கொள்ளுகிறீர்கள். நானும் ஒப்புக் கொள்ளுகிறேன். நமக்குத்தான் விவரம் தெரியுமே. அதனால்அது வேண்டாம்.

**திரு. துரைமுருகன் :** துணைத் தலைவர் அவர்களே அதுபோலவேதிருத்தணியிலே லட்சுமி என்ற ஒரு பெண் கொலை செய்யப்பட்டது குறித்து, விசாரணை எடுக்கப்படும் என்று இதே மாமன்றத்திலே தான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். (குறுக்கீடு) இப்போது வேண்டாம். நான் யீல்டு ஆகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. விஸ்வநாதன் அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கிறார்கள். அப்படி அலவ் பண்ணுவதை நாம் வழக்கமாக வைத்திருக்கிறோம். அவர் எழுந்து சொன்ன பிறகு தான் என்ன பிரச்சினை என்று தெரியும். அதனால் இப்போது அவரைப் பேச அனுமதிக்கிறேன்.

**கோ. திரு. விஸ்வநாதன் :** துணைத் தலைவர் அவர்களே, இந்திரா நகர் கொலை சம்பந்தமாக அருமை நண்பர் துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுபற்றி இங்கே அவையிலே பேசப்பட்ட போது, தலைவர் அவர்களே, ரகுமான்கான் சொல்கிற அந்த ஆதாரங்களைக் கொண்டு வந்து தாருங்கள் என்று சொன்னார். இதுவரையில் தரப்படவில்லை. அது பற்றி என்ன சொல்கிறார்கள் ?

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





**திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, சும்மா இருப்பதற்கு சிலரால் முடிவதில்லை. சிலருக்கு எப்போதும் வெற்றிலை பாக்கு போடவேண்டும். சிலருக்கு சாப்பிட்ட பிறகு பாக்கு போடவேண்டும். அது மாதிரி மந்திரியே இதுபற்றி கேட்கா விட்டாலும், மாண்புமிகு விஸ்வநாதன் அவர்கள் கேட்டு அதற்கு வாய்ப்பு தருகிறார்கள். மகிழ்ச்சி.

அடுத்து, திருத்தணியிலே ஒரு பெண் கொலை செய்யப்பட்டது குறித்து விசாரணை நடத்தப்படும் என்று முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். என்ன ஆயிற்று என்று அவர்கள் தெரிவிக்க வேண்டும். அதேபோல இந்த நாட்டிலே, ஐ.ஏ.எஸ் அதிகாரி நாகராஜன் அவர்கள் வீட்டிலே சென்று அவரைக் கொலை செய்ய முயற்சி செய்தார்கள். அது குறித்து வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இன்று வரையில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. அந்த வழக்கு இது வரையில் என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை.

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் தலைவரான ரவீந்தர், அவருடைய வீட்டிலே 1982-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8-ஆம் நாள் அன்று புகுந்து காரை திருடிக்கொண்டு போய் விட்டார்கள். ரேடியோ, ஸ்டீரியோ மற்றும் இருக்கிறதெல்லாம் போய்விட்டது அத்தோடு. அந்தக் கார் ஓரிடத்திலே நிறுத்தப்பட்டிருந்தது. அந்தக் குற்றவாளியையாவது கண்டு பிடித்தார்களா ? இந்தக் கொலை மற்றவைகளைக் கண்டுபிடிக்காமல்தான் இருக்கிறார்களே, இந்த ரவீந்தர் வீட்டு திருட்டுக் குற்றத்தையாவது கண்டுபிடிக்கக்கூடாதா ?

புரசைவாக்கத்திலே கழகத் தோழர் இராஜேந்திரன் கொலை செய்யப்பட்டார். ஆனால், பெயருக்கு இரண்டு மூன்று அ.தி.மு.க. காரர்களை கைது செய்தார்கள். என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை முதலமைச்சர் அவர்கள் சொன்னால் நலமாக இருக்கும்.

டிசம்பர் மாதத்தில் வாணியம்பாடி அருகே சாலையிலே போய்க்கொண்டிருந்தபோது ஒரு கார் மறிக்கப்பட்டு பயங்கரமான கொள்ளை நடந்தது. கார் ட்ரைவர் செத்துப் போனார். குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டார்களா ? இப்படி நடு வழியிலே கொள்ளை அடிப்பது என்பது சர்வசாதாரணமாக ஆகிவிட்டது. எனவே, அதைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அது அப்படியே தொடர்கின்றது. அடுத்து சென்னையிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் மெயில் டிசம்பர் 26-ஆம் தேதி அரக்கோணத்தைத் தாண்டிச் சென்றுகொண்டிருந்தபோது முகமூடி அணிந்த கொள்ளைக்காரர்கள் 50 ஆயிரம் ரூபாய் பெறுமானம் உள்ள நகைகளைக் கொள்ளை அடித்தார்கள். என்ன ஆயிற்று? இதுவரையில் எதுவும் தெரியவில்லை.

திருச்சி, துறையூரிலே, நாகலாபுரம் கிராமத்தைச் சேர்ந்த ராஜகாந்தம் என்ற பாலசேவிகா ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் மத்திய உணவுக் கூடத்திலே வேலை செய்துகொண்டிருந்த இடத்திற்கு ஆளும் கட்சி உறுப்பினர் பார்வையாளராகச் சென்று கையெழுத்துப் போட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். அதற்குச்சில நாட்களுக்குப் பிறகு பஞ்சாயத்து யூனியன் ஊழியர் ஒருவர் மத்திய உணவு நிலையத்திற்கு தஸ்தாவேஜுடன் வரவேண்டும் என்று பணிக்கப்படுகின்றது. ஆனால், அங்கே என்ன நடந்தது? அது விசாரணைக்குரியது. 1982-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11-ஆம் நாள் அன்று அந்த விதவைப் பெண் ராஜினாமா கடிதம் அனுப்புகிறார். ஆனால், அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பிறகு, ஒருமாதம் விடுமுறை கேட்டுத் தன் தந்தை மூலம் கடிதம் கொடுத்து அனுப்புகிறார். அந்த விதவையின் விடுமுறையை வற்புறுத்த வேண்டாம் என்று அந்த விதவையின் அப்பாவிடத்திலே சொல்லி விடுகிறார்கள். 1982-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14-ஆம் நாள் அன்று அந்த விதவை விஷத்தை அருந்திவிட்டு உயிர்விட்டு விட்டார். அந்த அம்மையாரின் சாவுக்கு அங்கே இருக்கின்ற பிரமுகர்கள் எல்லாம் காரணம் என்று தி.மு.க., இந்திரா காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட், ஜனதா ஆகிய அனைத்து கட்சிகளின் சார்பிலே அங்கே இருக்கின்ற பிரமுகர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், அவர் உடந்தையாக இருந்தார் என்று சொல்லப்பட்டது. எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? 1980-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28-ஆம் தேதி பத்திரிகையிலே ஒரு செய்தி வந்தது. ஆம்னி பஸ் பற்றிய ஊழல். 6 உதவி போலீஸ் கண்காணிப்பாளர், 14 இன்ஸ்பெக்டர்கள், 71 சப்-இன்ஸ்பெக்டர்கள், 11 உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள், 13 தலைமைக் காவலர்கள், 35 காவலர்கள் ஆக மொத்தம் 177. 11 ஆர்.டீ.ஓக்கள், 62 மோட்டார் வெஹிக்கிள் இன்ஸ்பெக்டர்கள், 11 கமிஷனர்கள் என்ற வகையிலே 84 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதாகச் செய்தி வந்தது. ஆனால், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால் அருமைச் சகோதரர் சுந்தரராஜ் அவர்கள் அது என்னவாயிற்று என்று கேட்டார். அப்போது முதலமைச்சர் குறுக்கிட்டுச் சொன்னார்கள். முதலமைச்சரின் பேச்சை அப்படியே படிக்கிறேன்.'' அந்த வழக்கைத் திரும்பப் பெறவில்லை, யாராவது அதிகாரியை தற்காலிகப் பதவி நீக்கம் செய்தால் 6 மாதத்திற்குள் வழக்கு நடைபெற வேண்டும், முடித்துவிட வேண்டும் என்ற கருத்து மத்திய அரசிடமிருந்து அனுப்பப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில் அதற்குமேல் அவர்களைப் பதவி நீக்கம் தற்காலிகமாகச் செய்யக்கூடாது என்கின்ற வகையில் அவர்களுக்குப் பதவி அளிக்கப்பட்டிருக்கின்றதே தவிர வழக்கு நடைபெறுகின்றது. விசாரணை நடந்துகொண்டிருக்கின்றது. அந்த வழக்கு முடிந்து விட்டால் நிச்சயம் அவர்கள் மீது வழக்கு தொடரப்படும்'' என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 1981-ஆம் ஆண்டு மேத் திங்கள் 7-ஆம் நாள் அன்று இதே மன்றத்திலே கூறினார்கள். அரசாங்க ஊழியர்களை சஸ்பென்ட் செய்தால் 6 மாதத்திற்குள் வழக்கை முடிக்க வேண்டும். இல்லாவிட்டால் வேலை தர வேண்டும் என்று சொல்கிறீர்களே நான் கேட்கிறேன்; இந்த நியதி, இந்த மத்திய அரசின்,



கருத்து இந்த ஆம்னி பஸ் ஊழலிலே சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டும்தானா? பால் கமிஷன் ரிப்போர்ட் வெளியானது தொடர்பாக ஒரு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு கலைஞர் அவர்களின் நேர்முக உதவியாளர் திரு. சண்முகநாதனை நீங்கள் சஸ்பென்ட் செய்தீர்கள். ஆண்டுகள் எத்தனை ஆயிற்று? அங்கே இந்தச் சட்டம் ஏன் பாயவில்லை? திரு. சதாசிவம் என்ற ஒரு அதிகாரியை மொழிபெயர்ப்புத்துறையிலே இருந்து சஸ்பென்ட் செய்தீர்களே, 6 மாதத்திற்குள்ள அப்படி சஸ்பென்ட் செய்யப்பட்டவர்கள் மீது சாட்சி போட்டு நிறுத்த வேண்டும், வழக்கை முடிக்க வேண்டும், இல்லாவிட்டால் அவர்களை எல்லாம் வேலைக்கு சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று இதே மன்றத்திலே இதே முதலமைச்சர் 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 7-ஆம் நாள் அன்று சொல்கிறார். அந்த நியதி அந்த நியாயம், அந்தத் தர்மம், அந்த மத்திய அரசினுடைய உத்தரவு பாவப்பட்ட ஜன்மங்களான சதாசிவம், சண்முகநாதன் ஆகியோருக்கு கிடையாதா? ஒரு கண்ணிலே வெண்ணையும், ஒரு கண்ணிலே சுண்ணாம்பும் வைத்துப் பார்க்கிறீர்கள். வேண்டியவர்களுக்கு ஒன்று, வேண்டாதவர்களுக்கு ஒன்று என்று செயல்படுகிறீர்கள். உங்களுடைய அபிலாஷைகளுக்கு ஏற்ற வகையிலே பயன்படுத்தப் பார்க்கிறீர்கள். இதே அவையிலேதான் கடந்த ஆண்டு கலைஞர் அவர்கள் பேசினார்கள், மாலா என்ற பெண்ணைப் பற்றி.

(பிற்பகல் 12-20)

திண்டுக்கல்லைச் சேர்ந்த அந்தப்பெண் சென்னையில் கொலைச் செய்யப்பட்டது குறித்துப் பேசப்பட்டது. முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்களே எடுக்கப்பட்டு இருக்கிறதா? இதுவரையில் எந்தத் தாக்கீதும் கிடையாது. தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் மட்டும் அல்ல இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் ஒரு பரப்பரப்பான ஒரு கேஸ் நடைபெற்றது. அது ஈரோட்டைச் சேர்ந்த சாமிக்கண்ணுவின் மகள் நாகம்மாள். அந்த அம்மையாரை திருப்பூர் அரசு கலைக் கல்லூரியில் அப்போது அங்கே கணித பேராசிரியராக வேலைப் பார்த்து வந்த முனியப்பன் என்பவரால் கொலை செய்யப்பட்டதாகத்தான் இது வரையில் தகவல். தலைவர் அவர்களே, இது குறித்து எத்தனையோ மனுக்கள் அந்த பெண்ணினுடைய அப்பா எழுதியிருக்கிறார். போலீசாரிடம் முறையிட்டு இருக்கிறார். நம்முடைய சுசீலா கோபால் அவர்களுக்குக்கூட தாக்கீது அனுப்பப்பட்டது. அவர்களும் அதை இங்கே அனுப்பினார். நம்முடைய முதலமைச்சருடைய பி.ஏ., அவர்கள் சுசீலா கோபாலன் அவர்களுக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடிதம் எழுதினார்கள். பெண் உரிமைச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இது குறித்து திருப்பூர் சென்று விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களும் பாப்பா உமாநாத் அவர்களும்கூட இதிலே ஈடுபட்டு இதிலே நியாயம் வழங்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இவ்வளவும் செய்த பிறகும்கூட இதுவரையில் வரதட்சணை கொடுமையால் பெண்ணின் வீட்டிலிருந்து மேலும் வரதட்சணையாக பணம் பிடுங்க வேண்டும்

என்ற பண ஆசையால் ஒரு கட்டிய மனைவியை கொலை செய்து இருக்கிறான் என்றால் இதன் மீது இந்த அரசு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்று தெரிந்து கொள்ள விழைகிறேன். இந்த அரசுக்கு நான் முன்னால்சொன்னதைப்போல் ஒரு 'ஸ்டேடி மைண்டு' ஒரு ஆசிலேஷன் இல்லாத ஒரு மைண்டு' உங்களுக்கு தேவை என்று குறிப்பிட்டேன். உங்களுக்கு நித்தம் அதுதான் இருக்கிறது. ஒரு நாளைக்கு சொல்வவார்கள் 10 ஆயிரம் போலீஸ் எடுப்போம் என்று. எடுத்தார்களா ? கிடையாது. இன்றைக்கு என்ன செய்தார்கள். அவனுடைய எஸ்.எஸ்.எல்.சி. சர்டிபிகேட்டை வாங்கி கையில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். படித்தவன் என்ன செய்தான். வேலைக்கு வேலையும் கிடைக்கவில்லை. சர்ட்டிபிகேட்டும் கிடைக்கவில்லை. உடும்பு பிடிக்கப் போனவன் உடும்பு கையை விட்டால் போதும் என்ற கதையாக எஸ்.எஸ்.எல்.சி. சர்ட்டிபிகேட்டை கொடுத்து விடுங்கள் சார் என்று கேட்கும் நிலை இருக்கிறது.

சப்-இன்ஸ்பெக்டர் எடுக்கிறோம் என்று சொன்னார்கள். முதலிலே டி. ஐ. ஜி. எடுப்பார் என்று சொன்னார்கள். தப்பு செய்துவிட்டால் அப்புறம் இராணுவம் வரும் என்றும் மேஜர் வருவார்கள் என்றும் சொன்னார்கள். மறுபடியும் மேஜர் இல்லை அவருடைய உதவி இருப்பார் என்று சொன்னார்கள். மறுபடியும் போலீஸ் துறை மூலம் எடுப்போம் என்று சொன்னார்கள், சர்வீஸ் கமிஷனுக்கு போகும் என்று சொன்னார்கள். ஒரு சப்-இன்ஸ்பெக்டர் எடுப்பதிலே உங்களுக்கு இவ்வளவு 'வேவரிங்' மைண்டு இருந்தால் எப்படி? இந்த போலீஸ் இலாக்கா இருக்கிறதே இது ஆளை மேய்க்கிற இலாகா. உங்களை எப்படியும் கடைசியில் அது மேய்க்கும். சார் அப்படி இல்லை சார், இப்படி இல்லை சார் என்று உருட்டி மிரட்டி காரியங்களை செய்வதில் வல்லது இந்த போலீஸ் இலாக்கா என்பதற்காக நான் இதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டும் அல்ல, போலீஸ் துறையிலே இங்கே கூட அந்த மானியக் கோரிக்கையில் முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால், இது எவ்வளவு தவறான செய்தி என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். போராட்டத்தில் கலந்து கொள்ளாத காவல்துறை வானொலிப் பிரிவினருக்கு ஒரு நிலை ஊதிய உயர் அட்வான்ஸ் இன்கிரிமெண்டு வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். போராட்டம் என்பது தொழிலாளர் வர்க்கத்தினருடைய உரிமைப் பிரச்னையாகும். கடமையை செய்கிறோம் உரிமையைக் கேட்கிறோம் என்ற அந்த உரிமையின் அடிப்படையில் எங்களுக்கு கிடைக்க வேண்டியது கிடைக்கும் வரையில் போராடுவோம் என்று சொல்வது மனித வர்க்கத்திற்கு வழங்கப்படுகிற உரிமை அது. போராட்டம் செய்வது எல்லாம் தவறு என்று சொல்ல முடியுமா ? ஆகையால் இதில் என்ன செய்கிறார்கள், போராட்டத்தில் கலந்துகொள்கிற அந்த தொழிலாளர்களைக் கேட்டால் போராட்டத்தில் யார் கலந்துகொள்ளவில்லையோ அவனை கருங்காலி என்று சொல்வார்கள். ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள் தொழிலாளர் வர்க்கத்தினால் கருங்காலி என்று அழைக்கப்பட்ட அவர்களுக்கு அட்வான்ஸ் இன்கிரிமெண்டு கொடுக்



கிறீர்கள். இது நியாயம் தானா ? தொழிலாளர்களை இரண்டு பிரிவுகளாக பிரித்து இப்படி உருவாக்குவது முறைதானா? போராட்டத்தில் . கலந்து கொண்டவர்கள், போராட்டத்தில் கலந்து கொள்ளாதவர்கள் என்ற இரண்டு ஜாதிகளை பிரித்து உங்களுக்கு அனுசரணையாக இருந்தால் அட்வான்ஸ் இன்கிரிமெண்டு, இல்லாவிட்டால் கிடையாது என்று காட்டியிருக்கிறீர்ககளே. இது வந்து ஒரு பாரபட்சமனப்போக்கு அல்லவா? இது நியாயம் தானா என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன் ?

நீங்களே சொல்கிறீர்கள் போலீசிலே தாங்களாக சங்கம் ஆரம்பிக்க வேண்டும் நானே தருகிறேன் என்று. 'யானேதருவேன் கிரீடம் என்று பரதன் பாடியது போல 'நானே' தருகிறேன் சங்கம் என்று சொல்கிறீர்கள். எனவே அப்படி அமைக்கப்பட்ட சங்கத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு காவல் துறை சார்பு நிலைய அலுவலர் சங்கத்தை சேர்ந்த உதவியாளர் செங்குட்டுவன் என்கிறவர். தலைவர் அவர்களே, அந்த செங்குட்டுவன் 1979 ஆம் ஆண்டு நடைபெற்ற காவல் துறை ஊழியர் போராட்டத்தின் காரணமாக தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்படுகிறார். ஒரு போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு போலீஸ்காரருக்கு 1980 ஆம் ஆண்டு மதுரை தெற்கு மாவட்டத்தில் மீண்டும் அவருக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு வாரம் தான் அங்கே பணியாற்றினார். பிறகு அங்கிருந்து அரக்கோணம் ரயில்வே காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டார். அங்கே ஒரு ஆண்டு காலம் இருந்தார். உடனே 1981 ஆம் ஆண்டு அங்கிருந்து சென்னை சென்டிரல் காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டார். மறுபடியும் 6 மாதத்திற்குள்ளாகவே கோவை காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டார். சாதாரண ஊழியரை 3 ஆண்டு காலத்தில் இத்தனை முறை மாற்றுவது என்றால் இது நியாயம் தானா. ஆனால் உங்களுக்கு வேண்டிய அதிகாரி என்றால் அவர் 3 ஆண்டு காலம் தான் இருக்க வேண்டும் என்று சொன்னாலும் அதே இடத்தில் உட்கார்ந்து இருக்கலாம். நம்முடைய சி.ஐ.டி. டி.ஐ.ஜி.- யாக இருக்கிற மோகன்தாஸ் அவர்கள் யார் மாறினாலும் நீங்கள் என்றைக்கு ஆட்சிக்கு வந்தீர்களோ அன்றையிலிருந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவர் என்ன வேலை செய்கிறார் என்று இந்தியன்எக்ஸ்பிரஸ் பத்திரிகை என்ன சொல்கிறது என்றால் பொதுக்கூட்ட விளம்பரத்தைப் பார்த்து பத்திரிகையைப் பார்த்து செய்தி கொடுக்கிறார் என்று தானே சொல்லியிருக்கிறார்கள். யார் வந்து பெரம்பூர் ரயில் நிலையத்திலே இறங்குகிறார்கள், எப்படி ஏரோடிராமுக்குப் போனார், எப்படி அவருக்கே ஒரு டிக்கட் வாங்கி வைக்கப்பட்டிருந்தது ? எப்படி போலீஸ்காரர்களே மாலை போட்டு படம் எடுத்தார்கள் ?இந்த விவகாரம் எல்லாம் சி.ஐ.டி. டி.ஐ.ஜி.-க்குத் தெரியாது, கமிஷனர் ஆப் போலீஸுக்கு தெரிந்த அளவுக்கு, என்ன தெரிகிறது, இவரை முந்திவிட்டார் அவர். எனவே அப்படிப்பட்ட அரசியல் காரணத்திற்காக கூட அவர் தேவை இல்லாமல் அதே பதவியில் உட்கார்ந்துகொண்டிருக்கிறாரே, இது நியாயம் தானா ? இன்னொருவர், சக்திவேல் என்பவர் 30—10—1982 அன்று சென்னை நகர ஆணைக்காப்பகத்திலிருந்து காவல்தலைமையகத்திற்கு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றுகிறார்கள், அங்கே ஒரு மாத காலம்தான், பிறகு அங்கேயிருந்து மீண்டும் சென்னை நகர காவல் நிலையம், கட்டுப்பாடு அறைக்கு மாற்றம்

அதற்கு பிறகு ஒரு வார காலம் பதவி, மீண்டும் பழைய இடத்திற்கு மாறுதல், மீண்டும் மாறுதல் இப்படி பந்தாடப்படுகிற நிலைமை தேவையா என்று தெரிந்துகொள்ள நான் ஆசைப்படுகிறேன். அது மட்டுமல்ல, நான் முன்னால் குறிப்பிட்டதைப் போல் போலீஸ் கூப்பிடுகிறான் என்றாலே வாய்க்கரிசியை வாங்கி வாயில் போட்டுக் கொண்டுதான் போகிறான், ஒரே அடி திரும்பி வருவதில்லை. கேட்டால் சொல்கிறார்கள். அவர் தற்கொலை செய்து கொண்டார், எப்படி செய்துகொண்டார்? வேட்டியைக் கிழித்து கயிறாக திரித்து கழுத்திலே கட்டி, கம்பியிலே கட்டி கீழே படுத்துக்கொண்டான், 5— அடி உயரமுள்ள ஆள் 5 அடியிலே எப்படி தூக்குப் போட்டுக்கொண்டிருப்பான் என்றால் காலை மடக்கிக் கொண்டு தொங்கிட்டான் சார் என்கிறார்கள். என்ன சார் நியாயம் இது. போலீஸ் இலாகா இன்றைக்கு யமன் எருமைக்கடா மேலே வருவான், போலீஸ் இலாகா வேனிலே வருகிறான், யம தூதர்களாக வருகிறார்கள் நியாயம்தானா? இப்படி போலீஸ் இலாகாவை நீங்கள் வளர்ப்பது முறைதானா? கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் தமிழ்நாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்களாலும், பெரியார் அவர்களாலும்—அது ஒரு மனிதாபிமான உணர்வு—சூத்திரன் என்ற நிலை மாற வேண்டும் என்பதற்காக உழைத்து இந்த மண் பகுத்தறிவுக்கும் சுயமரியாதைக்கும் பக்குவப்பட்டிருக்கக்கூடிய மண், பெரியார் அவர்களாலும் அண்ணா அவர்களாலும். இன்றைக்குத்தான் இந்த இலாகாவிலே பிற்பட்டவர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் தலைதூக்குகிறார்கள். இந்த இலாகாவில் ஹோம் செகரட்டரியாக ஒருவரையும் டி.ஜி.பி. பிரிவினரையும் ஒரே குலத்திலே பிறந்தவர்களாக உட்கார வைத்திருக்கிறீர்களே, கீழே இருக்கிறவர்கள் என்ன ஆவார்கள்? கதிகலங்கிக்கொண்டிருக்கிறார்கள். எனவே அதிலே மாற்றம் வேண்டும் என்று கேட்டு ஒன்றே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்., நான் முதலமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டுமென்று கேட்கமாட்டேன், ஒன்றைச் சொல்கிறேன், போலீஸ் இலாகா மறுபடியும் செம்மையாக இயங்க வேண்டுமானால்

i r qu s Hon n C i f Minit

சீப்மினிஸ்டரைக் கேட்டுக்கொள்கிறேன், தயவுசெய்து இந்த இலாகாவை யாராவது வேறு ஒரு மந்திரியிடத்திலே ஒப்படையுங்கள், அப்போதுதான் இந்த இலாகாவுக்கும் உங்களுக்கும் நல்ல பெயர், நாட்டுக்கும் நல்ல பெயர் என்று கூறி விடைபெறுகிறேன், நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: காவல் துறை மீது பதிலுரை 20—4—1983 அன்று தொடங்கும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 18—4—1983 அன்று காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12-28 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(6) பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

1(9) 1. மாவட்ட நிர்வாகம் குறித்த மதிப்பீட்டுக் குழுவின் பத்தொன்பதாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited. Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited. Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1. Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
Palaniappa Bros., Tiruchirappalli-2.
S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-13.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B.B. Ganguli Street, Calcutta-17.

© TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 15TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

வெளியீடு 17–11–1983] [Issued 17-11-1983

(12) 2719
31 மார் 1984

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

திங்கட்கிழமை ஏப்ரல் 18, 1983—தொகுதி L எண் 2

Monday 18th April 1983—Volume L No. 2

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை–600 009

Legislative Assembly Department, Fort St. George
Madras-600009

விலை ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 Paise

உள்ளடக்கம்.

18—4 1983


பக்கங்கள்

இரங்கல் குறிப்பு :

முன்னாள் உறுப்பினர் திரு. எஸ். பரமானந்த ராயர் மறைவு. 93

வினாக்கள்—விடைகள் :

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 94—120

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

தகவல் கோரல் :

(அ) பத்திரிகைச் செய்திகள் 120

(ஆ) வினாக்களுக்கு விடையளித்தல் 120

(இ) உறுப்பினர்கள் விடுதி பாதுகாப்பு 121

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள். 121—123

அறிவிப்புகள் :

(அ) மதிப்பீட்டுக் குழு—உறுப்பினர்கள் தேர்தல் 123—124

(ஆ) பொதுக் கணக்குக் குழு—உறுப்பினர்கள் தேர்தல். 124—125

(இ) பொது நிறுவனங்கள் குழு—உறுப்பினர்கள் தேர்தல் 125

(ஈ) பேரவை அலுவல். 212—214

கவன ஈர்ப்பு :

திருவில்லிப்புத்தூர் ஊராட்சி ஒன்றியக் கட்டிடம் இடிந்து விழுந்தது குறித்து. 126—127

அறிக்கைகள் அளித்தல் :

(அ) உரிமைக் குழு 128

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக்குழு. 128

7. வரவு–செலவுத் திட்டம் 1983-84 வாக்கெடுப்பு (தொடர்ச்சி) 128—215

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் :

(அ) கோரிக்கை எண். 24—தொழில்கள்

(ஆ) கோரிக்கை எண். 50–தொழில் வளர்ச்சி குறித்தமூலதனச் செலவு—தொடர்ச்சி. 215—216

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு 176—212

திரு. ஏ. சி. சண்முகம் 128—135

திரு. இரா. கருப்பையா 135—144

திரு. வே. இரா. ஜெயராமன் 145—150

திரு. ப. நெடுமாறன் 150—160

திரு. இ. முத்துராமலிங்கம்.. 160—162

திரு. துரைமுருகன் 162—176

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை 1983 ஏப்ரல் 18

சித்திரை 5, ருத்ரோத்காரி, திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல் ''

செய்கின்றவனுடைய தன்மையை ஆராய்ந்து, செயலின் தன்மையையும் ஆராய்ந்து, தக்க காலத்தோடு பொருந்துமாறு உணர்ந்து செய்விக்க வேண்டும்.

## 1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. எஸ். பரமானந்தம் ராயர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. எஸ். பரமானந்த ராயர் அவர்கள் 5-12–1982-ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். பரமானந்த ராயர் 1946-ஆம் ஆண்டிலிருந்து 1952-ஆம் ஆண்டு வரை தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரம் பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். இவர் விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கேற்று சிறை தண்டனை அனுபவித்த தியாகி. ஆதி திராவிடப் பெருமக்களின் ஆலயப் பிரவேசத்திற்காகப் பாடுபட்டவர்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்).*

## 2. வினாக்கள்— விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**கூடுதல் விற்பனை வரியை ரத்து செய்யக்கோரி தமிழ்நாடு வர்த்தக சபையினர் விடுத்த வேண்டுகோள்**

* வினா எண் 184—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கூடுதல் விற்பனை வரியை ரத்து செய்யவேண்டுமென்ற தமிழ்நாடு வர்த்தக சபையினர் வேண்டுகோள் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: கூடுதல் விற்பனை வரியை ரத்து செய்வதாக அரசிற்கு நோக்கமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களில் கூடுதல் விற்பனை வரி எவ்வளவு போடப்படுகிறது ? இந்த கூடுதல் விற்பனை வரியை ரத்து செய்வதால் அரசிற்கு எவ்வளவு நட்டம் ஏற்படும் ? இந்த வரியினால் இப்போது அரசிற்கு எவ்வளவு வருமானம் வருகிறது ? என்பனவற்றை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கூடுதல் விற்பனை வரி நமது மாநிலத்தில் ரூபாய் 3 இலட்சத்திலிருந்து ரூபாய் 5 இலட்சம் வரை 0.4 சதவீதம் போடப்படுகிறது. ரூபாய் 5 இலட்சத்திலிருந்து ரூபாய் 7 இலட்சம் வரை 0.5 சதவிதம் போடப்படுகிறது. ரூபாய் 7 இலட்சத்திலிருந்து ரூபாய் 10 இலட்சம் வரை 0.6 சதவிதம் போடப்படுகிறது. ரூபாய் 10 இலட்சத்திற்கு மேலே 0.7 சதவீதம் போடப்படுகிறது. நாம் கூடுதல் வரி போட ஆரம்பிப்பதே ரூபாய் 3 இலட்சத்திலிருந்து தான். ஆனால் அண்டை மாநிலங்களை எடுத்துக் கொண்டால், கர்நாடகா மாநிலத்தில் ரூபாய் 1½ இலட்சத்திலிருந்தே அவர்கள் வரி போட ஆரம்பிக்கின்றார்கள். நாம் ரூபாய் 3 இலட்சத்திலிருந்து ரூபாய் 5 இலட்சம் வரை 0.4 சதவீதம் கூடுதல் வரி விதிக்கிறோம் என்றால், அவர்கள் 1½ இலட்சத்திற்கே 0.5 சதவீதம் போடுகிறார்கள். ஆந்திரா மாநிலத்தில் ரூபாய் 3 இலட்சத்திலிருந்து 0.5 சதவீதம் கூடுதல் வரி போடுகிறார்கள். கேரளாவில் இந்த வரியை வசூலிப்பதில்லை. இந்த வரியை தள்ளுவோமானால் ஆண்டிற்கு ரூபாய் 36, 37 கோடி வரை நட்டம் ஏற்படும். ஆகவே கோரிக்கையை ஏற்பதற்கில்லை.



திரு. இரா தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசிற்கு வரவேண்டிய வருமானத்தை வரிஏய்ப்பு செய்பவர்களை, அரசை ஏமாற்றுகிறவர்களை மிரட்டி வசூல் செய்வது அரசு அதிகாரிகளுக்கு நலமாக இருக்கும். ஆனால் தனது வருவாயை பெருக்குவதற்காக சில அதிகாரிகள் வியாபாரிகளை மிரட்டுகிறார்களே, இதை தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசிற்கு வரி வருகிறபோது, அதை ஏமாற்றுகிறவர்களை கண்டுபிடிப்பதற்காக அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். அது பாராட்டக்கூடியது தான். சில நேரங்களில் அதிகாரிகளில் இந்தத் துறையில் மட்டுமல்லாது எல்லாத் துறைகளிலும் ஏமாற்றுகிறவர்கள் இருக்கின்றார்கள். அவ்வாறு தவறு செய்கிறவர்களை அரசு கவனமாகப் பார்த்து, அப்படி யாராவது தவறு செய்தால் அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கிறது. பல பேர்களைக்கூட அரசு வேலை நீக்கம் செய்திருக்கிறது. தற்காலிக வேலை நீக்கம் செய்திருக்கிறது. இப்படித் தவறு செய்கிறவர்கள் மீது இந்த அரசு மிகக் கடுமையாக நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1982–83 ஆம் ஆண்டிலே விற்பனை வரித் துறையிலே ஒரு உயர்வான வசூல் நடந்திருக்கிறது. ஆகவே, வியாபாரிகளிடத்திலே இன்றைக்குப் பல்வேறுவிதமான விற்பனை வரிகள் கூடுதலாக இருக்கிறது என்ற எண்ணம் இருக்கிறது. அரசு வெகு விரைவிலே இந்தத் தொடர் கூட்டத்திற்குப் பின்னாலே, அவர்களுடைய பிரதிநிதிகளை அழைத்து, இந்த வரிகளை முறைப்படுத்தவும், இந்தத் துறையிலே எவைகளைக் குறைக்க முடியுமோ அவைகளைப் பற்றி ஆலோசிக்கவும், ஒருமைப்படுத்தவும் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நிதித் துறையைச் சரிப்படுத்துவதற்கும், அதிலே சீரழிவு ஏற்படாமல் காப்பாற்றுவதற்கும், அதே நேரத்தில் வியாபாரிகளும் மற்ற தொழிலகங்களும் தங்களுடைய வருவாயை அதிகப்படுத்துவதற்கும், அவர்களுக்குச் சங்கடம் இல்லாமல் செய்வதற்கும் அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த வரியில் ஒரு பயங்கரமான ஒரு மோசடியான சூழ்நிலை ஏற்படுகின்றது. சமீபத்தில் கூட நீங்கள் பத்திரிக்கையில் பார்த்திருக்கலாம். சிகரெட்டுக்கான டாக்சை ஏமாற்றிய காரணத்தி

னால், கோடிக்கணக்கான ரூபாயை அவர்கள் கபளீகரம் செய்து விட்டார்கள் என்றுகூட பத்திரிக்கையில் செய்தி வந்திருக்கிறது. இப்பொழுது இந்த வரியைப் பொறுத்தவரையில், ஒரு பொருள் எவ்வளவு விலை என்பது, இடத்திற்கு இடம் மாறுகிறது. ஆகவே நெட் பிரைஸ் என்ன என்பதைப் பற்றி எல்லோரும் தெரிந்து கொள்ளக்கூடிய அளவிற்கு, மிக எளிதாகப் புரிந்து கொண்டு, சரியான விலை கொடுத்து வாங்கக்கூடிய அளவுக்கு, அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, விற்பனை வரி மானியக் கோரிக்கை இங்கே வந்தபொழுது, டொபாக்கோ, இன்றைக்கு நம்மிடத்தில் இல்லை, மத்தியப் பேரரசு எடுத்துக் கொண்டது என்பதையும் அவர்கள் சொல்லியபடி போட்டு வரி தரவில்லை என்பதையும் இங்கே விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். இன்றைக்கு டொபாக்கோவில்தான் சிகரெட் வருகிறது. அதிலே வரி ஏய்ப்பு என்கிற பொழுது, வருமான வரி, மற்றவை எல்லாம் வருகின்றன. நாம் அதற்கு விற்பனை வரி போடவில்லையென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி எங்கேயாவது இப்படி தவறு ஏற்பட்டால், அதைக் குறிப்பிட்டுச் சொன்னால், நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

திரு கோவைதம்பி: தலைவர் அவர்களே, இந்த விற்பனை வரியின் மூலம் சிறு தொழில்கள் பாதிக்கப்படுகின்றன என்று சொன்னால், அந்த விற்பனை வரியை ரத்து செய்ய அரசு முன்வருமா ? கோவை மாவட்டத்தில், திருப்பூர் பகுதியில் பனியன் தொழில் மூலம் பல இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய் ஏற்றுமதி மூலம் இன்றைய அரசுக்கும் தமிழகத்திற்கும் சம்பாதித்துக் கொடுக்கக் கூடிய சூழ்நிலையில் ஆயிரக்கணக்கான தொழிற்கூடங்கள் இருக்கின்றன. இந்த விற்பனை வரி காரணமாக, கல்கத்தா மார்க்கெட்டோடு போட்டியிட முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட முக்கிய தொழிலுக்கு அரசு முன் மாதிரி தந்து, விற்பனை வரியை ரத்து செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியிலேயிருந்து ரத்து செய்யக் கூடாது என்று அவர்கள் மறைமுகமாகச் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். சொல்கிறபொழுது, கோடிக்கணக்கான ரூபாயை அரசுக்கு ஈட்டித் தருகிற தொழில் அது என்று சொல்கிறார்கள். கோடிக்கணக்காக ஈட்டித் தருகிற தொழில் என்பதால், அதில் போடுகிற வரியை அறவே எப்படி தள்ள முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால், அவர் சொல்வதால் ஒன்றை இந்த அரசு கவனிக்கத் தயாராக இருக்கிறது. திருப்பூரில் இருக்கிற பனியன் தொழிற்



சாலைகள் மற்ற மாநிலங்களில் இருக்கிற பனியன் தொழிற்சாலைகளோடு போட்டி போடமுடியாத அளவுக்கு சங்கடங்கள் இருந்தால், அந்தச் சங்கடங்களை நீக்குகிற அளவுக்கு அரசு அதைப் பற்றி ஆராயும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### இலவச வீட்டு மனைப் பட்டாக்களுடன் தென்னங்கன்றுகளையும் சேர்த்து வழங்கும் திட்டம்

*வினா 782— திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இலவசமாக வீட்டுமனை பட்டாக்கள் அரசு வழங்கும் போது தென்னங்கன்றும் சேர்த்து வழங்கும் ஆலோசனை அரசுக்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) வீட்டுக்கு ஒரு மரம் என்ற திட்டத்தைத் தீவிரமாக அமல் செய்ய வீட்டு மனைப் பட்டா வழங்கும்போது, வீட்டுமனைப் பெறுவோர் ஒவ்வொருவரும் வீட்டுக்கு ஒரு மரமாவது நட்டு வளர்த்து, பாதுகாத்து வர வேண்டும் என வருவாய்த்துறை எண். 1588, தேதி 14—7—1981-ல் ஒரு அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக, வீட்டு மனைப் பட்டா கொடுக்கிற பொழுதே, தென்னங்கன்றோ மற்றவைகளோ கொடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இதுவரை மாவட்ட வாரியாக எத்தனைத் தென்னங்கன்றுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா ?

(முற்பகல் 9-10).

மாண்புமிகு திரு எஸ் டி சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டவாரியாக எவ்வளவு பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது எனக்குத் தெரியும். அந்தப் பட்டா கொடுத்திருந்தால், அந்தப் பட்டா பெற்றிருந்த எல்லோருக்கும் தென்னங்கன்று கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நடப்பாண்டு டிசம்பர் - ஜனவரி வரை 10,000 வீட்டு மனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 10,000 வீட்டு மனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டவர்களுக்கும் தென்னங்கன்றுகள் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் கொடுக்கப்பட்ட தென்னங் கன்றுகள் எத்தனை என்று என்னிடத்தில் இல்லை. ஆனால் எல்லாவற்றிற்கும் கொடுக்கும்படி உத்தரவு போடப்பட்டுள்ளது. எனக்கு வந்த கணக்குப் படி 1982—83 ஜனவரி

முடிய 10,328 பேருக்கு நிலப் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிக் கொடுக்கப்பட்ட அத்தனை பேருக்கும் தென்னங் கன்றுகள் கொடுத்திருக்க வேண்டும்.

**திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த வீட்டு மனைப் பட்டா வழங்குகிற போது, எந்தெந்த பிரிவினர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது ? மொழிப் போரில் ஈடுபட்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறதா ? இல்லையென்றால், அரசு இதை பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** தலைவரவர்களே, வீட்டு மனைப் பட்டா கொடுப்பது, எப்படியெல்லாம் கொடுக்க வேண்டுமென்று மாநிலத்தில் மட்டும் ஒரு முன் மாதிரியாக வைத்துக் கொள்ளவில்லை. இந்தியா முழுமைக்கும் முன் மாதிரியாக வைத்துக் கொண்டு, வீட்டு மனைப் பட்டா கொடுக்கப்பட்டு வருகிறது. அப்படிக் கொடுக்கிற போது, போரிலே இறந்தவர்கள், ராணுவத்தில் இறந்தவர்கள், ராணுவத்தில் வேலை செய்கிற போது, அவர்களால் தொடர்ந்து பணி புரிய முடியாமல், அவர்களுக்கு சங்கடங்கள் இருக்கும்பொழுது முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. இரண்டாவதாக நிலமற்ற ஆதி திராவிடர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. மூன்றாவதாக சில இடங்களில் இருக்கிறார்களே, அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. நான்காவதாக எல்லைப் பாதுகாப்புப் படையினர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. முன்னாள் எல்லைப் பாதுகாப்புப் படையினருக்குக் கொடுக்கப்படுகிறது. ஐந்தாவதாக பர்மா, ஸ்ரீலங்கா அகதிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. மத்திய அரசினால் தங்கக் கட்டுப்பாடு கொண்டு வந்தபோது, அதனால் வேலை இழந்து கஷ்டப்படும் பொற்கொல்லர்களுக்கும், முன்னாள் கல் உடைப்பவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. ஆனால் மொழிப் போரில் ஈடுபட்டவர்களுக்கு இந்த 'ஆர்டர் ஆப் பிரிவிலெஜ்' எந்த இடத்திலும் இல்லை. மொழிப் போரில் ஈடுபட்டவர்கள் நம்முடைய மாநிலத்தில் தான் இருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசு மொழிப் போரில் ஈடுபட்டவர்களை தியாகம் செய்தவர்களாகக் கருதவில்லை. நம்முடைய அரசு மட்டுமல்ல, இந்தியாவிலே எந்த அரசு வந்தாலும், இதை ஒரு தியாகமாகக் கருதாது. இதைப் பற்றி அரசு 'ஆர்டர் ஆப் பிரிவிலெஜ்' எடுக்க யோசித்து, முடிவு செய்யுமென தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சேலம் மு. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிலமற்றவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குகிற போது, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு, விவசாய நிலங்கள், தரிசு நிலங்களை வழங்கும் போது, காடுகள் அழிக்கப்படுவதன் மூலம், இன்று பருவ மழை பொய்த்து, நாட்டில் வறட்சி ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு, கொடுக்கப்படும் நிலத்தின் பரப்பளவில், 10 சதவிகிதம் மரங்களைக் கட்டாயமாக வளர்க்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவரவர்களே, நிலம் அளிக்கிறபோது, அவர்களுக்கு விவசாயத்திற்குத் தான் நிலம் அளிக்கிறோம். காட்டுப் பகுதியாகக் கொடுப்பதில்லை. அரசுப் புறம்போக்காகத் தான கொடுக்கிறோம். காடு இருந்தால், காட்டுப் புறம்போக்கு, காட்டு நிலம் என்று கொடுப்பதில்லை. விவசாயம் செய்கிறவர்களுக்குக் கொடுக்கிற போது, சில மரங்களைத்தான் அவர்கள் வளர்க்க முடியும். புளிய மரத்தை வளர்த்தால், நெல்லும் விளையாது, வேறு எதுவும் விளையாது. தென்னங் கன்றுகள் , பனை மரங்கள் போன்ற மரங்களை வளர்க்கலாம். இது விவசாயக் குடும்பத்திலிருந்து வந்தால், அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்** : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த வீட்டு மனைப் பட்டாக்களை அரசாங்கம் ஆர்ஜிதம் செய்து, மனைப் பட்டாக்களைக் கொடுக்கிறோம். அப்படிக் கொடுக்கும் போது 10 ஆண்டுகளுக்கு முன்பாக விற்கக் கூடாது என்றிருக்கிறது. அப்படி இருந்தும் சிலர் விற்றுவிடுகிறார்கள். அப்படி விற்கிறவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு வழிவகை செய்யுமா. அதோடு, மிகவும் ஏழைகளாக இருக்கிறவர்கள் இதர ஜாதிகளிலும் இருக்கிறார்கள். நாவிதர்கள், டோபிகள் இன்னும் பின்தங்கிய ஜாதிகளில் உள்ளவர்களுக்கு, அரசாங்கமே பணம்போட்டு, வீட்டுமனைப் பட்டா வாங்கிக் கொடுப்பதற்கு வழிவகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற சட்டப்படி அரசு புறம் போக்குகளை எல்லோருக்கும் கொடுக்கிறோம். ஆதி, திராவிடர்களுக்கு மலை வாசிகளுக்கு கைவினைஞர்களுக்கு, நிலமற்றவர்களுக்கு, அத்தனை பேர்களுக்கும் அரசு நிலங்களை, புறம்போக்கு நிலங்களைக் கொடுக்கிறோம். ஆனால் ஆதி திராவிட மக்களுக்கு மட்டும் ஆர்ஜிதம் செய்து, அவர்களுக்கு நிலம் கொடுக்கிறோம். சில ஆண்டுகளிலே 90 இலட்சம் என்றும், இன்னும் சில ஆண்டுகளில் 1 கோடி, 1¼ கோடி என்றும் பணம் செலவு செய்து நிலங்களை ஆர்ஜிதம் செய்து, புறம் போக்கு இல்லாத நிலங்களைக் கொடுக்கிறோம். மற்ற இடங்களிலே ஆதி திராவிடர்களுக்கும், மலை வாசிகளுக்கும் மற்றவர்களுக்கும் கொடுத்து வருகிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எனது கேள்வியே வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்குகிறபோதே தென்னங் கன்றுகள் வழங்கப்படுகிறதா என்பது கேள்வி. ஆனால் வழங்கப்பட வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் இப்போது ஆகக் கூடிய செலவு வருவாய்த் துறை மூலமாகச் செலவழிக்கப்படுகிறது என்று நினைக்கிறேன். இந்த 10,128 பட்டாக்கள் வழங்கும் போது இதில் தென்னங் கன்றுகள் வழங்குவது சம்பந்தமாக நம்முடைய வருவாய்த் துறைக்கான செலவு எவ்வளவு என்பதை தெரிவிக்க இயலுமா?

[1983 ஏப்ரல் 18

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, என்னிடத்திலே இப்போது கணக்கு இல்லை. ஆனால் வீட்டு மனைப் பட்டா கொடுக்கிற போது தென்னங் கன்றுகளை யும் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்து இருக்கி றோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில இடங்களில் கொடுக்காமல் இருக்கிறார்கள் என்று தெரிவித்து இருக்கிறார்கள். அப்படி எங்கேயாவது கொடுக்க வில்லை என்றால் நடவடிக்கை எடுக்கப்படும். கொடுக்கவேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறோம். கொடுக்க வேண்டும். சில இடத்தில் தவறு நடக்கும். தவறே நடக்காது என்று சொல்ல முடியாது. எவ்வரி திங் இஸ் பர்பெக்ட் என்று யாராலும் சொல்ல முடியாது. அப்படி ஏதாவது இருந்தால் அதைக் கவனத்தில் கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**31-3-1982 வரைநில ஆர்ஜித சட்டத்தின் கீழ்பைசல் ஆகாமலுள்ள வழக்குகள்**

*வினா எண். 783—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நில ஆர்ஜித சட்டத்தின் கீழ் பைசல் ஆகாமல், 31—3—1982 வரை சென்னை உயர்நீதி மன்றத்தில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) விரைவாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆர்ஜிதம் செய்ததின் மூலமாக நிலங்களை எடுக்கிறபோது 31—3—1982 வரையிலும் 677 பேர்கள் இன் றைக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குகள் போட்டிருப் பதால் நிலங்களை எடுக்கமுடியவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி நில ஆர்ஜிதச் சட்டத்தின் படி; நிலம் ஆர்ஜிதம் செய்கிறபோது வழக்குகள், கீழே இருக்கின்ற நீதிமன்றங்களிலேயிருந்து உயர்நீதி மன்றம் வரை, ஏராளமாக வழக்குகள் பைசலாகாமல் இருக்கின்றன. அதற்குக் காரணம் நீதிமன்றத்திலே காலதாமதம் ஏற்படுகிறதா ? இந்த வழக்கு களுக்காக உயர்நீதிமன்றத்திலே அரசுத் தரப்பிலே எத்தனை வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதைக் கூடுத லாக்கி வழக்குகளை விரைவிலே பைசல் செய்வதற்கு அரசு நட வடிக்கை எடுக்குமா ?



1983 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே இருக்கிற அதிகமான வழக்குகளின் காரணமாகவும், இந்த வழக்குகள் உடனடியாக நீதிமன்றத்திலே முடிவு பெறமுடியாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் அதிகமாக இதிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக அரசு இன்றைக்கு உயர்நீதிமன்றத்திலே லான்ட் அக்குசிசன், அவர்களுக்கு மட்டுமே ஒரு அட்டிசனல் கவர்ன்மென்ட் பிளீடரையும், அதேபோல் லான்ட் ரிபார்ம்ஸ் நில உச்ச வரம்புச் சட்டத்தைப் பார்ப்பதற்கு மட்டுமே அரசு வழக்கறிஞரை நியமிப்பதற்காக அரசு இந்த ஆண்டு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நில ஆர்ஜிதம் சம்பந்தமாக வழக்குகளை வழக்கு மன்றத்திலே தொடரக் கூடாது என்ற ஒரு சட்டத்தை தமிழக அரசு கொண்டுவர முன்வருமா ? இந்த நில உச்சவரம்புக்கு மத்தியசர்க்கார், அதாவது ஜனாதிபதி அவர்கள் ஒப்புதல் அளித்து உத்தரவு பிறப்பித்து இருக்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நில ஆர்ஜிதம் செய்கிறபோது குறிப்பிட்ட சில அரசுக்கு அத்தியாவசியமானவைகளுக்கு நீதிமன்றத்தில் சென்றாலும், அதற்காக தடை வாங்குவதற்கு அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. நில உச்சவரம்புச் சட்டத்தைப்பற்றி பல முறை இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது. ஆனால், டெல்லிக்குச் சென்று திரும்பி வந்திருக்கிறது. குடியரசுத் தலைவர் அவர்கள் ஒப்புதல் தரவில்லை என்பதெல்லாம் இந்த மன்றத்திலேயும் வெளியிலேயும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதைப் பற்றி மீண்டும் இந்த அரசு இந்த அவைக்கு முன்னாலே கொண்டு வந்து நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9—20)

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில ஆர்ஜிதத்தை எதிர்த்து 677 பேர் வழக்குப் போட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த நில ஆர்ஜிதம் என்பது பல்வேறு வகைக்கு எடுக்கிறார்கள். குடியிருப்பு மனைகள்வழங்குவதற்காகஎடுக்கிறார்கள்; சுடுகாட்டுக்குப் பாதை அமைப்பதற்காக எடுக்கிறார்கள். இப்படி பல்வேறு முறைகளில் ஏழை எளிய மக்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பதற்காக எடுக்கிறார்கள். அப்படி எடுக்கின்ற சமயத்தில் அதை எடுக்க முடியாமல் கோர்ட் மூலம் நீண்டகாலம் தாமதம் ஆக்கப் பட்டு வருகிறது. அதனால் அந்த மக்களுக்கு விரைவில் பலன் அளிக்க முடியவில்லை என்பதால், இந்தச்சட்டமன்றக் கூட்டத்

தொடரிலேயே இப்படி ஏழை எளிய மக்களுக்காக எடுக்கப்படுகின்ற முயற்சிகளின்போது கோர்ட்டுக்குச் செல்லக்கூடாது என்ற அடிப்படையில், அந்தச் சட்டத்தில் இருக்கும் ஓட்டைகளை அடைக்கும் வகையில் ஒரு சட்டத்திருத்தம் கொண்டு வரப்படுமா என்றும், அதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகளை எடுப்பாரா என்றும் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, அரசு பரிசீலனை செய்யும்.

காட்பாடி அருகில் வெள்ளக்கல்மேடு என்னுமிடத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 784—திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடி அருகிலுள்ள வெள்ளைக்கல்மேடு என்ற, இடத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஏ. பூங்காவனம் : பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடி அருகில் வெள்ளைக்கல்மேடு பகுதியில் சுமார் 400-க்கு மேற்பட்ட ஏக்கர் நிலம் தரிசாக இருந்து கொண்டிருக்கிறது. வடாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை மாற்றுவதற்கான வேலைகள் தொடர்ந்து நடைபெறுவதாக பத்திரிகைகளில் செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன. ஆகவே, அந்த வெள்ளைக்கல்மேடு பகுதியில் அந்த அலுவலகத்தை அமைக்க அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கும் அரசின் செயற்குறிப்புப்படி சத்துவாச்சாரி என்ற இடத்தில், தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. அந்த நிலத்தை எடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்டலாம் என்பதை அரசு பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம் : பேரவைத் தலைவர் அவர்களே, சத்துவாச்சாரி பகுதியில் கட்டுவதற்கான செயற்குறிப்பு இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அங்கே எவ்வளவு நிலம் எடுக்க இருக்கிறார்கள்? அதற்கு தோராய மதிப்பீடு எவ்வளவு? எப்போது வேலைகள் துவங்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அது வருவாய்த்துறை மூலமாக ஆர்ஜிதம் செய்து வீட்டு வசதி வாரியத்திற்குக் கொடுக்கப்பட்டது. ஆகவே, வீட்டு வசதி வாரியம் அதைத் திருப்பித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இன்றைக்கு மாவட்ட அலுவலகம் கட்ட வேண்டும் என்று சொன்னால் 2 கோடி 3 கோடி ரூபாய் செலவாகிறது. அதைப் பற்றி நிதித்துறையோடு, ஆலோசித்து இருக்கின்ற நிதிக்கு ஏற்றவாறு விரைவில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தினை சத்துவாச்சாரியில் கட்ட இருப்பதாக அரசின் செயற்குறிப்பு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அந்த இடம் கூட தகுதியான இடம் இல்லைஎன்றுஅந்த மாவட்டத்தைச் சேர்ந்த இந்தப் பேரவையில் இருக்கும் அனைத்துக்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் எடுத்துக்கூறி, அந்த இடம் தேவையில்லை, வேலூர் மத்தியில் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கட்டவேண்டும் என்று மெமோரேண்டம் கொடுத்தார்களே, அதை அரசாங்கம் பரிசீலித்ததா ? அந்த அலுவலகத்தை வேலூர் நகரின் மத்தியில் கட்ட முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, வேலூர் மத்தியப் பகுதியில் இடம் இல்லை. அது மட்டுமல்ல, வளர்ந்து வருகிற இடத்தில், வளர்ந்து வருகிற நகரத்தில், அந்த நகரத்தினுடைய ஓரத்தில், பார்டரில் இப்படிப்பட்ட அலுவலகத்தை அமைப்பது தான் நல்லது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது அந்த அலுவலகம் இருக்கின்ற இடத்திலே பலவிதமான அலுவலகங்கள் இருக்கின்றன. ஆகவே, புதிதாகக் கட்டிடங்கள் அங்கே கட்டுவதற்கு இயலாது. ஏனென்றால், இந்திய தொல்பொருள் ஆராய்ச்சி இலாகா வேலூர் கோட்டையின் உள்ளேயுள்ள அலுவலகங்களுக்கெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு பலமாடிக் கட்டிடம் கட்ட அனுமதிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே. இந்த காட்பாடி அருகிலுள்ள வெள்ளக்கல்மேடு என்ற இடத்தில் சுமார் 250 ஏக்கர் விவசாய நிலத்தை சர்க்கார் ஆர்ஜிதம் செய்து, அதை உம்மிடியார் நிறுவனத்திற்கு ஒரு தொழில் துவங்குவதற்காகக் கொடுத்தார்கள். ஆனால் இன்று வரையில் அங்கே ஒரு தொழிலும் வரவில்லை. விவசாயத்திற்கும் அந்த நிலம் கிடைக்கவில்லை. அந்த 250 ஏக்கர் நிலமும் இன்றைக்குப் பாழாகிப்போய்க்கொண்டு இருக்கிறது. ஆகவே, அதை வேறு தொழில்களுக்குப் பயன்படுத்த அரசு ஆலோசிக்குமா?

[1983 ஏப்ரல் 18

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஆர்ஜிதம் செய்த நிலம் அந்த அரசின் கையில் இருக்கும் என்றால் வேறு தொழில் அமைப்பதற்கு வாய்ப்பு இருந்தால் தொழில் அமைச்சர் அவர்கள் அரசோடு கலந்து ஆலோசித்து தக்க நடவடிக்கை எடுப்பார் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நில உடமை மேம்பாடுத் திட்டத்தை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விரிவுபடுத்தும் திட்டம்.

*வினா எண். 785— திரு. ஜே. ஹேமசுசந்திரன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நில உடமை மேம்பாட்டுத் திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விரிவு செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) எந்த வருடத்திலிருந்து அமுல்படுத்தப்படுகிறது?

(இ) அதனுடைய பலன்களை எத்தனை நபர்கள் பெறுகின்றனர் ?

(ஈ) அவர்களில் எவ்வளவு பேருக்கு பட்டா வழங்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நில அளவை மேம்பாட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்போது ஆரம்பிப்பதற்கில்லை. காரணம், கன்னியாகுமரி மாவட்டம் திருவிதாங்கூர்—கொச்சியிலிருந்து 1956-ம் ஆண்டுதான் தமிழக மாநிலத்தோடு சேர்க்கப்பட்டது. தமிழக மாநிலத்தோடு சேர்க்கப்பட்ட போது நில அளவை அங்கே ஆரம்பிக்கப்பட்டு அது 1962-ல் முடிவடைந்திருக்கிறது. தற்சமயம் தேவை இல்லை என்று அரசு கருதுகிறது.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் நில உடமை மேம்பாட்டுத் திட்டம் தற்போது எடுப்பதற்கில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் ஏற்கனவே இதற்கு முன்னால் அந்த நில ஒப்பதை சம்பந்தமாக எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் கூட பரிபூர்ணமாக, திருப்திகரமாக நடக்காத காரணத்தால் இனியாவது இந்த நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தை அமலாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?



1983 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நமது அரசுதான் 1962-ல் அந்த வேலையை முடித்திருக்கிறது. அப்படி நமது அரசு முடித்திருக்கிறபோது திருப்திகரமாக இல்லை என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படி திருப்திகரமாக இல்லாமல் நமது அரசு 1962-ல் அதை எப்படிச் செய்தது என்று தெரியவில்லை.

திரு. த. மாரிமுத்து : தலைவர் அவர்களே, இந்த நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் தனிப் பட்டா வழங்கும்போது விவசாயிகளுக்கு வரைபடத்தோடு கூட பட்டா வழங்குகிறார்கள். ஆனால் விவசாயிகள் விரும்பினால், அவர்கள் நிலங்களுக்கு எல்லை காட்ட கல் கிரயத்தைப் பெற்று எல்லைக்கற்கள் நட்டுத் தர ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இப்போது வரைபடமும் தேவையான இடத்தில் எல்லைக்கல்லும் போடப்படுகிறது. போடப்படுகிற எல்லைக் கற்கள் மிகச் சிறிய கல்லாக இருக்கிற காரணத்தால் யாராவது எடுத்துவிடுவார்கள் என்று இன்று பலர் சொன்னதன் பேரில் இன்றைக்கு யாராலும் பிடுங்கமுடியாத அளவிற்கு பெரிய கல்லாகப் போட்டு வருகிறார்கள். அவற்றை இன்னும் அதிகமாகப் போட வேண்டுமா என்பது பற்றி பல மாவட்டங்களுக்குச் சென்று அங்கிருக்கிற விவசாயிகளைக் கேட்டு தேவைப்பட்டால் அதிகப்படுத்தவும் அரசாங்கம் யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது கூட இந்தத் திட்டப்படி கொடுக்கிற வரைபடம் போடுகிற கல் இவைகளுக்கு அரசாங்கம் பத்து கோடி ரூபாய் செலவு செய்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைக் கேட்டால் இன்னும் ஐந்து அல்லது பத்து கோடி ரூபாய் கூட வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, இந்த அப் டு டேட் ஸ்கீம் நில உடைமையாளர்களுக்கு மிக எளிதாகயிருக்கிற அருமையான திட்டம். இந்தத் திட்டத்தை அமல் படுத்துவதற்கு ஒரு வருவாய் கிராமத்திற்கு மூன்று நான்கு மாத காலமாகும் என்று சொல்லப்படுகிறது. இப்படிப் போனால் ஒரு மாவட்டத்தில் இதை முடிக்க நீண்ட காலமாகும். ஆகவே இதையெல்லாம் கருத்தில்கொண்டு அதிகப் படியான ஆட்களை அரசாங்கம் போட்டு இத்திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, முதலில் 28 பணியாளர் தொகுதிகள் என்று ஆரம்பித்தோம். இன்றைக்கு தமிழ்நாட்டில் 166 வட்டங்கள் இருக்கின்றன. ஆகையால் 28 பணியாளர் தொகுதிகள் என்றால் காலதாமதமாகும் என்பதால் இப்போது 80 பணியாளர் தொகுதிகளை அதிகமாக்கி 80 ப்ளஸ் 28-108 பணியாளர் தொகுதிகளில் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்படி 108

பணியாளர் தொகுதிகள் என்று சொல்லும்போது காலதாமதமில்லாமல் விரைவில் இரண்டு ஆண்டுகளுக்குள் முடிக்க இந்த அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது. நான் ஏற்கனவே சொன்னதுபோல் இந்தத் திட்டத்தை விரைவில் நடத்தவேண்டும் என்பதற்காக அரசாங்கம் பத்து கோடி ரூபாய் செலவு செய்ய உத்தேசித்திருக்கிறது. இந்தத் திட்டத்தை ஆரம்பித்தவுடன் இதற்காக ஏறக்குறைய ஏழாயிரம் பேர்கள் புதிதாக இந்தத் திட்டத்திற்காக அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியையும் நான் சொன்னேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவர் அவர்களே, இந்த நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தில் புறம்போக்கு நிலங்களை சிலபேர்கள் எடுத்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் கைப்பற்றுவதற்கு புறம்போக்கு நிலங்களையும் அளந்து கல் போட்டு அந்த நிலங்களை அரசு கைப்பற்றுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற திட்டப்படி அரசு நிலங்களை அளவு செய்யாமல் தனியார் நிலங்களை அளவு செய்து அதை கூட்டுப்பட்டாவாக இருப்பதை தனிப்பட்டாவாகப் போட்டு அதன் ஓரங்களில் கல் போட்டு, வரைபடம் போட்டு கொடுத்து விடுகிறேன். அப்படிக் கொடுத்துவிட்டால் இப்படி வரைபடம் போடாத, அளக்காத நிலம் எல்லாம் அரசாங்கத்திற்கு சொந்தமான நிலம் என்றாகி விடும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதை கவனத்தில் கொண்டு இந்த வேலை முடிந்த பிறகு, அதற்குப் பிறகு அரசாங்க நிலங்களை அளப்பதும், நகர நிலங்களை அளப்பதும், ரோடு நிலங்களை அளப்பதும் தேவை என்று பலர் தெரிவித்திருக்கிறார்கள், அதைப்பற்றியும் அரசாங்கம் யோசனை செய்யும்.

வால்பாறை வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டும் திட்டம்.

* வினா எண். 786—திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் — கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோவை மாவட்டம் வால்பாறை வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தமாக கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது வேலை துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. மாண்புமிகு : (அ) மற்றும் (ஆ) தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



(முற்பகல் 9-30)

திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை வட்டாட்சி அலுவலகம் நீண்ட பல ஆண்டுகளாக தனியார் கட்டிடத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கிறது. அரசுப் பணம் வாடகை என்ற பெயரால் வருஷக் கணக்கில் அதிகமானபணத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது முன்னாலே துணை வட்டாட்சியாக இருந்தது. இன்றைக்கு வட்டாட்சியாக மாறியிருக்கிறது. இந்த காலகட்டத்தில், இதிலே வேலை செய்யக்கூடிய 'அலுவலர்கள், அதிகாரிகள் ஆகியோர் வீடுகள் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அரசு அலுவலகமும் இந்த காலகட்டத்தில் தனியார் கட்டிடத்திலே இயங்கிக் கொண்டு வருகின்ற காரணத்தால், அரசு நடவடிக்கை எடுத்து, தனி வட்டாட்சி அலுவலகத்தை அரசே சொந்தமாகக் கட்டுவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை இது வரைக்கும் துணை வட்டமாக இருந்தது ; சென்ற ஆண்டுதான் முழு வட்டமாக ஆக்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்போது அங்கே இருக்கின்ற கட்டிடத்திற்கு மாதம் ரூ. 200 வாடகையாக கொடுக்கப்பட்டு வருகின்றது. ஒரு புதிய கட்டிடத்தைக் கட்ட வேண்டுமென்றால், நிலம் எல்லாம் சேர்த்து ரூ. 21.7 இலட்சம் ஆகிறது. இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்த வரைக்கும் 23 வட்டாட்சி அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்களிலே இருக்கின்றன. இந்த 23 இடங்களிலும் புதிதாக கட்டிடங்கள் கட்டும் குறிப்பு அரசின் குறிப்பிலே இருக்கின்றது. இந்த ஆண்டு மட்டும் திருவாரூர், கும்மிடிப்பூண்டி, மேட்டுப்பாளையம், மயிலாப்பூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் புதிய வட்டாட்சிக் கட்டிடங்கள் கட்டப்பட இருக்கின்றன. இந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கேட்ட வால்பாறை கட்டப்பட வில்லை என்றும், தொடர்ந்து பரிசீலனை செய்து, அடுத்த ஆண்டு அரசு அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டாட்சி அலுவலகம் இல்லாத வட்டத் தலைநகரங்களுக்கு புதியதாக கட்டிடங்கள் கட்டப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில், குடவாசல் வட்டமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அங்கே கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் இருக்கின்றதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[1983 ஏப்ரல் 18

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, குடவாசல் இந்த ஆண்டுதான் புதிய வட்டமாக ஆக்கப்பட்டிருக்கிறது. அதுவும் பரிசீலனையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதிலே அரசுக்கு ஒருஉதவி செய்யவேண்டும். அங்கே கட்டிடம் கட்டவேண்டுமென்றால், யாரும் அதற்குஇடம் தரமாட்டேன் என்று சொல்லுகிறார்கள். அப்படியே நிலத்தை எடுத்தாலும், நீதிமன்றத்திற்குப் போய் விடுகிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குவேண்டிய நிலத்தை பார்த்து வைத்தால், விரைவில் கட்டிடம் கட்ட அரசு தயாராக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் 787, 788, 789 மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக் கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

**1982-ம் ஆண்டு ஏற்பட்ட சாலை விபத்துக்கள்.**

*வினா எண். 790—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982-ம் ஆண்டு ஏற்பட்ட சாலை விபத்துக்கள் எத்தனை ? அதில் இறந்தவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) விபத்துக்களை குறைக்க புதிய முறைகளை கையாள அரசிடம் ஏதேனும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) 1982 ஆம் ஆண்டு 21,086 சாலை விபத்துக்கள் ஏற்பட்டன. அவற்றில் 3,686 பேர் உயிர் இழந்தனர்.

(ஆ) விபத்துக்களைக் குறைக்கும் பொருட்டு எல்லா கனரக ஊர்திகளுக்கும் வேகக் கட்டுப்பாடு இயந்திரம் பொருத்துமாறு அரசு ஆணையிட்டுள்ளது. போக்குவரத்து சைகை காட்டி விளக்குகள் பொருத்துதல், சாலைகளில் வேகத்தடை கட்டுதல், போக்குவரத்து குறிப்பலகை நிறுவுதல், மேம்பாலம் அமைத்தல் சாலை விதிகளை மும்முரமாகக் கடைபிடிக்க காவல் துறையின் மூலமாக நடவடிக்கை எடுத்தல் போன்ற பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினந்தோறும் நம் நாட்டில் ஏறத்தாழ 400 பேர்கள் விபத்துக்களில் சிக்கி, அதிலே சுமார் 70 பேர்கள் இறந்து விடுகின்றார்கள் என்று போக்குவரத்துக் குழுவின் அறிக்கையிலே தகவல் சொல்லப்பட்டிருக்கிறது. இதுகுறித்து போக்குவரத்து அமைச்சர்கள் மாநாட்டிலே மிகவும் கவலை தெரிவித்திருக்கிறார்கள். இப்போது கார் ஓட்டுப்வர்கள், ஆட்டோ



1983 ஏப்ரல் 18]

ஓட்டுபவர்கள் எல்லாம்போக்குவரத்து நெரிசல் அதிகமிருந்தாலும் வேகமாக ஓட்டுகிறார்கள் என்பது சர்வசாதாரணமாகி விட்டது இப்போது போக்குவரத்து விதிகளின் மூலம் கொடுக்கப்படுகின்ற தண்டனை மிகவும் குறைவாக இருப்பதால், அதைக் கடுமையாக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, இருக்கிற விதிமுறைகளை நாம் முறையாக கடைபிடிக்க வேண்டும். முறையாக கடைபிடிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். எனவே தண்டனையை கடுமையாக்க வேண்டுமா என்பதுபற்றி அரசு இனிமேல்தான் பரிசீலிக்க வேண்டும்.

திரு. எம். சின்னசாமி: தலைவரவர்களே, இப்படி சட்டங்கள் கடுமையாக ஒருபுறம் இருந்தாலும் போக்குவரத்து நெரிசல்களில் வாகனங்களை வேகமாக ஓட்டக்கூடாது. வேகமாக ஓட்டினால் என்ன ஏற்படும் என்று ஆராய ஒரு குழுவை ஏற்படுத்தி, மாதந்தோறும் போலீஸ் அதிகாரிகளையும் போக்குவரத்து துறை அதிகாரிகளையும் கொண்டு பயிற்சி வகுப்பு நடத்த ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, வேகமாக ஓட்டினால் என்ன ஏற்படும் என்பதை ஓட்டுநர்கள்தெரிந்திருக்க வேண்டும். அதைச் சொல்லிக்கொடுக்க தனியாக ஒரு குழு தேவையில்லை. ஆனால் என்ன காரணத்தால் இவை ஏற்படுகின்றன என்று ஆய்வு செய்ய, தனித்தனியாக போக்குவரத்துக் கழகம் அதைச் செய்துவருகிறது. துறையின் மூலமும் செய்கிறோம். ஆட்டோ ஓட்டுநர்களுக்கும் மற்றவர்களுக்கும் தகுந்த முறையில் பயிற்சி கொடுக்கிறோம். இப்படி பொதுவான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. எஸ். இராசு: தலைவரவர்களே, வேகக்கட்டுப்பாட்டுக் கருவியை பொதுவாக அரசாங்க வண்டிகளில் பொருத்தியிருக்கிறார்கள். அவை முழுமையாகப் பயன்படுகின்றனவா ? அவை ரிப்பேராகிவிட்டால் முறையாகப் புதுப்பிக்கப்படுகின்றனவா ? அதோடு தனியார் துறையிலும் வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகளை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, அரசு போக்குவரத்துக் கழகங்கள் பயன்படுத்துகின்ற பேருந்துகளுக்கு வேகக்கட்டுப்பாட்டுக் கருவிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. அவை சில நேரங்களில் பழுது ஏற்பட்டால் கூட பழுது பார்க்கத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதைப் போன்று தனியார் துறையிலும் பயன்படுத்த வேண்டுமென்று

உத்தரவு போட்டோம். ஆனால் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று அதற்குத் தடை வாங்கிவிட்டதால் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும், அரசாங்கம் அதிலே கடுமையான நடவடிக்கை எடுத்து தேவையான ஏற்பாட்டைச் செய்யும்.

திரு. ஏ. சி. சண்முகம்: தலைவரவர்களே, தனியார் வண்டிகளில் குறிப்பாக லாரி ஓட்டுநர்கள் இரவில் குடித்துவிட்டு ஓட்டுகிறார்கள். அதனால் அதிகமாக விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே, குடித்துவிட்டு ஓட்டுகிறவர்களுடைய லைசென்சை ரத்து செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு முத்துசாமி: தலைவரவர்களே, குடித்துவிட்டு வண்டியை ஓட்டுகிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வழிவகை இருக்கிறது. அதுபற்றி நாங்கள் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கிறோம். சில சமயங்களில் எங்கள் கண்ணிலிருந்து தப்பிவிட்டாலும் உங்கள் கண்ணில் பட்டால் சொல்லுங்கள், உடனே நடவடிக்கை எடுக்கிறோம்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, விபத்து என்பது தற்செயலாக நடைபெறுகிறது. மேல் நாடுகளில் எல்லாம் 80 கிலோமீட்டர், 100 கிலோமீட்டர் வேகத்தில் ஓட்டவேண்டுமென்று விதியே இருக்கிறது. நம்முடைய நாட்டில் ''ட்ராஃபிக் சென்ஸ்''—போக்குவரத்து விதிகள் இன்றைக்கு சரியான முறையில் பின்பற்றப்படவில்லை. வேகமாகப் போவதற்குத்தான் கார், ஊர்ந்து போவதற்கு அல்ல கார். எனவே, சாலை விதிகளை சரியான முறையில் கடைபிடிக்க மக்களுக்குச் சொல்லிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மக்களுக்குச் சொல்லிக் கொடுக்கலாம் ; கால்நடைகளுக்கு யார் சொல்லிக் கொடுப்பது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, தேவையான நடவடிக்கை எடுக்கலாம். பல இடங்களில், பூங்காக்களில் கூட விதிமுறைகள் அடங்கிய போர்டு வைத்திருப்பது குழந்தைகளுக்கு மட்டுமல்ல ; பெரியவர்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். நீங்கள் காரிலே வேகமாகப் போங்கள், அதற்குத் தடையில்லை. ஆனால் நீங்கள் நீண்டகாலம் எங்களோடு இருக்க வேண்டுமென்று நாங்கள் ஆசைப்படுகிறோம்.

திரு. மி. வின்சென்ட்: தலைவரவர்களே, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் விபத்துக்களைத் தடுக்க, சாலை விதிகளை ஒழுங்காக கடைபிடிக்கிறார்களா என்பதை டி. வி. வைத்து ஆங்காங்கே கண்காணித்து நடவடிக்கை எடுக்கிறார்கள். அதைப் போன்று இங்கும் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, கேட்பதற்கு நன்றாக இருக்கிறது. நம்முடைய நாட்டிலும் அந்த வசதிகள் ஏற்படும் போது அதை நிச்சயமாக நம்மால் செய்ய முடியும் என்று கருதுகிறேன். நாம் பல விதிமுறைகளை இப்போது வைத்திருக்கிறோம். விதிமுறைகளைச் செயல்படுத்த சுகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். இதுவும் கூட வரும் என்ற எண்ணம் இருக்கிறது. இப்போது சொன்னால் அது கற்பனையாக இருக்கும் ; எதிர்காலத்தில் வரும்.

(முற்பகல் 9—40)

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெற்கிலிருந்து சென்னைக்கு வருகிற அந்த சாலைகளின் வழிகள் தான் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிற காரணத்தால், அந்தப் பகுதிகளில்தான் விபத்துக்கள் அதிகமாக நடக்கிறது. உதாரணமாக சென்னையிலிருந்துஉளுந்தூர்பேட்டை செல்லும் சாலை, போன்றவைகளை எடுத்துக் கொண்டால் விபத்துக்கள் அதிகமாக நடப்பது தெரிகிறது. ஆகவே, இதுபோன்ற விபத்துக்கள் அதிகமாக நடைபெறும் சாலைகளில், மக்கள் புழக்கம் அதிகமாக இருக்கும் சாலைகளை சற்று அதிக அகலப்படுத்தியோ அல்லது போவதற்கு ஒரு சாலை வருவதற்கு ஒரு சாலை என்ற வகையில் மாற்றி அமைத்தோ ஏற்பாடுகள் செய்தால் இத்தகைய விபத்துக்களை ஓரளவு தவிர்க்க முடியும். அந்த வகையில் அரசு ஏதாவது ஆலோசித்து வருகிறதா என்று அறிய விரும்புகிறேன் .

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அந்தச் சாலைகளில் நெரிசல் அதிகமாக இருப்பதினால்தான் விபத்துக்கள் அதிகமாக நடைபெறுகிறது என்று என்னால் நம்ப முடியவில்லை. சாதாரணமாக இரண்டே வண்டிகள் வந்தும் கூட, அவ்வளவு பெரிய ரோடிலே மோதிக் கொள்கிறார்கள். எனவே சாலை விபத்துக்களை எந்த வகைகளில் எல்லாம் தவிர்க்கலாம் என்று யோசனை செய்துதான் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். வேகக் கட்டுப்பாட்டு கருவிகள் பொருத்தப்பட்டு இருக்கின்றன. சில பகுதிகளில் ரோந்து கூட போடவேண்டும் என்று ஏற்பாடு செய்து வருகிறோம். இவைகள் எல்லாம் முழுவதுமாக நடைமுறைக்கு வந்தால் நிச்சயமாக விபத்துக்கள் தவிர்க்கப்படும் என்று கருதுகிறேன்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், விபத்துக்களை குறைப்பதற்காக, எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளைப் பற்றி குறிப்பிட்டார்கள். வேகக் கட்டுப்பாடு கருவிகள் போடப்பட்டிருப்பதாக அதன் மூலம் விபத்துக்கள் குறைந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்பட்ட விபத்துக்களில் வேகக் கட்டுப்பாடு கருவிகள் பொருத்தப்பட்ட வாகனங்களினால் ஏற்பட்ட விபத்துக்கள் எத்தனை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

[1983 ஏப்ரல் 18

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை விபத்துக்கள் வேகக் கட்டுப் பாடு கருவிகள் பொருத்தப்பட்ட வாகனங்களினால் ஏற்பட்டது என்கிற விவரம் என்னிடத்திலே இல்லை. ஆனால் ஒன்றை நாம் புரிந்தாக வேண்டும். ஏறத்தாழ 30 ஆயிரம் கன ரக வண்டிகள் தமிழகத்தில் மட்டும் இருக்கின்றன. அதுபோக வெளி மாநிலங் களிலேயிருந்து வந்து போகக்கூடிய வண்டிகளும் இருக்கின்றன. தற்போது நாம் ஏறக்குறைய 6 ஆயிரம் வண்டிகளுக்குத்தான் இந்த வேகக் கட்டுப்பாட்டு கருவிகளை பொருத்தியிருக்கிறோம். அத்தனை வாகனங்களிலும் அந்தக் கருவிகள் பொருத்திய பிறகு, இந்தக் கணக்கைப் பார்த்தால், அது முறையாக இருக்கும் என்று கருதுகிறேன்.

சென்னை திருவனந்தபுரம் இடையே ஓடும் குளிர் சாதனம் பொருந்திய விரைவுப் பேருந்துகள்

வினா எண். 791—திரு டி. மணி : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :

(அ) சென்னையிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் குளிர்சாதனம் பொருந்திய விரைவுப்பேருந்துகள் லாபகரமாக ஓடுகிறதா ?

(ஆ) இல்லையெனில், அதற்குப் பதிலாக சூப்பர் டீலக்ஸ் விரைவு பேருந்துகள் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(ஆ) உத்தேசம் இல்லை.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, என்னு டையகேள்வி சென்னையிலேயிருந்து திருவனந்தபுரம் செல்லும் குளிர் சாதனம் பொருந்திய விரைவுப் பேருந்துக்கள் லாபகரமாக ஓடுகிறதா என்பது, அதற்கு அமைச்சர் அவர்கள் இல்லை என்று விடையளித்திருக்கிறார்கள். அதை லாபகரமாக நடத்துவதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது. நாகர்கோவிலிலிருந்து திருவனந்தபுரம் செல்கிற இடைவெளியில் இந்த வண்டிகள் நிறுத்தப்படுவதே இல்லை. அதற்குப் பதிலாக தக்கலை, மார்த் தாண்டம், நெய்யாற்றங்கரை போன்ற பகுதிகளில் நிறுத்து வதும் இரண்டாவது இதனுடைய டிக்கெட் கட்டணம் மிக அதிக மாகஇருக்கிறது. கேரளாவிலிருந்து எக்ஸ்பிரஸ் பஸ்கள் திருச்செந் தூருக்கு போகிறது. அந்தப் பேருந்துகளில் டிக்கெட் கட்டணம் குறைவு. ஆகவே, அந்த அடிப்படையில், இந்தப் பேருந்து களுக்கும் கட்டணக் குறைவு செய்து, அத்தோடு, நாகர்கோவிலி லிருந்து திருவனந்தபுரம் செல்லும்போது தக்கலை, தொடுவட்டி



1983 ஏப்ரல் 18]

நெய்யாற்றங்கரை போன்ற இடங்களில் நிறுத்தி, அதிகமான பயணிகளை ஏற்றிக்கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்தால், அதை லாபகரமாக நடத்த முடியும் என்று கருதுகிறேன். இப்படிப் பட்ட நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, எங்காவாது இடை வழிகளில் இந்தப் பேருந்துகளை நிறுத்தி அதன் மூலமாக அதிகப் பயணிகளை ஏற்ற முடியும் என்ற நிலைமை இருக்குமேயானால் அதை எனக்கு அவர்கள் எழுதிக் கொடுப்பார்களேயானால், அரசு நிச்சயமாக அதன் மீது நடவடிக்கை எடுக்கும். கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். கட்டணத்தைக் குறைக்க முடியாது. கேரள மாநில பஸ்களில் கட்டணம் குறைவு என்றார்கள். இன்னும் சொல்லப் போனால் கேரள மாநிலத் திலிருக்கிற பேருந்துகளின் தன்மையும், அமைப்பும் நம்முடைய மாநிலப் பேருந்துகளின் தன்மையும், அமைப்பும் அவர்களுக்கு தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன். கட்டணத்தைக் குறைப் போமேயானால் அதே போன்ற பேருந்துகளைத்தான் நாமும் விடவேண்டிய அவசியம் ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேரளத்திலிருக்கிற எல்லா பஸ்களையும் ஒப்பிட்டுச் சொல்லவில்லை, திருவனந்தபுரத்திலிருந்து திருச்செந்தூருக்கு போகக் கூடிய எக்ஸ்பிரஸ்ஸில் இருக்கக் கூடிய கட்டணத்தை மட்டும், நாம் இதற்கு போடுவோமேயானால், அதிகமான பயணிகள் ஏற வாய்ப்பு ஏற்படும். ஆகவே, அந்த வகையில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அதைத் தான் நான் சொன்னேன். நம்முடைய எக்ஸ்பிரஸ் வண்டிகளுக்கு இருக்கும் கட்டணத்தை விட அவர்களுடைய எக்ஸ்பிரஸ் வண்டிகளுக்கு கட்டணம் சற்று அதிகம் தான். ஆனால் நாம் இங்கே விடுவது குளிர் சாதன வண்டி. அதனால்தான் கட்டணமும் சற்று அதிகமாக இருக்கிறது. அவர்களுடைய கட்டண அளவுக்கு இதை நாம் வைத்தால், அதை சாதாரண பேருந்துகளாகத் தான் சாதாரண எக்ஸ்பிரஸ்ஸாகத்தான் விட முடியும் என்று முதலிலேயே விளக்கினேன்.

திரு. ந. இளஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து, திருவனந்தபுரம் செல்லும் தூரம் நெடுந்தூரமாக இருப்பதால், அதில் பயணிகளுக்கு தூங்கும் வசதிகள் அமைத்தால் நலமாக இருக்கும். அதை அமைத்துத் தர அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இப்போது முடிந்த அளவு தேவைகளை நிறைவேற்றி வருகிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மிக முனைப்போடு அரசு ஆய்வு செய்யும்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த ஏர்கண்டிஷன் பேருந்துகள் என்பது தமிழகத்தைப் பொருத்த வரையில் தேவையில்லை. அது ஒரு அதிகப்படியான விஷயமாகத்தான் இருக்கிறது என்கிற கருத்து நிலவுகிறது. ஆகவே, அதற்குப் பதில் உறங்கும் வசதி கொண்ட, படுக்கைகளை அமைத்துத் தரும் வகையில், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் போன்ற பகுதிகளிலிருந்து புறப்பட்டு வரும் பேருந்துகளில் ஏற்பாடு செய்தால் நலம். அதை அமைச்சர் அவர்கள் அமைக்க முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, உறங்கும் வசதியுடைய பேருந்துகளைப் பொறுத்த வரையில் முழுக்க முழுக்க உறங்கும் வசதி உடையதாக வைக்காமல் அதனை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து 8 பேர் படுத்துக் கொண்டு செல்கின்ற வகையிலேயும், 16 பேர் அமர்ந்து செல்கின்ற வகையிலேயும் அமைக்கலாமா என்று ஆய்வு செய்துகொண்டிருக்கிறோம். ஆனால் ஏர்கண்டிஷன்ட் பேருந்துகளைப் பொறுத்த வரையிலே அவை அண்டை மாநிலங்களுக்குச் செல்லக் கூடியவைகளாக இருப்பதன் காரணத்தால் அதனை ஒரு ப்ரெஸ்டிஜ் என்ற வகையிலே இயக்கிக் கொண்டிருக்கிறோம்.

திரு. என். வரதராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏர்கண்டிஷன்ட் பேருந்துகளில் இரவு நேரங்களில் பயணம் செய்கின்றபோது அதிலே இருக்கின்ற இயந்திரங்களை இயக்கும் படியாக நாங்கள் ஓட்டுநரைக் கேட்டிருக்கிறோம். பகல் நேரத்தில் அந்த வண்டிகள் போவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அந்த வகையிலே பெங்களூருக்குப் போகின்ற ஒரு வண்டியை பகல் நேரத்திலே விட்டுப் பார்த்தோம். ஆனால் கலெக்ஷன் குறைய ஆரம்பித்து விட்டது. எனவே மீண்டும் அதனை இரவிலே இயக்க ஆரம்பித்து விட்டோம்.

நகரப் பேருந்துகளில் இரண்டு கண்டக்டர்களை நியமிக்கும் திட்டம்

வினா 792—திரு எம். சின்னசாமி: திரு. நு. புருஷோத்தமன் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நகரப் பேருந்துகளில் கட்டாயமாக இரண்டு கண்டக்டர்களை நியமிக்கும் செயற் குறிப்பு உள்ளதா ?



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இல்லை. ஆனால் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் போன்ற பெருநகரங்களில் நெரிசல் மிகுந்த நேரங்களில் சில முக்கிய தடங்களில் இரண்டு நடத்துநர்கள் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

திரு. எம். சின்னசாமி: தலைவர் அவர்களே, சென்னை, மதுரை, கோவை போன்ற பெருநகரங்களில், நெரிசல் மிகுந்த நேரங்களில் இரண்டு கண்டக்டர்களை நியமிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எப்போது அமலுக்கு வரும் என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இப்போதே அமலாக்கப்பட்டு வருகின்றது.

திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது இரண்டு கண்டக்டர்கள் ஒரு பேருந்தில் நியமிப்பது பற்றிச் சொன்னார்கள். ஆனால் சில பேருந்துகளுக்கு ஒரு கண்டக்டர் கூட இல்லாத நிலைமை இருக்கின்றது. செங்கற்பட்டிலே அழகிரி போக்குவரத்திலே அண்மையில் ஒரு வார காலமாக 10 டவுன் பஸ்கள் அவ்வாறு கண்டக்டர் இல்லாததன் காரணத்தால் ஓடாமல் கிடக்கின்றன. அதே போன்று 10 ரூட் பஸ்களும் ஓடாமல் கிடக்கின்றன. அவற்றுக்கு உடனடியாகக் கண்டக்டர்களை நியமித்து மக்களின் அவல நிலைமையினைப் போக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே. எங்கேயும் கண்டக்டர் இல்லாமல் இருப்பதாகச் சரித்திரத்திலேயே இல்லை. அப்படிப்பட்ட நிலைமை இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்திலே யாரோ தவறாகத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். எனினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அந்தத் தகவல் வந்துவிட்டதன் காரணத்தால் நான் பார்த்து நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம்: தலைவர் அவர்களே, சென்னை, மதுரை, கோவை போன்ற பெரு நகரங்களில் நெரிசல் நேரங்களில் பேருந்துகளில் இரண்டு கண்டக்டர்கள் நியமிப்பது பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூர் போன்ற பகுதிகளில் தனியார் பேருந்துகளில் இரண்டு கண்டக்டர்களை நியமித்திருப்பதன் காரணத்தால் அவர்களுக்கு அதிகமான வசூல் கிடைக்கின்றது. நம்முடைய போக்குவரத்திற்கு அவ்வளவு வசூல் கிடைக்கவில்லை. ஆகவே நம்முடைய போக்குவரத்திலும் தலைநகரங்களில் எல்லாம் ஒவ்வொரு பேருந்திலும் இரண்டு கண்டக்டர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, தேவை இருந்தால் சம்பந்தப்பட்ட நிர்வாக இயக்குநரிடத்திலே சொல்லி, அதைப் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டிய ஏற்பாட்டைச் செய்வோம்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, நகரப்பேருந்துகளில் நெரிசல் அதிகமாக இருப்பதன் காரணத்தால் படிக்கட்டுகளிலே நின்று கூட பிரயாணிகள் பயணம் செய்கிறார்கள். ஆகவே வெளி நாடுகளில் இருப்பதைப் போல பிரயாணிகள் ஏறி முடிந்தவுடன் அந்தக் கதவு மூடிவிடுகின்ற வகையில் உள்ள பஸ்கள் விடப்படுமா ? மேலும் பெண் கண்டக்டரை நியமித்தால் பயணிகள் ஒழுங்காகக் காசு கொடுப்பார்கள். ஆகவே அதிகமான அளவில் பெண் கண்டக்டர்களை நியமிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஆண் கண்டக்டர்கள் இருந்தால் யாருமே காசு கொடுக்காதது போல் அவர் சொல்வதைப் பார்த்தால் தெரிகின்றது. ஆனால் அப்படிப்பட்ட நிலைமை இல்லை. ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படிச் செய்தார்களோ என்று எனக்குச் சந்தேகம் இருக்கின்றது (சிரிப்பு). இருந்தாலும் அதைப்பற்றி நாங்கள் யோசித்து நடவடிக்கை எடுக்கிறோம். வெளி நாடுகளில் இருப்பது போன்று கதவுகளை அமைக்க வேண்டும் என்று சொன்னார்கள். அப்படி சில இடங்களில் இயக்கிப் பார்த்தோம் கதவுகளும் சரியாக இயங்காத நிலையில் பயணிகளுக்கும் சிரமமாக இருப்பதால் கொஞ்சம் அதை இயக்குவதில் சிரமங்கள் இருக்கின்றன. இருந்தாலும் படிப்படியாக நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, நான் காசு கொடுக்காமல் போனாதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் நான் உள்பட யாருமே காசு கொடுத்துப் போக வேண்டிய தேவையில்லை.

கெசரகுளி அல்லா நீர்த்தேக்கம் மற்றும் மாரண்ட அள்ளி ஆகிய இடங்களிந்து கிருஷ்ணகிரிக்கு பேருந்துகள் விடும் திட்டம்

வினாஎண். 793— திரு. மு. ப. முனுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெசரகுளி அல்லா நீர்த்தேக்கம் அதன் சுற்றுப்புற கிராமங்கள் மாரண்டஅள்ளி அதன் சுற்றுப்புற கிராமங்களிலிருந்தும் கிருஷ்ணகிரிக்கு அண்ணா போக்குவரத்துக் கழகம் மூலம் பேருந்துகள் விட அரசுக்கு உத்தேசம் உண்டா ?



(ஆ) ஆம் எனில் எப்போது விடப்படும். ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

காஞ்சிபுரம்—காரைப்பேட்டை வரை நகரப் பேருந்து விடும் திட்டம்.

*வினா எண். 794. — திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சீபுரம்—அறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனை (காரைப்பேட்டை) வரை நகரப் பேருந்து விட வேண்டுமென கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : இந்த புற்று நோய் மருத்துவமனை ஒரு முக்கியமான இடமாக இருக்கிறது. அதிலேயும் சில பாதிக்கப்பட்டிருக்கக்கூடியவர்கள் நடந்து போகக்கூடிய சூழ்நிலை இருக்கக்கூடிய காரணத்தினால் விஷேசமான ஏற்பாடுகளை செய்ய அரசு முன்வருமா ?

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனைக்கும் காஞ்சீபுரத்திற்கும் இடையே ஏறத்தாழ 28 முறைகள் பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அது போதும் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினருக்கு அங்கே இருக்கிற நிலை தெரியாது என்று கருதுகிறேன். இருந்தாலும் தெரிந்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன்.

சென்னை—கரூர் இடையே சொகுசுப் பேருந்து விடும் திட்டம்.

*வினா எண். 795— திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து—கரூருக்கு பெரம்பலூர், முசிறி வழியாக சொகுசு பேருந்து (Super Deluxe Bus) விடவேண்டும் என்ற கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுதுமுதல் இந்தப் பேருந்து விடப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து பெரம்பலூர் துறையூர், முசிறி, குளித்தலை, கிருஷ்ணராயபுரம் வழியாக கரூருக்கு விரைவுப் பேருந்து சென்றுகொண்டிருக்கிறது. இரவு நேரத்திலே ஒரே ஒரு பேருந்து கரூரிலிருந்தும், ஒரே ஒரு பேருந்து சென்னையிலிருந்தும் புறப்படுகின்றன. கிட்டத்தட்ட திருச்சி மாவட்டத்திலேயே மூன்றில் ஒரு பங்கு—6 தொகுதிகள் வரையில்—கடந்து செல்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு போக்குவரத்திலே இருக்கின்ற இடையூறைப் போக்கக்கூடிய முறையிலே அதிகப்படியான பேருந்து ஒன்றை விடுவதற்கு —சொகுசு பேருந்தை—விடுவதற்கு ஏற்பாடுகளை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஒரு நாளைக்கு இரண்டு பேருந்துகள் நான்கு நடையும், மற்றும் இரண்டு பேருந்துகள் 2 நடையும் இயக்கப்படுகின்றன. அதிலே ஏறத்தாழ பயணிகளின் பயண சதவீதம் 70 சதவீதம் தான். எனவே அதற்கு மேலும் தேவையா என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. வேண்டுமானால்—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொகுசு பேருந்து விடப்படவேண்டுமென்று கேட்கிறார்கள்—இதிலே ஒரு பேருந்தை நிறுத்திவிட்டு சொகுசுப் பேருந்தை விட நடவடிக்கை எடுக்கலாம். அதற்கு மேலும் தேவையா என்று பார்த்து, தேவையானால் இன்னொரு பேருந்தை விடுவதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியதைப் பார்த்தால் ஒரு நாளைக்கு 6 தடவைகள் அந்தத் தடத்திலே பேருந்துகள் ஓடுவதாகக் கூறுகிறார்கள், இரவு நேரத்திலே ஒரே ஒரு பேருந்தும், பகல் நேரத்திலே ஒரே ஒரு பேருந்தும் ஆக மொத்தம் நான்கு முறைகள் தான் அந்தத் தடத்திலே விரைவுப் பேருந்துகள் செல்கின்றன. ஆகவே மக்களுக்கு இருக்கின்ற கஷ்டங்கள், சிரமங்கள் அதிகமாக இருக்கிறது, பல் வேறு நேரங்களிலே போக்குவரத்து ஊழியர்களுக்கும் மக்களுக்கும் இடையே பெரிய சண்டையே ஏற்படக்கூடிய நிலைமையெல்லாம் இருக்கிறது. எனவே அதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதோடு உடனடியாக இப்போது இரவு நேரத்திலே விடக்கூடிய விரைவுப் பேருந்தை சொகுசுப் பேருந்தாக மாற்றி விடுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல் அதிலே ஒரு பேருந்தை நிறுத்திவிட்டு சொகுசுப் பெருந்தாக விடுவதற்கு நடவடிக்கை எடுக்கலாம். மேலும் ஏதாவது தேவை என்று சொன்னால் அதை ஆராய்ந்து பார்த்துவிட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, தூங்கும் வசதி கொண்ட ஒரு பேருந்தை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தயாரித்து அமைச்சருடைய தொகுதியான ஈரோட்டிற்கு விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பேருந்தை சென்னையிலிருந்து ஈரோட்டிற்கு கரூர் வழியாக விடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நேராகப் போகும் போதே பிரச்சினைகள் எல்லாம் ஏற்படுகின்றன, கரூர் வழியாகப் போனால் பலவிதப் பிரச்சினைகள் ஏற்படும். மாண்புமிகு உறுப்பினர் கூறியதை எதிர்காலத்திலே யோசித்து நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவர் அவர்களே, அந்தப் பேருந்துகளிலே கூட்டம் இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் சில நேரங்களிலே அந்த வழித் தடங்களிலே கூட்டம் இருக்கிறது. அந்தக் காலங்களிலே ஸ்பெஷல் பஸ் என்று விடுவதற்கு ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப்போவதற்கு கூட்டம் என்பதற்காக நாம் பேருந்தை இயக்குகிறபோது அங்கிருந்து வருவதற்கு பயணிகள் இல்லாத காரணத்தினால் அதிலே நட்டம் ஏற்படும். எனவே சூழ்நிலைகளைப் பார்த்து தேவையிருக்குமானால் நடவடிக்கை எடுக்கலாமே ஒழிய எல்லா இடங்களிலும் அப்படி நடவடிக்கை எடுப்பது என்பது சாத்தியமாக இருக்காது.

திரு. ஜி. கிருஷ்ணராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு வரை விடப்படும் பஸ்ஸில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி இல்லை என்று சொல்கிறார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி இல்லை என்று நான் சொல்லவில்லை. காசு கொடுத்தால் நிச்சயமாக இதில் ஏற்றிக்கொள்வார்கள். அதற்கு ஒரே ஒரு காரணம் இங்கேயிருந்து ஈரோடுக்கு மட்டும் தான் அந்த பேருந்து சென்றுகொண்டிருக்கிறது. வேறு எந்த வழி தடத்திலேயும் அந்த மாதிரி பஸ் ஓடவில்லை. எனவே அது ஒரு சாரருக்கு மட்டும் தான் ஏதோ பாரபட்சமாக செய்து விடு

வதாக ஒரு எண்ணம் வரக்கூடாது. பரவலாக அதே மாதிரி பேருந்துகள் விடப்பட்ட பின்பு அதைப்பற்றி நாம் சிந்திக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(1-50 உடுக்குறியிடாத வினாக்களையும் விடைகளையும் தனி இணைப்பில் 124—155ம் பக்கங்களில் காண்க. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகளின் (ஆ) பிரிவில் இனம் 195 ஆக வைக்கப்பெற்றுள்ளது.

## 3. தகவல் கோரல்

### (அ) பத்திரிகைச் செய்திகள்

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் டெல்லியில் நடைபெற்ற பாரதீய ஜனதா கட்சியினுடைய மாநாட்டில் அந்தக் கட்சியினுடைய தலைவர் திரு. வாஜ்பாயி அவர்கள் இந்தியாவின் பிரதமராக தென்னகத்தைச் சேர்ந்தவர் வந்தால் அதை நான் வரவேற்பேன் என்ற கருத்தை வெளியிட்டுள்ளார்கள். ஆனால் நம்முடைய தமிழகத்திலிருந்து வெளி வருகின்ற சில பத்திரிக்கைகள் அதை வாஜ்பேயி அவர்கள் வேடிக்கையாக குறிப்பிட்டார்கள் என்று போட்டுள்ளார்கள். இந்த மாமன்றத்தின் வாயிலாக நான்கேட்க விரும்புவது ஏன் தென்னகத்தில் வாழ்பவர்கள் தென்னகத்தில் இருப்பவர்கள்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தென்னகத்தில் இருப்பவர்கள் பிரதமராக வரலாம் என்று சொல்லியிருக்கிறார்.

### (ஆ) வினாக்களுக்கு விடையளித்தல்

**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவையில் கேள்வி நேரம் மிக முக்கியமான நேரம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இருப்பினும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அதற்கு விடை அளிக்கவேண்டியவர்கள் கூட வராமல் இருப்பது அவையை அவமதிப்பது ஆகாதா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைக்கு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வெளியூர் போவதாக ஏற்கனவே என்னிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவேதான் அவருடைய கேள்விகள் மட்டும்தான் ஒத்திவைக்கப்பட்டன. இரண்டு அமைச்சர்கள் கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். இதில் ஒன்றும் குறைபாடுகளுக்கு இடம் இல்லை



### (இ) உறுப்பினர்கள் விடுதி பாதுகாப்பு.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை 8½ மணிக்கு புதிய எம்.எல்.ஏ., விடுதியில் துப்பறியும் நாயும், போலீஸ்காரர்களும் திமு திமு என்று நுழைந்தார்கள். இதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சாதாரணமாகத்தான் நுழைந்து இருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கண்ணுக்கு அது திமு திமு என்று நுழைந்து இருப்பது போல் தெரிந்து இருக்கிறது. வேறு ஒன்றும் இல்லை அவர் தலைப்பை தேடுகிறார் என்று தெரிகிறது. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. நாச்சிமுத்து அவர்கள் அறையில் சில பொருட்கள் காணாமற் போய்விட்டதாக ஒரு தகவல் காலையில் என்னுடைய கவனத்திற்கு கொண்டு வந்து அது காவல் துறை அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. அதன் விளைவாக விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. அது தான் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் காவல் துறை அதிகாரிகளும் நாய்களும் வந்ததற்கான அடையாளம்.

### (ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை கொந்தளிக்கச் செய்யக்கூடிய ஒரு நிகழ்ச்சி சென்னை கடற்கரையில் நடந்து இருக்கிறது. கடலிலே இருக்கின்ற கப்பலை சோதனையிடச் சென்றவர்கள் இருக்கிறார்கள். அது சம்பந்தமாக ஒத்திவைப்பு..............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது மத்திய அரசுக்கு உட்பட்டது. மாநில அரசுக்கு உட்பட்டது அல்ல. கடல் நமக்கு பக்கத்தில் இருக்கிறதே தவிர கப்பல் நமக்கு உட்பட்டது அல்ல.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உரிமைப் பிரச்சினை கொடுத்து இருக்கிறீர்கள். அதை நான் இப்போது எடுத்துக் கொள்ளவில்லை. (குறுக்கீடு) அதை இப்போது பிரச்சனையாக்காதீர்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பாயின்ட் இல்லை. வேறு பாயின்ட் பற்றி நான் சொல்கிறேன் ** **

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்ிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான்கான் அவர்கள் கூறியவற்றை அவைக்குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்திரவிடுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு பிரச்சனையாக இருந்தாலும் விதிமுறைக்கு உட்பட்டு ஏதேனும் ஒரு விதி முறையின் கீழ் கொண்டு வரவேண்டுமே தவிர—மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் அனுபவம் பெற்றவர்கள்—ஒரு விதிமுறையின் கீழ் தங்களுடைய கோரிக்கையை எழுப்பலாமே தவிர நீங்கள் திடீர் என்று ஒன்றை கொடுத்து அதற்கு பதில் சொல்வது என்பது அவையினுடைய மரபுகளுக்கும், விதிமுறைகளுக்கும் சரியாக வராது. ஆகவே நான் கூறிக்கொள்வது மாண்புமிகு உறுப்பினர் அனுபவம் பெற்றவர். ஏதாவது ஒரு விதிமுறையில் அப்படியிருக்கிறது என்று சொன்னால், அதன்படி இப்படி செய்யவேண்டுமென்று கேளுங்கள். ஆகவே திடீரென்று ஒரு பிரச்னையை எடுத்துக்கொண்டு வற்புறுத்த முடியாது. உடனடியாக அதைச் சொல்லவும் முடியாது.

திரு. அ. ரகுமான்கான் : நான் நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோட்டீஸ் கொடுத்தால் நான் தான் அதை எடுக்க வேண்டும். நான் எடுத்துக் கொண்ட பிறகு தான் நீங்கள் பேசமுடியும். (குறுக்கீடு) அது குறித்து ஆராய்ந்து பிறகு தான் சொல்ல முடியும்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அவைக் குறிப்பிலே வரவேண்டும் என்பதற்காக பலரும் பல பிரச்னைகளை எழுப்பிவிட்டு, அவற்றை அவைக்குறிப்பிலே இடம் பெறச் செய்கிறார்கள். அது முறையல்ல. அதை தாங்கள் அனுமதிப்பது கூட சரியல்ல. ஆகவே இந்த அவையினுடைய விதிமுறைகளுக்கு ஒத்து வரவில்லையென்றால் அவற்றை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கிவிடுவது தான் முறை. எப்படியாவது அவைக் குறிப்பிலே ஏறிவிடட்டும் என்ற தன்மையில் பேசுவது கூடாது என்பது மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கானிற்கு மட்டுமல்ல, அவையிலே இருக்கிற எல்லா உறுப்பினர்களுக்கும் பொருந்துவதாகும். இப்போது ஜீரோ அவரைப் போன்ற ஒரு நிலைமை உருவாகிக்கொண்டு வருகிறது. அது கூட நல்லதல்ல. அது பாராளுமன்றத்திலே எந்தநிலைக்கு கொண்டு போய் விட்டது என்பதை நாம் அறிவோம். ஆகவே அவையின் விதிமுறைகளுக்கேற்ப பேசுவதற்கு மாண்புமிகு



உறுப்பினர்களுக்கு எல்லா உரிமைகளும் இருக்கின்றன. அவர்கள் அந்த உரிமைகளின் அடிப்படையில் எந்த விளக்கமும் பெறலாம். இதை எல்லா உறுப்பினர்களுக்கும் பொதுவாக சொல்கிறேனே தவிர, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கானிற்கு மட்டும் நான் சொல்லவில்லை. உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரச்னையை எழுப்பிவிட்டு, எப்படியாவது அவைக்குறிப்பிலே ஏறிவிடட்டும், அதற்கு பிறகு என்னவானாலும் பரவாயில்லை என்பதைப் போன்ற போக்கு கூடாது. இதனை நான் ஒருவருக்காக மட்டும் சொல்லவில்லை, எல்லோருக்கும் சேர்த்து சொல்கிறேன். ஆகவே இந்த நிலைமைகளுக்கு இடம் தராமல் இருப்பது தான் நல்லது.

## 4. அறிவிப்புகள்

### (அ) மதிப்பீட்டுக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1983–84 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (committee on Estimates) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பெற்றுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1. திரு. என். வரதராஜன்.
2. திரு. செ. சிவசாமி.
3. திரு. ந. சிவஞானம்.
4. திரு. என். வி. என். சோமு.
5. திரு. த. மாரிமுத்து.
6. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்.
7. திரு. ப. தனபால்.
8. திரு. ஏ. சி. சண்முகம்.
9. திரு. பெ. திருமாறன்.
10. திரு. இ. கணேசன்.
11. திரு. ஆ. வெள்ளைச்சாமி.
12. திரு. எஸ். ஜகத்ரட்சகன்.
13. திரு. நா. சுந்தரராஜ்.
14. திரு. எம். கண்ணன்.
15. திரு. ஏ. இராமலிங்கம்.
16. திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்.

1983–84 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், பொதுக் கணக்குக் குழுத் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

இப்பேரவையின் 211-வது விதியின்கீழ் திரு. எஸ். ஜகத்ரட்சகன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1983-84 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.
2. திரு. சோ. அழகர்சாமி.
3. திரு. பொ. விஜயராகவன்.
4. திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்.
5. திரு. கே. கல்லன்.
6. திரு. ஜே. சி. டி. பிரபாகரன்.
7. திரு. இரெ. இராசமாணிக்கம்.
8. திரு. சேலம் மு. ஆறுமுகம்.
9. டாக்டர் கே. சமரசம்.
10. திரு. தி. அன்பழகன்.
11. திரு. ஏ. எம். சேதுராமன்.
12. திரு. இரா. தாமரைக்கனி.
13. திரு. ஜே. எஸ். இராசு.
14. திரு. கோவைத்தம்பி.
15. திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்.
16. திரு க. பாரமலை.

நியமனம் செய்யப்பெற்ற வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1983—84 ஆம் ஆண்டு பொதுக் கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கபெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.



பேரவையின் 223-வது விதியின்கீழ், திரு. கே.எஸ். ஜி. ஹாஜா செரீப் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

(இ) பொது நிறுவனங்கள் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1983—84 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பெற்றுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1. திரு. கு. ரமணி.
2. திரு. மு. அம்பிகாபதி.
3. திரு. இல. பலராமன்.
4. திரு. கே. எம். தங்கமணி.
5. திரு. என். கிட்டப்பா.
6. திரு. ஆர். டி. கோபாலன்.
7. டாக்டர் கே. பி. இராமலிங்கம்.
8. திரு. ஏ. தங்கராசு.
9. திரு. சீ. சிவபிரகாசம்.
10. திரு. வே. இரா. ஜெயராமன்.
11. திரு. செ. செம்மலை.
12. திரு. க. இரா. சின்னராசு.
13. திரு. ப. சுந்தரம்.
14. திரு. கா. கோபாலகிருஷ்ணன்.
15. திரு. வி. பாலகிருஷ்ணன்.
16. திரு. கே. உச்சி.

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெறவேண்டியவர்களின் எண்ணிக்கைக்கு சமமாக இருப்பதால், 1983—84 ஆம் ஆண்டு பொது நிறுவனங்கள் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கிறேன். மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினராவார்.

இப்பேரவையின் விதி 236-ன்கீழ், திரு. செ. செம்மலை அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

### 5. கவன ஈர்ப்பு.

### திருவில்லிப்புத்தூர் ஊராட்சி ஒன்றியக் கட்டிடம் இடிந்து விழுந்தது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 54-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைத் குறித்து கவன ஈர்ப்பு. மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு ஹைதராபாத் சென்றிருப்பதால் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்களது கவன ஈர்ப்பு இன்று எடுத்துக்கொள்ளப் பெறவில்லை.

திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், டி. மணி இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் :** பேரவைத் தலைவர் அவர்களே, "திருவில்லிப்புத்தூரில் பள்ளிக் கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்ததால் சிலர் இறந்தது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூர் அருகே உள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளியின் பிரதான மச்சு கட்டிடத்தின் வடபகுதி முன் வராண்டா 25—3—1983 அன்று இரவு இடிந்து விழுந்ததாகவும் இதனால் ஒருவர் காயமடைந்து இறந்ததாகவும் மற்றொருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் இராமநாதபுரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கூறியுள்ளார். பள்ளி நடக்கும்போது கட்டிடம் இடிந்து விழுந்ததாக எவ்வித தகவலும் இல்லை. மேலும் பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் யாரும் பாதிக்கப்படவில்லை என்றும் பள்ளியும் சத்துணவு மையமும் வழக்கம்போல் செயல்பட்டு வருவதாகவும், முதன்மைக் கல்வி அலுவலர் கூறியுள்ளார்.. இடிந்து விழுந்த ஊராட்சி ஒன்றிய பள்ளிக் கட்டிடத்தை உடனடியாகச் செப்பனிட ஊராட்சி ஒன்றிய ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அப்பள்ளி மாணவர்களுக்கோ அல்லது ஆசிரியர்களுக்கோ அபாயம் ஏற்படாத வகையில் பள்ளிக் கட்டிடம் பராமரிக்கப்பட தக்க மேல்நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஊரக வளர்ச்சி இயக்குநரைக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கூடம் இடிந்து விழுந்திருப்பதை அமைச்சர் அவர்களே ஒத்துக் கொண்டிருக்கிறாகள். அவ்வளவு பலவீனமான நிலையிலே இருப்பதை



அங்கேயிருக்கக்கூடிய அதிகாரிகள் கவனிக்காமல் இருந்தார்களா? அடிக்கடி கண்காணித்து, மோசமான நிலையிலிருந்தால், உடனடியாகப் புதுப்பிக்க வேண்டுமென்று , உத்திர விடப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவை அவர்கள் ஏன் அமுல் நடத்தவில்லை? அப்படி அமுல் நடத்தாத அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பள்ளிக்கூடங்கள் ஒழுங்காக இருக்கின்றனவா என்று பார்த்து அதிலே பள்ளிக்கூடம் நடத்தவேண்டும் என்பதுதான் அரசினுடைய கொள்கையாகும். அப்படி பள்ளிக்கூடங்கள் சரியானபடி இல்லை, பாதுகாப்பாக இல்லை. அல்லது இடிந்து விடும் போலிருக்கிறது என்று பொதுப் பணித் துறை இலாகாவைச் சேர்ந்தவர்களோ, அல்லது தகுந்த பொறுப்புள்ள அதிகாரிகளோ சொல்கின்றபொழுது, அந்தப் பள்ளிகளில் மாணவர்களை வைத்துப் பாடம் நடத்தி வருவதில்லை. இதுதான் இப்பொழுது இருக்கிற முறையாகும். ஆனால், இந்தப் பள்ளிக்கூடத்தைப் பொறுத்தமட்டில், அதிகாரிகள் என்ன அறிவுரை தந்தார்கள் என்பது இங்கே குறிப்பிலே சொல்லப் படவில்லை. ஆகவே, அது குறித்து விசாரித்து, தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி செய்யும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிப்புத்தூர் அச்சன்குளம் கிராமத்தில் உள்ள பொது மக்கள் சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்னாலேயே, அங்கே பள்ளிக் கூடம் இடிந்து இருக்கிறது. அது முந்தைய ஆட்சிக்காலத்தில் கட்டிய பள்ளிக்கூடம், அதை ரிப்பேர் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். நான் சம்பந்தப்பட்ட அதிகாரியிடமும் மாவட்டத் ஆட்சித்தலைவரிடமும் பல தடவை முறையிட்டிருக்கிறேன். பகல் நேரத்தில் அன்றைக்குப் பரிட்சை நடந்திருக்கிறது. பகல் நேரத்தில் அது இடிந்து விழுந்திருந்தால் நூற்றுக் கணக்கான குழந்தைகள் இறந்திருக்கக்கூடிய சூழ்நிலை இருந்திருக்கும். ஆகவே, சம்பந்தப்பட்ட அதிகாரி சஸ்பென்ட் செய்யப்படுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, பள்ளிக்கூடங்கள் ஒழுங்காக இருக்கிறதா என்று பார்த்து அந்தப் பள்ளிகளை நடத்த வேண்டுமென்ற பொறுப்பு சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு இருக்கிறது. அதுவும் அந்தக் கட்டிடங்கள் பாதுகாப்பாக இல்லையென்ற நிலைமை இருக்குமேயானால், அப்படிப்பட்ட இடங்களிலே பள்ளிக்கூடம் நடத்தக்கூடாது, அதற்கு வெளியிடத்தில், மரத்தடியிலேகூட வைத்து நடத்திக்கொள்ளலாம் என்றுதான் பல்வேறு இடங்களிலும் நாம் கடைப்பிடித்து வருகிறோம். இந்தப் பள்ளிக் கூடத்தைப் பொறுத்தவரையில் அதிகாரிகள் என்ன அறிவுரையைச் சொன்னார்கள்? சொல்லி, யாராவது மீறியிருக்கிறார்களா என்ற விவரங்கள் என்னிடத்திலே இல்லை. அது குறித்து விசாரித்து தகுந்த நடவடிக்கையை சம்மந்தப்பட்டவர்கள் மீது எடுக்க அரசு முயற்சி செய்யும்.

(முற்பகல் 10–10)

6. அறிக்கைகள் அளித்தல்.

(அ) உரிமைக் குழு.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, திரு. ப. தீர்த்தராமன், எம். எல். ஏ. அவர்கள் உறுப்பினர்கள் தங்கும் விடுதியில் தாக்கப்பெற்றது குறித்த பிரச்சினைமீது உரிமைக் குழுவின் அறிக்கையை அளிக்கிறேன்.

2. 9–2–1983 ஆம் தேதியன்று சட்டமன்றப் பேரவையில் நடந்த நிகழ்ச்சி குறித்த பிரச்சினைமீது உரிமைக் குழுவின் அறிக்கையை அளிக்கிறேன்.

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு.

திரு. மே. அ. இராஜ்குமார் : தலைவர் அவர்களே, சட்ட விதிகள் ஆய்வுக்குழுவின் நான்காவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை அளிக்கிறேன்.

7. வரவு-செலவுத் திட்டம் 1983–84 வாக்கெடுப்பு :—
(தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண் 24—தொழில்கள்.

(ஆ) கோரிக்கை எண் 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு—தொடர்ச்சி.

திரு ஏ. சி சண்முகம்; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழில்துறை மானியத்தை வரவேற்று, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழிற் துறையின் முன்னேற்றத்திற்காக, அரும்பாடுபடும் அமைச்சரவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எல்காட் நிறுவனத்தின் வளர்ச்சி இந்தியாவிலேயே முதலிடம் பெற்றதற்காக, மாண்புமிகு அமைச்சரவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் ராணிப்பேட்டையில் பலகோடி ரூபாயில் வெடிமருந்துத் தொழிற்சாலை ஆரம்பித்ததற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தமிழக முதல்வரவர்களுக்கும் என்னுடைய நன்றியை மாவட்ட மக்களின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.





(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

திருத்தணியில் சர்க்கரை ஆலையை அமைத்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, திருச்சி மாவட்டத்தில் புகலூரில் காகித தொழிற்சாலையை ஏற்படுத்திய தமிழக அரசிற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல அகில இந்தியாவிலே, முதல் தொழிற்சாலையாக ரூ. 6 கோடியில் மக்னீஷியத் தொழிற்சாலை ஏற்படுத்த இருக்கிற தமிழக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல எங்கள் மாவட்டத்திலே, என்னுடைய தொகுதியான ஆரணி தாலுக்கா மிகவும் பின்தங்கிய தாலுக்காவாக உள்ளது. முழுக்க முழுக்க நெசவாளித் தொழிலாளிகள் உள்ளனர். வேறு எந்த தொழிலும் வளரமுடியாத நிலையில் உள்ளதால், ஆரணி தாலுக்காவை பின்தங்கிய தாலுக்காவாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளவிரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், தொழிற்துறை எந்த அளவிற்கு முன்னேறி உள்ளது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

1976–77 ஆம் அமைப்பு ரீதியில், தொழில்களின் எண்ணிக்கை 8,570. ஆனால் 1980–81 ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி 10,964 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 27.9 சதம் உயர்ந்துள்ளதை குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உற்பத்திக்கான மூலதனம் 1976–77-ல் 2,007 கோடியாக இருந்தது. 1980–81-ல் 4,292 கோடியாக உயர்ந்துள்ளது. இது மேற்சொன்ன தொழில்களில் பணியாற்றிவருபவர் எண்ணிக்கை. சுமார் 113.91 சதவீதம் உயர்ந்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1976–77-ல் 6.98 லட்சமாக இருந்தது. 1980–81-ல் 8.78 லட்சமாக அதிகரித்துள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது. 25.75 சதவீதம் உயர்ந்துள்ளது. இந்தப் புள்ளி விவரத்திலிருந்து எந்த அளவு தொழில்துறை வளர்ச்சியடைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக மாநிலம் தொழில் துறையில் முன்னேறி இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டி மத்திய அமைச்சர் திவாரி பாராட்டு தெரிவித்துள்ளார்கள்.

6–4–1982 அன்று சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு சிறு தொழிலதிபர்கள் சங்கத்தின் வெள்ளி விழா நிறைவு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மத்திய தொழில் அமைச்சர் திவாரி பேசியதாவது.

'' தொழில் துறையில் தமிழ்நாடு நல்ல வளர்ச்சி பெற்றிருக்கிறது. கிராமத் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னணியில் இருந்து வருகிறது. இந்த வகையில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது '' என்பதைச் சுட்டிக் காட்டிப் பேசியிருக்கிறார்கள்.

மேலும் ஒரு உதாரணத்தைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் தொழில் துறை முன்னேற்றத்தைப்பற்றி, மத்திய உதவி தொழிலமைச்சர் திரு. பி. ஏ. சர்மா, தஞ்சாவூரில் நிருபர்களுக்குப்பேட்டி அளித்தபோது, 2–6–1981 அன்று சுட்டிக் காட்டினார்கள். ''கடந்த இரண்டு ஆண்டுகளில் தொழில் வளர்ச்சியில் தமிழகம் முன்னேறியிருக்கிறது. தமிழ்நாட்டில் புதிதாகத் தொழில் தொடங்குவதற்கு 1980 ஆம் ஆண்டில் 52 பூர்வாங்க அனுமதிக் கடிதங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. முந்தைய ஆண்டுகளைவிட இந்த எண்ணிக்கை அதிகமாகும். தொழில்துறையில் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் தொழில்களைத் துவக்குவதற்காக மத்திய அரசு மாநிலங்களுக்கு மானியம் வழங்குகிறது. இந்த உதவியைப் பெறுவதில், மற்ற மாநிலங்களைக் காட்டிலும், தமிழகம்தான் முன்னணியில் இருக்கிறது. ரூ. 15 கோடிக்குமேல் பெற்றிருக்கிறது. இது 15 சதவீதம் ஆகும். தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி ஆரோக்கியமாக இருக்கிறது. 20,841 சிறு தொழில்களில் 955 தான் நலிந்தவை. 378 பெரிய தொழிற்சாலைகளில் 33 நிறுவனங்கள் நலிந்தவை '' என்பதை துணைத் தொழிலமைச்சர் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

1970ஆம் ஆண்டிலே ஜப்பான்நாட்டிலேயிருந்து தமிழ்நாட்டுக்கு வந்த ஒரு தொழில் நிபுணர் குழு அந்த நாட்டிலே இருக்கக்கூடிய இந்திய நாட்டினுடைய தூதுவர் இடத்திலே ஒரு அறிக்கையை கொடுத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டின் தொழில் வளங்களைப் பற்றியும் தமிழ்நாட்டிலுள்ள தொழிலாளர்கள் நிலைமையைப் பற்றியும் அதிலே தெள்ளத் தெளிவாக குறிப்பிடப்பட்டு உள்ளது. அந்த அறிக்கையைப்பற்றி, நம்முடைய சட்டமன்றத்திலே விவாதிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கொடுத்த அறிக்கையிலே ஜப்பான் நாட்டிலே உள்ள தொழில் வளர்ச்சியைப் போல வேறு எந்த நாட்டிலாவது தொழில்கள் ஆரம்பிக்கவேண்டும் என்று சொன்னால் இந்திய நாட்டிலே அதுவும் குறிப்பாக தமிழ்நாட்டிலேதான் அதற்கான சூழ்நிலைகள் உள்ளது என்று அதிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.





அதேபோல் ஸ்கில்டு லேபர், ஆற்றல் பெற்ற தொழிலாளர்கள் ஜப்பானுக்கு அடுத்தாற்போல் தமிழ்நாட்டிலேதான் இருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரங்களை அந்த அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். உலகப் புகழ்பெற்ற தொழில் துறையிலே முன்னணியிலே இருக்கக்கூடிய ஜப்பான் நாட்டினரால் பாராட்டப்பட்ட தமிழகத்தை மத்திய அரசு பயன்படுத்தி இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். 1955-லேயிருந்து இந்த மாநிலத்திலே மத்திய அரசு என்னென்ன செய்திருக்கிறது என்பதைப் பற்றி ஒன்றிரண்டைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பெரம்பூர் ரெயில் பெட்டித் தொழிற்சாலை 1955 ஆம் ஆண்டு வந்தது. நெல்வேலி நிலக்கரிச் சுரங்கம் 1956-லே வந்தது. ஹிந்துஸ்தான் டெலி பிரின்டர்ஸ் 1960-லே வந்தது. ஹிந்துஸ்தான் போட்டோ பில்ம் ஊட்டியிலே 1960-லே வந்தது. திருச்சி பாரத் ஹெவி எலக்ரிக்கல்ஸ் 1963-லே வந்தது. மெட்ராஸ் ரிபைனரிஸ் 1965-லே தொடங்கப்பட்டது. சென்னையிலே உரத் தொழிற்சாலை 1966-லே வந்தது. ஆனால் 11 ஆண்டுக்காலம் 1976 ஆம் ஆண்டு வரை மத்திய அரசு எந்தவிதமான முதலீடும் செய்து எந்தவிதமான பெரிய தொழில்களும் இந்த தமிழ்நாட்டிலே ஆரம்பிக்காமல் இருப்பது என்பது உண்மையிலே தமிழகத்தை இருண்ட காலத்திலே மத்திய அரசு வைத்திருந்தது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசின் பட்டியலில் தமிழகம் எந்த அளவிற்கு இருட்டடிப்பு செய்யப்பட்டு இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 11 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு பல்வேறு கோரிக்கைகளுக்குப் பின்பு சேலத்திலே உருக்காலையை ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த உருக்காலை இப்போது உருட்டாலையாக மாற்றப்பட்டிருக்கிறது. இந்த உருட்டாலையிலே கூட வேலைக் குறைப்பு, ஆட்கள் குறைப்பு என்று இப்போது செய்துகொண்டு இருக்கிறார்கள். முக்கியமான மூலப்பொருள் இன்று இல்லை என்று காரணத்தால் அங்கே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். இதே நிலையிலே சேலம் உருட்டாலை தொடருமேயானால், 4,5 ஆண்டுக் காலத்திற்கு உள்ளாக, அதை மூடிவிட வேண்டிய அவசியம் வந்துவிடுமோ என்ற ஐயப்பாடு நம்முடைய மத்தியிலே இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 3 ஆண்டுக் காலத்திற்கு முன்பு ராணிப்பேட்டையிலே பெல் கம்பெனியை ஆரம்பித்திருக்கிறார்கள். அதற்காக மத்திய அரசுக்கு என்னுடைய மாவட்டத்தின் சார்பாக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பெரிய தொழிலைத் துவங்கினால்தான் சிறு உப தொழில்கள் பெருகும், வேலைவாய்ப்பு அதிகமாகும். பொருளாதார மேம்பாடு அமையும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். 11 ஆண்டுக் காலமாக தமிழகத்தை புறக்கணித்த மத்திய அரசு தமிழகத்தை இனியாவது வளப்படுத்தி, தொழில்களை ஆரம்பிக்குமா என்பது ஐயப்பாடு தான். மத்திய அரசு தொழில் முதலீட்டைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் ஜே.சி.டி. பிரபாகரன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். 4 சதவீதம்தான் தமிழகத்திற்கு மத்திய அரசு வழங்குகிறது. ஆனால் உத்திர பிரதேசத்திற்கு 35 சதவீதம் ஒதுக்குகிறார்கள்

என்று சொல்லும்போது மாற்றாந்தாய் மனப்பான்மையைத்தான் மத்திய அரசு காட்டுகிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. இந்தியா ஒரே நாடுஎன்று சொல்லும்போது அதனுடைய நடவடிக்கைகளிலே ஒரே நாடாகக் கருதி, அதற்கான செயல்திறனை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்திற்கு தொழிற்சாலைகள் கொண்டு வர வேண்டும் என்று பாராளுமன்றத்திலே உறுப்பினர்களை அனுப்பினால் காங்கிரஸ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் சொல்கிறார். ராணுவம் வரும் என்று சொல்கிறார். ராணுவத் தளவாடத் தொழிற்சாலையைக் கொண்டு வர முடியாதவர்கள் ராணுவத்தினுடைய தொழில்களைக் கொண்டு வர வக்கு இல்லாதவர்கள் ராணுவம் வரும் என்று எச்சரிக்கிறார்கள். அஸ்ஸாமிலே ராணுவத்தை அனுப்பி என்ன செய்தார்கள்? இன்றும் கலவரம்தான், இன்றும் தொடர்ந்து போராட்டந்தான். ராணுவம் அங்கே ஒன்றும் செய்யமுடியவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தொழிற்சாலையைக் கொண்டு வர முடியாதவர்கள், பூச்சாண்டி காட்டுகிறார்கள். எந்த ராணுவம் வந்தாலும் சந்திக்கத் தயாராக தமிழக மக்களும், தமிழக அரசும் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசு கொண்டுள்ள தொழிற் கொள்கையை கண்டிக்க கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசு இந்த நாட்டிலே 87 மாவட்டங்களை பிற்படுத்தப்பட்ட மாவட்டங்களாக அறிவித்தது. அதிலே ஒரு மாவட்டம் கூட தமிழ்நாட்டிலே கிடையாது. அதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களும், பல்வேறு உறுப்பினர்கள், நெடுமாறன் அவர்களும், இராமலிங்கம் அவர்களும் இங்கே பலமுறை அதைக் கண்டித்துப் பேசியிருக்கிறார்கள். ஒரு மாவட்டம் கூட இல்லாதது மிகவும் வருந்தத்தக்க ஒன்றாகும். கண்டிக்கிற ஒன்றாகும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடிக்கடி எடுத்துச் சொல்லுவதைப் போன்று தமிழ்நாடு அரசு குறிப்பிடுவதைப் போன்று மத்திய அரசு அதனுடைய கொள்கையிலே மாற்றம்செய்து மாவட்டங்களைத் தேர்ந்தெடுப்பதை விட்டுவிட்டு தாலுக்காக்களை தேர்ந்தெடுக்க முன்வரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்று சொன்னால் தமிழ்நாட்டிலே பெரிய பெரிய மாவட்டங்கள் இருக்கின்றன. 100, 150 மைல் என்ற அளவிலே மாவட்டங்கள் பெரிய பெரிய மாவட்டங்களாக இருப்பதால், இந்த தமிழ்நாட்டிலே ஒரு ஜீரோ மாவட்டம், பின்தங்கிய மாவட்டம் என்று மத்திய அரசு அறிவிக்காமல் இருப்பது வருந்தத்தக்கது என்பதை மீண்டும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-20)

தமிழகத்திலே இப்படி மத்திய அரசு தொழிற்சாலைகளை ஆரம்பத்திலும், சலுகை காட்டுவதிலும் சுணக்கம் காட்டுகிறது என்றுசொன்னால், ஆரம்பிக்கப்படகூடியதொழில்களுக்கும் மத்திய அரசின் அனுமதி பெறவேண்டியிருக்கிறது. மத்திய அரசின் ஒப்பு



தல் இல்லாமல் எந்த ஒரு பெரிய தொழிற்சாலையையும் நாம் ஆரம்பிக்க முடியவில்லை. பல தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று மத்திய அரசிடத்தில் அனுமதி கேட்டுள்ளோம். அனுமதிமறுக்கப்படுகிறது அல்லது ஆண்டுக்கணக்கில்காலதாமதப்படுகிறது அல்லது கிடப்பில் போடப்படுகிறது.

மின் உற்பத்தியைப் பொறுத்தவரையில், நாம் அனுப்பியிருக்கின்ற திட்டங்களில் மத்திய அரசு அக்கறை காட்டவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 615 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வட சென்னைப்பகுதியில் 1050 மெகாவாட் திறன் உள்ள ஒரு அனல் மின் நிலையம் ஆரம்பிக்க வேண்டும் என்று நாம் அனுமதி கேட்டுள்ளோம். அது கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. அதேபோல், 206 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேட்டூர் மின் நிலையத்தை விஸ்தரித்து அதன் மூலம் 420 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் திட்டத்தையும் மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். அதுவும் கிடப்பில் போடப்பட்டு இருக்கிறது. 411 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூத்துக்குடி மின் நிலையத்தை விஸ்தரிக்கும் திட்டம்—710 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திட்டம்—மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, அதுவும் கிடப்பில் போடப்பட்டு இருக்கிறது. இன்றுள்ள மின் சாரத் தட்டுப்பாட்டைப்போக்க மேற்சொன்ன 3 திட்டங்களுக்கும் மத்திய அரசு அனுமதி கொடுத்தால் 2200 மெகாவாட் மின் உற்பத்தி தமிழகத்தில் தொடங்கப்பட்டால், தமிழகம் மின் உற்பத்தியில் அபரிமிதமான நிலையில் இருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல், தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட தொழில்களின் வருமானம் எங்கே செல்கிறது என்று சொன்னால், மத்திய அரசுக்குத்தான் செல்கிறது. மாநிலங்கள் வளமோடு ஆட்சி நடத்த வேண்டுமென்று சொன்னால்—அந்தந்த மாநில எல்லைக்குட்பட்ட அனைத்து மத்திய அரசின் தொழிற்சாலைகளும், தொழிற்சாலைகளின் வருமானமும் மாநிலங்களுக்குச் சொந்தமாக வேண்டும். அப்போதுதான் மாநில மக்களின் சுயதேவைகளைப் பூர்த்தி செய்ய மாநில அரசால் முடியும் என்பதை வலிறுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இந்த மாமன்றத்தில் தொழில் மானியக் கோரிக்கை மீது பேசும்போது குறிப்பிட்டு இருக்கிறார்கள். 'மத்திய அரசின் தொழில்கள் மாநில சர்க்காருக்குச் சொந்தமாக்கப்படவேண்டும் என்ற திட்டத்தை கொள்கை அளவில் ஒப்புக்கொள்ளவில்லையென்றாலும், மத்திய அரசு நிறுவனங்களில் இருந்து கிடைக்கும் வருமானம் அந்தந்த மாநிலங்களின் வளர்ச்சிக்குப் பயன்பட்டாக வேண்டும்' என்று எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நடைமுறையில் மத்திய அரசு அதைக் கடைப்பிடிக்கவில்லை.

அதேபோல், மேலும் ஒரு கருத்தைச் சொல்கிறார். பேரறிஞர் அண்ணா அவர்கள் தொழில் மானியத்தில் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். தொழில்கள் வரவேண்டுமென்று

சொன்னால், அதற்காக தொழிலை மத்திய சர்க்கார் எடுத்துக் கொண்டால் எப்படி? மக்கள் மத்திய சர்க்காரிடத்தில் இல்லை. மாநில சர்க்காரிடத்தில்தான் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டி மாண்புமிகு அண்ணா அவர்கள் பேசியிருக்கிறார்கள். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால் அனைத்து தொழிற் சாலைகளின் அனைத்து வருமானமும் மாநில அரசுக்குச் சொந்த மாகும் நாள்தான் மாநிலங்களின் பொன்னான நாள் ஆகும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும் அதிகாரம் மாநில அரசுக்கு இருந்தாக வேண்டும் என்பதையும், அனைத்து அதிகாரங்களும், மத்திய அரசுக்கு இருக்கக்கூடாது என்பதையும் நான் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். கொள்கைக் குறிப்பில் குறிப் பிட்டதைப்போல, ஊட்டியில் கலர் பிலிம் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் பல உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். பல முறை அது பற்றி விவாதிக்கப்பட்டு இருக்கிறது. அதை ஊட்டியில்தான் ஆரம்பிக்க வேண்டும் என்று நான் மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

வேடசந்தூர் அருகேயுள்ள பாளையத்தில் ஒரு சிமெண்ட் ஆலை 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆரம்பிக்க வேண்டுமென்று அனுமதி கோரப்பட்டது, இன்றும் மத்திய அரசின் கிடப்பிலேயே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் வேடசந்தூர் பாலசுப்பிர மணியன் அவர்கள் அடிக்கடி, பலவேறு சந்தர்ப்பங்களில் அதைப் பற்றி இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உறுப்பினர் நெடுமாறன் அவர்களும் அதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். ஆனால் இதுவரையில் மத்திய அரசு அனுமதி கொடுக்காமல் இருக்கிறது. பாராளுமன்றத்தில் கேள்வி நேரத்தில் சொல்லப்பட்டது. பாளையத்தில் அதற்கான மூலப்பொருள் கிடைக்குமானால் போர்க்கால நடவடிக்கைப் போல் அதை விரைவாகத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றுச் சொன்னார்கள். மூலப்பொருள்கள் அங்கே கிடக்கும் வாய்ப்பு இருந்தபோதிலும், அந்த வேடசந்தூர் பகுதியில் உள்ள பாளையத்தில் அந்த சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்க அனுமதி கொடுக்காதது, வருந்தத்தக்கது, கண்டிக்கத்தக்கது, என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்ட ரயில்வே கோச் பேக்டரி தமிழகத்தில் துவங்க வேண்டுமென்று எவ்வளவோ கேட்டும்கூட அதைத் தமிழகத்திற்குக் கொடுக்காமல், ஆந்திராவுக்குக் கொடுத்த மத்திய அரசை நான் இந்தநேரத்தில் கண்டிக்க கடமைப்பட்டு இருக்கிறேன். காவிரி டெல்டா பகுதியில் எண்ணெய் கிடைக்கிறது என்று பாராளுமன்றத்தில் தகவல் சொல்லப்பட்டுள்ளது பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றே தீர்க்கதரிசனமாகச் சொன்னார்கள். அந்தத்திட்டத்தை மத்திய அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.



பெங்களூரில் உள்ள எச்.எம்.டி. வாட்ச் நிறுவனத்தின் ஒரு துணை யூனிட்டை அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதால், அந்தத் துணை யூனிட்டை தமிழகத்தில் ஊட்டியில் உள்ள ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சிறுதொழில் மேம் பாட்டுக் கழகம் செய்கின்ற காரியங்களை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். 1982-83-ல் 50 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். சிறுதொழில் மேம் பாட்டுக் கழகத்திற்கு 25 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தத் தொகை போதாது. ஒதுக்கீட்டை அதிகமாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு மின் அணு கழகம் ஏற்படுத்தியதற்காகத் தமிழ் நாடு அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிலே திறமையாகப் பணி யாற்றுகிறார்கள். அதற்காக நான் அவர்களுக்குப் பாராட்டுக் களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1980-81-ல் 19 கோடியாக இருந்த உற்பத்தி 1983-84-ல் 33 கோடியாக —அதாவது 70 சதவிகிதம் உயர நடவடிக்கை மேற்கொண்டதற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

இந்திய அரசு தடையிலா வணிக மண்டலங்கள் இரண்டை அமைத்துள்ளது. ஒன்று பம்பாயிலும், மற்றொன்று குஜராத்தி லும் உள்ளன. தமிழகத்தில் மீனம்பாக்கத்தில் தடையிலா வணிக மண்டலத்தை அமைக்க தமிழக அரசு மைய அரசைக் கேட் டுள்ளது. மைய அரசு இந்தத் திட்டத்தையாவது தமிழகத்தில் ஏற்படுத்த முன்வரவேண்டும் என்று கேட்டு, வாய்ப்பினை அளித் தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சி சம்பந்தமான மானியக் கோரிக்கை மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என் னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஒரு நாட்டின் செல்வ ஆதாரத்தைப் பெருக்குவதற்குத் தொழில் வளர்ச்சி இன்றியமையாதது என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்கிறோம். தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலம் தான் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும்; வறுமையைப் போக்க முடியும் என்பதை ஒரு கொள்கையாக ஏற்றுக் கொள்கிறோம். அதை நாம் பிரகடனம் செய்திருக் கிறோம்; அதுபற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால் நடைமுறையிலே அதைச் செயல்படுத்துவதற்கு என்ன நட வடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் அது நிறை வேற்ற முடியாத பிரச்சினையாக இருக்கிறது என்பதைக் குறிப் பிட விரும்புகிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டில் 52.5 சதவீதம் மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள் என்று அரசாங்கம் ஒரு புள்ளி விவரம் கொடுத்திருக்கிறது. அது மட்டுமல்ல. தமிழ் நாட்டினுடைய மொத்த உற்பத்தியை எடுத்துக் கொண்டால் விவசாயத்தின் மூலமாகக் கிடைக்கின்ற உற்பத்தி இன்றைய தினம் 30.82 சதவீதமாக இருக்கிறது என்பதையும், தொழில் துறையிலே கிடைக்கின்ற மொத்த செல்வ ஆதார உற்பத்தி 23.45 சதவீதம் என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் தமிழ்நாட்டிலே இன்றையதினம் இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டம் எந்த அளவுக்குக் கடுமையாக இருக்கிறது என்றால் 22.5 இலட்சம் மக்கள் இன்றைய தினம் தமிழ்நாட்டிலே வேலையில்லாத மக்களாக, வேலை தேடித் திரியும் மக்களாக இருக்கிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டின் மொத்த ஜனத் தொகையை எடுத்துக் கொண்டால், 'லேபர் போர்ஸ்' என்று சொல்லக் கூடிய உழைப்பாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் 16 சதவீதம் பேர் வேலை தேடித் திரிபவர்களாக இருக்கிறார்கள். இந்திய நாட்டின் மொத்த எண்ணிக்கையோடு வைத்துப் பார்க்கும்போது, இந்திய நாட்டின் சராசரி 8.5 சதவீதமாக இருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டின் சராசரி 16 சதவீதமாக இருக்கிறது.

1981–82 ஆம் ஆண்டிலே தமிழ்நாட்டிலே இருக்கிற வேலை தேடித் தரும் ஸ்தாபனங்களில் வேலை தேவை என்று பதிவு செய்து கொண்டிருக்கிற படித்தவர்கள், பட்டதாரிகள் இப்படிப்பட்டவர்களுடைய, வேலையில்லாதவர்களுடைய எண்ணிக்கை 11,43,049 ஆக இருந்திருக்கிறது. அதிலே 1981–82 ஆம் ஆண்டில் மட்டும் புதிதாக 4,81,563 பேர்கள் வேலை தேவை என்று இந்த வேலைத் தேடித் தரும் ஸ்தாபனங்களில் பதிவு செய்திருக்கிறார்கள். இந்த நிலையை மாற்றுவதற்கு, தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு, செல்வ ஆதாரங்களைப் பெருக்குவதற்கு, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு புதிய திட்டங்கள் உருவாக்கப்பட்டு, அந்த முறையிலே செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால் அதற்கான முறைகளிலே தமிழக சர்க்காரின் கொள்கை இல்லை என்று நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டினுடைய நிலையைப் பற்றிப் பேசும்போது மத்திய அரசாங்கத்தினுடைய நிலை என்ன என்பதைப் பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும். இன்றைய தினம் மத்திய அரசாங்கம் அதிக நிதி ஆதாரங்களைத் தன்னுடைய கையிலே வைத்துக் கொண்டிருக்கிறது என்பதையும், மாநிலங்களுக்குத் தேவையான பங்கைக் கொடுக்க மறுக்கிறது என்பதையும் நான் குறிப்பிட வேண்டியதாக இருக்கிறது. அதுதான் உண்மையான நிலை. ஒரு மாநிலத்தினுடைய தொழில் வளர்ச்சி என்பது மத்திய அரசாங்கம் அந்த மாநிலத்தின் தொழில் துறையிலே எந்த அளவுக்கு முதலீடு செய்கிறதோ அந்த அளவுக்குத்தான் தொழில் வளர்



சியை ஊக்குவிக்க முடியும். தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த முடியும், என்பது அடிப்படையாக இருக்கக் கூடிய உண்மை. ஆனால் தமிழ்நாட்டிலே மத்திய சர்ககார் இதுவரையில் செய்து இருக்கிற முதலீடு என்ன என்று பார்த்தால், இந்தியா முழுவதும் மொத்தமாக எடுத்துக் கொண்டால், தொழில் துறையை எடுத்துக் கொண்டால், பொதுத் துறையில் 15,668 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10–30)

ஆனால் தமிழ்நாட்டிலே பொதுத்துறை தொழிற்சாலைகளிலே முதலீடு செய்திருப்பது 616 கோடி மட்டும்தான் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, மொத்தம் இருக்கிற முதலீட்டிலே 4 சதவீதம் மட்டுமே தமிழகத்திலே, மத்திய அரசாங்கம், பொதுத் துறைத் தொழில்களிலே, அதன் முதலீடாகச் செய்திருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதிலும் குறிப்பாக கடந்த 10 ஆண்டுகளில் தமிழகம் சம்பந்தப்பட்ட மட்டில், பொதுத் துறை தொழில்களை ஏற்படுத்த எந்தவிதமான முயற்சியினையும் மைய அரசு எடுக்கவில்லை என்றும் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, அந்த அளவுக்கு மத்திய அரசாங்கம் தமிழகத்தைப் புறக்கணிக்கிறது என்கிற நிலைமை இருப்பது உண்மை. இது குறித்து நாம் அனேக முறைகள் சட்டமன்றத்திலேயே பல்வேறு சந்தர்ப்பங்களிலே பேசியிருக்கிறோம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

பிராட்கேஜ் லைன் எனப்படுவதில். கரூர், தூத்துக்குடி அகல ரயில் பாதை சம்பந்தமாகவும் பல முறை பேசியிருக்கிறோம். ஆனால் ஒரு பயனும் இல்லை. மொத்தம் இருக்கிற ரயில் பாதைகளில் தமிழகத்தினுடைய அளவை எடுத்துக் கொண்டால் ஆறில் ஒரு பங்குதான் அகில இந்திய அளவிலேயே ரயில் பாதை இருக்கிறது. மற்ற மாநிலங்களோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளும் வகையில், குட்ஸ் சரக்குகளை அங்கேயிருந்து இங்கே கொண்டு வருவதற்கும், இங்கேயிருந்து அந்தப் பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கும், தேவையான அகல ரயில் பாதைகள் தமிழகத்திலே இல்லை. அந்த வகையிலும் தமிழகம் தொடர்ந்து புறக்கணிக்கப்படுகிற நிலைமைதான் இருக்கிறது.

அதேபோல இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ்—கலர் பிலிம்ஸ் தொழிற்சாலை தமிழகத்திலே ஏற்படுத்துவது குறித்து, கடைசி நேரத்திலே அது வேறு மாநிலத்திற்கு, உத்தர பிரதேசத்திற்கு மாற்றப்பட்டு அங்கே அமைக்கப்பட வேண்டும் என்று மைய அரசு முடிவு செய்துவிட்டது.

அதேபோல நீண்ட நாட்களாக பேசப்பட்டு வந்த சேது சமுத்திரத் திட்டம். அது இன்னும் வரவில்லை. அதேபோல, கிழக்குக்கடற்கரை பாதைத்திட்டம். அதுவும இல்லை. சென்னை மாநகரத்திலே போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக மாஸ் ரேப்பிட் டிரான்சிட் சிஸ்டம். அதை அமுல்படுத்த நடவடிக்கை எடுப்பதிலே மத்திய அரசாங்கம் மறுத்து வருகிறது என்பதும் நமக்குத் தெரியும். நமக்குக் கூடுதலாக, பாளையத்திலே ஒரு சிமெண்ட் ஆலையை வைப்பதற்கு அனுமதியை அளிக்கக்கூட மத்திய அரசு மறுத்திருக்கிறது. இப்படிப்பல வகைகளிலும் தமிழகத்தை மத்திய அரசு புறக்கணித்தே வந்திருக்கிறது.

அது மட்டுமல்ல, தொழில் துறையில் பின் தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று, தமிழகத்தில் உள்ள தாலுக்காக்களின் அடிப்படையில் அதை அறிவிக்க வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கும் மத்திய அரசு செவி சாய்க்க மறுத்ததோடு, அப்படிப் பின் தங்கிய பகுதியாக அறிவிக்கும் பணிகளை மாவட்டஅடிப்படையில்தான் செய்வோமென்றும் கூறுகிறார்கள். ஆகவே அதிலும் மத்திய அரசாங்கம் நல்ல நிலைமையை உருவாக்கவில்லை. இந்தியாவிலே தொழில் துறைக்கு 6 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ஒதுக்கிய தொகை 3,159 கோடி ரூபாய் தான். அதிலே மத்திய அரசாங்கம் நமக்கு என்று ஒதுக்கியிருக்கிற தொகை, அந்த ஒதுக்கீடு எவ்வளவு என்று பார்த்தால், 664.80 கோடி அதாவது, 665 கோடி மட்டும்தான்.

ஆகவே, தமிழகத்திலே தொழில் வளங்களை வளர்ப்பதற்காக அவர்கள் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளும், அளிக்கக்கூடிய உதவிகளும் பாரபட்சமாகவே இருக்கின்றன என்பதிலே இருவேறு கருத்துக்களுக்கு இடம் இல்லை. ஆகவே, மத்திய அரசாங்கத்தினுடைய இந்தப் புறக்கணிப்புக் கொள்கையை உறுதியாக, எதிர்த்து, தமிழகத்தில் தொழில் வளர்ச்சி அடைய, அந்த அடிப்படையில் திட்டங்களை உருவாக்க, அவைகளை நிறைவேற்ற தமிழகத்திலே இருக்கிற அனைத்துப் பகுதி மக்களையும், அனைத்து இயக்கங்களையும் ஒன்றாக இணைத்து, ஒரு எதிர்ப்பு இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்த வேண்டிய பொறுப்பு, தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆனால் மத்திய அரசு அதில் தவறியிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுவதால் மட்டும் நம் பிரச்சினை தீர்ந்து விடாது, நமக்குத் திருப்தியை அளித்துவிடாது என்றும் குறிப்பிட விரும்புகிறேன்.

அதே நேரத்தில் நமக்கிருக்கிற நிதி ஆதாரத்தை வைத்துக் கொண்டு, நம்முடைய தமிழக அரசு எந்த அளவுக்கு நம் மாநிலத்திற்குத் தேவையான தொழில் முன்னேற்றங்களைச செய்து வருகிறது; எந்த அளவிற்குத் தேவையான திட்டங்களை



உருவாக்கியிருக்கிறது என்று பார்க்கிற நேரத்தில், அதிலே நம்முடைய தமிழக அரசு இநத மாநிலத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யத் தவறியிருக்கிறது; தொடர்ந்து பழைய நிலையையே நிலவச் செய்து வருகிறது என்பதையும் நான் குற்றச்சாட்டாகக் கூறவிரும்புகிறேன். நம்முடைய தமிழக அரசு, 6 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில், முதல் ஆண்டு 1981 ஆம் ஆண்டு தொழிற்சாலைகளுக்காக ஒதுக்கியிருக்கிற தொகை. 23.23 கோடி ரூபாய்.

அடுத்து, இப்போது 1983–84-ஆம் ஆண்டு—ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்த வரையில் இது மூன்றாவது ஆண்டு. இந்த மூன்றாவது ஆண்டுத் திட்டத்திற்காக ஒதுக்கி இருக்கின்ற, மதிப்பீடு செய்திருக்கின்ற தொகை 893.44 கோடி. இதிலே தொழில் துறைக்கு ஒதுக்கி இருப்பது 40.08 கோடி. அதாவது கிட்டத்தட்ட 40 கோடிதான் மொத்தத் தொகையான 893 கோடி ரூபாயிலே இருந்து ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இந்த 40 கோடி ரூபாயிலும் பெரிய தொழில்கள், நடுத்தரத் தொழில்கள் என்று பார்க்கின்றபோது அதற்காக ஒதுக்கீடு செய்திருப்பது 24.3 கோடி ரூபாய். பொதுத் துறையிலே தொழில்களுக்காக, 1983–84-ஆம் ஆண்டிலே 23 கோடி ரூபாய் முதலீடு செய்ய அரசு கருதியுள்ளது என்று இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

மாநிலத்தின் வருவாயைப் பொறுத்த வரையில் கடந்த நான்காண்டு காலத்தை எடுத்துக்கொண்டால் எந்த அளவுக்கு உயர்ந்திருக்கின்றது என்பது தெரியும். 1980–81-ஆம் ஆண்டிலே 1,279 கோடி ரூபாயாக இருந்த மாநில அரசின் வருவாய் இன்றைய தினம் 1983–84-ஆம் ஆண்டு 1,774 கோடி ரூபாயாக உயரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. விற்பனை வரி மூலமாகக் கிடைக்கின்ற வருமானம் 710 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கின்றது. இதைத் தவிர, ஆயத்தீர்வை மூலமாக மாநிலத்திற்கு இன்றைய தினம் 155 கோடி ரூபாய் அதிகமாகக் கிடைக்கின்றது. ஆகவே, அதிகமாகக் கிடைக்கின்ற இந்தப் பணத்தை வைத்து அதிகமான தொழில்களில், அடிப்படைத் தொழில்களில் முதலீடு செய்து தொழில் வளர்ச்சியைப் பெருக்குவதற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும், தொழில் வளத்தின் மூலமாக நாட்டின் செல்வாதாரத்தைப் பெருக்குவதற்கும் நடவடிக்கை எடுப்பதில் என்ன தயக்கம்? ஏன் அந்த முறையைக் கடைப்பிடிக்கத் தவறுகிறீர்கள்? சத்துணவுக்காக 130 கோடி ரூபாய் செலவு செய்கிறோம். அதனால் சமுதாயத்திலே ஏற்படக்கூடிய விளைவு என்ன என்பது எல்லோருக்கும் தெரியும். ஐந்தாண்டுக் காலத்தையும் எடுத்துக்கொண்டால் 650 கோடி ரூபாயினை சத்துணவிற்குச் செலவு செய்கிறோம். கிராமப்புறங்களிலே உள்ள இளம் குழந்தைகளின் பசியைப் போக்குவதற்காக 130 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்குச் செலவிடுகிறோம். ஆனால், அதே தொகையினை தொழில் துறையிலே

முதலீடு செய்வதன் மூலமாக நாட்டிலே இருக்கின்ற அடிப்படையான வறுமையைப் போக்குவதற்குரிய வாய்ப்பு இருக்கின்றது. நாட்டினுடைய செல்வாதாரத்தை உயர்த்தாமல், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்களின் வருமானத்தினை உயர்த்தாமல் வறுமையை ஒழிப்பதற்குரிய சாத்தியமில்லை. ஆகவே, அந்த முறையிலே தொழில் வளர்ச்சிக்குத் தேவையான புதிய திட்டங்களை மாநிலத்திலே உருவாக்குகின்ற வகையிலே அரசாங்கத்தின் கொள்கை செயல்படுத்தப்படவேண்டும்.

அடுத்து, தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் இந்த அறிக்கையிலே பல புதிய தொழில்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. தூத்துக்குடியிலே இருக்கின்ற ஆல்கலி கெமிக்கல்ஸ் அன்ட் ஃபெர்ட்டிலைசர்ஸ் மற்றும் திருச்சி மாவட்டத்திலே அமைய இருக்கின்ற ஆஸ்பெஸ்ட்டா சிமெண்ட் ஷீட் தொழிற்சாலை பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இது தவிர சர்க்கரை ஆலைகள் அமைப்பது பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. தனியார் சர்க்கரை ஆலைகள் 4 அமைக்கப்பட இருப்பது பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆகவே, அரசாங்கத்தின் கொள்கை எங்கே சென்றுகொண்டிருக்கின்றது என்பதை இதிலே இருந்து புரிந்துகொள்ள முடியும். ஏற்கெனவே தனியார் துறைகளிலே இருக்கின்ற சர்க்கரை ஆலைகள் கரும்பினை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளைச் சுரண்டுகின்றன. ஆகவே, கூட்டுறவுத் துறையிலே சர்க்கரை ஆலைகளை அமைக்க வேண்டும் என்ற வகையில் கடந்த பத்தாண்டு காலத்தில் 12-க்கும் அதிகமான சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத்துறையிலே அமைக்கப்பட்டன. அவற்றின் மூலமாக சர்க்கரை உற்பத்தியிலே மாற்றங்களைத் தமிழகம் பெற்றிருக்கின்றது என்று அறுதியிட்டுக் கூற முடியாது. ஆனாலும், இப்போது துவங்க இருக்கின்றசர்க்கரை ஆலைகளைத் தனியார்துறையிலே துவக்குவதற்கு ஊக்கம் கொடுக்கக்கூடிய முறையிலே அரசாங்கத்தின் கொள்கை வந்திருப்பது தவறானது. அதை மாற்றி, துவங்க இருக்கின்ற சர்க்கரை ஆலைகள் அனைத்தையும் அரசாங்கத்தின் பொதுத் துறையிலோ அல்லது கூட்டுறவுத் துறையிலோ துவங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனியார்கள் மீண்டும் இந்த நாட்டிலே உள்ள கரும்பு விவசாயப் பெருமக்களைச் சுரண்டுவதற்கு நாம் அனுமதிக்கக்கூடாது. அந்தச் சுரண்டல் கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய வகையிலே இது அமைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10–40)

அடுத்து, அரசாங்கத்தினுடைய கொள்கை இதில் மட்டும் அல்ல, தமிழ்நாடு பேப்பர் அண்டு போர்ட்ஸ் நிறுவனம். 192 கோடி ரூபாய் செலவில் ஒரு பெரிய திட்டம் உருவாக்கப்பட்டு அதனுடைய பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இன்றைய தினம் நடந்துகொண்டிருக்கிறது. உலக வங்கியின் நிதி உதவி



பெற்று, உலக வங்கியிலிருந்து கடனைப் பெற்று அந்தத் திட்டம் இன்றைய தினம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதை நிர்வகிப்பது யார்? பணம் நம்முடைய அரசாங்கத்தினுடைய பணம். இன்றைய தினம் சேசசாயி பேப்பர் மில் போர்ட்ஸில் இருக்கக்கூடிய மேனேஜிங் டைரக்டர் திரு. எஸ். விஸ்வநாதன் அவர்களை இதனுடைய மேனேஜிங் டைரக்டராக நியமித்து இருக்கிறீர்கள். அவர் எப்படி அரசுத் துறையில் இருக்கக்கூடிய அரசாங்கத்தினுடைய பணத்தைப்போட்டு அரசாங்கக் கடனை வாங்கி நடத்தும் தொழிற்சாலையை நிர்வகிப்பதற்கு தகுதபெறுகிறார்? அரசிடம் தகுதியுள்ள வேறு அதிகாரிகள் கிடையாதா? ஆட்கள் கிடையாதா? ஆனால், அதே நேரத்தில் ரொம்பத் திறமையானவர் என்ற முறையில் அவரைப் போட்டு இருக்கிறீர்கள். அவர் நடத்தக்கூடிய தொழிற்சாலையில் தினசரி நடைபெற்று வருகிற நிகழ்ச்சிகள் அனைவருக்கும் தெரியும். ஈரோட்டில் இருக்கும் சேசசாயி பேப்பர் போர்ட்ஸில் தொழில் பிரச்சினை எந்த அளவுக்குத் தொடர்ச்சியாக இருந்து வருகிறது என்பது அனைவருக்கும் தெரியும்.

சமீபத்தில் திருச்சியில் இருக்கின்ற சிம்கோ மீட்டர்ஸ் தொழிற்சாலையில் தொடர்ச்சியாகப் பல்வேறு பிரச்சினைகள் எந்த அளவுக்கு வந்து அது தீர்க்கப்படாமல் இருக்கின்றன என்பதும் தெரியும். அப்பேர்ப்பட்டவர்களைக் கொண்டுபோய்ப் போட்டு இந்தத் தொழிலை நடத்து என்று சொன்னால் அரசாங்கம் எதை விரும்புகிறது என்று நான் கேட்க விரும்புகிறேன். அது மட்டும் அல்ல, தூத்துக்குடியில் இருக்கின்ற ஸ்பிக் தொழிற்சாலைக்கு யார் மேனேஜிங் டைரக்டர் என்று சொன்னால் திரு. சிதம்பரம் செட்டியார் அவர்கள். அதில் அரசினுடைய மூலதனம் 63 சதவீதம். கிட்டத்தட்ட 62 கோடி ரூபாய் மூலதனத்தை அரசு போட்டிருக்கிறது. அவர் போட்டு இருக்கக்கூடிய மூலதனம் 2 கோடி ரூபாய். ஆனால், அதை நிர்வகிக்கக்கூடிய பொறுப்பை ஒப்படைப்பது அந்த திரு. சிதம்பரம் செட்டியாருக்கு. ஆகவே, இந்த அடிப்படையில் தமிழகத்தில் இருக்கின்ற பெரும் முதலாளிகள் பன்னாட்டு மூலதனத்தோடு தொழில் நடத்தும் பெரும் முதலாளிகள், வட நாட்டில் இருக்கின்ற டாடா, பிர்லா போன்றகம்பெனி வைத்து இருக்கின்ற ஏகபோக முதலாளிகள் அவர்களுடைய கூட்டுக் கொள்ளைக்குத் தமிழ்நாட்டில் உறுதுணையாக இருக்கின்ற இந்தப் பெரும் முதலாளிகள் வசத்திலே இந்த மாதிரியான தொழில்களை நிர்வகிப்பதற்கான பொறுப்பை ஒப்படைப்பது என்பது என்ன கொள்கை என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய தமிழகத்தில் இந்த கொள்கையில் மாற்றம் வேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த முறையில் தனியார்கள் எவ்வளவு திறமைசாலிகளாக இருந்தாலும் சரி அவர்களுக்குப் பொறுப்புகளைக் கொடுப்பது சரியல்ல. அவர்கள் சொந்த இலாபத்தைப் பெருக்கிக்கொள்வதற்காகத்தான்

தங்களுடைய திறமையைப் பயன்படுத்துவார்களே தவிர, இந்தத் தொழில்கள் வளர வேண்டும், நாட்டில் முன்னேற்றம் ஏற்படவேண்டும் என்பதைப்பற்றி அவர்களுக்கு எந்தவிதமான கவலையும் இருக்க முடியாது. அதுவும் குறிப்பாக பொதுத் துறை நிறுவனங்களை எந்த அளவுக்கு நிர்ப்பந்தப்படுத்தி தங்களுடைய தொழில்கள் வளர்வதற்கு உண்டான வாய்ப்பை உருவாக்குவதற்கான முறையில் நடந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் பல்வேறு உதாரணங்கள் மூலம் குறிப்பிட்டுக் காட்ட முடியும். ஆகவே, அதற்கான நேரம் இல்லை. அதனால் தான் அதை விளக்கிப் பேசமுடியவில்லை. ஆகவே அந்த அடிப்படையில் இந்தக் கொள்கையில் மாற்றம் வேண்டும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய தமிழகத்தில் இருக்கின்ற தொழில் வளர்ச்சிக்கு மத்திய அரசு உடனடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை நாம் தொடர்ச்சியாக இந்த மன்றத்தின் வாயிலாக வற்புறுத்தி வருகின்றோம். நம்முடைய சென்னையைச் சுற்றி இருக்கக்கூடிய பகுதியில் பெட்ரோ கெமிக்கல் காம்பிளக்ஸைத் துவக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதற்காக மத்திய அரசை வற்புறுத்தி அதைத் துவக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதே மாதிரி இன்றைய தினம் சென்னையில் இருக்கக்கூடிய மெட்ராஸ் ரிபைனரியை விரிவுபடுத்த திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதைப் புதிதாக நான் குறிப்பிடவில்லை. ஏற்கெனவே நம்முடைய மன்றத்தில் ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்டு இருக்கின்ற பல்வேறு குழுக்கள், மத்திய துறையில் என்ன என்ன செய்ய வேண்டும், மாநில அரசு என்ன என்ன செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டு வற்புறுத்தியிருப்பதைத்தான் மீண்டும் இந்த மன்றத்தினுடைய நினைவுக்குக் கொண்டு வந்து அதை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நெய்வேலியில் இருக்கின்ற லிக்னைட்டை அடிப்படையாக வைத்து அங்கே கெமிக்கல்ஸ் உற்பத்தி செய்யக்கூடிய தொழில்களை விரிவுபடுத்தி நடத்துவதற்கான முறையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்ற முறையில் நாம் மத்திய அரசை நிர்ப்பந்தப்படுத்தி அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதே மாதிரி பெட்ரோ கெமிக்கல்ஸ் காம்பிளக்ஸ்; அதே மாதிரி சேதுசமுத்திரத் திட்டம் நீண்ட நாட்களாகப் பேசப்படுகிறது. அது நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்பது கேள்விக்குரிய பிரச்சினையாக இருக்கிறது. அதன் விளைவாகத் தமிழகத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் என்ன என்பது அனைவருக்கும் தெரியும். கப்பல் போக்குவரத்தில் அது எந்த அளவுக்கு நம்முடைய செலவைக் குறைக்கிறது என்பது தெரியும். ஆகவே, அந்த சேதுசமுத்திரத்திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வற்புறுத்த வேண்டும்.



தமிழகத்திலே மொத்தம் இருக்கிற 3,765 கிலோ மீட்டர் இரயில் பாதையிலே அகல ரயில் பாதை இருப்பது 876 கிலோ மீட்டர் மாத்திரம்தான். ஆகவே தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலே அதிகமான அகல இரயில் பாதை போடுவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்து மத்திய அரசை வற்புறுத்தி அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

கிழக்குக் கடற்கரை பாதை, சென்னை போக்குவரத்து நெரிசலைப் போக்குவதற்கான ரேபிட் டிரான்ஸிட் சிஸ்டம், சென்னை துறைமுகத்திலே டிரைடாக் உருவாக்குவது போன்ற பல்வேறு திட்டங்களைத் துவக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வற்புறுத்துவதோடு தமிழகத்திலே ஆயிரம் கிலோ மீட்டருக்கு அதிகமான கடற்கரை இருக்கிறது, சென்னையிலிருந்து தூத்துக்குடி வரையிலும் அந்தக் கடற்கரையிலே கோஸ்ட் பெர்ரி சிஸ்டம் துவக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதற்காக மத்திய அரசை வற்புறுத்தி, தேவையான முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே கனிவளங்கள் அதிகமாக இருக்கின்றன. லிக்னைட், மாக்னஸைட், பாக்ஸைட், இரும்புத் தாதுப் பொருட்கள், ஜிப்ஸம் இவைகள் இருக்கின்றன. கடல்நீரைக் கொண்டு உற்பத்தி செய்யக்கூடிய உப்பு போன்ற வளங்கள் இருக்கின்றன. அவையனைத்தையும் பயன்படுத்தி புதிய தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உப்பை அடிப்படையாக வைத்து சால்ட் பேஸ்டு (Based) கெமிக்கல் இண்டஸ்ட்ரிஸ் ஆரம்பிப்பதற்குத் தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயப் பொருட்களை அடிப்படையாக வைத்து தொழில்கள் துவக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பெரிய தொழில்களைத் துவக்குவது என்பது அடிப்படையான கொள்கையாக இருந்தாலும் பிற்பட்ட பகுதிகளிலே இம்மாதிரியான விவசாயப் பொருட்களை ஆதாரமாக வைத்து ரைஸ் பிரான் ஆயில் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும். சர்க்கரைக் கழிவிலிருந்து பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்வதற்கான தொழில்களை ஏற்படுத்த வேண்டும். வாழை போன்ற பொருட்களிலே வீணாகின்ற வாழைத்தண்டு, வாழை நார் இவைகளைப் பயன்படுத்தி புரத பதார்த்தத்தைத் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி சில காலங்களில் பார்த்தால் கிராமங்களில் தக்காளியை வாங்குவதற்கு யாரும் இல்லை என்ற நிலையில் வயலிலேயே போட்டு, அதை அழித்துவிட வேண்டியிருக்கிறது. ஆனால் சில காலங்களிலே பார்க்கிறபோது கிலோ 5 ரூபாய்

விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அது உபரியாகக் கிடைக்கிற காலங்களிலே அதைப் பதனப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய முறையிலே தொழிற்சாலைகளைத் துவங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே வெங்காயம்—ஆனியன்—உலர்த்தப்பட்டு பொடியாக்கப்பட்டு பல்வேறு பொருட்களாக உற்பத்தி செய்து பதனப்படுத்தப்பட்டு வெளி மாநிலங்களுக்கும் வெளி நாடுகளுக்கும் காலத்திலே சீராக அனுப்பக்கூடிய முறையிலே தேவையான ஏற்பாடுகளை செய்கிற முறையிலே தொழில்களைத் துவங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டுமென்ற முயற்சியிலே ஈடுபடுகிறபோது இந்தமாதிரியான தொழில்களையும் ஏற்படுத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய அரசாங்கம் வற்புறுத்தியிருக்கக் கூடிய கொள்கை எந்தத் தொழிலும் இல்லாத வட்டங்களை தொழில் துறையில் பின் தங்கிய வட்டங்களாக அறிவிக்கின்ற முறையில் ஏற்கனவே தமிழ்நாட்டிலே 36 வட்டங்கள் மாநில அரசினுடைய முயற்சியின் பேரால் தொழில்துறையில் பின் தங்கிய வட்டங்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையிலே மேலும், எந்தத் தொழிற்சாலையும் இல்லாத வட்டங்கள் என்ற முறையிலே உள்ள வட்டங்களைத் தொழில்துறையிலே பின்தங்கிய வட்டங்கள் என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோவை மாவட்டத்திலே அவினாசியைத் தொழில்துறையில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்க வேண்டும், அதைப்போலவே திருச்சி மாவட்டத்திலே மணப்பாறை வட்டத்தைத் தொழிற் துறையிலே பின்தங்கிய வட்டமாக அறிவிக்க வேண்டும். அதைப்போலவே குளித்தலை வட்டத்திலே எந்த ஒரு தொழிற்சாலையும் இல்லை, அந்த அடிப்படையில் அதையும் தொழிற் துறையிலே பின்தங்கிய வட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இம்மாதிரி இம்மாநிலத்திலே பல்வேறு வட்டங்கள் இருக்கின்றன. அவை அனைத்தையும் முழுமையாகப் பரிசீலனை செய்து தொழிற்துறையிலே பின்தங்கிய வட்டங்களாக அறிவித்து தொழிற்துறையில் அந்த வட்டங்கள் வளர்ச்சி பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

[முற்பகல் 10-50]

நம்முடைய அரசாங்கத்தின் கவனம் இன்றையதினம் தொழில் துறையில் முதலீடு செய்வது அவசியம் என்கிற பார்வையோடு அடிப்படையான தொழில்களை, கனரக எந்திர தொழில்களை உருவாக்குவதற்கும், அதைச் செயல்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.





திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய தொழில் துறை மானியத்தினை வரவேற்று என்னுடைய கருத்துக்களை இங்கே உங்கள் முன் வைக்க விழைகிறேன். முதலில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்ட தேனி பகுதிக்கு கூட்டுறவு நூற்பாலை வழங்கிய மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசிற்கும், மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் இன்றைய தினம் தொழில் வளர்ச்சியானது ஆற்று வழிப் போக்கைப் போல ஒழுங்காக வளர்ந்து கொண்டிருப்பதற்கு காரணம் இங்கே நிலவுகின்ற தொழில் அமைதிதான். பக்கத்திலே இருக்கிற கேரளா மாநிலத்தில், அரசாங்கமே தொழில் முனைவோர்களை கூப்பிட்டு, 'எங்கள் மாநிலத்தில் வந்து தொழில்களை துவக்குங்கள் ; அதற்கு வேண்டிய உரிமங்களை நாங்கள் வழங்குகிறோம்' என்று கூறினாலும் அங்கே தொழில்களை துவங்குவதற்கு தொழில் முனைவோர்கள் தயங்குகிறார்கள். காரணம், அங்கே தொழில் அமைதி இல்லாததுதான். மூலப்பொருள்கள் கிட்டாத நிலையில், போக்குவரத்து வசதி இல்லாத நிலையில் அங்கு அவர்கள் செல்வதில்லை. இன்றையதினம் தமிழகத்திலே, அதிலும் குறிப்பாக சென்னையைச் சுற்றியுள்ள பகுதியிலும், பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்ட வட்டங்களிலும் தொழில் முனைவோர்கள் அதிகமாக வருவதற்குக் காரணம், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசின் தொழில் கொள்கையும், இந்த ஆட்சியில் கடைபிடிக்கப்படுகிற நெறிமுறைகளும் அதன்காரணமாக ஏற்படுத்தப்பட்டுள்ளன தொழில் அமைதியும் தான். உதாரணமாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால் இன்றையதினம் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள பல ஆலைகள் மூடப்பட்டுள்ளன. அவைகள் ஒரு வருடத்திற்கும் மேலாக அந்த மாநிலத்தில் மூடப்பட்டிருக்கின்றன. நமது மாநிலத்தில் மூடப்பட்ட ஆலைகள் அதிகமில்லை. இங்கே தொழில் அமைதி நிலவுகிற காரணத்தால் தொழில் துறை வளர்ச்சிக்கு தமிழகம் ஏற்றதாய் இருக்கிறது என்று கூறினால் அது மிகையாகாது.

அதற்கடுத்தபடியாக மத்திய அரசினுடைய தொழில் முதலீடுகளில் நான்காம் இடத்திலிருக்கிற தமிழகம் மேலும் 1, 2, 3 இடங்களுக்குச் செல்லவேண்டுமென்றால் மத்திய அரசு தாராள மனப்பான்மையோடு தமிழகத்திற்கு உதவி செய்ய முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வடக்கு வாழ்கிறது, தெற்கு தொழில் துறையில் தேய்கிறது என்று சொன்னால் இங்கேயிருக்கிற அனைவருக்கும் அது தெரியும். வடபுலத்தில் இருக்கிறவர்களுக்கு கொடுக்கப்படுகிற உரிமங்கள் எத்தனை ? அதே நேரத்தில் தமிழகத்தில் இருப்பவர்களுக்கு கொடுக்கப்படுகிற தொழில் உரிமங்கள் எத்தனை ? என்பதை கணக்கெடுத்துப் பார்த்தால் அந்த நிலைமைகள் நன்றாகத் தெரிகிறது. அதற்கு

அடுத்தபடியாக தெற்கு பகுதியிலே குறிப்பாக தென் மாநிலங்களிலே மத்திய அரசின் முதலீடுகளோடு ஏற்படுத்த வேண்டிய கனரக தொழில்களை அதிகமாக ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

வடபுலத்தில் குறிப்பாக பம்பாய்க்கு அருகிலும், குஜராத்தில் வார்தாவிலும் 'ட்ரேட் ஃப்ரீ சோன்' அதாவது வணிகத் தடை இல்லாத மண்டலங்களை அங்கே ஏற்படுத்தியிருக்கிறார்கள். அத்தகைய ட்ரேட் ஃப்ரீ சோன்களை மீனம்பாக்கத்திலும், தூத்துக்குடியிலும் ஏற்படுத்த வேண்டும். அதற்கான வழிகளை ஆராய்ந்து, மத்திய அரசிடத்தில் போராடி அவற்றைப் பெறவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நடைமுறைகளுக்கு சாத்தியமான தொழில் கொள்கையை கடைபிடிக்கிற காரணத்தால், ஆங்காங்கு இருக்கிற சிறு சிறு சிரமங்களை போக்க தொழில் துறையில் இருக்கிற அதிகாரிகளும், மற்றவர்களும் வழிவகைகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசினுடைய தொழில் அனுமதி முறை அதாவது அவர்கள் தொழில்களை அனுமதிக்கிற the Licensing policy of the Government of India is worse and defective என்று கூறிக்சொள்கிறேன். ஏனென்றால் திவாரி அவர்கள் ஒரு முறை இங்கேயிருந்து சென்ற தொழில் முனைவோர்களைப் பார்த்து, 'நீங்கள் ஏன் தமிழகத்திலே தொழில்களை துவங்குகிறீர்கள்? நீங்கள் வடபுலத்து மாநிலங்களுக்கு வாருங்கள். உங்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து தருகிறோம்' என்று கூறி தமிழக தொழில் முனைவோர்களுக்கு ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்துகிற அந்த மனப்பான்மையை விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல மேற்கு வங்கத்தின் தொழில் அமைச்சர் அவர்களும், அங்கே சென்ற கானிக்கான் சவுத்திரி என்ற மத்திய அமைச்சர் அவர்களும் தொழில் வளர்ச்சி சம்பந்தமான ஒரு கூட்டத்தில் கலந்துகொண்ட போது, மந்திய அமைச்சர் அவர்கள் ஒன்றை கூறியிருக்கிறார்கள். Throw West Bengal State in Bay of Bengal அதற்கு மேற்கு வங்க அமைச்சர் பதில் அளித்திருக்கிறார்கள். அதற்கு வெஸ்ட் பெங்கால் அமைச்சர் அவர்கள் என்ன கூறியிருக்கிறார்கள்? "Throw Central Goverment out of Himalayas" என்று வெளிப்படையாகவே ஒருவருக்கொருவர் கருத்துக்களை மாற்றிக் கொள்கின்ற சூழ்நிலையிலேதான் இன்றைய தினம் மத்திய அரசிலே இருக்கிற அமைச்சர்களுக்கும், சில மாற்றுக் கட்சி அரசாங்கங்கள், குறிப்பாக, காங்கிரஸ் அல்லாத அரசாங்கங்களிலே இருக்கிற அமைச்சர்களுக்கும் உறவுமுறையிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



இன்னும் சொல்லப் போனால், இந்தத் தொழில் துறையிலே கடைபிடிக்கப்படுகிற மாற்றாந்தாய் மனப்பான்மையை எடுத்துக் கொள்வோம். தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் தொழிற்சாலை ஒரு முக்கியமான தொழிற்சாலை. அங்கு கலர் பிலிம தயாரிப்புபற்றி இப்பொழுது மத்திய அரசாங்கத்திலே இருக்கிற அமைச்சர்கள் எந்தவிதமான உறுதிமொழியும் அளிக்கவில்லையென்பதை நான் வேதனையுடன் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்திலே, இங்கே நமக்குப் பக்கத்திலே இருக்கிற மெட்ராஸ் ரெபைனரீஸ் லிமிடெட் என்ற நிறுவனம் தனது விரிவாக்கப் பணியின் காரணமாக, அதிகப்படியான நாப்தாவை உற்பத்தி செய்திருக்கிறது. அப்படி அதிகப்படியான உற்பத்தி செய்திருக்கிற நாப்தாவை, மெட்ராஸ் ரெபைனரீஸ் லிமிடெட் பக்கத்திலே உள்ள மெட்ராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்டுக்குக் கொடுத்து அதிக உர உற்பத்தியைச் செய்யவேண்டும். ஆனால், அதை விட்டுவிட்டு, இங்கே அதிகப்படியான உற்பத்தியாகிற நாப்தாவை கடல் வழியாகவும், ரெயில் மூலமாகவும் கொண்டு சென்று மதுராவிலே இருக்கிற ரெபைனரீசிலே உபயோகப்படுத்துவார்களாம். இதுதான் வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்பதற்கு உண்மையான உதாரணமாகும். அந்த வகையிலே அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிற நாப்தாவை, தமிழகத்திலேயே உபயோகப்படுத்தி, அதிக உர உற்பத்தியைச் செய்வதற்கான நிலையை அரசு மேற்கொள்ள வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக தொழில் முனைவோர்களுக்கு உதவுகின்ற சிப்காட், டிக், டிட்கோ, ஐ.டி.பி.ஐ. ஆகிய நிறுவனங்கள் தொழில் முனைவோர்களது கருத்தைக் கவனமாகக்கொண்டு, அவர்களுக்கு ஏற்ப தங்களிடம் உள்ள சட்ட திட்டங்களை நல்லபடியாக மாற்றிக்கொடுத்து அவர்களுக்கு நிதி உதவி செய்வதற்கு முன்வரவேண்டும். ஏனென்றால், நீங்கள் கடைபிடிக்கிற விதிமுறைகள் இந்தத் தொழில் துவங்குவோர்களுக்கு ஆதரவாக இல்லாமல், அவற்றைப் போக்குகின்ற நிலையிலே, இருந்தால் இங்கே இருக்கிற நிறுவனங்களுடைய போக்கு மாறிவிடும். இந்த அடிப்படை கொள்கையை மனதிலே கொண்டு, அந்த விதிமுறைகளை மாற்ற வேண்டும். அந்த விதிமுறைகள் சாதாரணமான விதிமுறைகளாக இருக்கவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

'சீரோ சோன் இன்டஸ்ட்ரியல் டிஸ்டிரிக்ட்ஸ்' என்று 85 மாவட்டங்களை மைய அரசு அறிவித்திருக்கிறது. விந்தியத்திற்கு இப்பால் எந்த மாவட்டமும் கிடையாது. அந்த வகையிலே, தமிழக அரசைப் பொறுத்தவரையிலே நாம் பிரத்தியட்சக் கண்ணோட்டத்தோடு, தொழில்களே இல்லாத வட்டங்களாகப் பிரித்து, இல்லையென்றால் தொகுதிகளாகப் பிரித்து, இங்கே

நாம் 'சீரோ இன்டஸ்டிரியல் டிஸ்டிரிக்ட்' என்பதற்குப் பதிலாக 'சீரோ சோன் இன்டஸ்ட்ரியல் டாலுக்ஸ் என்று நாம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூடுதலாக பின்தங்கிய பகுதிகள் அவ்வாறு அறிவிக்கப்படவேண்டும். குறிப்பாக, மதுரை மாவட்டத்திலே பழனி, பழனியை ஒட்டியிருக்கிற வறட்சியான பகுதியாக இருக்கிற காங்கேயம் பகுதிகள் அதே போல் உத்தமபாளையம் தாலுகாக்கள் ஆகியவைகள் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்படவில்லை. அதே போல், சட்டமன்ற உறுப்பினர் உச்சி அவர்கள் நீலகிரி மாவட்டத்திலே எந்தப் பகுதியும் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்படவில்லையென்று கூறியுள்ளார். ஊட்டியிலே போட்டோ பிலிம் தொழிற்சாலை இருக்கிறது. அதைப் போல, ஆர்டினன்ஸ் பாக்டரி இருக்கிறது. அந்த இரண்டையும் தவிர, வேறு எந்தத் தொழிலும் அங்கே கிடையாது. அந்த மாவட்டத்திலே, குறிப்பாக ஓரிரண்டு வட்டங்களைத் தொழில் துறையிலே பின்தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று விரும்பி, வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, தேனி பகுதியிலே வேளாண்மைத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு, அக்ரோ பேஸ்ட் இன்டஸ்ட்ரிஸ் சிறுசிறு தொழில்களைத் துவக்கவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

தொழில்களை வளர வைப்பதற்கும், அவற்றினுடைய குரல்வளையை நொறுக்கி விடாமல் இருக்கவும் வரி விதிப்பில் 'ரேஷனலைசேஷன் ஆப் டாக்ஸ் ஸ்டிரக்ச்சர்ஸ்' ஏற்படுத்தித் தரவேண்டும். குறிப்பாக இங்கே சிறுதொழில்களிலே உற்பத்தி செய்யப்படுகிற பல்வேறு பொருள்களுக்கு மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டு அதற்கேற்ப வரி விதிப்பு செய்யவேண்டும். இங்கே சிறு தொழிலிலே உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு நீங்கள் 12 சத விகிதம் வசூலிக்கிற நேரத்திலே கர்நாடகத்திலே சிறு தொழிலிலே உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு 4 சத விகிதம் என்று இருந்தால், அங்கே கர்நாடகத்திலே இருக்கிற அந்தத் தொழில் முனைவர்களுடைய பொருள்களுக்குத்தான் அதிகமான 'டிமான்ட்' இருக்கும். நாம் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு டிமான்ட் கிடைக்காத நிலைமையிலே இவை அழிந்து போகக்கூடிய நிலைமையிருக்கிற காரணத்தால், 'ரேஷனலேசேஷன் ஆப் டாக்ஸ் ஸ்டிரக்ச்சுர்ஸ் மஸ்ட் பி தேர்'. அதற்கான ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின் பற்றாக்குறை, மூலப்பொருள் இல்லாமை, ஸ்டிரைக் போன்றவைகளால் அவதியுறுகின்ற சிறுதொழில்களுக்கு புதிய, புதிய வரிச் சலுகைகளை வரி விதிமுறைகளை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக, தேனி பகுதியில் 120 ஆம் நம்பர் நூல் நூற்பதற்கு ஏதுவான பருத்தி அங்கே அதிகமாக விளைகின்றது. அந்தப் பருத்தியை அடிப்படையாக வைத்து அங்கே கூட்டுறவு நூற்பாலையை, ஆண்டிப்பட்டி பகுதியில் பவர்லூம் காம்ப்ளக்ஸ் ஏற்படுத்தித் துணி நெய்கின்ற அளவிற்குத் தேனி கூட்டுறவு நூற்பாலையைக் காட்டன் பேஸ்ட் இன்டஸ்ட்ரியாக ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

அடுத்தபடியாக, மாண்புமிகு முதல்வரவர்களின் திருக்கரங்களால் துவக்கப்பட்ட டாமின், தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் இலாபத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது. தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் 120 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டும் வகையில் இருக்கிறது. அந்தச் சுரங்கம் இத்தனை நாள் வரையில் பாதுகாப்பு இல்லாத சுரங்கம் என்று மத்திய அரசால், (Non—safety mine) என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக நடைபெற்று 150 இலட்சத்தை எட்டியுள்ளது. சென்ற ஆண்டில் ஒன்றரை மாதங்கள் வேலை நிறுத்தம் இருந்தும்கூட சுமார் 80 இலட்சம் சம்பாதித்திருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்பொழுது இத்தகைய கனிமத்தை, குறிப்பாகப் பூமிக்குஅடியில் வெட்டப்படும் கனிமங்களைத் தமிழக அரசே ஏற்று நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். டாமினில் 66 பேர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டு, ஒரு ஆண்டில் 9,000 கன மீட்டர் கனிமம் அவர்களால் ஏற்றுமதி செய்யப்பட்டது. டாமின் மட்டும் 10.4 சத வீதம், 1,400 கன மீட்டர் ஏற்றுமதி செய்திருக்கிறது.

டாமினில் வேலை செய்யும் தொழிலாளர்கள் பல ஆண்டுகளாகத் தனியாரிடத்தில் வேலை பார்த்தவர்கள். இப்பொழுது டாமினில் வேலை பார்க்கின்ற தொழிலாளர்களுக்குச் சிலபல சலுகைகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக செங்கற்பட்டு மாவட்டத்திலே, பைத்தூர், கோமனூர், ஏத்தாபூர் போன்ற இடங்களிலுள்ள தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை, சம்பளப் பட்டியல், லீவ் சலுகை வேண்டும் என்று கேட்கிறார்கள். உணவுக் கூடத்திற்குக் கொட்டகை வேண்டுமென்று கேட்கிறார்கள். இப்படிப்பட்ட அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்கிறார்கள். அவைகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பணி புரிகின்ற 240 தொழிலாளர்களையும் நிரந்தரம் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

புதிய புதிய கனிம நிறுவனங்களைக் கண்டு பிடிப்பதற்குத் தமிழக அரசு முன் வர வேண்டும். தொழில் அமைதியை அடிப்படையாக வைத்து தொழில் துவக்குபவர்களுக்குப் புதிய அணுகு முறைகளை வகுத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வே. இரா. ஜெயராமன்] [1983 ஏப்ரல் 18

கடைசியாக, கேரளாவிலே இப்பொழுது ஏற்படுத்தப்பட்டுள்ள நேவல் அகாடமிக்கு நிலஆர்ஜிதப்படுத்துவதில் தடங்கல் இருப்பதால், அங்கே உள்ள நில உரிமையாளர்கள் எதிர்ப்பு தெரிவித்திருப்பதால், நேவல் அகாடமியை மாண்புமிகு பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆர். வெங்கட்டராமன் அவர்கள் அதைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்து, செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கடற்கரைப் பகுதியில் உள்ள கிராமங்களில் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டு, தொழில் மானியத்தை வரவேற்று அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்தத் தொழில் துறை மானியத்திலே பேசுகின்ற வாய்ப்பினைக் கொடுத்தமைக்காக நான் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு தொழிலமைச்சரவர்கள் இன்டஸ்ட்ரியல் அட்வைசரி கமிட்டி நியமிப்பதை நான் ஏற்கனவேயும் பாராட்டியிருக்கிறேன்; இப்பொழுதும் அதை நான் பாராட்டுகிறேன். இந்தக் குழுவில் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளையும் சேர்க்க வேண்டும் என்பதை அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்தக் குழு அடிக்கடி கூடி ஆலோசனை நடத்தும் வகையிலே இந்தக் குழுவை முழுமையாக நம்முடைய அமைச்சரவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

அதைப் போலவே, ("A State council of Science and Tecl nology") ஒன்றினை அமைச்சரவர்கள் அமைக்க வேண்டும், சோவியத் நாட்டின் முன்னேற்றத்திற்குக் காரணம், மாவீரன் லெனின் ஒவ்வொரு மாநிலத்திலேயும் இதுபோன்ற குழுக்களை அமைத்த காரணத்தால் சோவியத் நாடு விஞ்ஞானத் துறையிலேயும் தொழில் துறையிலேயும் மிகப் பெரிய முன்னேற்றம் அடைந்தது. எனவே, இப்படிப்பட்ட குழுக்களை அரசாங்க ரீதியிலே அமைத்து முழுமையாகப் பயன்படுத்திய காரணத்தால் அந்த நிலை அங்கே ஏற்பட்டது. எனவே, அந்த வகையிலே (A State councilof Science andTe hnology) இந்த மாநிலத்திலே அமைக்கப்படுமேயானால், நம்முடைய சிறு தொழில்களும், பெரிய தொழில்களும், கிராமத் தொழில்களும் நவீன முறையிலே அமைக்கப்படவும், புதிய தொழில் நுணுக்கங்களை ஏற்படுத்தி இளைஞர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கவும் உதவும். அதையும் அமைச்சரவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன்

அண்டை மாநிலமான, கர்நாடக மாநிலத்தில் முதலமைச்சர். மாண்புமிகு ஹெக்டே அவர்கள் இரண்டொரு நாட்களுக்கு முன்னாக ஒரு முக்கியமான கொள்கை அறிவிப்பினை செய்திருக்கிறார்கள். ரூபாய் 50,000-லிருந்து ரூபாய் 5 இலட்சம் வரையில் சிறு தொழில்களில் முதலீடு செய்யக் கூடியவர்கள் யாராக இருந்தாலும் ஊக்குவித்து கிட்டத்தட்ட ஒரு இலட்சம் தொழில்களை அடுத்த இரண்டு ஆண்டுகளில் கர்நாடக மாநிலத்தில் அமைக்கப்போகிறோம் என்று அதற்காக ஒரு மாபெரும்



1983 ஏப்ரல் 18] (திரு, ப. நெடுமாறன்)

திட்டத்தை இந்த அரசு வகுக்கும் என்று அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதைப்போலவே, நீங்களும் ஏதேனும் ஒரு திட்டமிட்டு தமிழகத்தின் தொழில் வளர்ச்சியைப் பெருக்குவதற்கான காரியங்களைச் செய்ய வேண்டுமென்பதையும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

தமிழகத்திலே ஏற்கெனவே இருக்கின்ற தொழிற்சாலைகளிலே உற்பத்தியாகக் கூடிய பொருள்களுக்கு நம்முடைய தமிழ்நாட்டிலே 8 சதவீதம் விற்பனை வரி விதிக்கிறார்கள். ஆனால், அதே பொருளை அண்டை மாநிலத்திலேயிருந்து வரவழைத்தால் அதற்குச் சரி பாதிதான். அதாவது 8 சதவீதத்தில் பாதியாகிய 4 சதவீதம் வரிதான் விதிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களை வாங்கி விற்றால் 8 பர்சென்ட் வரி; ஆனால் வெளியே வாங்கினால் 4 பர்சென்ட் வரி என்பது நம்முடைய தொழில் வளர்ச்சிக்குக் குந்தகமாக இருக்கிறது என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அரசாங்கத்தின் முதலீடு செய்யப்பட்ட ஏறத்தாழ 17 நிறுவனங்கள் இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த 17 நிறுவனங்களில் 10 நிறுவனங்கள்தான் இலாபகரமாக இயங்குகின்றன ; பாக்கியுள்ள 7 நிறுவனங்களும் நஷ்டத்திலேதான் இயங்கி வருகின்றன என்று அமைச்சர் அவர்களே இந்த அவையிலே 1980-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5-ஆம் தேதியிலே, ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும் பொழுது அறிவித்தார்கள். இந்த ஏழு நிறுவனங்களும் என்ன காரணத்தினால் நஷ்டத்தில் இயங்குகின்றன ? அதிலும் குறிப்பாக டான்சி நிறுவனம் மிகுந்த நஷ்டத்தோடு இயங்கிக் கொண்டிருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்பதை நாம் ஆராய வேண்டும். The report of the Comptroller and Auditor—General இதைப் பற்றிச் சொல்லும் பொழுது சொல்லியிருக்கிறார்கள் ; உற்பத்தித் திறனை முழுமையாகப் பயன்படுத்தாதது ; உற்பத்தியில் கோளாறுகள் ; The lack of Inventory Control ஆகியவையே டான்சி நஷ்டத்திற்குக் காரணம் என்று ஆடிட்டர்-ஜெனரல் ரிப்போர்ட்-இலே சொல்லப்படுகிறது. இதை அமைச்சரவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்னாள் தொழில் அமைச்சரும், இன்றைக்கு இந்தியாவின் இராணுவ அமைச்சராகவும் இருக்கின்ற மாண்புமிகு திரு ஆர். வெங்கட்டராமன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, இந்த அரசுத் தொழில்கள் எப்படி இயங்க வேண்டும் என்பது பற்றிப் பரிந்துரை அளித்திருக்கிறது. அதை இந்த அரசு முழுமையாக அமல் நடத்தவில்லை. அதை முழுமையாக அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புகலூரிலே நம்முடைய அரசு, மத்திய அரசு, மத்திய அரசின் நிறுவனங்கள், உலகவங்கி ஆகியவற்றின் உதவியோடு ஒரு மாபெரும் காகிதத் தொழிற்சாலையை நாம் அமைக்க இருக்கிறோம். இதற்கு 170 கோடி ரூபாய் என்று திட்டமிடப்பட்டிருநதது. ஆனால் மத்திய அரசின் இறக்குமதி வரி சென்ற இரண்டு ஆண்டுக் காலமாக உயர்ந்து வந்துள்ளதன் காரணமாக இந்த முதலீட்டுத் தொகையில் 30 கோடி ரூபாய் உயர்வு ஏற்பட்டிருக்கிறது. இது மாநில அரசாங்கம், மத்திய அரசாங்கம் ஆகியவைகளுக்குப் பொதுவான ஒரு தொழிற்சாலை, மக்கள் துறையிலே நடத்தப்படுகின்ற ஒரு தொழிற்சாலை. ஆகவே, இந்தத் தொழிற்சாலைக்கான இறக்குமதி வரியை முழுமையாக ரத்து செய்ய வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை நம்முடைய அரசாங்கம் வற்புறுத்தும் என்று இரண்டு நாட்களுக்கு முன்பாக அரசு இந்த அவையிலே உறுதிமொழி கொடுத்தது. அதை நினைவுபடுத்தி, இந்த வரியை ரத்து செய்ய வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி இந்தத் தொழிற்சாலை சிறப்பாக நடப்பதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே நம்முடைய அமைச்சரவர்கள் தந்த அறிக்கையிலே, '' நம் மாநிலத்தில், மத்திய அரசுத்துறை நிறுவனங்களை அமைக்குமாறு தமிழ்நாடு அரசு மத்திய அரசை கேட்டுக் கொள்கிறது. எனினும், மத்திய அரசிடமிருந்து இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை. எடுத்துக் காட்டாக போதுமான அளவு அடிப்படை வசதிகள் நிறைந்துள்ள உதகமண்டலத்தில் வண்ண நிழற்படச் சுருள் தயாரிப்புத் திட்டத்தைத் தொடங்கலாம் என்று இந்த அரசு தெரிவித்தது. ஆனால் மத்திய அரசு வேறுவிதமாகத் தீர்மானித்துள்ளது. இருப்பினும், இனி நிறைவேற்றவிருக்கிற மத்திய அரசுத் துறைத் திட்டங்கள் சில இம் மாநிலத்தில் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது''.

(முற்பகல் 11-10)

என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு தொழில் அமைச்சரவர்கள் நல்ல இளைஞர். ஆக்கபூர்வமான சிந்தனை உள்ளவர் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். அதனால்தான் கேட்கிறேன். இந்த அறிக்கையிலே சொல்கிறபொழுது நீங்கள் உறுதியாக, கடுமையாக, மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துகின்ற வாசகங்களைக் கூடப் போட வில்லையே, அதற்கு என்ன காரணம் என்று கேட்க விரும்புகிறேன். மத்திய அரசாங்கம் வேறு விதமாகத் தீர்மானித்திருக்கிறது என்ற வாசகத்தைப் போட்டிருக்கிறீர்களே, பச்சையாக அதை இந்த அவைக்கு அறிவிக்கவேண்டிய கடமை உங்களுக்கு உண்டு. உத்தரப்பிரதேசத்திலுள்ள நைனிடாலுக்கு அந்தத் தொழிற்சாலையை அகற்றி விட்டார்கள் என்று வெளிப்படையாகச் சொல்வதற்கு நீங்கள் ஏன் யோசிக்கிறீர்கள் ? இப்படி இதற்கே நீங்கள் யோசிக்கின்ற நேரத்தில் இதற்காக எப்படி நீங்கள் போராடிப் பெற முடியும் என்று தான் என்னைப் போன்றவர்களுக்குச் சந்தேகம் எற்படுகிறது.



மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாஜா செரீப் அவர்கள் இரண்டொரு நாட்களுக்கு முன்பாக இங்கே உரையாற்றுகின்றபொழுது பாரதத் தாயின் புதல்வர்கள் நாம் ; பாரத மாதா யாரையும் வித்தியாசமாக நடத்த மாட்டாள் ; மத்திய அரசாங்கம் இந்த மாநில அரசாங்கத்தைப் புறக்கணிக்கவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். நாம் அத்தனை பேர்களும் பாரத மாதாவின் புதல்வர்கள் தான் என்பதில் எந்தவிதமான வேறுபாடும் இல்லை. இந்தியாவில் பிறந்த அனைவரும் ஒரு தாயின் வயிற்றில் பிறந்த மக்கள்தான். ஆனால் அதே நேரத்தில் ஒரு மாநிலத்து மக்களை மாற்றான் தாய் மனப்பான்மையோடு மத்திய அரசாங்கம் நடத்துவதிலேதான் நமக்குக் கருத்து வேறுபாடு இருக்கிறதே தவிர, இந்தியா ஒன்று என்பதில் கருத்து வேறுபாடு இல்லை.

ஊட்டி பிலிம் தொழிற்சாலை சம்பந்தமாகவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹாஜா செரீப் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். உதகமண்டலத்திலே ஏற்கனவே இருக்கக்கூடிய இந்துஸ்தான் போட்டோ ஃபிலிம் தொழிற்சாலையையும், அதிலே அமைக்கப்பட வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கின்ற கலர் யூனிட்டும் தமிழக அரசாங்கமோ அல்லது தமிழ்நாட்டிலுள்ள எதிர்கட்சிகளோ அல்லது மக்களோ இங்கே அதை அமைக்க வேண்டுமென்று வற்புறுத்தி நாம் பெறவில்லை. மாறாக, இந்தியாவில் எந்த இடத்தில் அதைத் தொடங்கலாம் எந்த இடத்தில் துவங்கினால் தேசம் முழுவதற்கும் இலாபகரமாக இருக்கும் என்பதற்காகக் கிழக்கு ஜெர்மனி நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு, அந்தக் குழுவானது இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களிலும் சுற்றி அலைந்து பரிசீலித்துப் பார்த்து, இந்தியாவில் உதக மண்டலம் அதற்கு ஏற்ற இடம் என்று அவர்கள் முடிவு செய்து, உதகமண்டலத்திலே 1955-ஆம் ஆண்டிலே இந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட்டது.

அப்பொழுதே இத்தனை ஆண்டுகள் கழித்து கலர் ஃபிலிம் யூனிட்டுகளை அமைக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. இந்தத் தொழிற்சாலை அங்கே வந்த வரலாறு இதுதான்.

இந்தத் தொழிற்சாலைக்காகத் தமிழ்நாடு அரசாங்கம் 293 ஏக்கர்கள் நிலம் கொடுத்திருக்கிறது. மேலும் கலர் ஃபிலிம் தொழிற்சாலை அமைக்கப்படுமானால், 200 ஏக்கர் அளிக்கத் தயார் என்று தமிழ்நாடு அரசாங்கம் சொடுந்திருக்கிறது. இந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான தண்ணீரை, எவ்வளவு கஷ்டங்கள் இருந்தாலும் எந்தவிதமான தடையும் இல்லாமல், அளிப்போம் என்று தமிழ்நாடு அரசாங்கம் உறுதி சொல்லி யிருக்கிறது. உதகமண்டலத்தில் இருக்கக்கூடிய காமராஜ் சாகர், பார்சன் வேலி அணையிலிருந்து தேவையான தண்ணீரை அளிக்க நம்முடைய அரசு உறுதி கொடுத்திருக்கிறது.

இந்தத் தொழிற்சாலை இப்பொழுது கறுப்பு வெள்ளை ஃபிலிம்களைத் தான் உற்பத்தி செய்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். கறுப்பு வெள்ளை ஃபிலிம்களுக்கு இப்பொழுது போதுமான மார்க்கெட் இல்லை. அந்த மார்க்கெட் கொஞ்சம்

கொஞ்சமாகச் சரிந்து கொண்டே வருகிறது. இன்னும் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு முழுமையாக கறுப்பு வெள்ளை ஃபிலிம்களுக்கு மார்க்கெட்டே இல்லாமல் போய்விடும். ஆகவே எதிர்காலத்திலே கலர் ஃபிலிம்களை இந்தத் தொழிற்சாலை உற்பத்தி செய்தால்தான் மார்க்கெட் இருக்கும். இல்லையென்றால் மார்க்கெட் இல்லை.

இந்தக் கலர் ஃபிலிம்களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய ரா மெட்டீரியல்ஸ் அங்கே கிடைக்கிறது. இதைக் கிழக்கு ஜெர்மனி நிபுணர் குழு சொல்லியிருக்கிறது. தமிழகத்திலும், தமிழகத்திற்கு அண்டை மாநிலமாக இருக்கின்ற கர்நாடகத்திலேயும் இதற்கான ராமெட்டீரியல்ஸ் கிடைக்கிறது. எனவே, இந்த இரண்டு மாநிலங்களுக்கும் அண்மையில் இருக்கக் கூடியதும், நடுவில் உள்ளதுமான உதக மண்டலத்தில் இந்தத் தொழிற்சாலையை அமைக்க வேண்டுமென்று அது தீர்மானித்ததற்கும் இதுதான் அடிப்படைக் காரணம்.

இந்தத் தொழிற்சாலையிலே உற்பத்தி செய்யப்படுகின்ற பிலிம்கள் எங்கே விற்பனை செய்யப்படுகிறது? சென்னையிலேயும்; பம்பாயிலேயும்தான் அதிகப்படியான ஸ்டுடியோக்கள் இருக்கின்றன;

சென்னையிலே 60 சத விகிதம், ஸ்டுடியோக்களும், பம்பாயில் 40 சதவிகிதம் ஸ்டுடியோக்களும் இருக்கின்றன. இந்த உதக மண்டலத்தில் உற்பத்தி செய்யப்படுகிற பிலிம்கள் இந்த இரண்டு இடங்களிலேதான் விற்பனை செய்யப்படுகிறது. ஆக இதையெல்லாம் மனதிலே கொண்டு, இந்தத் தொழிற்சாலையை உதகமண்டலத்திலே அமைக்க வேண்டுமென்று கிழக்கு ஜெர்மனி நிபுணர் குழு சொல்லியது. இதற்குப் பதிலாக இமயமலை அடிவாரத்திலே எங்கேயோ போய் அமைத்தாலும் நமக்கு ஆட்சேபணை இல்லை. உத்தரப்பிரதேசத்திலே வரக்கூடாது என்று நாம் சொல்லவில்லை. மாறாக அது ஒரு தேசிய நஷ்டம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் ஹாஜா செரிப் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தத் தொழிலுக்குத் தேவையான 'ரா மெட்டீரியல்' கிடைக்கக் கூடிய இடத்திலே, இந்தத் தொழிற்சாலையை அமைக்க வேண்டும். அங்கு உற்பத்தி செய்யப்படக் கூடிய பொருள்கள், எங்கே விற்பனை செய்யப்பட முடியுமோ, அந்த சென்னைக்கும் பம்பாய்க்கும் அருகாமையில், அமைப்பது நம்முடைய தேசத்திற்கு லாபமா, பாரத மாதாவிற்கு லாபமா, அல்லது ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலே ஒரு இடத்திலே இந்தத் தொழிற்சாலையை அமைப்பதன் மூலம் உற்பத்திச் செலவும் கூடி, விற்பனை விலையும் கூடி உற்பத்தி நஷ்டம் ஏற்படுமே! அது தவிர்க்கப்பட வேண்டாமா? அந்தக் காரணத்தினாலேதான் நாம் பாரதமாதாவின் புதல்வர் என்கிற காரணத்தாலே தான் இந்தத் தொழிற்சாலையை உதக மண்டலத்திலே அமைக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறோம். ஆனால் மத்திய தொழிலமைச்சர் திவாரி அண்மையில் ஒரு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இது ஆராயப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக





இது இப்போதைக்கு இல்லை என்று அவர் திட்டவட்டமாக அறிவித்து விட்டார்கள். இது நியாயம் தானா? இந்திய ஒருமைபாடு என்று சொல்வதற்கு இதுதானா வழி என்பதை நான். உங்களைப் பார்த்துக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஹாஜா செரீப், இந்திரா காங்கிரஸ் நண்பர்கள் எல்லோரும் சேர்ந்து குரல் கொடுத்து, இந்தத் தொழிற்சாலை உதகமண்டலத்திலே வரவேண்டுமென்று வற்புறுத்த வேண்டும். இல்லையென்று சொன்னால், இப்போது, இருக்கக் கூடிய இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலையை இன்னும் 5 ஆண்டுகளுக்குள் நிரந்தரமாக மூடவேண் வேண்டிய நிலைமை ஏற்படும். இந்தத் தொழிற்சாலையை மூடுவதனால், அங்கு வேலை பார்க்கக் கூடிய தொழிலாளர்கள் 4,000 பேர்களும், அவர்களுடைய குடும்பங்களும், பஞ்சத்தாலும் பட்டினியாலும் தவிக்க வேண்டிய நிலைமை ஏற்படும். அதையெல்லாம் மனதிலே கொண்டு, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களை, இந்தத் தொழிற்சாலையை உதகமண்டத்தில் அமைப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

அதே போல சேலம் உருக்காலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. விஸ்வநாதன் அவர்கள் பேசினார்கள். 1981 செப்டம்பரில் தொடங்கியதிலிருந்து, இது ஒரு நஷ்டம் தரும் தொழிற்சாலையாக இருந்து கொண்டிருக்கிறது. இது ஒரு பிரைமரி புரொடியூசர்ஸ் ஆக—அல்ல. A Rolling Millconverting importedsteel- வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதை வைத்துக் கொண்டு உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலையாக தான் அமைக்கப்பட்டிருக்கிறது. இதை வெளிநாட்டிலிருந்து நாம் இறக்குமதி செய்வதற்கு 325 சதவீதம் சுங்க வரி செலுத்துகிறோம். இதன் விளைவாக சேலம் உருக்காலையில் உற்பத்தி செய்யப்படும் இரும்பிற்கு, ஒரு டன் விலை ரூ. 83,000 ஆகிறது. ஒரு டன் இரும்பை ரூ. 56,000க்கு விற்கிறார்கள். இதற்கு ஆண்டுக்கு ஆகும் நஷ்டம் ரூ. 85 கோடி, இதை பரிசீலனை செய்ய வேண்டாமா? அதிலும் உற்பத்தித் திறனில் சரிபாதி தான் இன்றைக்கு உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. ஆக இதை ஒரு Integrated Primary Stainless Steel production unit ஆக மாற்றுவதன் மூலம் தான் இந்த நஷ்டத்தைச் சரி செய்ய முடியும் என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

நான் இன்னொன்றையும் இந்த அவையில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே தொழில்வளர்ச்சி குன்றியதற்குக் காரணம் தமிழ் நாட்டிலே மத்திய முதலீடு குறைந்தது ஒன்று. இங்கே மின் உற்பத்தியை நாம் அதிகரிக்க முடியாத நிலைமை இருக்கிறது. இங்கே தொழிலாளர் ஆர்வம் குன்றியது. இந்த மூன்று காரணங்களாலே தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்கு குந்தகம் ஏற்பட்டது. ஆனால் அதே நேரத்திலே நம்முடைய தமிழக அரசின் அதிகாரத்திற்குட்பட்டதாக இருக்கக் கூடிய

சுமுகமான தொழிலாளர் உறவு, சீரான வரி விதிப்பு, நில நீர் மின்சாரம் வழங்குவதில் உடனடி நடவடிக்கை, இவைகளிலே் உடனடியான நடவடிக்கைகளை எடுக்க வில்லை என்பதை வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மத்திய அரசாங்கம் முதலீடு செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு சரியானதுதான். அதன் விளைவாக தொழில் வளர்ச்சி பாதிக்கப்பட்டிருந்தாலும், உங்கள் அதிகாரத்திற்குள் இருப்பதைக் கூட நீங்கள் சரிவர செய்யவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

இப்போது உள்ள அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு எந்த மாநில அரசும் தொழில் வளர்ச்சித் திட்டங்களை நிச்சயமாக நிறைவேற்றவே முடியாது. Industrial licensing the regulation of industry arrangement ccncerning institution of finance இது போன்ற விஷயங்களில் மத்திய மாநில அதிகாரங்கள் முற்றிலுமாக திருத்தி அமைக்கப்பட்டாலொழிய எந்த மாலநிலத்திலும் தொழில் வளர்ச்சி எதிர்பார்த்தஅளவிற்கு முன்னேற முடியாது. அதிலும் இந்தியாவில் அரசியல் சட்டம் இந்தத் தொழிலை மாநிலங்களின் பட்டியலிலேதான் முதலிலே சேர்த்தது. ஆனால் 1951 ஆம் ஆண்டில் தொழில் வளர்ச்சி ஒழுங்கு முறைச் சட்டம் என்ற பெயராலே ஒரு சட்டத்தை மத்திய நாடாளுமன்றத்திலே நிறைவேற்றியதின் மூலம் இந்தத் தொழில் துறையிலே மத்திய அரசின் தலையீடு ஆரம்பம் ஆகியது. இதன் விளைவாக மத்திய அரசாங்கம் 92 சதவீதத் தொழில்களை மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்திற்குள் உட்பட்டதாக ஆகிவிட்டது என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. இதன் விளைவாக மாநிலங்கள் என்பது மாநில அரசுகள் என்பது தொழில் துறையிலே எதுவும் செய்ய முடியாத அளவிற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது. இந்திய அரசியல் சட்டத்தின் மாநிலங்களின் பட்டியலிலே 2 முக்கிய இடங்கள் இடம்பெற்றுள்ளன. Indus ri l Production and Distribution. அதாவது தொழில் உற்பத்தியும் விநியோகமும். இது மாநிலங்களின் பட்டியலிலே இருந்தது. ஆனால் 1951 ஆம் ஆண்டு தொழில் வளர்ச்சி ஒழுங்கு முறை சட்டத்ின்படி இதிலே மத்திய அரசுக்கும் பங்கு உருவாக்கி அதன் விளைவாக மத்திய அரசின் ஆணைக்குட்பட்டு தொழிற்சாலைகளில் சிலவற்றை நாடாளுமன்றத்தில் சட்டத்தின் மூலம் அவ்வப்போது ஒதுக்கிக் கொள்ளலாம். அவர்கள் இன்றைக்கு நினைத்தால் ஒரு தொழிலை மத்திய அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டது என்று அறிவிப்பார்களானால் அடுத்த நிமிஷம் மாநிலங்களுக்கு எந்த அதிகாரமும் இல்லாமல் போய்விடும். இதன் விளைவாக என்னென்ன தொழில்கள் மத்திய அரசுக்குப் போயிருக்கிறது என்று பார்த்தால் நீங்கள் அதிர்ச்சி அடைவீர்கள். கப்பல் கட்டுதல், விமானப் போக்குவரத்து, துறைமுகங்கள், இன்னும் பல்வேறு ஹெவி இன்டஸ்ட்ரீஸ் ஆகியவைகள் இன்றைக்கு மத்திய அரசினால் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. சரி, நாட்டின் பெரும் தொழிலை ஆரம்பிக்கிற அதிகாரத்தை நீங்கள்



எடுத்துக் கொண்டீர்கள். போகட்டும், ஆனால், முகத்திற்குப் பூசுகிற வாசனைப் பவுடர், சவர பிளேடுகள், லிப்ஸ்டிக்குகள், செருப்புகள், பேப்பர் போன்ற இந்த சாதாரண தொழில்களை ஆரம்பிக்கிற அதிகாரங்கள் கூட இந்த மாநில அரசுகளுக்கு இருக்கிறதா என்றால் இல்லை. அது கூட மத்திய அரசு விட்டு வைக்கவில்லை. 92 சதவீதம் பொருள்களை உற்பத்தி செய்கின்ற தொழில்களை ஆரம்பிக்கிற அதிகாரத்தை மத்திய அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. மீதி 8 சதவீதம் தொழில்கள்தான் உங்கள் கையிலே இருக்கிறது. அதற்குக் கூட நீங்கள் மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றுத்தான் செய்ய வேண்டும் என்ற பரிதாபமான நிலையிலே இருந்து கொண்டு மாநிலத்தின் தொழில் வளர்ச்சியைப் பற்றி நாம் எதுவும் பேசுவது என்பது சரியாக இருக்காது. வேடிக்கையாக இருக்கும் என்பதை நான்சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல் மத்திய அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டிய தொழில்கள், பொது மக்களின் நலனுக்கு இது அவசியம். ஆகவே இந்தத் தொழிலை கட்டுப்படுத்த வேண்டும் என்று மத்திய அரசு எண்ணுமேயானால் உடனடியாக எந்தத் தொழிலாக இருந்தாலும், மத்திய அரசாங்கம் எடுத்துக் கொள்ள கூடிய அதிகாரம் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் மாநிலங்கள் தொழில்துறையிலே எந்தவித சாதனையும் செய்ய முடியாது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதை மாற்றுவது பற்றி அண்மையிலே பெங்களூரிலே கூடிய தென்னக முதல்வர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள். இந்தியா பூராவும் இருக்கக் கூடிய எல்லா மாநில முதல் அமைச்சர்களும், அது எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் ஒன்றுபட்டு குரல் கொடுக்க வேண்டும். இங்கே இந்திரா காங்கிரஸ் நண்பர்களுக்காக நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மத்திய நாடாளுமன்றத்திலே ஒரு முக்கியமான உறுப்பினர் 1978 ஆம் ஆண்டு ஜனதாக் கட்சி ஆட்சியிலே இருந்தபோது, மார்ச் மாதம் 1 ஆம் தேதி ஒன்றைச் சொன்னார். "I was the Minister in the state for ten years, and wanted to cry out. Now I have the chance. அதாவது மாநிலங்கள் தொழில் துறையிலே எப்படி எல்லாம் பின் தங்கிக் கிடக்கின்றன, மாநிலங்களின் உரிமைகள் எப்படி' எல்லாம் பறிக்கப்பட்டு வருகின்றன என்பதை 10 ஆண்டுக் காலம் நான் ஒரு மாநிலத்தின் அமைச்சராக இருந்து பெற்ற அனுபவத்தின் அடிப்படையிலே சொல்கிறேன். அப்போது என்னால் சொல்லமுடியவில்லை. இப்போது எனக்கு சந்தர்ப்பம் கிடைத்து இருக்கிறது. ஆகவே "I cry out" என்று நான்இங்கே புலம்புகிறேன் என்று ஒரு முக்கியமான உறுப்பினர் சொன்னார். அவர் யார் என்பதை நான் சொன்னால், இந்திரா காங்கிரஸ் நண்பர்கள் அதிர்ச்சி அடைய மாட்டார்கள் என்று நம்புகிறேன். தற்போது இந்திய ராணுவத்துறை அமைச்சராக

இருக்கும் மாண்புமிகு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தான் ஜனதா ஆட்சியின்போது மத்திய நாடாளுமன்றத்தில் இப்படிப் பேசினார்கள். ஆகவே, இப்படி மாநிலங்களில் உரிமைகளைக் கேட்பது தவறு என்று தயவுசெய்து இனிமேலாவது சொல்லக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது முக்கியமான பிரச்னை. ஜீவநாடியான பிரச்சினை இன்றைக்கு கட்சிக் கட்டுப்பாட்டுக்குள்ளே நின்று நீங்கள் பேசினாலும், ஆர். வி. போன்றவர்கள் தைரியமாக மத்திய நாடாளுமன்றத்தில் இந்தக் கருத்தை ஒலித்து இருக்கிறார்கள். இன்றைக்கு ஒலிப்பார்களா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால் ஒலித்து இருக்கிறார்கள் என்பதை உங்களின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

இறுதியாக ஒன்றை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டுவர விரும்புகிறேன். நம்முடைய தமிழகத்தின் தொழில் வளர்ச்சி என்பது மின்சார உற்பத்தியோடு இணைந்து இருப்பது. மின்சார உற்பத்தி இல்லையென்றால் தொழில் வளர்ச்சி இல்லை. ஆனால் தமிழகம் இன்றைய தினம் மின்சாரத் துறையிலே பற்றாக்குறை மாநிலமாக இருக்கிறது. அதை மாற்றுவதற்கு என்ன வழி என்பதையும் ஆராயவேண்டும். கல்பாக்கத்திலே அணு மின் நிலையம் அமைக்கப்படும். அது வந்தால் ஓரளவிற்குப் பற்றாக்குறை தீரும் என்று தமிழக மக்கள் எண்ணி, அதற்காகப் போராடி அந்த அணு மின்நிலையம் அமைக்கப்பட்டது. அதில் முதல் யூனிட்டில் 99 சதவீதம் வேலைகள் முடிந்து விட்டன. இரண்டாவது யூனிட்டில் 85 சதவீதம் வேலைகள் முடிந்து விட்டன. ஆனால் மின்சார உற்பத்தி செய்யப் பெறவில்லை. அதற்குக் காரணம் என்ன? அதற்குத் தேவையான 'ஹெவி வாட்டர்' 240 டன் பெறுவதற்கு வழி இல்லாததால், எல்லா வேலைகளும் கிட்டத்தட்ட முடிந்துவிட்ட நிலையில் அந்த அணு மின் நிலையம் இயங்காமல் இருக்கிறது. ஆனால், அதற்குப் பின் துவங்கப்பட்ட குஜராத் மாநிலத்தில் உள்ள அணு மின் நிலையம் உற்பத்தியைத் தொடங்கிவிட்டது. ஆனால் இந்த கல்பாக்கம் அணு மின்நிலையம் மட்டும் இன்னும் உற்பத்தியைத் துவங்கவில்லை. இதற்கு என்ன காரணம்? அதை நிவர்த்தி செய்யவும், மத்திய அரசோடு அதற்காகத் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கவும் இந்த அரசு முன்வர வேண்டும் என்று நான் வற்புறுத்திக் கூறவிரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

புனல் மின் நிலையங்கள் அத்தனையும் நாம் ஏறத்தாழ அமைத்தாகிவிட்டது. இனி அனல் மின் நிலையங்களைத் தான் நாம் எதிர்பார்த்து இருக்கவேண்டும். ஏற்கனவே உள்ள அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரி நமக்குக் கிடைக்கவில்லை. ஆந்திராவில் உள்ள சிங்கரேணி



நிலக்கரி நிறுவனம் மத்திய அரசுக்கே, இரயில்வேத் துறைக்கே அங்கிருந்து நிலக்கரி தர இயலாது, எங்களிடத்தில் கிடைக்கும் நிலக்கரி ஆந்திர மாநிலத்திற்குத்தான் போதுமானதாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருக்கின்ற நேரத்தில் சிங்கரேணியில் இருந்து தமிழ் நாட்டிற்கு நிலக்கரி எதிர்பார்ப்பது என்பது முடியாது. தமிழ் நாட்டிற்கு நிலக்கரி வேண்டும் என்று சொன்னால், பீகார், மேற்குவங்கம் போன்ற மாநிலங்களில் இருந்துதான் நாம் கொண்டு வரமுடியும். அப்படிக் கொண்டுவருவதற்கு நமக்கு சீரான போக்குவரத்து வசதி இல்லை. அதிலே பல சிரமங்கள் இருக்கின்றன. இந்த நிலையில் தூத்துக்குடியில் தனியார் துறையில் 100 மெகாவாட் தெர்மல் ஸ்டேஷன் ஏற்படுத்துவதற்கு எப்படி அனுமதி கொடுத்தீர்கள் என்பதை அறியவிரும்புகிறேன். அதற்குப் போதுமான நிலக்கரி கிடைக்குமா? அப்படி வரும் வழி இல்லாத நிலையில் அதைக் கொடுத்து என்ன பிரயோசனம்? ஆகவே, நிலக்கரி இல்லாமல் வேறு ஏதேனும் பொருள்களை, ப்யுயுலை உபயோகித்து, மின் உற்பத்தி செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதற்குப் பல நிபுணர்கள் சொன்னயோசனைகளை இந்த நேரத்தில் இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

குப்பையில் இருந்து மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்று அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளில் இம்முறை வெற்றிகரமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். 1000டன் குப்பையைக் கொண்டு 20 மெகாவாட் மின் உற்பத்தி செய்யலாம் என்று கூறுகிறார்கள். அப்படியானால் நம்முடைய சென்னையில் 2,000 டன் குப்பை தினமும் கிடைக்கிறது என்று சொல்கிறார்கள். அதன் மூலம் 40 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். முதலில் செய்ய முயற்சித்தால் பின்னர் அதன் அடிப்படையில் சேலம், திருச்சி, கோவை, மதுரை போன்ற பெரிய நகரங்களிலும் மின் உற்பத்தி செய்யலாம். இதன்மூலம் நகரங்களும் சுத்தமாகும். இந்தத் திட்டத்தை அரசு பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.... ..

(முற்பகல் 11–30)

இரண்டாவதாக நம்முடைய தமிழ்நாட்டில் ஏராளமான சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அந்த ஆலைகளிலிருந்து கரும்புச் சக்கை நிறைய கிடைக்கிறது. கரும்புச் சக்கையை வைத்து மின்சாரம் உற்பத்தி செய்கிற திட்டம் இருக்கிறது. அதைப்போன்ற திட்டங்களை வேண்டுமென்றால் நீங்கள் தனியார் துறைக்குக் கொடுத்து, அவர்களை உற்பத்தி செய்யச் சொல்லலாம். இப்படிப்பட்ட பொருள்களிலிருந்து அரசாங்கம் மின்சாரத்தைத் தயார் செய்ய நிறையச் செலவாகும் என்ற அச்சம் இருந்தால் இத்தகைய திட்டங்களைத் தனியாருக்குக் கொடுக்கலாம்; அவர்களை மின்சாரம் உற்பத்தி செய்யச் சொல்லலாம்.

மூன்றாவதாக ஆல்ககாலை எரிபொருளாகக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் இருக்கிறது. நம்மிடம் ஏராளமாக சாராய உற்பத்தி ஆலைகள் இருக்கின்றன. ஆகவே அதை நாம் செய்யலாம். அதைப்போன்று பல்வேறு திட்டங்களைப் பரிசீலனை செய்து மின்சார வாரியத்தின் சார்பிலோ அல்லது தொழில் துறையின் சார்பிலோ அல்லது இரண்டும் இணைந்தோ ஒரு மானிட்டரி கமிட்டி அமைத்து செயல்படலாம். அந்தக் கமிட்டியிலே தொழில் அதிபர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், மின்சார வாரிய அதிகாரிகள், அரசு அதிகாரிகள் உறுப்பினர்களாக இருக்கலாம். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மின்சார உற்பத்தி நிலையங்களை, அனல் மின் உற்பத்தி நிலையமாக இருந்தாலும், புனல் மின் உற்பத்தி நிலையமாக இருந்தாலும், அந்தக் குழு பார்வையிட்டு, அவை எப்படி இயங்குகின்றன என்பதைப் பரிசீலனை செய்து, அவ்வப்போது சட்டமன்றத்திற்கு அறிக்கை கொடுக்க வேண்டும். அந்த அறிக்கை மீது சட்டமன்றம் விவாதிக்கிற நிலைமை வந்தால்தான் அந்த மின்சார உற்பத்தி நிலையங்களில் வேலை பார்க்கிற அதிகாரிகள் சற்று ஒழுங்காக வேலை பார்ப்பார்கள்; எல்லாமே ஒழுங்காகும். இதன்மீது மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி, என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

திரு. இ. முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற தொழில் குறித்த மானியக் கோரிக்கையினை ஆதரித்துப் பேசுகின்ற வாய்ப்பைக் கொடுத்ததற்காக முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்தியாவில் வேறு எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத அளவுக்குத் தொழில் அமைதியும், தொழிலைப் பேணுகின்ற தன்மையும், தொழிலாளர்களைப் பாதுகாக்கும் தன்மையும் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில்தான் ஏற்பட்டுள்ளது என்பதை மனச்சாட்சியுள்ள யாரும் மறுக்க முடியாது என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்கிறேன்.

இதன் காரணமாகத் தமிழ்நாட்டில் தொழில்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டிருக்கிறது. எந்த அளவுக்குத் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி பெருகி வருகிறது என்று பார்த்தால், 1976—77-ஆம் ஆண்டில் 8,570 ஆக இருந்தது இன்றையதினம் 1980—81-ஆம் ஆண்டில் 10,964-ஆக உயர்ந்துள்ளதை அனைவரும் அறிவார்கள். அதைப்போன்று தற்போது தனியார் துறையிலும், கூட்டுத் துறையிலும் அரசுத் துறையிலும் பல்வேறு தொழில்கள் பெருகி வருவதை அனைவரும் அறிவார்கள். அதே நேரத்தில் தனியார் துறையில் உற்



பத்தி செய்யப்படுகின்ற பொருள்களோடு போட்டிபோடுகின்ற அளவுக்கு அரசுத்துறையில் உற்பத்தியாகும் பொருள்களும் அமைந்திருக்கின்றன; அந்த அளவுக்கு வளர்ந்து வருகின்றன என்பதை அறிந்து, என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுத் துறையில் உள்ள தொழில்களில் இன்றைக்கு அரசுக்கு அதிக இலாபம் வருகின்ற தொழிலாகவும், மக்களுக்குப் பயன்படுகின்ற தொழிலாகவும் இருப்பது தமிழ்நாடு சிமென்ட் நிறுவனம். அதனுடைய பொறுப்பில் இன்றையதினம் ஆலங்குளத்திலும், அரியலூரிலும் இரண்டு பெரிய சிமென்ட் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. அதைப்போன்று தமிழ்நாடு ஆல்கலி தொழில் நிறுவனம் சிறந்தமுறையில் இயங்கி வருகிறது.

தமிழ்நாட்டின் சிமென்ட் தேவையைக் கருத்திற்கொண்டு அரசு வெளிநாட்டிலிருந்து போதிய அளவுக்கு சிமென்ட் இறக்குமதி செய்து ஏழை எளிய மக்களுக்கு வழங்கிவருவதை நான் பாராட்டுகிறேன்.

இன்றைக்கு நெல்லை மாவட்டம் தமிழ்நாட்டில் தொழில் துறையில் வளர்ந்துவருகின்ற ஒரு மாவட்டமாக இருக்கிறது. பல்வேறு தொழில்கள் அங்கே தொடங்கப்படுவதற்கு ஏற்ற வாய்ப்புகளும் போதிய நிலங்களும் கச்சாப் பொருள்களும் அதிகமாகக் கிடைக்கின்றன. குறிப்பாக தூத்துக்குடி பகுதி ஒரு தொழில் நகரமாக உருவாகிக்கொண்டு வருகிறது. அங்கே ஒரு தொழில் தொகுதியை அமைக்க அரசு ஏற்கனவே அறிவித்திருந்தது. அதற்காக அந்த மாவட்ட மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் அரசு அதற்காக கையகப்படுத்திய நிலம் சம்பந்தமாக ஒருசிலர் இன்றையதினம் ஹைகோர்ட்டுக்குச் சென்று ஸ்டே வாங்கியிருப்பதாக அறிகிறேன். அந்த வழக்கைத் துரிதப்படுத்தி, விரைவிலே அந்தத் தொழில் தொகுதியைத் தூத்துக்குடியிலே ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய தினம் மத்திய அரசு தமிழகத்தில் இருக்கிற எந்த ஒரு மாவட்டத்தையும் தொழில் துறையில் பின் தங்கிய மாவட்டமாக அறிவிக்காவிட்டாலும், இங்கே நம்முடைய அமைச்சர் அவர்கள், தொழில் துறையில் பின் தங்கிய பல வட்டங்களை அறிவித்து, அதன் மூலமாக, அங்கே தொழில் துவங்க முன் வருபவர்களுக்கு 15 சதவீதம் உதவித் தொகையைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவிலே நெல்லை மாவட்டத்தில் நாங்குனேரி தாலுக்கா தொழில் துறையில் பின் தங்கிய தாலுக்காவாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் மூலமாக அங்கே தொழில் முனைவோருக்கு அரசு மானியம் கிடைத்து வந்தது. ஆனால் ராதாபுரம் தனித் தாலுக்காவாக, நாங்குனேரி தாலுக்காவிலிருந்து பிரிந்து போனதற்குப் பிறகு, அந்தச் சலுகை அங்கே கிடைப்பதில்லை. ஆகவே, ராதாபுரம் தாலுக்காவைத் தொழில் துறையின் பின் தங்கிய வட்டமாக அறிவித்து, அதன் மூலமாக அங்கே தொழில் முனைய வருபவர்களுக்கு அரசு மானியம் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல ராதாபுரம் தாலுக்காவிலே உள்ள வன்னியூர் பகுதியில்சிமெண்டுக்குத்தேவையான மூலப்பொருள் கிடைக்கிறது. அதனைப் பயன்படுத்தி அங்கே ஒரு மினி சிமெண்ட் தொழில் சாலையை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல ராதாபுரம் பகுதியிலே உள்ள கடற்கரையிலே வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற மணல் அதிகமாகக் கிடைக்கிறது. ஒரு சில தனியார்கள் அதனை ஏற்றுமதி செய்து வருகிறார்கள். அந்த மணலைப் பயன்படுத்தி, சம்பந்தப்பட்ட ஏதாவது ஒரு தொழிற்சாலையை அங்கே ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல ராதாபுரம் தொகுதியிலே உள்ள சாத்தான்குளம் பகுதியில் சுண்ணாம்புக்கல் அதிகமாகக் கிடைக்கிறது என்று அரசு ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்திருக்கிறது. அங்கே அந்த சுண்ணாம்புக்கல்லைப் பயன்படுத்தி, ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இறுதியாக ராதாபுரம் தொகுதியை, தொழில் துறையில் பின் தங்கிய தாலுக்காவாக அறிவிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து, என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.

திரு. **துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறை குறித்து நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே வைத்திருக்கிற மானியக் கோரிக்கையின் மீது, நான் சார்ந்திருக்கிற முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு மாநிலத்தினுடைய முன்னேற்றத்தில் முக்கிய பங்கு வகிப்பது தொழில் துறையாகும். தொழில்கள் வளர்ந்தால் தான் வேலையில்லாத் திண்டாட்டம் போகும். வேலையில்லாத் திண்டாட்டம் போனால்தான், மக்களுக்கு வேலை கிடைக்கும், அவர்களுக்கு வருவாயும் அதிகமாகக் கிடைக்கும். அத்தோடு அவர்களுடைய வாங்குகிற சக்தியும் அதிகமாகும். அது மட்டும் அல்லாமல் தொழில்கள் பெருகப் பெருக உற்பத்திப் பொருள்கள் அதிகப்படுகின்றன, எனவே விலைவாசி குறைகிறது. எனவே இந்த டிரேட் சர்க்கிளை வைத்து பார்க்கிறபோது தொழிலில் ஒவ்வொரு மாநிலமும் வளர்ச்சி பெற வேண்டும்.



ஆனால் துரதிருஷ்டவசமாக தமிழகத்தைப் பொறுத்த வரையில், ஒரு மந்தமான போக்கு தமிழகத்தில் இருக்கிறது என்பதை நான் மட்டும் அல்ல, எல்லா அங்கத்தினர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு அதிலே எந்த விதமான வேகத்தையும் காட்டவில்லை என்பது வருத்தத்திற்குரிய ஒரு செய்தி ஆகும்.

கேட்டால் சொல்கிறார்கள், நம்முடைய தமிழகம் தொழில் துறையில் பின் தங்கியிருப்பதற்குக் காரணம், மத்திய அரசு தான் என்று, ஒரே அடியாக கையைக் காட்டிவிட்டு, அமைதியிலே ஆழ்ந்துவிடுகிறார்கள். இந்த மாமன்றத்திலே கூட, கவர்னர் அவர்கள் உரையை வைக்கின்ற நேரத்தில், இது குறித்து பல்வேறு விவாதங்கள் எழுந்த நேரத்தில், மத்திய அரசுதான் தமிழகத்தில் தொழில் துறையின் மந்தப் போக்குக்குக் காரணம் என்று அப்போது சுட்டிக்காட்டப்பட்டது. மத்திய அரசு அதற்குக் காரணமா இல்லையா என்று வாதாட நான் வரவில்லை. மாநிலங்களுக்கு உதவி செய்வதில் மத்திய அரசு கொஞ்சம் மந்தப்போக்கு உள்ளதுதான்—உங்களைவிட—இருந்தாலும், அதையே ஒரு முக்கியக் காரணமாகக் காட்டி, நீங்கள் தப்பித்துக் கொள்வது அவ்வளவு சாலச் சிறந்தது அல்ல என்பதுதான் என்னுடைய கருத்து.

இன்னும் ஒரு வாதம் கூட எழுந்தது, இந்த அவையிலே. தமிழகத்திலே இருக்கிற தொழில் அதிபர்கள் தொழில் துவங்க வேண்டுமானால், அவர்கள் வட மாநிலங்களுக்கு வந்தால்தான் அதற்கான உரிமங்கள் வழங்கப்படும் என்று மத்திய அமைச்சர் ஒருவர் சொன்னதாகக் குறிப்பிட்டு ஒரு வாதம் எழுந்தபோது, குறிப்பிட்டு அப்படிச் சொன்ன அமைச்சர் யார் என்ற கேள்வி எழுந்தது. உடனடியாக நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேக வேகமாக இந்த அவைக்கு வந்து, அப்படிச் சொன்ன அமைச்சர் திவாரி அவர்கள் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு, இந்தத் தொழில்துறை மானியம் இந்த அவையில் கொண்டு வருவதற்கு முன்னால், சமீபத்திலே மத்திய அமைச்சர் மாண்புமிகு திவாரி அவர்கள் இந்த மாநிலத்திற்கு வந்து போனார்கள்.

(முற்பகல் 11—40)

அவர் கூட சொன்னார், மத்திய அரசுதான் தமிழகத்திலே தொழில் வளர்ச்சிக்குக் குறுக்கே நிற்கிறது என்ற தவறான செய்தியை இங்கே இருக்கின்ற அமைச்சர்களும், மற்றவர்களும் எடுத்துச் சொல்கிறார்கள், அது கிடையாது என்று அவர் சில ஆதாரத்தோடு சொல்லிவிட்டுப் போனார். அதுபற்றி பத்திரிகையில் நான் பார்த்தேன். மத்திய தொழில் துறை அமைச்சர் திரு. திவாரி அவர்கள் அவ்வாறு தெரிவித்திருக்கிறார்கள். 1977ஆம் ஆண்டு 22 லைசென்ஸ்கள் வழங்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். மூன்றாண்டுகளில் இது மூன்று மடங்கு அதிகரித்திருக்கிறது என்றும் சொல்லி இருக்கிறார்கள். பாரத் லெதர் கார்ப்பரேஷனின் தென் மண்டல அலுவலகம் ஒன்றைச் சென்னையிலே

அமைக்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் திரு.கே. ஏ. கே அவர்கள் கேட்டபோது 'அது குறித்து நான் நடவடிக்கை எடுக்கிறேன், அதை அமைப்பதற்கான வழிவகையினைக் காண்கிறேன்' என்று பதில் சொல்லி இருக்கிறார்கள். அவர் மேலும் சொல்லி இருக்கிறார், 1977ஆம் ஆண்டு 22 லைசென்ஸ் கொடுத்திருக்கிறோம் என்று. 1981-லே 69 லைசென்ஸ் கொடுத்திருக்கிறோம், 1982-லே 69 லைசென்ஸ் கொடுத்திருக்கிறோம், நடப்பாண்டிலே மட்டும் 2 மாதத்திலே 11 பெரிய தொழில்களுக்கான லைசென்ஸ் கொடுத்திருக்கிறோம் என்று இவ்வளவையும் டான்சி என்ற ஒரு நிறுவனத்தின் விழாவிலே கலந்துகொண்டு பேசியிருக்கிறார்கள். அவர் சொன்ன புள்ளிவிவரங்கள் தவறாக இருந்தால்-தமிழக அமைச்சர்களான மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்களும், மாண்புமிகு திரு. கே. ஏ. கே. அவர்களும் அங்கே அந்த விழாவிலே கலந்துகொண்டு இருந்திருக்கிறார்கள், ஆகவே, தவறு என்று சொன்னால் அங்கேயே துடித்து எழுந்து தவறான செய்தியைக் கூறுகிறார் என்று இவர்கள் குறுக்கிட்டுப் பேசி இருக்கலாம். ஆனால் நம்முடைய அமைச்சர்கள் அப்படிச் செய்ததாகப் பத்திரிகைச் செய்தியில் நான் காணவில்லை. ஆகவே அதுபற்றி கிடைத்திருக்கின்ற புள்ளிவிவரங்களைப் பார்க்கிறபோது இந்த மாநிலத்தின் தொழில் வளர்ச்சி மத்திய அரசால் மட்டும் முடக்கப்படவில்லை, மாநில அரசினுடைய மந்தப் போக்கால் முடக்கப்பட்டிருக்கின்றது என்பது என்னுடைய கணக்கு. இங்கே மத்திய அரசு ஒருபுறம் இருக்கட்டும். மாநில அரசு தன்னுடைய அதிகாரத்திற்கு உட்பட்ட நிதி ஒதுக்கங்களைச் செய்கின்றபோது தொழில் துறையிலே வேகம் காட்டி எந்தெந்தத் தொழில்கள் வேகமாக வளரவேண்டுமோ அவற்றுக்கெல்லாம் அதிகமான நிதியினை ஒதுக்கி இருக்கின்றதா என்பதைக் குறித்து இந்த ஆண்டு பட்ஜெட் மெமோரண்டம் கொடுத்திருப்பதில் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். பல்வேறு திட்டங்களைக் குறித்தும், தொழில் கொள்கைகள் குறித்தும் தீவிரமாகச் சொல்லப்பட்டிருந்தாலும், அந்தந்த நிறுவனங்களுக்கெல்லாம் ஒதுக்கப்பட்ட தொகை குறைவாகக் காணப்படுகின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக சால்ட் கார்ப்பரேஷன் என்பது மிகப் பிரபல்யப்படுத்தப் பட்டிருக்கின்றது இந்தக் குறிப்பில். வாலி நோக்கம், தஞ்சை மாவட்டம் இப்படிப் பல்வேறு இடங்களில் அந்தத் துறையிலே பொருட்களை உற்பத்தி செய்யப் போகிறோம், அதற்காக புது முயற்சிகளை எடுத்திருக்கிறோம் என்றெல்லாம் சொள்கை விளக்கக் குறிப்பிலே தெளிவாக்கி இருக்கிறார்கள். Catalogue on Industrial Demand—Memorandam

என்பதைப் பார்த்தால் தமிழ்நாடு சால்ட் கார்ப்பரேஷனுக்கு 1981—82ஆம் ஆண்டு 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதாவது 10.00 இலட்சம். ஆனால் 1982—83ஆம் ஆண்டு பட்ஜெட் எஸ்டிமேட்டில் 35.00 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில் அது என்ன ஆயிற்று என்றால் ஒன்றும் காணோம். ஒரு கோடு போடப்பட்டிருக்கின்றது. 1983—84-ல் ஒரு நயா பைசாகூட ஒதுக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி ஒருகோடுபோட்டிருக்கிறார்கள்.



அடுத்து இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் என்பதைப் பொறுத்த வரையில் அதாவது தொழில் பேட்டை அமைப்பதற்கு 21.29 இலட்சம் 1981—82ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு என்று அக்கவுண்ட் ஆகி இருக்கின்றது. ஆனால் அதே இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுக்கு 1982—83ஆம் ஆண்டு பட்ஜெட் எஸ்டிமேட்டில் 53.41 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் ரிவைஸ்ட் எஸ்டிமேட்டிலே 47.47 இலட்சம் என்று காட்டி இருக்கிறார்கள். ஒதுக்கப்பட்டதை விட ரிவைஸ்ட் எஸ்டிமேட்டிலே பெரும்பாலும் அதிகமாகும். ஆனால் இங்கே குறைந்திருக்கின்றது. சரி போகட்டும். 1983—84-லே எவ்வளவு ஒதுக்கி இருக்கிறார்கள் என்று கணக்கைப் பார்த்தேன். அதிலே நில் என்று கோடு போட்டிருக்கிறார்கள். நயா பைசா காணோம். Total outlay on Petro-Chemical and Fertilizer Industry என்பதைப் பொறுத்தவரையில் 81ஆம் ஆண்டு 0.02 இலட்சம் தான் ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. அது ரிவைஸ்ட் எஸ்டிமேட்டிலே ஏறிற்றா? இதிலே விவரம் இல்லை. 1982—83ஆம் ஆண்டு அந்த பட்ஜெட் என்ன ஆயிற்று என்பது தெரியவில்லை. நயா பைசா இல்லை. எலக்ட்ரிக்கல் அன்ட் எலக்ட்ரானிக் கார்ப்பரேஷன் என்பதற்கு 1982—83-லே எவ்வளவு ஒதுக்கினார்கள் என்ற விவரம் இந்த பட்ஜெட் மெமோரண்டத்திலே இல்லை.

ஆனால் ரிவைஸ்டு எஸ்டிமேட்டில் மட்டும் 40.00 இலட்சம் என்று போட்டிருக்கிறது. எவ்வளவு ஒதுக்கப்பட்டது? திருத்திய மதிப்பீட்டில் அது கூடியிருக்கிறதா? குறைந்து இருக்கிறதா என்ற விவரத்தை இதிலே என்னால் காணமுடியவில்லை. ஆனால் 1983—84 ஆம் ஆண்டு மட்டும் திடீர் என்று 60.00 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டதாக காண்கிறேன். 1982—83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்றால் ரிவைஸ்டு எஸ்டிமேட்டில் அது எவ்வளவு ஏறியிருக்கிறது. இந்த ஆண்டு 60.00 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தொழில் வளர்ந்து இருக்கிறதா என்று பார்ப்பதற்கு வேண்டிய விளக்கங்கள் இதிலே தரப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிராமிக்ஸ் இதற்கு 01 தான் ரிவைஸ்டு எஸ்டிமேட்டில் 1982 1983-ல். இந்த ஆண்டு எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால் அதே .01 இலட்சம் தான். அது ரிவைஸ்டு எஸ்டிமேட்டில் இருப்பதை விட இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டதும் அதுவே தான் இருக்கிறது.

பேப்பர், உங்களுக்கு புகளூரிலே காகித ஆலை தயாரிக்கின்ற ஒரு நிறுவனத்தை அரசு துவக்கியிருப்பது தெரியும். அதற்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற கணக்கை இங்கே பார்த்தால் 1981—82ஆம் ஆண்டு 2750.00 இலட்சம். அது அக்கவுண்ட் ஆகியிருக்கிறது. ஆனால் 1982—83 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் 400.00 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ரிவைஸ்டு

எஸ்ட்டிமேட்டில் நயா பைசா கூட ஏறாமலும் இறங்காமலும் அதே 400.00 இலட்சம் தான் இருக்கிறது. இந்த ஆண்டு என்னவென்று கேட்டால் அந்த புகளூர் காகித ஆலைக்கு ஒதுக்கப்பட்ட நிதி .01 இலட்சம். இப்படி பார்க்கிறபோது இதிலே எந்த எந்த நிறுவனங்களை நீங்கள் பிரபல்லிக்கப்படுத்திய காட்டுகிறீர்களோ அந்த நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை குறைக்கப்பட்டிருக்கிறது. எனவே தொழில் துறை மந்தப் போக்குக்கு இது ஒரு எடுத்துக் காட்டு என்பதை நான் விளக்க கடமைப்பட்டிருக்கிறேன். மைய அரசு தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய தொழில் பங்கில் கூட நீங்கள் சரியான முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை, வாதாடவில்லை, போராடவில்லை அல்லது எதிர்ப்பு கோஷங்களை நீங்கள் கிளப்பவில்லை என்பது தான் என்னுடைய குற்றச்சாட்டு. சிக்ஸ்த் பைவ் இயர் பிளான் 1980–85 என்ற நூலை எங்களுக்கு நீங்கள் கொடுத்து இருக்கிறீர்கள். அதிலே கூட நான் படித்துப் பார்த்தேன்.

The industrial progress of any State depends to a great extent on the investment in the Central sector projects. Unfortunately, the Central sector investment in Tamil Nadu have been disappointedly low. The total Central sector investment in the Country should at 15,668 crores at the end of 1979 out of which the investment in Tamil Nadu was 660 crores only.

அதாவது இந்த 1979 ஆம் ஆண்டிலே மைய அரசால் ஒதுக்கப்பட்ட 15,668 கோடியில் தமிழகம் பெற்றிருக்கிற பங்கு 661 கோடி தான் என்பதை representing mere 4 per cent of the total investment. மைய அரசு தொழிற் துறைக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் 4 சதவீதம் தான் நீங்கள் வாங்கியிருக்கிறீர்கள் என்று கருதுகிறபோது நீங்கள் எவ்வளவு மெத்தனமாக ஆமை வேகத்தில் ஒரு துரும்பு காட்டாத நிலையில் இருந்துகொண்டிருக்கிறீர்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

அது மட்டும் அல்ல the proportion of the Central sector investment in Tamil Nadu has gradually reduced from 8 per cent to 4 per cent.

மத்திய அரசு தொழில் துவங்குகின்ற சென்டிரல் செக்டாரில் கூட 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதம் அளவுக்கு குறைந்துவிட்டது என்பதை நீங்கள் சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். எனவே இப்படிப்பட்ட நிலையில் மத்திய அரசு மூலதனம் செய்கின்ற தொழிற்சாலைகள் ஆனாலும் சரி, மாநில அரசு பங்கு ஏற்கின்ற தொழிற்சாலைகள் ஆனாலும் சரி, இவைகளில் இந்த அரசு எத்தகைய முன்னேற்றத்தையும் காணவில்லை என்பதை நான் அவருக்கு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன். இதிலே இருக்கின்ற தொழிற்சாலைகளையாவது நட்டப்





ஏற்படாமல் நடத்துகின்ற ஒரு காரியத்தில் ஈடுபட்டிருக்கிறீர்களா என்றால் கிடையாது. இதே மாமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. தமிழ்நாடு சிமிண்ட் கார்ப்பரேஷனுக்கு 1978–79 ஆம் ஆண்டில் 28.37 இலட்சம் நஷ்டம், 1979–80 ஆம் ஆண்டில் 223.31 இலட்சம் நஷ்டம்.

(முற்பகல் 11–50)

செராமிக் யூனிட் 21 லட்சம் நட்டம்; தமிழ்நாடு பிளான்டேஷன் கார்ப்பரேஷன் 21 இலட்சம் நட்டம்; பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் 102.45 இலட்சம் நட்டம். இன்று இப்படிப்பட்ட நிலையில், இருக்கின்ற நிறுவனங்கள்கூட நட்டத்தில் ஓடுகின்ற நிலைமை இருக்கிறது. ஆக, மத்திய அரசினுடைய முதலீடும் இல்லை; மாநில அரசு தொழில் துவங்குவதிலே சரியான நிதி ஒதுக்கீடு இல்லை; இருக்கின்ற நிறுவனங்களும் நட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன; ஆக ஒட்டுமொத்தமாக பார்த்தால் இது ஒரு மந்தம் என்றுகூட சொல்லமாட்டேன், ஜீரோ என்ற ஒரு நிலைக்கு தொழிற் துறை வந்து இருப்பது வருத்தத்திற்குரிய ஒன்று என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏன் அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டது? எதையும் நீங்கள் தொடங்குகிறீர்கள், தொடர்வதிலே முயற்சி எடுப்பதிலே பின்னோக்கி இருக்கிறது இந்த அரசு. செங்கல் விலை ஏறாமல் இருப்பதற்காக செங்கற் சூளையொன்றை ஏற்படுத்தவேண்டுமென்று அரசு செம்பரம்பாக்கத்திலே 176 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்து—நம்முடைய நாவலர் அவர்கள் திறந்து வைத்தார்கள்—35 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டிருக்கின்றன, 13 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள கட்டடங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. 13 இலட்சம் ரூபாயிலே எழுப்பப்பட்ட அந்தக் கட்டடத்தைச் சுற்றியிருக்கிற 4½ ஏக்கர் நிலத்தையும் சிம்சன் கம்பெனிக்குக் கொடுத்துவிட்டீர்கள். அது மட்டுமல்ல, 35 இலட்சம் ரூபாய்க்கு வாங்கப்பட்டிருக்கின்ற அந்த இயந்திரங்கள் மண்ணோடு மண்ணாக மக்கிக்கொண்டிருக்கின்ற நிலைதான் இருக்கிறது. அதிலே ஒரேஒரு பிரிவிலே வேலை செய்கிறது, அதிலேகூட இருக்கிற இரண்டு மெஷின்களிலே ஒன்றுதான் வேலை செய்கிறது, ஒன்று கோளாறு அடைந்திருக்கிறது. 176 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்து வைத்துக்கொண்டு 35 இலட்சம் ரூபாய் செலவில் இயந்திரங்கள் வாங்கி வைக்கப்பட்டும் முதல் பிளான்டிலே ஒரே ஒரு இயந்திரம்தான் வேலை செய்கிறது என்று சொன்னால் ஒரு நாளைக்கு உற்பத்தியாகிற கற்களின் எண்ணிக்கை 16 ஆயிரம் தான். ஒரு தனியார் சாதாரண மெஷின்களைக் கொண்டு சேம்பரிலே ஒரு நாளைக்கு 22 ஆயிரம் கற்கள் தயாரிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. இரண்டாவது அரசுச் சார்பிலே தயாரிக்கிறீர்களே, நாள் ஒன்றுக்கு 16 ஆயிரம் கற்கள் என்று, அதையாவது மக்கள் வாங்குகிறார்களா என்றால்

கிடையாது. காரணம் அதிலே சைஸ் சரியாக இல்லை, கலர் கிடையாது, தூள்கரிகளைக் கொண்டு அடுப்பு எரிக்கிற காரணத்தினால் செங்கல் நிறமே போய்விட்டது, கருங்கல் ஆகக் கூடிய நிலைமைதான் இருந்துகொண்டு இருக்கிறது. எனவே அதுவும் விலை போகாத நிலை. எனவே இருக்கின்ற தொழிற்சாலைகள் நல்ல முறையிலே செயல்பட நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் எத்தனையோ தொழிற்சாலைகள் போய்விட்டன. நேவல் அக்காடமியா? போய்விட்டது. கோச் பேக்டரியின் அடுத்த விஸ்தரிப்பா, தமிழ் நாட்டிலிருந்து போய்விட்டது, அசோக் லேலண்டின் அடுத்த நிறுவனமா? அதுவும் தமிழகத்தைத் தாண்டிப் போய்விட்டது. கொஞ்சம் கொஞ்சமாகப் போய் கடைசியாக கலர் பிலிம் தொழிற்சாலை ஊட்டியிலே தங்கும் என்று எதிர்பார்த்தோம். போராடவேண்டுமென்று இந்த மாமாமன்றத்திலே எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் கடைசியாக அமைச்சர் அவர்கள் இந்தக் கொள்கைக் குறிப்பிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

For instance, this Government urged that the proposed colour Film Project be set up at Ooty, where adequate infrastructure facilities are available. However, the Central Government has decided otherwise என்று சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு வாய்ப்புகள் வசதிகள் இருக்கின்றன என்று சொன்னாலும் இன்றைக்கு மத்திய அரசு வேறுவிதமாக முடிவுசெய்து விட்டது என்றுசொன்னால் இந்த கலர் பிலிம் தொழிற்சாலை ஊட்டியில் கிடையாது, வேறு மாநிலத்திற்குப் போகப்போகிறது என்றுதான் பொருள். ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் தொழில்கள் அனைத்தும் வேறு மாநிலத்திற்கு நடைகட்டிக்கொண்டிருக்கின்ற நிலைமைதான் இருக்கிறது. இன்னொன்றையும் அமைச்சர் அவர்கள் இங்கே கோடிட்டு காட்டினார்கள். மத்திய அரசு 87 ஜில்லாக்களை ஜீரோ இண்டஸ்ட்ரியல் ஏரியா என்று டிக்ளேர் செய்து இந்தியா முழுவதும் அறிவித்திருக்கிறார்கள். அந்த 87 பிற்படுத்தப்பட்ட தொழிலிலே பின்தங்கிய மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டதில் ஒன்றேனும் தமிழ்நாட்டில் உள்ளதா என்றால் கிடையாது. அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், அதற்காக என்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்டால் மத்திய அரசுக்கு நம்முடைய முதலமைச்சர் கடிதங்களை எழுதியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். நான் கேட்கிறேன். இந்த நிலையில் 87–ல் ஒன்று கூட வாங்க முடியாமல் கடிதங்களை எழுதுகிறோம் என்று சொன்னால் கடிதங்களுக்கு பயந்து, பணிந்து உடனடியாகவா உங்களுடைய மாவட்டங்களில் பிற்பட்ட ஏரியாக்களை அறிவிக்கும். மத்திய அரசு நான் அடிக்கடி குறிப்பிடுவதைப் போல, அது அடித்து



கறக்கிற மாடு. மிக வேகமாக எதிர்க்க வேண்டும். அந்த தைரியம் உங்களுக்கு வேண்டும். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. சேலம் உருக்காலையை நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்திலே ஏனோ சேர்க்க முடியாது என்று தெரிவித்து விட்டார்கள். பிறகு அந்த பிளானை அப்ரூவ் செய்வதற்காக முதலமைச்சர்கள் மாநாடு டெல்லியிலே கூடியது. அன்றைய தினம் இந்த மாநிலத்தினுடைய முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் டெல்லிக்கு போகிறார்கள்; சேலம் உருக்காலை இந்தத் திட்டத்திலே சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று கேட்கிறார்கள். இல்லையென்று சொன்னவுடன் தமிழ் நாடு ஹவுசிற்கு திரும்ப வந்து விடுகிறார்கள். பிறகு பிரதமர் அவர்கள் அலுவலகத்திலும், அந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்களும், ஏன் தமிழக முதலமைச்சர் வரவில்லையென்று கேட்கிறார்கள். சேலம் உருக்காலைத் திட்டம் வருகிற ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்கப்படாவிட்டால் நான் இந்த முதலமைச்சர்கள் மாநாட்டை புறக்கணிக்கிறேன் ; மாநாட்டிலே கலந்து கொள்ள முடியாது என்று தமிழ் நாடு ஹவுசிலே தங்கி விடுகிறார். தலைவர் அவர்களே, அதற்கு பிறகு நம்முடைய பிரதம மந்திரி அவர்கள் வாக்குறுதி கொடுத்து, நான் நிச்சயமாக சேலம் உருக்காலையை சேர்த்துக் கொள்கிறேன் என்று தெரிவித்ததற்கு பிறகு தான் கலைஞர் அவர்கள் அந்த மாநாட்டிலே கலந்து கொண்டார்கள்.

இது வரலாறு. பிறகு அதே போல சேர்க்கப்பட்டு அம்மையாரை அழைத்து வந்து சேலத்திலே அந்தத் திட்டத்தை துவக்கி வைத்தார்கள். இங்கே பேசிய ஆளும் கட்சி அருமை நண்பர் விஸ்வநாதன் அவர்கள் கூட ஒன்றை தெரிவித்தார்கள். நம்முடைய சபாநாயகராக இருக்கிற மாண்புமிகு இராசாராம் அவர்கள் அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியின் போது அமைச்சராக இருந்து, இந்திரா காந்தி அவர்களுக்கு தங்கத்தாலான சேலத்து மாம்பழத்தை செய்து கொடுத்தார்கள் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் போராடி வெற்றிகண்டு, அந்த விழாவைத் துவக்கி, நடைபெற வேண்டுமென்று செய்தவர் கலைஞர் அவர்கள். ஆனால் இன்றைக்கு அந்த சேலம் உருக்காலை என்ன நிலையில் இருக்கிறது என்பதை நண்பர் விஸ்வநாதன் அவர்களே சுட்டிக் காட்டினார்கள். சேலம் உருக்காலை போய் இன்றைக்கு உருட்டாலை என்ற நிலைக்கு வந்து அது ஸ்டெயின்லஸ் ஸ்டீல் பாக்டரியாக மாறுமா என்று பார்த்து, அது கூட இல்லாமல் தகடு அடிக்கிற ஒரு உலைக்களமாக அது தள்ளப்பட்டிருக்கிறது. நான் கேட்கிறேன் இந்த அரசு அதற்காக என்ன முயற்சிகளை எடுத்திருக்கிறது? போராடிய போராட்டங்கள் என்ன? எத்தனையோ போராட்டங்களை அறிவிக்கின்றீர்கள். ஆளும் கட்சியிலே இருக்கிற நீங்களே போராட்டங்களை நடத்துகிறீர்கள் ; நீங்களே உண்ணாவிரதம் இருக்கிறீர்கள், சேலம் உருக்காலைக்கு அண்ணா காலத்திலே எழுச்சி நாள் கொண்டாடப்பட்டது; கலைஞர் காலத்திலே போராட்ட குரல் எழுப்பப் பட்டது. டெல்லியிலேயிருந்து போராடினார். ஆனால் இந்த அரசு அவற்றையெல்

லாம் கிணற்றிலே போட்டு விட்டு, ஆளும் கட்சி, எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் அவ்வளவு பேரும் அங்கலாய்க்கின்ற நிலையிலே சேலம் உருக்காலை கனவாய் போய் விட்டதே என்பதற்கு வருத்தம் தெரிவித்ததுண்டா? எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? எதுவும் கிடையாது . அதிலே கூட இன்னொன்றையும் நம்முடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த தொழில் மட்டுமா போயிற்று, அமைச்சர் அவர்கள் வேலூரில் ஒரு இடத்தில்,

On the question of the 3 defence units which said to have been shifted away from Tamil Nadu, only one unit has been given to Utter Pradesh and location of the other two was still under consideration. The Tamil Nadu had conveyed its willingness to provide land for two designs component units at Madras and Dharmapuri.

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே மூன்று யூனிட்களில் ஒரு யூனிட் உ.பி.க்கு போய் விட்டது. இரண்டிற்கு நாங்கள் நிலம் தருகிறோம் என்று கூறி தர்மபுரியிலும், சென்னையிலும் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டதாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திருநாவுக்கரசு வேலூர் வந்த போது குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் கேட்கிறேன். அதற்காக இதுவரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? அந்த இரண்டு யூனிட்களும் இருக்கிறதா போய் விட்டதா? அதையும் நீங்கள் தயவு செய்து தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். அதைப் போலத் தான்,

In North Arcot, Government plans for setting up of 20 crore-industrial explosive factory, with the Swedish collaboration, near Vellore.

இது என்னவாயிற்று? இதை நான் கொள்கைக் குறிப்பிலே பார்த்தேன். அவைகளைக் காணவில்லை. இருக்கிற நிலைமையைப் பார்த்தால் கொஞ்சம் கொஞ்சமாக இந்தத் தொழில் துறை தமிழகத்திலே தேய்ந்து கடைசியிலே இல்லாமல் போய்விடுமோ என்ற சந்தேகம் எழுகின்றது. அடுத்து புகளூர் காகிதத் தொழிற் சாலையைப் பற்றி அங்கத்தினர்கள் எல்லோரும் பேசினார்கள். இந்தத் திட்டம் குறித்து 1981—82 நிதி நிலை அறிக்கையில் எதுவும் சொல்லவில்லை. 1979-ல் இந்தத் திட்டத்திற்காக அறிவிக்கப்பட்ட தொகை ரூ. 153 கோடி. 1980 ஆம் ஆண்டு சேர்மென் அவர்கள் அறிவித்த அறிக்கையிலே குறிப்பிட்டது 160 கோடி ரூபாய். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இதிலே கொஞ்சம் ரிவர்ஸ் வந்திருக்கிறது. மானியக்

(நண்பகல் 12-00).

கோரிக்கை புத்தகத்திலே ஒரு பக்கம்—சென்ற ஆண்டு ரூ. 180 கோடி, மற்றொரு பக்கத்திலே ரூ. 190 கோடி என்று சொல்லப்பட்டுள்ளது. சில மாதங்கள் வித்தியாசத்திலேயே ரூ. 40 கோடி உயர்வு. சென்ற ஆண்டு பட்ஜெட் துவக்கிய



நேரத்தில் ரூ. 27.50 கோடி ஒதுக்கப்பட்டது. சேர்மன் அரசிடம் எதிர்பார்த்தது — அவர் அறிக்கைப்படி, ரூ. 22 கோடி. ஆனால், அரசு தந்ததோ ரூ. 27.50 கோடி. 50 ஆயிரம் டன் நியூஸ்பிரிண்ட், 40 ஆயிரம் டன் ரைட்டிங் பேப்பர் உற்பத்தி செய்யப்படும் என்று மந்திரி அவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஆனால், சேர்மன் அறிக்கையில் 83,000 டன் நியூஸ் பிரிண்ட், 17,000 டன்ரைட்டிங் பேப்பர் உற்பத்தி செய்யப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வளவும் போனதற்குப் பிறகு, இதிலே இன்றைக்கு என்ன நிலைமை, என்ன முன்னேற்றம் என்று கேட்டால், அங்கே உத்தியோகம் பார்க்கிறவர்களுக்காக, வேலையிலே அமரப் போகிறவர்களுக்காக, வீடு கட்டிக் கொடுத்திருக்கிறோம் என்பதைத் தவிர, எந்தவித முன்னேற்றத்தையும் காணோம்.

1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தன்னுடைய பணியை அது துவக்கும் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். கரும்புச் சக்கையிலிருந்து காகிதங்களைத் தயாரிக்க இருக்கிறோம். தமிழ் நாட்டைப் பொறுத்த அளவிலே, கரும்புச் சக்கையிலேயிருந்து காகிதங்களைத் தயாரிக்கிற முயற்சிகளை எடுக்க வேண்டுமானால் கரும்பாலைகளுக்கு, அதனுடைய அடுப்புகளுக்கு என்ன செய்வது என்று கேட்டால், நிலக்கரி கொடுப்போம் என்கிறார்கள். நிலக்கரி கொடுக்கிற அளவு நிலக்கரி வருமா என்று கேட்டால், ஒரு நாளைக்கு 30,000 டன் நிலக்கரியை அந்தச் சர்க்கரை ஆலைகளுக்குக் கொடுத்தால்தான் அந்தக் கரும்புச் சக்கையை அவர்கள் காகித ஆலைகளுக்குக் கொடுக்க முடியும். ஆனால், இருக்கிற நிலைமையிலே, நம்முடைய தூத்துக்குடியும், எண்ணூரும் கரி இல்லாத காரணத்தாலே, முடங்கிப் போய், தமிழ் நாட்டிலே மின்சாரப் பஞ்சம் 100 சதவீதம் வரையிலும் தொழிற்சாலைகளுக்கு உருவாயிற்று. எனவே, இந்த நிலைமையைக் கணக்கில் வைத்துப் பார்த்தால், இந்த ஆலை வருமா என்று கேட்டால் ஒரு நாளும் வராது.

இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் 'மாக்பே' என்பவர் ரொம்ப அழகாகக் குறிப்பிட்டார்.

On the face of it, Mr. Chief Minister you have made logic stand on its head. I know you will say, but the World Bank has cleared the Project.

இது சாதகம் இல்லையென்று சொல்லலாம், ஆனால், உலக வங்கி இதற்குப் பணம் ஒதுக்கியிருக்கிறது என்று சொல்லலாம்.

Of course it had. You successfully got around Mr. R. Venkataraman when he was Finance Minister at the Centre and believe me he will have to answer a few questions when the time comes.

வெங்கட்டராமன் நிதியமைச்சராக இருக்கிற காலத்திலே இதற்கு நீங்கள் நிதியைப் பெற்றிருக்கலாம். ஆனால், வெங்கட்ராமன் நேரம் வருகிறபோது, பல கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டுமென்று இந்தியன் எக்ஸ்பிரசிலே 'மாக்பே' அவர்கள் அழகாகக் குறிப்பிட்டார்கள். எப்படிப்பட்ட பதில் என்று கேட்டால், அந்துலேவினுடைய சிமெண்ட் ஊழலுக்கு பதில் சொல்ல வேண்டிய கால கட்டம் வெங்கட்டராமனுக்கு ஏற்பட்டதே அத்தகைய நிலைமை இந்த புகளூர் காகித ஆலையிலும் வரும் என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை சுட்டிக்காட்டியிருக்கிறது. எனவே, இந்தக் காகித ஆலை 1984-லே உற்பத்தியைத் துவங்காது. அதற்குப் பிறகு எத்தகைய நிலமைமை ஏற்படும் என்பதையும் தெரிவிக்க முடியாத அளவிலே இருந்து கொண்டு இருக்கிறது.

இன்னொன்றை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் தோல் பதனிடும் தொழிற்சாலை, இந்த மாநிலத்திற்கு அந்நிய செலாவணியை ஈட்டிக்கொடுக்கின்ற ஒரு தொழிற்சாலை. ஆனால். இன்றைக்கு அத்தொழிற்சாலை மூலமாக ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் பயிரிட முடியாத அளவுக்கு வாடிப் போய் இருக்கின்றன. அத்தொழிற்சாலைகளுக்கு நீங்கள் லைசன்ஸ் வழங்குகிறீர்களே, அந்தக் கழிவு நீரைத் தேக்கி வைப்பதற்கு வேண்டிய திட்டத்தை அவர்களிடத்திலே பெற்றிருக்கிறீர்களா என்றால் கிடையாது. என்னைப் பொறுத்தவரையிலே சொன்னேன், இராணிப்பேட்டையிலே 48 தொழிற்சாலைகளுக்கு மேலே இருக்கின்றன. ஆனால், ஒரே ஒரு தொழிற்சாலை தவிர, எல்லா தொழிற்சாலைகளிலிருந்தும் அந்தக் கழிவு நீரானது பாலாற்றிலே விடப்படுகிறது. பாலாற்றிலிருந்தும் அது ஊறுகிற காரணத்தால், பாலாற்றுக்குக் கீழே வருகிற குடிநீரைக் குடிக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. இராணிப்பேட்டைக்குக் கீழே இருக்கிற கிராமங்களில், ஏரிகளில் இந்தக் கழிவு நீர் தங்குகிற காரணத்தால், மீன்கள் கூட அந்த ஏரிகளில் உயிர் வாழ்வது கிடையாது.

**மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் இங்கே விளக்கமாக எடுத்துச் சொல்கின்ற அந்த எப்ளுயண்ட் டிஸ்போசலுக்காக ஒரு ஆண்டிற்கு முன் ஒரு குழு அமைத்து, 15 தினங்களுக்கு முன்பு அந்தக் குழு தன்னுடைய பரிந்துரையை அரசாங்கத்திற்குக் கொடுத்திருக்கிறது. அரசாங்கம் அதன்மீது தொடர் நடவடிக்கை எடுக்க , நல்ல முயற்சிகளை எடுத்து வருகிறது. அடுத்த மானியக் கோரிக்கை வருவதற்குள்ளாக, நல்ல மாறுதலேற்பட்டு இராணிப்பேட்டை பகுதிகளில் தோல் தொழில் சம்பந்தமான அந்தத் தொழிற்சாலைகளில் அது விரிவாக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.





அந்தக் குழு அறிக்கையினை அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. விரைவில் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, நான் இந்த மன்றத்திலே இராணிபேட்டை எம்.எல்.ஏ.வாக ஆனதிலிருந்து இப்படித்தான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அப்பொழுது இராஜாமுகமது அவர்களிடத்திலே இருந்தது. அவரும் ' அப்படிச் சொன்னார்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷணசாமி :** இதுவரை குழு அமைக்கப்படாதிருந்த நிலையில் குழு அமைத்து அவர்களை எல்லாம் அழைத்து, ஆக்கபூர்வமாக இந்த ஒரு ஆண்டிலே முடிக்கப்பட்டிருக்கிறது என்ற அந்த அம்சத்தையும் நீங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் தயவு செய்து கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, அடுத்த மானியக் கோரிக்கைக்குள்ளாக அது நிறைவேற்றப்படுமேயானால் நான் இந்த மன்றத்தில் அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் இன்றைக்கு விவசாயம் பாதிக்கப்பட்ட நிலைமையிலே இருக்கிறது.

அடுத்து இன்னொன்று, பெல் கம்பெனி சம்பந்தமாக. அன்றைக்கேகூட இது குறித்து மாண்புமிகு அமைச்சரிடத்திலே நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். நிலம் எடுத்திருக்கிறார்கள்; இன்னும்கூட மேற்கொண்டு நிலம் ஆர்ஜிதம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த நிலத்தைப் பறிகொடுத்து, வீட்டைப் பறிகொடுத்து, கிணற்றைப் பறிகொடுத்து விட்டிருக்கின்ற அந்த ஏழைகளுக்கு இன்றைக்கு வேலை கொடுப்பதிலே ஒரு சுணக்கம் ஏற்பட்டிருக்கிறது. அன்றைக்குக் கொடுத்த புள்ளி விவரங்களை நான் மீண்டும் பரிசீலனை செய்து பார்த்தேன். அமைச்சர் என்ன செய்தார்? அதிகாரிகளிடத்தில் கேட்டார்; அதிகாரிகள் அங்கே கேட்டு ஒரு அறிக்கையைக் கொடுத்தார்கள்; அதை இங்கே சொன்னார். ஆனால் நிலைமையை நேரில் சென்று யதார்த்தமாகப் பார்க்கின்றபோது, அந்த அளவிற்குக்கூட வரவில்லை என்பதுதான் என் கணக்கு. அங்கே நிலத்தை நாம் ஆர்ஜிதம் செய்து கொடுக்கிறோம்; அவர்களுக்கு மின்சாரம் கொடுக்கிறோம்; இப்படியிருக்கும்பொழுது அங்கிருக்கின்றவர்களுக்கு வேலை கொடுப்பதில் முன்னுரிமை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிப்காட்டிலேயும், மற்ற இடங்களிலேயும் தொழிற்சாலைகளைத் துவங்குகிறோம். துவக்கினால் என்ன செய்கிறார்கள் என்று கேட்டால், நீங்கள் வேண்டுமென்றால் ஒரு சேலஞ் பண்ணிப் பாருங்கள். ஒரு தொழிற்சாலையிலேகூட அந்த ஏரியாவிலே இருக்கிறவர்களுக்கு வேலை கிடையாது. திருநெல்வேலியிலிருந்து வந்து

இங்கே வேலை ஆரம்பித்தால் மொத்தமும் திருநெல்வேலியிலே இருக்கின்ற ஆட்களைக் கூப்பிட்டு வந்து விடுகிறார்கள்; இராமநாதபுரத்துக்காரர்கள் இங்கே போட்டால், இராணிப்பேட்டையிலே இராமநாதபுரத்துக்காரர்களையே கொண்டு வந்து விடுகிறார்கள். செட்டிநாட்டுக்காரர்கள் இங்கே பேக்டரி ஆரம்பிக்கிறார்கள்; எல்லாம் செட்டியார்களாகவே கூப்பிட்டு வந்து விடுகிறார்கள். கடைசியாக நாங்கள் என்ன செய்கிறோம்? புகை போக்கி வருகிறது; அதைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறோம். எனவே நான் கேட்டுக்கொள்கிறேன், எந்தெந்த இடங்களிலே நீங்கள் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கிறீர்களோ அங்கே குறிப்பாக இத்தனை பர்சென்டாவது லோகல் பீப்பிளுக்குத் தர வேண்டுமென்ற நியதியை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அன்றைக்குக்கூட நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் நீங்கள் கேட்க மாட்டீர்கள். தொழில் அமைச்சர் என்று குறிப்பிட்டு நான் பர்ட்டிகுலராகச் சொல்லவில்லை. சில மந்திரிகள் அங்கே போய் அப்படிப்பட்ட சிபாரிசை அவர்களே கொடுத்து விடுகிறார்கள். அமைச்சர் பிள்ளைக்கு வேலை கேட்டால் கொடுக்கிறது தப்பா என்று கேட்டார்கள். நான் தப்பு என்று சொல்லவில்லை. மந்திரிகள் பிள்ளை வேலை பார்க்கக்கூடாது ; எம்.எல்.ஏ. பிள்ளை வேலை பார்க்கக் கூடாது என்றால் யார் பிள்ளையும் வேலைக்குப் போகாது.

ஆனால், ஒரு காலத்திலே அப்படி கலைஞர், கலைஞருக்கு மச்சான் மாறன் ; மாறனுக்கு ஒரு மச்சான்; அவர் மச்சானுக்கு நம்முடைய கைலாச கவுண்டர் பேக்டிரியிலே எங்கேயோ 1,500 ரூபாய் சம்பளம் கொடுத்தார்கள் என்று சொல்லி, ஏழு வயதுப் பையனுக்கு 1,200 ரூபாய் சம்பளத்திலே கலைஞர் கருணாநிதி வேலை வாங்கிக் கொடுத்து விட்டார்; தன்னுடைய பதவியைத் துஷ்பிரயோகம் செய்து விட்டார் என்று டெல்லியிலே கொண்டு போய் மகஜர் கொடுத்தீர்கள். நாங்கள் அப்பொழுதே சொன்னோம். ஒரு மந்திரியின் மகனாக இருக்கின்ற காரணத்தாலே வேலை கொடுப்பதில் தப்பு கிடையாது; ஆனால் உள்ளபடியே மாறனுடைய மச்சனுக்கு, வேலைக்குப் போகின்ற அளவுக்கு ஒரு மகன் கிடையாது. இருந்தாலும் ஒரு மகஜரைக் கொண்டு போய் டெல்லியிலே கொடுத்தீர்கள். அது என்ன நியாயம் என்பதற்காகத்தான் இன்றைக்கு அதைச் சுட்டிக் காட்டினேனே தவிர, இராகவானந்தம் பிள்ளை வேலை செய்தால் எனக்கென்ன போகிறது? அதனாலே எனக்கு ஒன்றும் பிரச்னை கிடையாது என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



அடுத்து ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். சிமென்ட் நம்முடைய ஊரிலே பற்றாமல்போய், இருக்கின்ற சிமென்டிலே நஷ்டத்தில் பேக்டரிகளெல்லாம் ஓடிக்கொண்டிருக்கின்றன. நம்முடைய பெரம்பலூர் சிமென்ட் பேக்டரி கூட நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையிலே இன்றைக்குத் தென் கொரியாவிலே இருந்தும், வட கொரியாவிலே இருந்தும் ஆங்காங்கு சிமென்ட் வாங்குகிறீர்கள். ஆனால் அந்த சிமென்டிலே என்ன நிலைமை? அத்தனையும் முரண்பாடுகள். நான் அவைகளையெல்லாம் சொல்வதற்கு நேரம் இல்லாத காரணத்தினால் அத்தனையையும் எடுத்து வைக்க முடியவில்லை.

ஆனால் ஒன்றைச் சொல்கிறேன். அப்படி வாங்குகின்ற சிமென்டாவது என்ன நிலையில் இருக்கிறது பாருங்கள்.

200 bags of Korean cement which had been taken delivery of at the Madras harbour was being adulterated when Civil Supplies CID officials raided a godown in Korukkupet. The consignment was meant for the Executive Engineer, Water Supply Board, Bangalore. During the raid on the Korukkupet godown, 63 bags of genuine cement, 100 bags of adulterated cement and 250 bags of the adulterant—betonite powder—were seized. A hand sewing machine for resealing the paper bags was also seized.

நான் கேட்கிறேன். சிமென்டைக் கொரியாவிலே இருந்து வாங்கி கலப்படத்திலே ஒரு பவுடரைக் கலந்து விற்று விடுகிறார்கள். அதனுடைய நிலைமை என்ன என்று கேளுங்கள்.

Betonite looks exactly like cement and has alomost the same texture. But the grains are not as fine as cement and it takes longer to set. But only an experienced person can tell the difference on the basis of these two factors. And when the two are mixed on a 50:50 basis, as is done by the adulterators, it becomes even more difficult (A bag of pure cement costing about Rs. 60 is mixed with betonite costing Rs. 12 to produce two bags of adulterated cement fetching about Rs. 120).

(பிற்பகல் 12-10)

இந்த பௌடரைக் கொண்டுவந்து கலந்து, அதைக் கண்டுபிடிக்கமுடியாத அளவிற்கு இருக்கின்றது என்று சொல்கிறார்கள். அதற்குப் பிறகு 50:50 என்ற சதவிகிதத்திற்கு கலந்துவிடுகிறார்கள், எப்படிப்பட்ட எக்ஸ்பீரியன்ஸ் உள்ளவர்களாக இருந்தாலும் கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு—ஜெனுயின் சிமெண்டினுடைய விலை ஒரு பைக்கு ரூ. 60 இந்த கலப்புப் பொருள் அதற்கு ஒரு பௌடர் செய்கிறார்களே, அதற்கு ஒரு பை விலை ரூ. 12 ஆக இரண்டையும் சேர்த்து கலந்து விற்றால் ரூபாய் 120-க்கு—(குறுக்கீடுகள்)

எனவே இப்படிப்பட்ட கலப்படங்கள், வெளிநாட்டிலிருந்து வரும் சிமெண்டிலேகூட இருக்கிறது.

கடைசியாக ஒரே ஒரு வரி—சுகர் பேக்டரி. நேரம் இல்லாத காரணத்தினால் சீக்கிரமே முடித்துவிடுகிறேன்.

போளூரில் ஒரு சுகர் பேக்டரியை ஆரம்பிக்கவேண்டுமென்பது நீண்ட நெடுங்காலமாக இருக்கிற கோரிக்கை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஆரம்பிக்கிற நிலைமை வந்து, அதிலே சில சங்கடங்கள் ஏற்பட்டு, பிறகு ஆட்சி கலைக்கப் பட்டது. நான் கேட்கிறேன். மந்திரி நேற்று சொல்லியிருக்கிறார், படிக்க நேரம் இல்லை. கோயம்புத்தூரில் 3 சர்க்கரை ஆலைகள் வரும்—அந்த ஊரிலே வரும்—இந்த ஊரிலே வரும் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். போளூரில் வரும் என்று இதுவரை ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை. எனவே எப்போது அவர்கள் போளூரில் சர்க்கரை ஆலையைத் துவக்கப் போகிறார்கள் என்றும், (குறுக்கீடு) உடனடியாக துவக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தொழிற்துறை மானியக் கோரிக்கை மீது மாண்புமிகு உறுப்பினர்கள் 12 பேர், 13ஆம் தேதியன்றும், இன்றைக்கும், தங்களுடைய மேலான கருத்துக்களை எல்லாம் மிகச் சிறப்பாக எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்த இரண்டு நாட்களிலேயும் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் தவிர, மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருமே பொதுவாக தமிழகத்திலே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு ஏற்பட்டதற்குப் பின்னால், 1977-க்கு பின்னாலே வேகமாக வளர்ந்து வருகிற தொழில் வளர்ச்சியைப் பாராட்டினார்கள்.

அதோடு மட்டுமல்லாமல், மைய அரசு இன்னும் எந்தெந்த விதத்திலே எல்லாம், தமிழகத்தைத் தொழில் மையப்படுத்துவதிலே, தொழில் துறைப் பெருக்கத்தை உண்டாக்குவதிலே உதவவேண்டும் என்பதற்கான ஆலோசனைகளையும் அநேகமாக எல்லா கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் எடுத்து வைத்தார்கள்.

பொதுவாக இந்த மன்றத்திலேயும், மன்றத்திற்கு வெளியேயும், மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் கடைசியாகப் பேசுகிறபோது அவர் சுட்டிக்காட்டியதைப்போல, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்ததற்குப் பின்னால்,





திரு. துரைமுருகன் அவர்கள் வார்த்தையிலே சொல்லவேண்டுமென்றால்—ஒரு மந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது மந்த நிலைமை கூட அல்ல, ஜீரோ நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஒரு தொழிலுமே தமிழகத்தில் வரவில்லை என்று இங்கே அவர் சுட்டிக்காட்டினார். சில உறுப்பினர்கள் பேசுகிறபோது தமிழகம் நான்காவது இடத்திலே இருக்கிறது என்றார்கள். சிலபேர் மூன்றாவது இடத்திலே இருக்கிறது என்றார்கள். இப்படி அவரவர்கள் அவரவர்களுக்கு என்ன தோன்றுகிறதோ அல்லது அவர்களுடைய கணக்குக்கு ஏற்ப தமிழகத்தினுடைய நிலைமையை இங்கே சுட்டிக்காட்டினார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

எனவே தமிழகம் இன்றைக்கு தொழில் வளர்ச்சியைப் பொறுத்த வரைக்கும் எந்த அளவிலே இருக்கிறது என்பதை முதலிலே தெரிவிக்கவேண்டியது என்னுடைய கடமையாகும். தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் நானும் நம்முடைய அருமைச் சகோதரர் மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் திரு. கே.ஏ.கே. அவர்களும் சுட்டிக்காட்டியிருப்பதைப் போல, ஊரகத் தொழில்கள், சிறிய தொழில்களை ஒரு கண்ணாகவும் அதைப்போல் நடுத்தர, பெரிய தொழில்களை மற்றொரு கண்ணாகவும் கொண்டு, இந்த இரண்டு வகையான தொழில் பிரிவுகளும், தமிழ் நாட்டினுடைய பல்வேறு மாவட்டங்களிலேயும் பரவலாக வரவேண்டுமென்றும், அதன்மூலம் வேலை வாய்ப்பை எல்லா மாவட்டங்களுக்கும் பரவலாக உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயும் இந்த அரசு திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்திக்கொண்டிருக்கிறது. தொழிற்சாலைகளினுடைய பெருக்கம், அதன் மூலமாக உற்பத்தியினுடைய பெருக்கம், வேலைவாய்ப்பு அதிகரிப்பு, இவற்றின் காரணமாகத்தான் பெரும்பாலும், தனி நபர் வருமானம், அல்லது பெர் கேப்பிட்டா இன்கம் அதிகரிப்பு இருக்கமுடியும் என்பதை மன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள். சதர்ன் எக்கனாமிஸ்ட் என்ற பத்திரிகையிலே 1983 மார்ச்சு இதழில் தமிழகத்தினுடைய பெர் கேப்பிட்டா இன்கம் பற்றி, தனி நபர் வருமானம் பற்றி சொல்லப்பட்டு இருப்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒவ்வொரு மாநில வாரியாக அந்தந்த மாவட்டத்தினுடைய நிலை என்ன, எந்த இடத்திலே இருக்கிறது, எவ்வளவு வருமானம் என்பதைப் பற்றி அந்த பத்திரிகை ஆய்வு செய்து வெளியிட்டிருக்கிறது. அதிலே பஞ்சாப் மாநிலம் முதல் இடத்திலே இருக்கிறது. மகாராஷ்டிரம் இரண்டாவது இடத்திலே இருக்கிறது. அரியானா மூன்றாவது இடத்திலேயும், குஜராத் நான்காவது இடத்திலேயும், தமிழ்நாடு ஐந்தாவது இடத்திலேயும் இருக்கிறது. அதாவது 1980-லே, 1970—71-லே தமிழகத்தினுடைய நிலை 9-வது இடத்திலே இருந்தது. தனி நபர் வருமானம் ரூபாய் 583 ஆகவும், மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது 9-வது இடத்திலேயும், 1970—71-லே இருந்த தமிழகம் இப்போது

இந்த ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னாலே, தனி நபர் வருமானம் 1,315 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. அதனுடைய நிலை அல்லது ரேங்க், 5-வது இடமாக உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே கோத்தாரி நிறுவனம் மற்ற மாநிலங்களை எல்லாம் ஒப்பிடுகிறபோது, தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சியை ஆய்வு செய்கிறபோது தமிழகத்தினுடைய நிலை மிகச் சிறப்பாக இருக்கிறது என்று

Kothari's Economic and Industrial Guide of India 1982-83.

என்ற அந்த புத்தகத்திலே

With its broad-based and well balanced industrial complex Tamil Nadu today occupies a permanent place in the Industrial map of India next only to Maharashtra and West Bengal largely Medium Scale of Units and technology oriented in the Small Scale Industries have emerged in various parts of the State. The growth and dispersal of the Industries all over the State is largely due to the infrastructure and other incentives including financing and training facilities offered by the State.

என்று சொல்லி, இந்த மாநிலம் மகாராஷ்டிராவுக்கும் வெஸ்ட் பெங்கால் மாநிலத்திற்கும் அடுத்தபடியாக, மூன்றாவது இடத்திலே இருக்கிறது என்று அந்த ஆய்வு அறிக்கை சொல்லுகிறது.

அது மட்டுமல்ல, The share of the State in All India baiss has gone up from 7.9 thousand in 1960-61 to 9.9. thousand in 1977-78 and another significant point to note is one third of the Industrial Licences issued between 1977-81 have gone to units in backward areas.

According to the I.D.B.I. study and the state-wise distributional ass stance between July 1980 and June 1981, Tamil Nadu hold the first place in the sanctions and second position in the dispersal among the States all over the country. Under the Central Investment Subsidy Scheme Tamil Nadu maintains the first position among all the States both in the aggregate and in the annual disbursement of amount obtained from the Government of India என்றும் இந்த அறிக்கையிலே விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

The average annual rate of Industrial production which stood amounted to 7.6 in 1976 rose to 172.3 in the year 1980 and which indicate hat signi-ficant progress has been made inspite of various drawbacks.





(பிற்பகல் 12–20)

என்றும் அந்த கோத்தாரி நிறுவனம் வெளியிட்டு இருக்கிற அறிக்கையில் சொல்லியிருப்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதன் பிரகாரம் பின்தங்கிய பகுதிகளில் தொழில் துவங்குவதற்காக மூலதனம் மானியம் பெறுவதில். சப்சிடி பெறுவதில் தொடர்ந்து தமிழகம்தான் முதலிடத்தில் இருக்கிறது என்பதை சொல்லிக்கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அதைப்போலவே, '' எகனாமிக் டைம்ஸ் '' என்ற பத்திரிகையும்

The Annual Survey of Industries released by the Central Statistical Organisation today stated "The Tamil Nadu wrested the third position from Gujarath by sliding the later to the fourth position although Gujarath continues to maintain its lead in cloth output என்று சொல்லியிருக்கிறது.

தொழில்களின் எண்ணிக்கை பெருகி இருக்கிறது என்று சொல்கிறபோது,

On the other hand Andhra Pradesh, Maharashtra, Punjab, Tamil Nadu and Utter Pradesh report substantial growth in the number of factories.

என்று அந்தப் பத்திரிகை சொல்லி இருப்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எனவே இங்கே நான் சுட்டிக்காட்டிய அறிக்கைகள், அல்லது பத்திரிகைகளிலே தந்து இருக்கும் செய்திகளின் அடிப்படையில் பார்க்கிறபோது, தமிழ் நாடு சில இனங்களில் முதலிடம் வகிக்கிறது. குறிப்பாக, நிதி நிறுவனங்கள் — ஐ.டி.பி.ஐ. போன்ற நிதி நிறுவனங்கள்— தரும் கடன்களைப் பெறுவதிலும், மானியங்கள் அல்லது சப்சிடி பெறுவதிலும் தமிழ்நாடு சென்ற ஆண்டு முதலிடத்தில் இருந்தது, இந்த ஆண்டு இரண்டாம் இடத்தில் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அதைப்போலவே, பேராசிரியர் குகன் எழுதியுள்ள Madras Institute of Development Studies என்ற அறிக்கையிலே,

Tamil Nadu alongwith Maharashtra, West Bengal and Gujarath is among the most industrialised States of India whether measured in terms of employment, value ord red and manufactured or capital investment in the manufacturing sector and Tamil Nadu is the third most advanced State in India in employment and production in the factory sector, Tamil Nadu comes next only to Maharashtra and West Bengal.

என்றும் அந்த அறிக்கையிலே சொல்லப்பட்டு இருக்கும் அந்த விவரங்களை எல்லாம் நான் இங்கே எடுத்துச் சொல்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் ஏற்கனவே சொன்னதைப்போல, ஐ. டி. பி. ஐ. யிலிருந்து 1982-லே சுமார் 85 கோடி ரூபாய் நம்முடைய மாநிலம் கடன் பெற்று இருக்கிறது. 1977 வரையில் மொத்தம் சப்சிடி நாம் பெற்றது ஏறக்குறைய 15 சதவீதம்தான். அதாவது, 1977 வரையில் சுமார் 4 கோடி அளவிற்குத்தான் நாம் சப்சிடி பெற்று இருக்கிறோம். 1977-ல் இருந்து 1982 வரையில் சுமார் 17 கோடி ரூபாய் சப்சிடியாக, தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை நாம் பெற்று இருக்கிறோம். இது மொத்த உதவித்தொகையில் 15 சதவீதம் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், தமிழகம் பல்வேறு நிலைகளில் முன்னேறி யிருக்கிறது. துணி நூல் வகையிலே இந்தியாவின் மொத்த கதிர் திறனிலே 25 சதவீதம் தமிழகம் கொண்டு இருக்கிறது. இந்தியாவின் மொத்த நூல் உற்பத்தியின் பங்கு சுமார் 22 சதவீதம் இருக்கிறது. மோட்டார் வாகன உற்பத்தியிலே தமிழகத்தின் பங்கு சுமார் 25 சதவீதம், சிமிண்ட் உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு சுமார் 18 சதவீதம், சர்க்கரை உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு சுமார் 10 சதவீதம் என்று உயர்ந்து இருக்கிறது. அதேபோன்று ரசாயன உர உற்பத்தியில், நைட்ரஜன் உர உற்பத்தியில் சுமார் 17 சதவீதம் என்று உயர்ந்து இருக்கிறது. பாஸ்பேட் உற்பத்தியில் சுமார் 27 சதவீதம் தமிழ்நாடு பெற்று இருக்கிறது. சைக்கிள் உற்பத்தியில் 10 சதவீதம் என்று இருக்கிறது. காஸ்டிக் சோடா உற்பத்தியில் சுமார் 19 சதவீதம் என்று இருக்கிறது. மோட்டார் வாகன டயர் உற்பத்தியில் 15 சதவீதம் என்று இருக்கிறது. கால்சியம் கார்பைட் உற்பத்தியில் சுமார் 11 சதவீதம் என்று இருக்கிறது. தீப்பெட்டி உற்பத்தியில் சுமார் 60 சதவீதமாக இருக்கிறது. சீர்படுத்தப்பட்ட தோல் உற்பத்தியைப் பொறுத்த வரையில் 77 சதவீதமாக இருக்கிறது. தோல் ஏற்றுமதியில் 65 சதவீதமாக இருக்கிறது. இப்படி அனைத்து இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் தமிழ்நாடு மிக உயர்ந்த நிலையில், மிகச் சிறப்பான நிலையில் இருக்கிறது. பல்வேறு தொழில்களில் சிறப்பான இடத்தை சமீபத்தில் பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்து, மகிழ்ச்சியடைகிறேன்.

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் தொழில் சட்டங்களின்கீழ் பதிவு செய்யப்பட்டவை. 1977-ல் சுமார் 8,570 ஆக இருந்தது 1977-லிருந்து 1981 வரையில் சுமார் 11,000 ஆக உயர்ந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களும் மற்றவர்களும் இந்த எண்ணிக்கை தெரிந்தபின்னால் மகிழ்ச்சியடைவார்கள் என்று கருதுகிறேன். தொழில் வளர்ச்சியில் 'சீரோ' நிலையில் இருக்கிறது என்றால் 8,000-லிருந்து 11,000 ஆக பதிவு பெற்ற தொழில்கள் வந்திருக்க முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்ந்துகொள்வார்கள் என்று கருதுகிறேன். இது சுமார் 30 சதவீத வளர்ச்சி என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்டஸ்ட்ரியல் லைசென்ஸ்—டி.ஜி.டி.டி. இன்டஸ்ட்ரீஸ், நடுத்தரத் தொழில்கள்—இந்தத் தொழில்களைப் பொறுத்த வரையில் 1977-க்குப் பின்னால் குறைந்தது ஓர் ஆண்டுக்கு சுமார் 75 தொழில்கள் என்ற அளவிலே தொடங்கப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று தொழில் முதலீடுகளைப் பொறுத்தவரையில் 1977 வரைக்கும் ஏற்பட்டிருக்கிற முதலீடு சுமார் 2,000 கோடி ரூபாய். 1977 முதல் 1981 வரையில் சுமார் 4,290 கோடி ரூபாய் தமிழ்நாட்டிலே முதலீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போன்று தொழில் உற்பத்தியினுடைய மொத்த மதிப்பீட்டைப் பொறுத்தவரையில் 1977-லே சுமார் 650 கோடி ரூபாயாக இருந்தது, இன்றைக்கு, 1980-81-ல் 1,300 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்பதையும் ஏறத்தாழ 90 சதவீதம் உயர்ந்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று தமிழ்நாட்டிலே மொத்தத் தொழில் துறை உற்பத்தி சுமார் 27 சதவீதம் உயர்ந்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மின்சாரத்தைப் பயன்படுத்துகின்ற அளவு 1976-77-ல் சுமார் 3,000 மில்லியன் யூனிட்டாக இருந்தது 1980-81 ஆம் ஆண்டில் சுமார் 4,020 மில்லியன் யூனிட்டாக உயர்ந்திருக்கிறது என்பதையும் கடந்த 4, 5 ஆண்டுகளாகப் பயன்படுத்தும் விகிதம் வேகமாக வளர்ந்து வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில் 1977 வரை சுமார் 7 இலட்சமாக இருந்தது இன்றைக்கு ஏறத்தாழ 9 இலட்சம் என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசு தொழில் உரிமங்கள் வழங்குவது பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். தொழில் உரிமங்களைப் பொறுத்தவரையில் மாண்புமிகு மத்திய அமைச்சர் திவாரி அவர்கள் வந்த பிறகு எவ்வளவு மனுக்கள்

அனுப்பினோம். எவ்வளவு அனுமதி தந்திருக்கிறார்கள் என்று பார்த்தால் 1977-க்குப் பின்னாலே அனுமதி கடிதங்கள் 250 வந்திருக்கின்றன. அதிலே 177 வரையில் உரிமங்கள் தரப்பட்டிருக்கின்றன. 1982-ல் மட்டும் சுமார் 60 அனுமதி கடிதங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அதைப்போன்று பெரும்பாலும் நஷ்டத்திலே இருந்த சில தொழில் நிறுவனங்கள் அல்லது கார்ப்பரேஷன்கள்கூட இலாபத்திலே நடைபோட ஆரம்பித்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுத்துறை என்றாலே நஷ்டத்திலேதான் இயங்கும் என்ற நிலை மாறி இலாபத்தில் இயங்கும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

தமிழ்நாடு ஸ்டீல்ஸ், அரக்கோணம்—இதைப் பொறுத்தவரையில் 1982-83ஆம் ஆண்டில் சுமார் 68 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டியிருக்கிறது. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தில் சுமார் 1·5 கோடி ரூபாய் இலாபம்; 1982-83-ல் டிட்கோ நிறுவனத்தில் சுமார் 1.5 கோடி ரூபாய் இலாபம்; தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தில் சுமார் 118 இலட்சம் ரூபாய், அதாவது சுமார் 1.25 கோடி ரூபாய் இலாபம்; தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தில் 85 இலட்சம் ரூபாய் இலாபம். 1982-83 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தில் 4.60 கோடி ரூபாய் இலாபம்; தமிழ்நாடு டானிங் நிறுவனத்தில் சுமார் 22 இலட்சம் ரூபாய் இலாபம்; டான்சம் நிறுவனத்தில் சுமார் 84 இலட்சம் ரூபாய் இலாபம் வந்திருக்கிறது.

(பிற்பகல் 12-30)

அதைப்போன்று தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் நிறுவனம் 1982-83-ஆம் ஆண்டில் சுமார் 10 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டியிருக்கிறது. அதைப்போன்று கூட்டுத் துறையில் அமைந்துள்ள பாண்டியன் கெமிக்கல்ஸ், சதர்ன் பெட்ரோ கெமிக்கல்ஸ், தமிழ்நாடு கெமிக்கல்ஸ் லிமிடெட்—இப்படி கூட்டுத் துறையில் இயங்குகின்ற பல நிறுவனங்கள் இலாபத்திலே இயங்க ஆரம்பித்திருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். நஷ்டத்திலே இயங்குகின்ற ஒன்றிரண்டு நிறுவனங்கள் கூட, அதனுடைய நஷ்டங்களை ஆண்டுக்காண்டு குறைத்துக் கொண்டு இலாபம் வருகிற அந்த நிலைமையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி நான் அறிவித்த இந்தக் குறிப்புகளிலேயிருந்து மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப் போல, தமிழகம் ஏதோ இருந்த நிலைமையிலேயே இருந்து கொண்டு, தேக்கம் கண்டி



ருக்கிறது என்கிற நிலைமையோ அல்லது பின்னாலே போய்க் கொண்டிருக்கிறது என்ற நிலைமையோ இல்லை. இந்த மாநில அரசு தன்னுடைய அதிகாரத்திற்கு உட்பட்டு எவற்றை எல்லாம் செய்யவேண்டுமோ, அவற்றைச் செய்வதிலே பின் வாங்கவில்லை—அப்படிப் பின் வாங்கியிருக்கிறது என்று சொல்வதற்கு நிச்சயமாக இடம் இல்லை என்பதையும் இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொன்ன புள்ளி விவரங்கள் தெளிவாக்கியிருக்கும், மாண்புமிகு உறுப்பினர்கள் அதைப் புரிந்துக் கொண்டிருப்பார்கள் என்றும் நான் கருதுகிறேன்.

தமிழகத்தைத் தொழில் மையமாக்குவதிலே தமிழக அரசினுடைய சில நிறுவனங்கள் தங்களுடைய முழுமையான பங்கைச் செலுத்தி வருகின்றன. அதிலும் சிப்காட் நிறுவனம் தேவையான அடிப்படை வசதிகளை—infastructual facilities என்று சொல்லக்கூடிய அடிப்படை வசதிகளை செய்து தருவதிலே முழு கவனமும் செலுத்தி வருகிறது. தமிழக தொழில் முதலீட்டு நிறுவனம் எனப்படும் இந்த தமிழ்நாடு சிப்காட் நிறுவனத்தைப் பொறுத்தவரைக்கும், இந்த நிறுவனம் துவங்கிய காலத்திலிருந்து 31—3—1977 வரைக்கும் கொடுத்திருக்கின்ற கடன் தொகை சுமார் 3 கோடி ரூபாய் ஆகும். அதற்குப் பின்னால் 1—4—1977-லிருந்து 1982 வரைக்கும் அந்த நிறுவனம் கொடுத்திருக்கிற கடன் சுமார் 13 கோடி ரூபாயாகும். இந்த நிறுவனத்தின் பணிகளை 1972 ஆம் ஆண்டோடு ஒப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், குறிப்பாக அருமை சகோதரர் துரைமுருகன் அவர்களுக்குச் சொல்ல வேண்டும் என்றால், 1972-ல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி இருந்தபோது, அப்போது வழங்கப்பட்டது ரூபாய் 12 இலட்சம் ஆகும். இன்றைக்கு 1982-லே அது 2 கோடியாக உயர்ந்திருக்கிறது என்பதையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில் இந்த அரசு அதிகமாகத்தான் பணிகளைச் செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொன்னேன்.

அதேபோல மைய அரசினுடைய மூலதன முதலீட்டுத் தொகை 1977 வரைக்கும் சுமார் 4 கோடி ரூபாயாகும். அதற்குப் பின்னாலே 1977 முதல் 1983 வரைக்கும் சுமார் 18 கோடி ரூபாயாகும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல நேரிடையாக வழங்குகிற கடனைப் பொறுத்தவரையில் டேர்ம் லோன் அடிப்படையில் வழங்குகின்ற கடனைப் பொறுத்தவரையில் 1977—லே வழங்கப்பட்டது 26 இலட்சமாகும். 1982—லே வழங்கப்பட்டது 14 கோடி ரூபாயாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல தமிழகத்தில் உள்ள தொழிற் பேட்டைகளைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே இருந்த ஒசூர், ராணிப்பேட்டை பகுதிகளில் விரிவாக்கம் நடந்து வருகிறது. அது தவிர 5 தொழிற் பேட்டைகளை 5 இடங்களிலே ஆரம்பிப்பதற்கான பணிகளும்

(திரு. எஸ். திருநாவுக்கரசு) [1983 ஏப்ரல் 18

தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. அதிலே சுமார் 4 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் மொத்தமாக தேவைப்படுகின்ற அடிப்படையில் வாங்கி வைத்திருக்கிறோம். சுமார் 10 கோடி ரூபாய் செலவு செய்து, தொழில் அதிபர்கள் தொழில் துவங்க முன் வருகிறபோது, அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து தருவதற்காகவும் இந்தப் பணிகள் துவங்க இருக்கின்றன என்பதை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அதேபோல புதியதாக தொழில் விஸ்தரிப்பு என்ற வகையில் கும்மிடிப்பூண்டியிலே 22தொழில்கள் துவங்கப்பட இருக்கின்றன. சுமார் 22 கோடியிலே அந்தத் தொழில்கள் துவங்கப்படயிருக்கின்றன. அதேபோல கடலூரிலே 3 தொழில்கள் 19கோடியிலேயும், புதுக்கோட்டையிலே 3 தொழில்கள் சுமார் 2 1/2 கோடியிலும் துவங்கப்படயிருக்கின்றன. இப்படி அறிவிக்கப்பட்ட இந்தத் தொழில்கள் துவங்கப்படுவதற்கான பணிகள் உதவிகள் போன்றவை சிப்காட் தொழிற் பேட்டையிலே, இண்டஸ்ட்ரீஸ் காம்பிளக்ஸ் இருக்கிற அந்தத் தொழிற் பேட்டையிலே, எந்த வகையில் வழங்கப்படுகின்றன என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

இதிலே வெளிநாடுகளில் வாழ்கிற தமிழர்கள் இங்கே தொழில் துவங்க முன் வருகிறபோது, அவர்களோடு தொடர்பு கொண்டு, அவர்களுக்கு வேண்டிய வசதி வாய்ப்புக்களைச் செய்துக் கொடுக்க, சிப்காட் நிறுவனத்திலேயே இதற்காக ஒரு தனி செல் துவங்கப்பட்டுள்ளது. அந்தச் செல்லில் இதுவரைக்கும் 125 விசாரணை கடிதங்கள், தொழில் துவங்குவது குறித்து வந்திருக்கிறது என்பதையும், அதிலே உடனடியாக 5 தொழிற்சாலைகள் துவங்க இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல திடீரென்று மின் பற்றாக்குறை ஏற்பட்டு சிக்கல் ஏற்பட்டு தொழில்கள் பாதிக்கப்படுவதை தவிர்த்து, சிக்கலை சமாளிக்க சிப்காட் நிறுவனத்திலிருந்து சுமார் 2 கோடி ரூபாய் அளவில் ஜெனரேட்டர் வாங்கி கடனாகக் கொடுத்து, அதுவும் மிகக் குறைந்த காலத்தில், 2, 3 மாத காலத்தில் கொடுத்து, இந்த அரசு சிப்காட் நிறுவனம் மூலமாக வழங்கி தொழில்களுக்கு உதவி செய்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி இந்த சிப்காட் நிறுவனம் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட இந்த நிறுவனம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

திரு. ஹாஜா செரீஃப் அவர்கள் பேசுகின்றபோது ஏற்கெனவே ஹோசூரிலே உள்ள தொழில் பேட்டையிலே உள்ள சிரமங்கள் குறித்துச் சொன்னார்கள். போதிய தண்ணீர் வசதி இல்லை. பல்வேறு அடிப்படை வசதிகளான போலீஸ் ஸ்டேஷன், ஃபையர்



(திரு. எஸ். திருநாவுக்கரசு) [1983 ஏப்ரல் 18

ஸ்டேஷன் போன்றவை எல்லாம் இல்லாமல் தொழில்பேட்டை உருவாக்கப்பட்டிருக்கின்றது என்று சுட்டிக் காட்டினார்கள். அப்படி ஹோசூரிலும், இராணிப்பேட்டையிலும் நமக்கு ஏற்பட்டிருக்கின்ற அனுபவங்களை வைத்துக் கொண்டு பின்னாலே துவங்க இருக்கின்ற 5 தொழிற் பேட்டைகளைப் பொறுத்த வரையில் அடிப்படை வசதிகளான தண்ணீர் வசதி, போலீஸ் ஸ்டேஷன், ஃபையர் ஸ்டேஷன், டெலிஃபோன், டெலக்ஸ் போன்ற அனைத்து வசதிகளையும் உருவாக்குவதற்கு முதலிலே ஏற்பாடுகளைச் செய்ததற்குப் பிறகுதான் அந்தத் தொழிற் பேட்டைகள் துவங்கப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, மாண்புமிகு திரு. ஹாஜா செரீஃப் அவர்கள் மானாமதுரையிலே ஆரம்பிக்கப்பட இருக்கின்ற தொழிற்பேட்டையைச் சென்று பார்த்தால் எந்த அளவுக்குத் திட்டமிட்டு வசதிகளை எல்லாம் செய்து கொடுத்து இருக்கிறோம் என்பதை அங்குள்ள கட்டடம் முதலியவற்றை வைத்துத் தெரிந்துக் கொள்ளலாம். ஹோசூரிலே ஏற்பட்ட அனுபவத்தை வைத்து எவ்வாறு திட்டமிட்டு, முன்பு ஏற்பட்ட சிரமங்களை எல்லாம் மனத்திலே கொண்டு திட்டமிட்டு புதிய தொழில் பேட்டைகள் உருவாக்கப்படுகின்றது என்பதை மாண்புமிகு ஹாஜா செரீஃப் அவர்கள் அங்கே சென்று பார்த்தால் ஒத்துக் கொள்வார்கள்.

சிப்காட்டிற்கு அடுத்தபடியாக தொழில் வளர்ச்சியிலே முழுமையாக கவனம் செலுத்துகின்ற ஒரு நிறுவனமாக தொழில் முதலீட்டு கழகம் இருக்கின்றது. இந்தத் தொழில் முதலீட்டுக் கழகத்தைப் பொறுத்தவரையில் 1972 ஆம் ஆண்டிலிருந்து 1982 ஆம் ஆண்டு வரை வழங்கி இருக்கின்ற கடன் ரூ. 101 கோடி. 1977-78 ஆம் ஆண்டு வரை 284 தொழில்களுக்கு சுமார் 8½ கோடி ரூபாய் கொடுத்திருந்தது. 1982-83லே மட்டும் 3,225 தொழில்களுக்கு 40 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஜெனரேட்டர் வாங்குவதற்காக 570 தொழில்களுக்கு சுமார் 4 கோடியே 15 இலட்சம் ரூபாய் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் அளித்திருக்கின்றது.

அடுத்து புதிதாக 4 வட்டார அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. ஏற்கெனவே இருந்த கடன் வழங்குகின்ற அதிகாரங்கள் மாற்றியமைக்கப்படுகின்றன. மாவட்ட அளவிலே உள்ள அலுவலகங்களில் 25 ஆயிரம் ரூபாய் வரைதான் கடன் வழங்கலாம் என்று உத்தரவிட்டது, வேகமாக சிறு தொழில்களுக்குக் கடன் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு. அதற்குப் பிறகு ஒரு இலட்சம் ரூபாயாக மாற்றியமைக்கப்பட்டது. இப்போது கிளை அலுவலகம் அளவிற்கு சுமார் 7½ இலட்சம் ரூபாய் அளவுக்குக் கடன் பட்டுவாடா செய்யலாம் என்று அரசு உத்தரவிட்டிருக்கின்றது. வட்டார அலுவலகத்தில் 1 இலட்சம் ரூபாயிலிருந்து 2½ இலட்சம் ரூபாய் வரை கடன் அளிக்கலாம் என்றும் கிளை அலுவலகம் 7½ இலட்சம் ரூபாய் வரை கடன் அளிக்கலாம் என்றும் அதற்கான ஆணைகள் எல்லாம் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

அடுத்து லாரி, டாக்ஸி, டெம்போ, மற்ற வேகன்கள் என்ற வகையில் சுய வேலைவாய்ப்பை உருவாக்கித் தரவேண்டும் என்ற நோக்கத்தோடு அவர்களுக்கு சுமார் $9\frac{1}{2}$ கோடி ரூபாய் இது வரை கடனாக கொடுக்கப்பட்டிருக்கின்றது. சுமார் 1,000 பேர் இதனால் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள், பலன் அடைந்திருக்கிறார்கள்.

அடுத்து டெக்னோகிராட்ஸ் என்ற வகையில் படித்திருக்கின்ற பட்டதாரிகள், இன்ஜினியர்ஸ், மற்றும் டீ. எம். ஈ. போன்ற தொழில் நுட்பப் பயிற்சி பெற்றிருப்பவர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்குத் தொழில் துவங்குகின்ற ஆர்வம் இருந்தும் பணம் இல்லை என்ற காரணத்திற்காக அவர்களுடைய ஆர்வம் தடைப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக $1\frac{1}{4}$ கோடி ரூபாய் வரையில் கடன் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதனால் சுமார் 66 பேர் பயன் அடைந்து இருக்கிறார்கள். ஆகவே பணம் இல்லை என்றாலும் கூட வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஓட்டுநர்கள், இன்ஜினியர்கள் போன்றவர்களுக்கு டெக்னோகிராட்ஸ் என்ற வகையிலே படித்துவிட்டு வெளியே வருகின்றவர்களுக்கு வேலை வாய்ப்பை கொடுக்க வேண்டும் என்ற வகையில் இந்த நிறுவனம் எப்படி முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதற்காக இந்தப் புள்ளி விவரத்தை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். Similar Financial Institutions in other states என்பதைத் ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது தமிழ்நாட்டிலே உள்ள தொழில் முதலீட்டு கழகத்தை மற்ற மாநிலங்களில் உள்ள நிறுவனங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் கடன் கொடுக்கின்ற நிலைமைகள் உயர்ந்திருக்கின்றன என்பதைக் காண முடியும். வெஸ்ட் பெங்காலிலே உள்ள நிறுவனம் 1981-82லே சுமார் 15 கோடி ரூபாய் சாங்ஷன் பண்ணி இருக்கின்றது.

(பிற்பகல் 12-40)

கேரளா சுமார் $5\frac{1}{2}$ கோடி சேங்ஷன் செய்து இருக்கிறது. தமிழ்நாடு சுமார் 52 கோடி அளவுக்கு சேங்ஷன் செய்து இருக்கிறது, அனுமதி வழங்கியிருக்கிறது என்பதிலிருந்து எப்படி மற்ற மாநிலங்களில் இருக்கின்ற இதைப் போன்ற நிதி நிறுவனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த நிறுவனத்தினுடைய பணி வளர்ந்து இருக்கிறது என்பதை, வேகமாகியிருக்கிறது என்பதை, அதிகரித்து இருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக் காட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அதைப்போலவே அடுத்த நிறுவனம் டிட்கோ நிறுவனம். கூட்டுத் துறையில் தொழில்களை ஆரம்பிப்பதிலேயும், பொதுத் துறையில் தொழில்களை ஆரம்பிப்பதிலேயும் கவனம் செலுத்தி வருகிறது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தை பொறுத்த வரைக்கும் 1981-82-ல் சுமார் ரூ. 1.59 லட்சம் அது லாபம் ஈட்டியிருக்கிறது. பொதுத்துறையில் 11-ம், கூட்டுத்





துறையில் 40-ம் ஆக ஏறக்குறைய 51 தொழில்களை டிட்கோ நிறுவனம் நிர்வகித்து வருகிறது. டிட்கோ முதலீடு செய்துள்ள மொத்த தொகை ரூ. 434 கோடி ஆகும். இதில் ஏற்படுத்தியிருக்கிற வேலைவாய்ப்பு இந்த ஆண்டில் மட்டும் சுமார் 10 ஆயிரம் ஆகும். பொதுத்துறையிலே டிட்கோ நிறுவனம் 1965—லிருந்து 1977 வரைக்கும் செய்து இருக்கிற முதலீடு சுமார் ரூ. $17\frac{1}{2}$ கோடி. 1977 லிருந்து 1982 வரைக்கும் பொதுத்துறையில் டிட்கோ நிறுவனம் முதலீடு செய்து இருக்கிற தொகை சுமார் ரூ.8 கோடி ஆகும். அதைப்போலவே கூட்டுத்துறையில் 1965 முதல் 1977 வரைக்கும் டிட்கோ செய்து இருக்கிற முதலீடு சுமார் ரூ. $8\frac{1}{4}$ கோடி. 1977 லிருந்து 1982 வரைக்கும் டிட்கோ கூட்டுத் துறையில் செய்து இருக்கிற முதலீடு சுமார் ரூ. $19\frac{1}{4}$ கோடி ஆகும்.

அதைப் போலவே கூட்டுத்துறையிலே தனியார் முதலீடு 1965-லிருந்து 1977 வரைக்கும் சுமார் 555 இலட்சம் ஆகும். அதைப் போலவே 1977-லிருந்து 1982 வரைக்கும் 525 இலட்சம் ரூபாய் தனியார் முதலீடு ஆகும். அதைப் போலவே கூட்டுத் துறையில் பொதுமக்கள் செலுத்த வேண்டிய பங்கு மூலதனத் தொகை ஷேர் கேப்பிட்டலாக வசூல் செய்து இருப்பது 1965-லிருந்து 1977 வரைக்கும் ரூ. $11\frac{1}{2}$ கோடி ஆகும். 1977-லிருந்து 1982 வரைக்கும் சுமார் ரூ.10 கோடி ஆகும். அதைப் போலவே அரசுத் துறையில் 4-ம், கூட்டுத்துறையில் 12-ம் ஆக 16 திட்டங்கள் டிட்கோவின் சார்பில் ஆய்வு நிலையில் நிறைவேற்றப்பட உள்ள திட்டங்களாக இருக்கின்றன. அதன் மூலமாக அரசுத் துறையில் சுமார் 32 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட இருக்கிறது. கூட்டுத்துறையில் 12 தொழிற்சாலைகளும் சுமார் 192 கோடி ரூபாய் முதலீட்டில் வர இருக்கின்றன. ஆகவே தனியார் துறை சுமார் 240 கோடியில் பல்வேறு திட்டங்கள் டிட்கோ நிறுவனத்தின் சார்பில் நடைமுறைப்படுத்த வேண்டிய அந்த சூழ்நிலையில் இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சங்கரய்யா அவர்களும், திரு. கருப்பையா அவர்களும் இங்கே குறிப்பிடும் போது டிட்கோ நிறுவனம் பொதுத் துறையில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் தனியார்களை அதிகமாக இங்கே உற்சாகப்படுத்துகிறார்கள் என்றும் கூட்டுத் துறையில் தொழில்களை அதிகமாக உற்சாகப்படுத்தக் கூடாது என்றும் எடுத்துச் சொன்னார்கள். இதிலே கொள்கை ரீதியாகவே சில கொள்கை வேறுபாடுகள் மாண்புமிகு உறுப்பினர்கள் சேர்ந்துள்ள கட்சிகளுக்கும் எங்களுக்கும் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் உங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக இந்தியாவினுடைய பொருளாதாரமே மிக்ஸ்டு எக்கானமி என்றுசொல்லக் கூடிய தனியார்களையும் உற்சாகப்படுத்தி அதே நேரத்தில் பொதுத் துறையையும் உற்சாகப்படுத்த வேண்டும் என்பது தான் அதுதான் நம்முடைய இந்திய நாட்டின் பொருளாதார நிலை ஆகும். அதை மாண்புமிகு உறுப்பினர்களும் இந்த மன்றமும் ஏற்றுக்கொள்ளும். சி.பி.ஐ., சி.பி.எம். சார்பில் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கருப்பையா அவர்களும், திரு.

சங்கரய்யா அவர்களும் பேசினாலும் கூட கம்யூனிஸ்டு கட்சி ஆட்சி நடத்துகின்ற மேற்கு வங்கம் அல்லது முன்னால் ஆட்சி நடத்திய கேரளா உட்பட மற்ற மாநிலங்களில் கூட பொதுத் துறை நிறுவனங்கள் அல்லது ஜாயின்ட் செக்டார் நிறுவனங்கள் கூட்டுத்துறை நிறுவனங்களுக்கு உற்சாகப்படுத்து கின்றன. அவர்களும் ஆரம்பிக்கிறார்கள் என்பதை நான் புள்ளி விவரங்களோடு சொல்ல முடியும். இதை குற்றச் சாட்டாக சொல்லவில்லை. அதை அவர்கள் ஆதரிக்கிறார்கள். நாமும் ஆதரிக்கிறோம் வேறு வழி இல்லை. என்ன காரணம் என்றால் நான் ஏற்கனவே சொன்னதைப் போல் 11 தொழில் களை பொதுத் துறையில் ஆரம்பித்து இருக்கிறோம். அப்படி ஆரம்பிக்கும் போது அதிலே மொத்த திட்ட மதிப்பீடு சுமார் 113 கோடி ரூபாய் என்றால் அதிலே டிட்கோ பங்குத் தொகை சுமார் 43 சதவீதம் ஆகும். ஆரம்பிக்கும் தொழில் 11. அதிலே டிட்கோ பங்கு 44 சதவீதம். கூட்டுத்துறையில் ஆரம்பிக்கிற தொழில் 40 அதில் இடுகிற முதலீடு 420 கோடி ரூபாய். அதிலே டிட்கோவினுடைய பங்கு 46 கோடி ரூபாய். ஆனால் அதிலே கூட்டுத் துறையில் டிட்கோ செய்கின்ற முதலீட்டின் பங்கு இருக்கிறதே ஷேர் 10 சதவீதம் தான். எனவே டிட்கோ நிறுவனம் 10 சதவீதத்திலே 40 தொழில்களை கூட்டுத் துறையில் கொண்டுவர முடிகிறது. அந்த 39 சதவீத முதலீட்டில் பொதுத் துறையில் 11 தொழில்களை தான் கொண்டு வர முடிகிறது

எனவே நம்மைப் பொறுத்த வரைக்கும் பொதுத் துறையிலே எந்த எந்தத் தொழில்களை எல்லாம் கொண்டுவர முடியுமோ அந்தத் தொழில்களை எல்லாம் கொண்டு வருகிறோம். சில நேரங்களிலே தனியார்கள் உரிமங்கள் பெற்றுஆரம்பிக்கிறார்கள். ஏன் நீங்கள் ஆரம்பிக்காமல் தனியார்களோடு சேர்ந்து ஆரம் பிக்கிறீர்கள் என்று திரு. சங்கரய்யா அவர்கள் கேட்டார்கள். அதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று ஏதாவது டெக்னாலஜிக்காக சில நேரங்களிலே தனியார்களோடு கூட்டுச் சேர்கிறார்கள். ஆனால் மத்திய அரசு தனியார்களுக்கு லைசென்ஸ் கொடுத்திருக்கிறபோது தனியார்கள் முன் வந்து டிட்கோவினுடைய உதவியைக் கேட்கிற போது ஏற்கனவே தனியார்களுக்கு கொடுத்திருக்கிற லைசென்ஸை வைத்துக் கொண்டு டிட்கோ அவர்களோடு சேர்ந்து கூட்டு நிலையிலே அந்த நிறுவனத்தை நிறுவுகிறது. இப்படிப் பல்வேறு நிறுவனங் கள் ஜாயின்ட் செக்டார் நிறுவனங்கள் தமிழகத்திலே வருகின்றன. நம்மைப் பொறுத்த வரைக்கும் அதை நாங்கள் தவறாக எடுத்துக் கொள்ளவில்லை. அதற்கு மாறாக உற்சாகப்படுத்தவே விரும்பு கிறோம் என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் என்றால் தனியார்கள் எவ்வளவு அதிகமாக முதலீடு செய்ய முடிகிறதோ அவ்வளவு அதிகமாக முதலீடு செய்வது என்பது சில குடும்பங்களுக்கு லாபம் வருகிறது என்ற அடிப்படையில் பார்க்காமல் அதனால் பல்லாயிரக்கணக்கில் வேலை வாய்ப்பு ஏற்படுகிறது, உற்பத்தி ஆகிறது, அதற்குப் பின்னால் சேல்ஸ் டாக்ஸ் என்ற முறையிலே அரசுக்கு வருகிற வருமானம் எல்லாம் ஏற்படுகிறது. இவற்றை எல்லாம் கணக்கிலே



கொண்டுதான் தனியார் துறையையும் நாம் மிக அதிகமான அளவிலே உற்சாகப்படுத்துகிறோம். இன்னும் சொல்ல வேண்டு மென்றால் கம்யூனிஸ்ட் நண்பர்களைத் தவிர மற்றவர்கள் பேசுகின்ற போது தனியார்கள் சரியாக இங்கே உற்சாகப்படுத்தப் படவில்லை, அதனால் அவர்கள் இங்கிருந்து பல்வேறு மாநிலங் களுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள், அவர்களை நீங்கள் இன்னும் அதிகமாக உற்சாகப் படுத்தவேண்டும், அதிகமாகக் கடன்கள் தரவேண்டும் அல்லது இன்னும் அதிகமாக இன்சன்டிவ்ஸ் கொடுக்க வேண்டும் என்ற தோரணையிலேதான் எடுத்துச் சொன்னார்கள். எனவே மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு வந்ததற்குப் பின்னாலே நானும் தொழிற் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் வேகமாக அல்லது அதிகமாக வசதி செய்து தந்திருக்கிற மாநிலங்கள் என்று சொல்லப்படுகிற மகா ராட்டிரம், குஜராத் ஆகிய மாநிலங்களுக்குச் சென்று அங்கே எவ்வளவு இண்டஸ்ட்ரியல் சேல்ஸ்டாக்ஸ் லோன் கொடுக்கிறார் கள், எவ்வளவு கடன் கொடுக்கிறார்கள், எவ்வளவு சப்சிடி கொடுக்கிறார்கள் மின்சாரத்திலே எவ்வளவு சலுகை அளிக்கிறார் கள் என்பதை எல்லாம் ஆராய்ந்து மற்ற மாநிலங்களிலே தரு வதைப் போன்று தமிழ்நாட்டிலே தரவேண்டுமென்ற உணர் வோடு அதற்கு ஏற்ப வசதிகளையும் சலுகைகளையும் தருவதற் கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். உதாரணமாகச் சொல்ல வேண்டு மானால் இண்டஸ்ட்ரியல் சேல்ஸ்டாக்ஸ் லோன் சுமார் 48 இலட்சம் ரூபாயாக இருந்தது. அந்த 48 இலட்ச ரூபாயை 1 கோடியாக உயர்த்தினோம். விரிவாக்கம் என்பதற்கு 15 இலட்சம் ரூபாய் என்று இருந்தது. அப்படி 15 இலட்சம் ரூபாயாக இருந்ததை 50 இலட்சமாக உயர்த்தினோம். சில நேரங்களிலே தமிழ்நாடு பின்னாலே இருக்கிறது அல்லது இன்னும் வேகமாக முன்னேற வேண்டியிருக்கிறது என்ற நோக்கத்தோடு சுமார் 3 பிரிவுகளை தமிழ்நாட்டிலே உருவாக்க வேண்டுமென்பதற்காக எலக்ட்ரானிக்ஸ், டிரக்ஸ் அன்ட் பார்மசுடிக்கல்ஸ், ஆட்டோ மொபைல் ஆன்சிலரிஸ், இந்த மூன்றிற்கும் அதிகமான வாய்ப்பு இருக்கிறது என்று திரு. சங்கரய்யா அவர்களும் மற்றவர்களும் சொன்னார்கள். இந்த மூன்று பிரிவுகளும் இன்னும் அதிகமான வளர்ச்சி தமிழ் நாட்டிலே பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு இப்போது சப்ஸிடி என்றால் பின்தங்கிய பகுதியாக இருந்தால் தான் கொடுக்கிறோம். அதற்குப் பதிலாக இந்த மூன்று தொழில் களும் தமிழ்நாட்டிலே எந்த பகுதியிலே ஆரம்பிக்கப்பட்டாலும் பார்வர்டாக இருந்தாலும் சரி, அல்லது தொழிற் துறையிலே பின்தங்கிய தாலுகா என்று மத்திய அரசு அறிவித்திருக்கிற 33 தாலுகாவிலே அல்லது மாநில அரசு தொழிற் துறையிலே பின் தங்கியிருக்கிற தாலுகாக்கள் என்று அறிவித்திருக்கிற 24 தாலுகாவிலே அந்த தாலுகா போக தமிழ்நாட்டில் எந்தப் பகுதியிலே ஆரம்பித்தாலும் 10 பர்சன்ட கேபிடல் சப்ஸிடி, முதலீடு மானியம் என்றும் இல்லையென்றால் நிரந்தரமாக வேலைக்கு அமர்த்த வேண்டும் என்று ஒருவருக்கு ரூபாய் 20 ஆயிரம் என்ற வகையிலே தமிழ்நாட்டிலே இந்த மூன்று

(பிற்பகல் 12-50)

தொழில்களை தொடங்கலாம் என்ற வகையிலே அந்த வாய்ப்புகள் வசதிகள் அங்கே உண்டு என்று அறிவித்திருக்கிறோம். அநேகமாக மாநில முழுமைக்கும் அறிவிக்கப்படுகிறது இந்த வசதிகள் வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லை என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குக் காரணம் டிரக்ஸ் அன்ட் பார்மசுட்டிக்கல்ஸ், எலக்ட்ரானிக்ஸ் போன்றவை தமிழ்நாட்டில் கொஞ்சம் பின்னாலே இருக்கிறது. இன்னும் வேகமாக போக வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தச் சலுகைகள் அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற போது எவ்வளவு அதிகமாக உற்சாகப்படுத்த முடியுமோ அவ்வளவு அதிகமாக உற்சாகப்படுத்துகிற விதத்திலே சலுகைகளையும் வாய்ப்புக்களையும் நாம் அறிவித்து இருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் நான் ஒன்றிரண்டு தெரிவித்தேன். அதைப்போலவே தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்தைப் பொறுத்த வரையிலே தமிழ்நாட்டிலே திருத்தணியிலே ஒரு சர்க்கரை ஆலையை அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. மயிலாடுதுறையிலே ஒரு சர்க்கரை ஆலை அமைக்கப்பட வேண்டுமென்பதற்கான விண்ணப்பம் மத்திய அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. இதைத் தவிர தனியார்களிடத்திலே இருந்து சுமார் 9 சர்க்கரை ஆலைகள் ஆரம்பிக்க வேண்டுமென்ற விண்ணப்பங்கள் வந்து அந்த 9-இல் 5 மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றன. அப்படி பரிந்துரை செய்யப்பட்ட ஐந்தில் தனியார் துறையில்ஒன்றுக்கும் பொதுத்துறையில் ஒன்றுக்குமாக லைசென்ஸ் கிடைத்து இருக்கிறது.

பொதுத் துறையிலே திருத்தணியிலே வந்திருக்கிறது. தனியார் துறையில் பெரியார் மாவட்டத்தில் வந்திருக்கிறது. இந்த இரண்டைத் தவிர மற்ற உரிமங்கள் மத்திய அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. இன்னும் நடப்பு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இரண்டு சர்க்கரை ஆலைகள் அமைப்பதாக முடிவு செய்தோம். இரண்டு பெரிய ஆலைகள்; இரண்டு மினி ஆலைகள். இப்போது மினி ஆலைகள் அவ்வளவு லாபகரமாக இல்லை. அதற்கு மத்திய அரசினுடைய சலுகைகளும் ஊக்கமளிப்பதாக இல்லை என்பதாலும் அது வெற்றிகரமாக அமையுமா என்ற சந்தேகத்தில் மூன்றாவதாக ஒரு பெரிய சர்க்கரை ஆலையை அமைக்கலாம் என்ற முடிவில், மூன்றாவது சர்க்கரை ஆலையை 1250 டன் திறனுள்ள ஒரு ஆலையை அமைக்க அரசு முயற்சித்துக் கொண்டிருக்கிறது. மயிலாடுதுறை போக இன்னொன்று பொதுத் துறையிலே வருகிறது. அநேகமாக பட்டுக்கோட்டை, பேராவூரணி, அறந்தாங்கி பகுதிகளை மையமாக வைத்து அந்த சர்க்கரை ஆலை அமையவிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல தனியார் துறையிலே ஏறக்குறைய 9 மனுக்கள் வந்திருக்கின்றன என்று நான் அறிவித்தேன். அருமைச் சகோதரர் துரைமுருகன் அவர்களும், மற்ற சட்டமன்ற உறுப்பினர்களும் போளூர் பகுதியிலே ஒரு சர்க்கரை ஆலை அமைக்க



வேண்டுமென்று வேண்டுகோளை விடுத்தார்கள். அந்தப் பகுதியிலே சர்க்கரை ஆலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன். அதற்கு முன்னாலே சர்க்கரை ஆலையை கூட்டுறவுத் துறையில் ஆரம்பிப்பதா? அல்லது தனியார் துறையில் ஆரம்பிப்பதா? என்பதிலே, இந்த அரசு ஒரு பின்தங்கிய கொள்கையைக் கொண்டிருக்கிறதென்று மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். 'தனியார்களை நீங்கள் அதிகமாக உற்சாகப்படுத்துகிறீர்கள்' என்று அவர்கள் குற்றம் சாட்டினார்கள். நான் முன்னால் சொன்னதைப் போல அதிலே நமக்கு கருத்துவேறுபாடு இருக்கிறது. தனியார் துறைக்கே கொடுக்கக்கூடாது என்பது உங்களுடைய வாதம். ஆனால் இன்றைக்கு மத்திய அரசைப் பொறுத்தவரையில் மற்ற மாநிலங்களில் தனியார் துறையை உற்சாகப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே நம்முடைய மாநிலத்தில் தனியார் யாருக்கும் உரிமம் கொடுப்பதில்லை, சிபார்சு செய்வதில்லை என்ற நிலையை நாம் எடுத்தால், அதனால் தமிழகம் பாதிக்கப்படும், விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள், வேலை வாய்ப்பு இல்லாமல் போகும், இதுபோன்ற பல சூழ்நிலைகள் உருவாகும். எனவே தான் தனியாரை உற்சாகப்படுத்துகிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன அந்தப் பகுதியிலே தனியார்கள் யாராவது ஆரம்பிப்பதற்கு முன்வருவார்களானால் அதை இந்த அரசு நிச்சயமாக பரிசீலிக்கும்.

திரு. பொ. உத்திராபதி : மாற்றுத் தலைவர் அவர்களே நான் அமைச்சர் அவர்களிடத்தில் விளக்கம் கேட்டுக்கொள்ள விரும்புவது, தனியார்கள் தொழில் துவங்குவதைப் பற்றியோ, தொழில் வளர்ச்சிக்கான உதவிகளை அரசாங்கம் செய்வதைப் பற்றியோ எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஒரு தொழிலை, துவங்குகிறபோது அரசாங்கம் உலகவங்கியிலேயிருந்து கடன் பெற்று, தனியார்கள், கூட்டுறவுத் துறையிலே கொடுக்கிறபோது 80 சதவீதம் மூலதனத்தைப் போடுகிறது; 10 சதவீதம் தனியார் போடுகிறார்கள்; என்ற நிலையில் தனிப்பட்ட முதலாளிகளுக்கு ஊக்கமளிப்பது முறைதானா? நான் சொல்வது அப்படி கூட்டுறவுத் துறையிலே துவங்குகிறபோது, அதிகமான முதலீட்டை போடுகிற அரசு நிறுவனங்களிடத்தில் அனுபவம் பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருக்கிறபோது, தனியார்களுக்கு ஊக்கமளிப்பது சரிதானா என்பதை கேட்க விரும்புகிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வடஆற்காடு மாவட்டம் போளூர் பகுதியில் சர்க்கரை ஆலை அமைப்பதற்கான சாத்தியக்கூறு இருப்பதாக அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டதற்கு நன்றி. ஆனால் தனியார் துறையில் யாராவது ஆரம்பிப்பதாக இருந்தால் அரசாங்கம் ஒத்துழைக்கும் என்று சொல்கிறார்கள். போளூர் பகுதி ஏழைகள் நிரம்பியபகுதி, விவசாயிகள் நிறைந்த பகுதி. கூட்டுறவுத்துறையிலே போளூரில் ஒரு சர்க்கரை ஆலை நிறுவ நம்முடைய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் தனியார் சர்க்கரை ஆலை அமைப்பதற்கு உரிமம் வழங்கியதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த சர்க்கரை ஆலை எந்தப் பகுதியில் வரவிருக்கிறது? யாருக்கு அந்த அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்திலே பொன்னி சர்க்கரை ஆலை என்ற நிறுவனம்—தனியார் துறையில்—உரிமம் பெற்றிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்கள் போளூர் பகுதியிலே கூட்டுறவுத் துறையிலே வேண்டுமென்று கேட்கிறார்கள். கூட்டுறவுத் துறையிலே, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே மொத்தமாக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருப்பது 3 தொழிற் சாலைகளுக்கு. ஏற்கனவே, சொன்ன மாதிரி, ஒன்று திருத்தணி பகுதியிலே வருகிறது. மற்றொன்று மயிலாடுதுறை பகுதியிலே வருகிறது. எனவே, கூட்டுறவுத் துறையிலே, நடப்பு ஆண்டில், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. அந்தப் பகுதியிலே விவசாயிகள் ஏழைகளாக இருக்கிறார்கள், வேறு ஆட்களில்லை. ஆகவே, தனியார்களால் துவங்க முடியாது என்று கூறினார்கள். அந்தப் பகுதியிலே இருப்பவர்கள்தான் அங்கே தொழில் துவங்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. வேறு மாவட்டத்திலே, வேறு பகுதியிலே இருப்பவர்கள் கூட தொழில் நடத்துபவர்கள்கூட—அங்கே தொழில் துவங்கலாம். அப்படி அவர்கள் அங்கு தொழில் துவங்க முன்வருகிற போது, மாண்புமிகு உறுப்பினர்கள் வேண்டிய உதவிகளைச் செய்யலாம். எனவே, இன்றைக்குச் சிவகெங்கை பகுதியிலும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் சிதம்பரம் சர்க்கரை ஆலை வேண்டுமென்று சொன்னார். சிவகெங்கை பகுதியிலே தனியார்கள் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போல், திருச்சி மாவட்டம், மதுரை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், பெரியார் மாவட்டம், இப்படிப் பல்வேறு மாவட்டங்களிலே தனியார்கள் அந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதியிலே இருக்கிற வாய்ப்புகளை, சாத்தியக் கூறுகளை நினைவிலே கொண்டு யாராவது துவங்க முன் வருவார்களானால் அவர்களை அரசு ஊக்குவிக்கும்.

தனியார்களை உற்சாகப்படுத்துவதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிறபொழுது இங்கே சில கருத்துக்களைச் சுட்டிக்காட்டினார்கள். அது தமிழ்நாடு நியூஸ்பிரின்ட்டாக இருந்தாலும் சரி, அல்லது இதுபோன்ற மற்ற தனியார்களைச் சேர்த்துக் கொள்கிறபொழுது, தனியார்கள் போடுகிற மூல தனத்திற்கு ஏற்றவாறு அவர்களுடைய பங்கு அல்லது அட்மினிஸ்ட்ரேஷனிலே அவர்களுக்கு உரிய பங்கு அதிலே இருக்கிறது. பொதுவாக, கூட்டுத் தொழில் நிறுவனங்கள், ஜாயின்ட் செக்டாரிலே வருகிறபொழுது, நம்முடைய அரசு அதிகாரிகளும் அதிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். கூட்டுத் துறையிலே தனியார்





களுடைய கைதான் ஓங்கியிருக்கும் என்ற காரணத்தாலே கூட்டுத் துறையையே, ஜாயின்ட் செக்டாரையே விட்டுவிடமுடியாது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். உதற்காகத்தான் சொன்னேன். மேற்கு வங்காளத்திலே 11 தொழில்களை ஜாயின்ட் செக்டாரிலே ஆரம்பித்திருக்கிறார்கள். சங்கரய்யா அவர்கள், அத்தியாவசியப் பொருள்களையாவது நீங்கள் பொதுத் துறையிலே ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னார்கள். சிமென்ட், பேப்பர் இந்த இரண்டும் எவ்வளவு அத்தியாவசியப் பொருள் என்று உங்களுக்குத் தெரியும். இந்த சிமென்ட் தொழிற்சாலையை, காகிதத் தொழிற்சாலையை, தனியாரைச் சேர்த்துக் கொண்டு ஜாயின்ட் செக்டாரிலே, மேற்கு வங்காளத்திலே ஆரம்பித்திருக்கிறார்கள். இதை நான் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், அதிலே அரசுப் பணம், அரசு நிதி நிறுவனங்கள் போடுகிற பணம்—கூட்டுத் துறையிலே—ஜாயின்ட் செக்டாரிலே—குறைவாகத்தானிருக்கும். பங்கு குறைவாகப் போட்டு, அதிகமான தொழில்களைக் கொண்டு வர முடிகிறது. வேலை வாய்ப்புகள் அதிகமாகக் கொண்டு வரப்படுகிறது. அதன் மூலமாக, உற்பத்தியை அதிகரிக்கிறது. அதன்மூலமாக, மாநிலத்திற்கு வருகிற வருமானம் அதிகமாகக் கிடைக்கிற வாய்ப்பு இருக்கிறது. அந்தக் காரணத்தாலே, உங்களுடைய கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி நடத்துகிற மேற்கு வங்காளம் உட்பட எல்லா மாநிலங்களிலும் அந்தக் கொள்கை—தனியார்களோடு சேர்ந்து துவங்குகிற கூட்டுக் கொள்கை—பின்பற்றப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராசன் : மாற்றுத் தலைவர்அவர்களே' நான் குறுக்கிட வேண்டாம் என்று நினைத்தேன். ஆனால், ஒரு மிக முக்கியமான, தொழில் வளர்ச்சி பற்றிய கருத்தை அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஒன்றிரண்டு வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக, தமிழ்நாட்டிலே, அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலே, தொழில் வளர்ச்சி ஏற்படவில்லையென்ற கருத்தை மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியோ, கம்யூனிஸ்ட் கட்சியோ ஏற்றுக் கொள்வதில்லை. நாங்கள் பார்ப்பதெல்லாம், தொழில் வளர்ச்சி என்பது இந்தியாவில், குறிப்பிட்ட கட்டத்திலே நொண்டி அடிக்கிறது, ஊனமாக இருக்கிறது, வளர்ச்சி அடையவில்லையென்று கருதுகிறோம் முதலிலே, இரண்டாவது தனியாருக்கு ஊக்கம் கொடுத்து. கொடுத்துத்தான் அந்தத் தொழில் வளர்ச்சி நொண்டி அடித்துக் கொண்டிருக்கிறது என்பது சமீப ஆராய்ச்சியிலே தெரிகிறது. தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்தியாவிலே, நாம் சுதந்திரம் பெற்றதற்குப் பின்னாலேதான் தொழில் துறையிலே, பொதுத் துறையே வந்தது. அதற்கு பின்னர் பொதுத் துறை ஏது? ஆக, இன்று தமிழகத்திலே, அதிகமான இலாபம் வரக்கூடிய வாய்ப்புகள் பல தொழில்களிலே, பொதுத் துறையிலே அதிகமாக இருக்கும்போது, அல்லது, கூட்டுத்துறையிலே போடும்படியான மூலதனம் தனியாருக்கு இலாபம் கொடுக்கக்கூடிய சூழ்நிலையை ஏன் ஏற்படுத்த வேண்டுமென்பதுதான் இன்று நாங்கள் கேட்கும்படியான கேள்வி.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு மாற்றுத் தலைவர், அவர்களே, தொழில்கள் அனைத்தும் பொதுத்துறையிலேதான் வரவேண்டுமென்பது நல்ல நோக்கம். அதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், இந்திய நாட்டினுடைய பொருளாதார நிலை அப்படிப்பட்ட நிலையாக இல்லை. நான் ஏற்கனவே சொன்னதைப் போல, ஒரு கூட்டுப் பொருளாதாரம், அல்லது 'மிக்சட் எக்கானமி' என்கிற அந்தக் கொள்கையின் அடிப்படையிலேதான் இந்திய நாட்டினுடைய பொருளாதாரக் கொள்கை இருக்கிறது. அதனாலேதான் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே இவ்வளவு தீவிரம் காட்டுகிறார்களே—உங்களுடைய மாநிலக் கட்சியினுடைய கொள்கையாக நான் கருதவில்லை, அனைத்திந்திய அளவிலே உங்களுடைய கொள்கை அதுதான். ஆனாலும்கூட, உங்களுடைய கட்சிகள் ஆட்சி நடத்துகிற—சி.பி.ஐ., சி.பி.எம்.—போன்ற கட்சிகள் ஆட்சி நடத்துகிற மாநிலங்களிலும்கூட ஏற்படுத்துகிற தொழில்கள் அனைத்தும் பொதுதுறையிலேதான் என்கிற ஒரு கொள்கையை நடைமுறைப் படுத்த முடியவில்லை.

(பிற்பகல் 1-00).

அதை நான் குறையாகச் சொல்லவில்லை. அப்படித்தான் இந்திய நாட்டினுடைய பொருளாதார அமைப்பிலே செய்ய முடியும். ஏற்கனவே சொன்னதைப்போல, சிமென்ட் உட்பட, காகிதம் உட்பட இதுபோன்ற மிக அத்தியாவசியமான சில பொருட்களின் உற்பத்தியைக் கூட கூட்டுத் துறையிலே அல்லது ஜாயின்ட் செக்டாரிலே ஆரம்பிக்க வேண்டிய கட்டாயம் மேற்கு வங்கம் உட்பட எல்லா மாநிலங்களிலேயும் இருக்கிறது. நோக்கம் நல்ல நோக்கம்தான். இதை நிறைவேற்றுவதிலே கொஞ்சம் கொஞ்சமாக எல்லா மாநிலங்களும் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. தமிழக அரசைப் பொறுத்தவரையில் கூட எவற்றையெல்லாம் நாம் பொதுத் துறையிலே கொண்டு வர முடியுமோ அவற்றையெல்லாம் பொதுத் துறையிலே கொண்டு வர அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், அருமை சகோதரர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகின்றபொழுது கூட, வெடி மருந்துத் தொழிற்சாலையைப் பற்றிச் சொன்னார்கள். இருபது கோடி என்று அறிவித்தீர்களே, அது என்ன வாயிற்று என்று கேட்டார்கள். வேறு எங்கேயும் அது போய்விடவில்லை. அது அவர்கள் மாவட்டத்திலேதான் வந்து கொண்டிருக்கிறது. ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய் இதுவரையில் செலவு செய்யப்பட்டிருக்கிறது. 80 இலட்சம் ரூபாய் இயந்திரங்களுக்காகக் கூட அட்வான்ஸ் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஐ.டி.பி.ஐ. கிளியரன்ஸுக்காக காத்திருந்து, அந்த ஐ.டி.பி.ஐயும் இப்பொழுது கிளியரன்ஸ் கொடுத்திருக்கிறது. இந்தியத் தொழில் துறையும் கிளியரன்ஸ் கொடுத்திருக்கிறது. சுவீடன் நாட்டினுடைய ஒத்துழைப்போடு அந்தத் தொழிற்சாலை அங்கே வரவிருக்கிறது. அது பொதுத் துறையிலேதான் வருகிறது.



**திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களுடனும், மற்றவர்களுடனும் நானும் சேர்ந்து கேட்பது என்னவென்றால், , நீங்கள் பொதுத்துறையிலேயோ அல்லது ஜாயின்ட் செக்டாரிலேயோ ஆரம்பித்த ஒன்று. ஜாயின்ட் செக்டாரிலே ஆரம்பித்திருந்தால் அதிலே சில சமயங்களிலே தனியார் தலையீடு இருக்கலாம். ஆனால் முழுக்க அராசங்கத்தினுடைய் பணத்தைப் போட்டு நாம் ஆரம்பிக்கிற காகிதத் தொழிற்சாலைக்கு, ஏற்கனவே ஒரு காகிதத் தொழிற்சாலையினுடைய அதிபராக இருக்கின்ற விஸ்வநாதனைக் கொண்டு வந்து சேர்மனாகப் போட்டிருக்கிறீர்கள். கன்சல்டன்டாக இருப்பவர்கள் டைரக்டராக இருக்கக் கூடாது என்பது நியதி. ஆனால் அதையும் மீறி அவரைச் சேர்மனாகப் போட்டிருக்கிறீர்களே, அவரே ஒரு காகிதத் தொழிற்சாலையை நடத்துகிறவர். அவர் நம்முடைய காகிதத் தொழிற்சாலையை நடத்துவதற்கு நல்ல வழியைக் காட்டுவாரா? புள்ளி மான் குட்டிக்குப் புலியா பால் கொடுக்கும் என்பதைப்போல, தொழிலாளர் வர்க்கத்திற்கு விரோதமாக இருந்து, சிம்கோ, மீட்டரைக் கொடுத்தது பள்ளிப்பாளையம் ஸ்ட்ரைக்கை அடித்து ஒடுக்குகின்ற அந்த விஸ்வநாதனா நம்முடைய காகிதத் தொழிற்சாலையை வளர வைப்பார்? இது முறைதானா? இதில் உள்ள மர்மம் என்ன என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு மாற்றுத் தலைவரர்களே, இதை ஏற்கனவே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களே இங்கே சென்ற தடவை அல்ல; அதற்கு முதல் தடவை பேசுகின்றபொழுது பேசி பதில் சொல்லப்பட்டதாகும். அது பொதுத் துறையிலேதான் இருக்கிறது; தமிழ் நாடு நியூஸ் பிரின்ட் என்பது கூட்டுத்துறை அல்ல; பொதுத் துறைதான்; அதிலே தொழில் துறை செயலாளராக இருந்த திரு. இராமச்சந்திரன் தான் மேனேஜிங் டைரக்டராக, நிர்வாக இயக்குநராக இருக்கிறார். சேஷசாயி விஸ்வநாதன் அதிலே தலைவராக இருக்கிறார். அவ்வளவுதான். ஏற்கனவே சொல்லியிருப்பதைப்போல, அவருடைய டெக்னாலஜியை அவரிடமிருந்து பெறுவது என்கிற அளவிலே, ஏற்கனவே இந்த திட்டத்தை அவர்தான் துவக்கியிருந்தார்; ஆகவே, அந்தத் அடிப்படையிலே அந்தத் திட்டம் விரிவாக்கப்படுகின்றபொழுது ஐ.டி.பி.ஐ., மற்றும் மைய அரசோடும், வேர்ல்ட் பேங்கோடும் அவர் தொடர்பு கொண்டு காரியங்களைச் செய்து கொண்டிருந்தார். அதற்குப் பிறகு தமிழ்நாடு நியூஸ் பிரின்ட் நிறுவனத்தை ஜாயின்ட் செக்டாரில் வைப்பதா என்று ஆய்வு செய்தபொழுது, ஜாயின்ட் செக்டாரில் வைப்பதில்லை என்று முடிவு செய்து, அது 100 பர்சென்ட் பொதுத் துறை நிறுவனம் ஆகத்தான் இருக்கிறது. அதிலே, சேஷசாயியைச் சேர்ந்த திரு. விஸ்வநாதன் அவர்கள் இதைக் கெடுப்பது என்ற பிரச்சினையோ அல்லது இதை வராமல் செய்து விடுவார் என்ற பிரச்சினையோ அதிலே கொஞ்சம் கூட இல்லை என்பதையும் அவர் முடிந்த வரைக்கும் வேகமாக இந்தத் தொழிற்சாலை வருவதிலே ஆர்வம் காட்டிக் கொண்டிருக்கிறார் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அதுமட்டுமல்ல; மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் அதைப்பற்றிச் சொல்லும்பொழுது, இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தியைப்படித்துக் காட்டி, மத்திய அமைச்சர் திரு. வெங்கட்ராமன் உள்பட இதிலே அந்துலே சிமின்டிலே தவறு செய்திருப்பதைப் போல இந்தத் தொழிற்சாலையிலே திரு. வெங்கட்ராமன் தவறு செய்திருக்கிறார் என்று சுட்டிக்காட்டினார்கள். என்னைப் பொறுத்த வரையில், எனக்குக் கிடைத்த தகவலை வைத்துக்கொண்டு சொல்ல வேண்டுமானால், இந்த மாநில அரசாக இருந்தாலும் சரி, மைய அரசாக இருந்தாலும் சரி, இதிலே எந்தவிதமான தவறும் நடக்கவில்லை; ஊழலும் நடைபெறவில்லை. என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னமும் அவர்களுக்குச் சந்தேகம் இருக்குமேயானால், நாடாளுமன்றத்திலே எப்பொழுதாவது ஒரு நாளைக்கு திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். அந்தக் காலம் வரைக்கும் நீங்கள் காத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை; நாளைக்கே கூட நாடாளுமன்றத்திலே உள்ள உங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் மூலம் ஒரு கேள்வியை எழுப்பச் சொன்னார், அப்பொழுது நிதியமைச்சராக இருந்தவர், இப்பொழுது டிஃப்பென்ஸ் அமைச்சராகவும் இருந்து கொண்டிருக்கிறார். அவர் நாளைக்கேக்கூட நாடாளுமன்றத்திலே பதில் சொல்வதற்கான வாய்ப்பிருக்கிறது: நாளைக்கே அவரும் சொல்வார்.

**திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, நான் ஒரேயொரு சிம்பிள் கேள்வியாக கேட்க விரும்புவது இதுதான். கன்சல்டென்ட் என்று போட்டிருக்கிறீர்கள். அதிலே அனுபவம் இருக்கிறது என்பதற்காக கன்சல்டன்ட் என்று போட்டாலும், அவ்ரே எப்படி சேர்மன் ஆனார் என்பதுதான் கேள்வி. மேனேஜிங் டைரக்டர் அங்கே ஐ.ஏ.எஸ்., அதிகாரி; ஏனென்றால் நாம்தான் பணம் போட வேண்டும்; நாம்தான் கடன் வாங்குகிறோம்; நாம்தான் பொறுப்பேற்றுக் கொள்ளப் போகிறோம். ஆனால், கன்சல்டன்ட், கன்சல்டன்டோடு நிற்காமல் சேர்மனாக வந்து, அதற்குப்பிறகு அவர்தான் ஆன்யூவல் ரிப்போர்ட்டை சப்மிட் செய்ய வேண்டிய நிலைமை வந்திருக்கிறது. இவருக்குக் கீழே நம்முறைய அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆகவே, கன்சல்டன்ட் சேர்மனாக ஏன் ஆனார்? கன்சல்டன்ட் பீசே கிட்டத்தட்ட 11 இலட்சம் ரூபாய் இதிலே போட்டிருக்கிறார்கள். ''கன்சல்டன்ட் சர்வீஸ் சார்ஜ்'' ரூ. 11,43,593 என்று போட்டிருக்கிறார்கள். ஆக இது சேர்மனுக்கு சேர்மன்—கன்சல்டன்ட்டன்டுக்கு கன்சல்டன்ட். ஆகையால் தான் ஒன்றே ஒன்று—கேட்கிறேன். ஆக இன்றைக்கு டைரக்டர் ஆகக்கூட இருக்கக்கூடாது என்ற தொழில் நியதி இருக்கிறபோது எப்படி அவரைச் சேர்மனாகவும் ஆக்கினீர்கள்? இதுதான் நான் கேட்கிற கேள்வி.



**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாற்றுத் தலைவரவர்களே, சேஷசாயி நிறுவனம் கன்சல்டன்ட் நிறுவனமாக இருக்கிறது. சேஷசாயி விஸ்வநாதன், இந்த நிறுவத்தினுடைய தலைவராக, சேர்மனாக பொறுப்பில் இருக்கிறார். அவருடைய பொறுப்பிலே இருக்கிற சேஷசாயி பத்திரிகையை நடத்துகிற குழு அல்லது டெக்னிக்கல் கமிட்டி கன்சல்டன்சி பொறுப்பேற்றிருக்கிறது. ஆனால் விஸ்வநாதன், கன்சல்டென்ட்சி மெம்பர் என்று அந்த நிறுவனத்தில் இருக்கின்ற காரணத்தாலோ அதனுடைய தலைவராக இருக்கின்ற விஸ்வநாதன் இங்கே தலைவராக இருக்கக் கூடாது என்பதற்கு எந்த விதியும் இல்லை. அதிலே முரண்பாட்டிற்கு இடமில்லை.

**திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொஞ்ச நேரத்திற்கு முன்பாக சொன்னார்கள். அவரைக் கன்சல்டென்டாகப் போட்டிருக்கிறோம் என்று.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** சேஷசாயி கன்சல்டென்ட்சி நிறுவனம். விஸ்வநாதன் அந்த நிறுவனத்திலே தலைவராக இருக்கிறார். இந்த நிறுவனத்திலே அவர் தலைவராகவோ, எம்.டி., ஆகவோ இருக்கிறார். இந்த நிறுவனத்திலே இருக்கிற டெக்னிக்கல் குழு இங்கே நமக்கு வேண்டிய டெக்னாலஜியை கொடுப்பதற்காக பணியாற்றுகிறது. அதற்கான பீஸ் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. எனவே அதற்கும் இதற்கும் ஒன்றும் சம்பந்தமில்லை.

**திரு. துரைமுருகன் :** அதாவது மாண்புமிகு அமைச்சர் பதிலிலே இருந்து தெரியவருவது விஸ்வநாதன் கன்செல்டென்ட் அல்ல. விஸ்வநாதன் அதிலே இருக்கிற—சேஷசாயி நிறுவனம்தான் கன்செல்டென்ட். விஸ்வநாதனுக்கு கன்செல்டென்ட் என்று பெயர் கிடையாது. வெறும் சேர்மென் என்பதுதான் பெயர் என்று அமைச்சர் அவர்களின் பதிலிலே இருந்து தெரிகிறது. அப்படியானால், ஒரு தனி மனிதரைக் கொண்டுவந்து சேர்மனாகப் போட வேண்டிய அவசியம் என்ன? He is not a consultant as per your reply.

**DR. K. SOWRIRAJAN :** I also want to know, Hon'ble Speaker Sir, Mr. Viswanathan, in the capacity of Mr. Viswanathan who has gained a lot of experience in that particular trade, can be the Chairman of any Government undertaking. Simply because he happens to be owning another consultancy service, does it prohibit him from becoming Chairman of the institution sponsored by the Government ?

**திரு. துரைமுருகன் :** அப்படி ஒரு நிறுவனத்திலே மிகவும் எக்ஸ்பிரீயன்ஸ் இருக்கிறவர்களை கொண்டுவந்து சர்க்கார்த் துறையிலே நடக்கிற ஒரு நிறுவனத்திற்குத் தலைவராகப் போடுவதால், அதில் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது என்று அங்கத்தினர்கள் சொல்வார்களானால், நம்முடைய டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் சில பல நஷ்டத்திலே ஓடுகிறது. நம்முடைய ஐந்து

ஆண்டுத் திட்டத்திலே ரூ. 55 கோடி நஷ்டம். பொள்ளாச்சி மகாலிங்கத்திற்கு டிரான்ஸ்போர்ட்டில் மிகவும் எக்ஸ்பீரியன்ஸ். அவரை ஒன்றுக்கும், நம்முடைய காசிராமனை சோழன் போக்கு வரத்துக் கழகத்திற்கும், நம்முடைய பாரதிவேலை, பட்டுக் கோட்டை அழகிரிக்கும், பஸ் முதலாளிகளாகப் போட நீங்கள் தயாராக இருக்கிறீர்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இதில் நான் ஏற்கனவே சொன்னதுபோல், சேஷசாயி பத்திரிகை நிறுவனம், இந்த தமிழ்நாடு நியூஸ் பிரிண்டுக்கு கன்சல்டண்டு அமைப்பாக இருக்கிற காரணத்தால், அந்த சேஷசாயியினுடைய உரிமையாளராக இருக்கிற விஸ்வநாதன் அவர்கள் இதில் தலைவராக இருக்கக் கூடாது என்று எந்த விதியும் இல்லை. எனவே விதிகளுக்கு முரண்பாடாக, போட்டிருக்கிறார்கள் என்பதைப் போன்ற ஒரு பிரமையை உண்டாக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் இங்கே சுட்டிக்காட்டினார்கள். டாக்டர் சௌரிராஜன் அவர்கள் சொன்னதைப் போல், அவர்களுக்கு இருக்கிற அனுபவம், அல்லது அந்தத் தொழிலில் அவருக்கு இருக்கிற அந்த நீண்ட நாள் அனுபவத்தைப் பயன்படுத்துகிற விதத்திலே, ஏற்கனவே அந்தத் தொழிலை ஆரம்பிக்கிற முயற்சிகளை மேற்கொண்ட காரணத்தால் அவற்றை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவும் அவர் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். தலைவராக நியமிக்கப்பட்டிருந்தாலும், முழுப் பொறுப்பையும், அந்தத் தொழிலிலே முக்கியத்துவம் அவருக்குக் கொடுத்திருக்கிறதா என்று கேட்டால் நான் சொல்வேன்—தொழில் துறை மாநிலச் செயலாளராக இருந்த திரு. கே. ராமச்சந்திரன் அவர்களே இதற்கு நிர்வாக இயக்குநராக எம்.டி யாக நியமிக்கப்பட்டு, முழு நேரப் பொறுப்பாக அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். எனவே இன்றைக்கு தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவிலேயே ஒரு பிரஸ்டீஜ் இஷ்யூவாகி விட்டதாலும், மாநில அரசு மட்டுமல்லாமல், மத்திய அரசும் கவனித்துக்கொண்டிருக்கிறது. ஏனென்றால் நாம் நிறையச் செய்திகளைப் பத்திரிகைகளில் தருவதற்காக, பேப்பரை அதிக அளவில் இறக்குமதி செய்துகொண்டிருக்கிறோம். எனவே இதைப் போன்ற தொழில் இங்கே வெற்றிகரமாக அமையவேண்டுமானால், இப்போது உத்தரப் பிரதேசத்திலே கூட, ஒன்று போட வேண்டுமென்று அந்த முயற்சியிலே மத்திய அமைச்சரும், பிரதம அமைச்சரும் இருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-10)

எனவே அதனுடைய வெற்றியிலே இந்தத் தொழில் வெகு வேகமாக தன்னுடைய உற்பத்தியை துவங்கவேண்டும் என்பதிலே இது மிகச் சிறப்பாக வரவேண்டும் என்பதிலே மாநில அரசு மட்டுமல்ல, மத்திய அரசும், அதைப்போல கடன் கொடுத்த உலக வங்கியும் மிக அக்கறையோடு செயலாற்றிக்கொண்டு வருகின்றன. எனவே இதிலே பேசுகிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் சிலவற்றைச் சுட்டிக்காட்டினார்கள். திரு. துரைமுருகன் அவர்கள் சில புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு அவர்கள்





ஒவ்வொன்றாக சொல்லிக்கொண்டு வந்தார்கள். ஒவ்வொரு ஆண்டு வாரியாக அரசாங்கம் ஒதுக்கியிருக்கிற நிதியைச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். சிலவற்றிற்கு நீங்கள் சென்ற ஆண்டு 40 லட்சம் ஒதுக்கினீர்கள், அதற்கு அடுத்த ஆண்டு 30 லட்சம் இந்த ஆண்டு ஒன்றும் இல்லை என்று சொன்னார்கள். நம்முடைய காகித ஆலையைப் பற்றிக் கூடச் சொன்னார்கள். நான் இங்கே முன்னாலே சொன்னதைப் போல, அரசாங்கம் நிதி ஒதுக்கியதற்குப் பின்னாலே, ஆண்டுக்காண்டு நிதி ஒதுக்கீடு குறைகிறது என்றால், பணி வேகமாக நடைபெற்று வருகிறது என்றுதான் பொருள். அதற்கு வேண்டிய தொகைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. மெஷினரிஸ்எல்லாம்வந்துகொண்டிருக்கின்றன. அந்தப் பணி முடிவடைகிற கட்டத்திலே இருக்கிறது. ஆகவே வெகுவேகமாக அந்தத் தொழில் துவங்கிக்கொண்டு இருக்கிறது என்பதைத்தான் இது எடுத்துக்காட்டுகிறதே தவிர, சென்ற ஆண்டை விட நிதி குறைந்திருக்கிறது என்பது ஸ்தம்பித்து இருக்கிறது என்பதற்கு அடையாளம் இல்லை. அந்தத் தொழில் வெகு வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஒதுக்க வேண்டிய பணத்தை அரசு ஏற்கனவே கொடுத்திருக்கிறது என்பதுதான் அதனுடைய அடையாளம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

அதேபோல் டாஸ்கோ. சர்க்கரை நிறுவனத்தைப் பொறுத்த வரையிலே நான் ஏற்கனவே சொன்னதைப் போல சுமார் 3½ கோடி ரூபாயிலே பெரம்பலூர் சேலம் ஆகிய ஊர்களிலே இரண்டு புதிய எரிசாராய தொழிற்சாலைகளுக்கு உரிமங்கள் பெற்றிருக்கிறது. டி.ஜி.எஸ்.டி. ரிஜிஸ்ட்ரேஷன் பெற்றிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்வதிலே மகிழ்ச்சி அடைகிறேன்.

அதேபோல் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் மிகச் சிறப்பாக பணியாற்றிக்கொண்டிருக்கிறது. மற்ற தனியார் நடத்துகிற சிமெண்ட் ஆலைகளோடு போட்டி போடுகிற அளவிற்கு 100 சதவீதத்திற்கு மேலே போய் அதனுடைய உற்பத்தியை சில நேரங்களிலே செய்திருக்கிறது. இடையிலே நிலக்கரி பற்றாக்குறை அல்லது மின்வெட்டு போன்றவற்றால் சில சமயங்களில் பாதிப்பு இருந்தாலும், சென்ற ஆண்டு லாபத்தை ஈட்டி இருக்கிறது என்பதையும், ஏறக்குறைய 4 கோடி ரூபாய் லாபம் ஈட்டியிருக்கிறது என்பதை நான் முதலிலே சுட்டிக்காட்டியிருக்கிறேன்.

அதேபோல் சிமென்ட் நிறுவனம். பாளையத்திலே ஒரு சிமென்ட் ஆலையை நிறுவுவதற்கு சுமார் 40 கோடி ரூபாயில் உருவாக்குவதற்காக மாநில அரசு பரிந்துரை செய்து அது மத்திய அரசினுடைய ஆய்விலே இருந்து கொண்டு இருக்கிறது. அதைப் போல் ஆஸ்பெஸ்டாஸ் பிரஷர் பைப் ஒன்று சுமார் 8 கோடியிலே திருச்சி மாவட்டத்திலே துவக்குவதற்காக இந்த தமிழ்நாடு சிமென்ட் கார்ப்பரேசன் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது. இவைகள் எல்லாம் இந்த சிமென்ட் நிறுவனத்தின் பணிகளாக இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டுவதிலே மகிழ்ச்சி அடைகிறேன்.

அதேபோல் டாமின் நிறுவனம் மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டு இருக்கிறது. சென்ற ஆண்டு லாபத்தை ஈட்டியிருக்கிறது. அதேபோல் டான்மேக் நிறுவனம் சென்ற ஆண்டு லாபத்தை ஈட்டியிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல் தனியாக ஜியாலாஜி டிபார்ட்மென்ட் ஆரம்பிக்கப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். அதேபோல் டாசெல் நிறுவனத்தைப் பொறுத்தவரைக்கும் அதிலே நஷ்டம் வந்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் சுட்டிக்காட்டினார்கள். செங்கல் சூளையிலே நஷ்டம் இருக்கிறது என்று சுட்டிக்காட்டினார்கள். இது இப்போது போடப்பட்டது அல்ல. தி.மு.க. ஆட்சிக்காலத்திலே போடப்பட்ட சூளைதான். அதிலே இருந்த இயந்திரங்கள் பழைய இயந்திரங்களாகவும் அதனுடைய உதிரி பாகங்கள் போதிய அளவிலே கிடைக்காத காரணத்தாலும் அதனுடைய புரடக்ஷன் கெப்பாசிட்டி எவ்வளவு என்றுபோட்டார்களோ அந்த புரடக்ஷன் கெப்பாசிட்டியை அவர்கள் செய்யமுடியவில்லை. தவிர செங்கல் பிராசஸ் பண்ணுவதிலே, டிரை பண்ணுவதிலே இப்படி பல்வேறு பிரச்னைகள் அதிலேயிருக்கின்றன. எனவே முறையாக அந்தத் தொழிலை ஆரம்பிக்கிறபோதே அதை அமைக்கவில்லை, அதனால்தான் அந்தச் செங்கல் சூளையைப் பொறுத்தவரைக்கும் தொடர்ந்து அதை வைத்துக்கொள்வதா அல்லது மூடுவதா என்ற நிலையிலேகூட இருக்கிறது. இவைகள் எல்லாம்தான் அந்தத் தொழில் பாதிக்கப்பட்டு இருப்பதற்கு காரணம். அந்தத் தொழில் சரியாக திட்டமிடாமல் துவங்கப்பட்டதுதான் காரணம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மற்றபடி பீங்கான் நிறுவனம் பற்றி பொறுத்தவரைக்கும், மற்றும் இவற்றால் நடத்தப்படுகிற சிறுதொழில்களும் இலாபமாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் தமிழ்நாடு உப்பு நிறுவனம் நஷ்டத்திலே இருந்தாலும் அதனுடைய உற்பத்தி ஆண்டுக்காண்டு விரிவாகிக் கொண்டு வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் நியூஸ் பிரிண்ட் பொறுத்தவரைக்கும் 1985-லே நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல அதனுடைய உற்பத்தியை நிச்சயமாக துவங்கும். 160 கோடியிலே ஆரம்பித்தது இப்போது 200 கோடிக்கு வந்திருக்கிறது, அந்த விலையேற்றத்திற்குக் காரணம் என்ன? மதிப்பீட்டினுடைய புராஜெக்ட் காஸ்ட் கூடியதற்குக் காரணம் என்ன என்று இங்கே பேசுகிறபோது அத்தனை பேரும் தங்களுடைய கவலையைப் பகிர்ந்து கொண்டார்கள். அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று, பாரின் எக்சேஞ்ஜ் ரூபாயிலே ஏற்பட்ட பிளக்ச்சிபிளிட்டி, ஏற்கனவே ஒரு டாலருக்கு 8½ ரூபாய் என்று இருந்தது, இப்போது 10 ரூபாயாக ஆகியிருக்கிறது. இது ஒரு காரணம். இரண்டாவது காரணம் இம்போர்ட் டியூட்டி கூடியிருப்பது இந்த இரண்டு காரணங்களினால் அது தற்போது 195 கோடி ரூபாய் அளவிற்கு அதனுடைய





மதிப்பீட்டிலே உயர்ந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல மாநில அரசு மத்திய அரசை இந்த இம்போர்ட் டியூட்டி இன்கிரிஸ் பண்ணிய காரணத்தினாலே இந்த புராஜெக்ட் காஸ்ட் கூடியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி இந்த இம்ப்போர்ட் டியூட்டியிலேயிருந்து எக்சம்ஷன் கொடுக்க வேண்டும், அல்லது விலக்கு கொடுக்க வேண்டும் என்று மாநில அரசு ஏற்கனவே மத்திய அரசோடு தொடர்பு கொண்டு கேட்டிருக்கிறது. மத்திய அரசு நிச்சயமாக அதைக் கவனிக்கும் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு எலக்ட்ரானிக் கார்ப்பரேஷன் புதிய கைக்கெடிகாரத்தை கொண்டு வந்து இருக்கிறது. அதைப்போலவே இன்னும் 7 தொழில்களுக்கு உரிமங்களைப் பெற்று இருக்கிறது. டெலிபோன் கம்பி தயாரித்தல், மினி கம்யூட்டர் தயாரித்தல், எக்ஸ்ரே சாதனங்கள் தயாரித்தல், பிரின்டெட் சர்க்யூட் தயாரித்தல் போன்ற தொழில்களுக்கு எல்லாம் உரிமங்களைப் பெற்று அதற்கான பணிகளைத் துவங்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின் அணு பொருள்களின் உற்பத்தி அளவு 1980-81-ல் 19 கோடியாக இருந்தது, 1983-84-ல், 33 கோடியாக உயர இருக்கிறது. இதிலே தமிழ் நாடு மின் அணு நிறுவனத்திற்கு ஒரு குறிப்பிட்ட பெரும் பங்கு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு சிதம்பரம் அவர்கள் பேசுகிறபோது டி.ஐ.ஐ.சி. நிறுவனம் 1980-81-லே லாபம் ஈட்டியது என்றும், 1983-லே அந்த லாபம் குறைந்து இருக்கிறது என்றும் எடுத்துக் காட்டினார்கள். இதிலே லாபம் உண்மையிலேயே எப்படிகுறைந்து இருப்பதாகத் தெரிகிறது என்று சொன்னால், அங்கே, கணக்கிடுகின்ற முறையில் ஏற்பட்ட மாறுதல் காரணமாகத்தான் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அதனால் தான் இந்த வித்தியாசம் வந்து இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இதற்கு முன்னால்வர வேண்டிய பணத்தை வரவில்லையென்றாலும் வந்ததாகக் கணக்கில் வைத்து கொண்டு, அதற்கேற்ப, அதற்குப் பின்னாலே டாக்ஸ் எடுத்துக் கொண்டு, லாபம் கணக்கிடும் முறை இருந்தது. இப்போது கேஷ் ப்ளோ ஆக்ச்சுவலாக எவ்வளவு இருக்கிறதோ அதை கணக்கில் வைத்துக் கொண்டுதான் இன்கம் டாக்ஸ் போக மீதம் லாபம் என்று கணக்கிடப்படுகிறது. இந்த மாறுதல் ஐ.டி.பி.ஐ. சொந்த சிபாரிசின் அடிப்படையில் நாம் செய்து இருக்கிறோம். ஆகவே, கணக்கு முறையில் ஏற்பட்ட மாறுதல் காரணமாகத்தான் இந்த லாப வித்தியாசமே தவிர சென்ற முறைப்படி கணக்கு போட்டு இருந்தால் சென்ற ஆண்டு 1 கோடி என்று இருந்தது இந்த ஆண்டு 2 கோடி என்ற அளவிற்குக் கூட லாபம் வந்து இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவகங்கை பகுதியில் ஒரு சர்க்கரை ஆலை வேண்டும் என்று கேட்டார்கள். தனியார் துறையில் அங்கு ஒரு சர்க்கரை ஆலை வருகிறது.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1983 ஏப்ரல் 18

காரைக்குடி. பொன்னமராவதி பகுதியில் தொழில் தொடங்குபவர்கள், தொழில் ஆர்வம் உள்ளவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அங்கே தொழில் முனைவர்கள் மாநாடு வேண்டும் என்று கேட்டார்கள். சிப்காட் நிறுவனம் மற்ற நிறுவனங்களோடு சேர்ந்துகொண்டு, மாவட்ட வாரியாக படித்து இருக்கும் இளைஞர்கள், தொழில் தொடங்க ஆர்வம் உள்ளவர்கள், ஆகியோரைக் கணக்கில் கொண்டு மாநாடு நடத்தி வருகிறது. வேலூரில் கூட ஒரு கேம்ப் நடத்தினார்கள். அடுத்த முறை காரைக்குடி அல்லது புதுக்கோட்டையில் போடுகிறபோது அவர்கள் அதைப் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ஹாஜா செரீப் அவர்களும், திரு. நெடுமாறன் அவர்களும்கூட மின்சாரத்தின் முக்கியத்துவத்தைபற்றிப் பேசினார்கள். தொழில் உற்பத்தியில் மின்சாரத்தின் பங்கு முக்கியமானது என்பதை வலியுறுத்திச் சொன்னார்கள். இந்த மாநிலம் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு எவ்வளவு கவனம் செலுத்தி வருகிறது என்பதை நான் பின்னாலே தெரிவிக்கிறேன்.

திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசும்போது சிட்கோ தலைமையில் நடத்தப்படுகிற ஒரு ஸ்டீல் பிளான்டில் டெண்டர் விட்டது பற்றிச் சொன்னார்கள். அதிலே இந்திய நாட்டுக் கம்பெனியை விட்டு, விட்டு, வேறு கம்பெனிக்கு கொடுத்து இருக்கிறீர்களே என்று கேட்டார்கள். அந்த டெண்டர் குறைவாக இருந்தும், அதிகமாகக் கேட்டவர்களுக்கு கொடுத்து இருக்கிறீர்களே என்று சொன்னார்கள். நான் விசாரித்த விவரங்களை இங்கே தெரிவிக்கிறேன். அந்த டெண்டர் விட்டதிலே எந்தவிதமான தவறும் இல்லை. வித்தியாசம் 6 லட்ச ரூபாய் இருக்கிறது. அதற்கு காரணமும் இருக்கிறது. அதிலே ஒரு டன் வார்ப்படத்தை உருக்குவதற்கு — உஷ்ணப்படுத்துவதற்கு —தேவைப்படும் எண்ணெய் ஒரு டன்னுக்கு 5 லிட்டர் வித்தியாசம் வருகிறது. எனவே, ஏறக்குறைய ஒரு ஆண்டுக்கு இதன் காரணமாக 3½ லட்சம் வித்தியாசம் வருகிறது. எனவே, குறைந்த டெண்டர் கொடுத்தவருக்கு கொடுத்தால் இந்த எண்ணெய் செலவு ஆண்டுக்காண்டு அதிகமாகும். ஆனால் இந்த டெண்டர் விட்டதன்மூலம் இரண்டு ஆண்டுகளில் அந்த வித்தியாசம் சரியாகிவிடும். அந்த அடிப்படையில் தான் அது அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

மொத்தத்தில் நான் எற்கனவே தெரிவித்த புள்ளிவிவரங்களிலிருந்து மாநில அரசு தன்னுடைய நிதி ஆதாரங்களுக்கு உட்பட்டு எந்தஅளவுக்கு வேகமாக தமிழ்நாட்டிலே பல்வேறு தொழில்களைத் தொடங்க முடியுமோ அந்த அளவுக்கு தொடங்கியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து கொள்ளலாம்.



1983 ஏப்ரல் 18] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

மைய அரசைப் பொறுத்தவரையில் 1967-க்கு பின்னால் கடந்த 15 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் நேரடியாக முதலீடு செய்யப்பட்டிருக்கிற பெரிய தொழில்கள் என்று எடுத்துக் கொண்டால் சேலத்தில் வந்திருக்கிற ஸ்டீல் பிளாண்ட் 150 கோடி ரூபாய், இராணிப்பேட்டையில் வந்திருக்கிற பி.எச்.இ.எல். 30 கோடி ரூபாய், இந்த 180 கோடி ரூபாயைத் தவிர, தமிழ்நாட்டில் மைய அரசு பெரிய தொழில்கள் எதற்கும் முதலீடு செய்யவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இங்கே சுட்டிக் காட்டினார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் மைய அமைச்சர் மாண்புமிகு திவாரி அவர்கள் இங்கே வந்த பிறகு, இப்போதெல்லாம் தமிழக அரசுக்கு அதிகமான உரிமங்கள் லெட்டர் ஆஃப் இன்டென்ட் அல்லது லைசென்ஸ் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். நானும் அதை ஒத்துக்கொள்கிறேன். லெட்டர் ஆஃப் இன்டென்ட் அதிகமாக வருகிறது, உரிமங்கள் அதிகமாக வருகின்றன என்பது உண்மைதான். ஆனால், நாம் இங்கிருந்து பரிந்துரை செய்து அனுப்பும் மனுக்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது அது மிகவும் குறைவுதான்; நூற்றுக் கணக்கான மனுக்களை பரிந்துரை செய்து அனுப்புகிறோம். அங்கிருந்து வருகின்ற அனுமதி கடிதங்களோடு கணக்கிட்டுப் பார்த்தால் அதனுடைய ரேஷியோ மிக மிக குறைவாகத்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் 1970-லே தொழில் உரிமம் கேட்டு, இங்கிருந்து பரிந்துரை செய்து மைய அரசுக்கு அனுப்பிய மனுக்கள் 46; 1980-லே அனுப்பியது 147. 1972-ல் அனுப்பியது 75. அதில் இன்னொன்றையும் பார்க்க வேண்டும். முன்னால் ஒரு கோடி ரூபாய் முதலீட்டுக்கு மேற்பட்ட தொழில்கள் என்றால் மைய அரசினுடைய லெட்டர் ஆஃப் இன்டென்ட் அல்லது லைசென்ஸ் பெறுவதற்கு அவர்களுக்கு அனுப்ப வேண்டும். ஆனால் இப்போது அப்படியல்ல. இப்போது 3 கோடி ரூபாய் வரையில் உள்ள தொழில்களை டி.ஜி.டி.டி. யில் இங்கேயே ரெஜிஸ்ட்டர் செய்து கொள்ளலாம்; அதற்குமேல் போனால்தான் மைய அரசுக்கு அனுப்ப வேண்டும். ஒரு கோடி ரூபாய் என்று இருக்கும் போது 1972-ல் மைய அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பிய மனுக்கள் 75; 3 கோடி ரூபாய்க்கு மேல் என்று இருக்கும்போது 1982-ல் மைய அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பிய மனுக்கள் 237. ஆனால் இண்டஸ்டிரியல் லைசென்ஸ் 1982-ல்நமக்கு கிடைத்திருப்பது 43 தான். இதை கணக்கிட்டுப் பார்க்கும் போது ஆண்டுக்காண்டு நமக்கு உரிமங்கள் 28, 37, 40 என்ற அளவுக்கு கூடுதலாக வந்திருந்தாலும் கூட நாம் பரிந்துரை செய்த மனுக்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது மிகவும் குறைவானதே. 1970-ல், 46, 1972-ல் 75, 1978-ல் 86, 1980-ல் 147, 1981-82-ல் 183, 1982-83-ல் 237 என்று இப்படி நாம் பரிந்துரை செய்து அனுப்பும் மனுக்களின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு கூடிக்கொண்டே போவது இதிலிருந்து தெரியும். இதோடு ஒப்பிட்டுப் பார்க்கும்

போது மைய அரசு நமக்குக் கொடுக்கின்ற உரிமம் மிகவும் குறைவானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்டுக்காண்டு அவர்கள் கொடுப்பது அதிகமாக இருந்தாலும் நாம் பரிந்துரை செய்த மனுக்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது அந்த ரேஷியோ மிக மிக குறைவாகத்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிற போது, தொழில் துறையில் பின் தங்கிய பகுதிகளாக, ஜீரோ இண்டஸ்ட்ரீஸ் என்று சொல்லப்படுகிற டிஸ்ட்ரிக்டுகளாக தமிழகத்திலே ஒரு இடம் கூட அறிவிக்கப்படாதது குறித்து பேசினார்கள். ஏறக்குறைய 87 மாவட்டங்களை இந்தியா முழுவதும் தொழில் துறையில் பின் தங்கிய மாவட்டங்களாக அறிவித்திருக்கிறது என்பதையும் அதிலே தமிழகத்திலிருந்து ஒன்று கூட இல்லை என்பதையும் இங்கே பேசுகிற நேரத்தில் எல்லோருமே தங்கள் கவலையைப் பகிர்ந்து கொண்டார்கள். நான் ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே சொல்லியிருந்தேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் மைய அரசு 33 தாலுக்காக்களை தொழில் துறையில் பின்தங்கிய தாலுக்காக்களை அறிவித்திருக்கிறது. இந்த 33 தாலுக்காக்களிலும் 89 பிளாக்குகள், அல்லது பஞ்சாயத்து யூனியன்கள் வருகின்றன. இந்த 89 பிளாக்குகளிலே, 20 லட்சம் ரூபாய்க்கு அதிகமான அதாவது மீடியம் இண்டஸ்டிரீஸ் என்று சொல்லக்கூடிய ஒரு தொழில் கூட இல்லாத பிளாக்குகள் அல்லது ஊராட்சி ஒன்றியங்கள் 40 இருக்கின்றன.

இந்த 40 பிளாக்குகளில் 20 லட்சம் ரூபாய்க்கு மேலே இருக்கிற எந்த ஒரு தொழிலும் கூட அமைக்கப்படவில்லை. இப்படி மாநிலம் முழுவதற்குமாக 328 பிளாக்குகள் எடுத்துக் கொண்டால், அவற்றில் கிட்டத்தட்ட 200 பிளாக்குகளில் மீடியம் இண்டஸ்ட்டிரீஸ் என்று சொல்லப்படுகிற தொழில் துவங்கப்பட்ட பிளாக்குகள் ஒன்று கூட இல்லாத நிலை இருக்கும்.

ஆனால் மத்திய அரசு, இப்படி இந்தியா முழுவதற்கும் 87 மாவட்டங்களை அறிவித்து விட்டு, அதாவது தொழில் துறையில் பின் தங்கிய மாவட்டங்களாக, ஜீரோ இண்டஸ்ட்டிரியாக அறிவித்துவிட்டு, அந்தப் பகுதிகளிலே போய் தொழில் துவங்கினால் தான், லெட்டர் ஆப் இன்டென்ட் கிடைக்கும் என்று கன்டிஷன் கூட போடுகிறார்கள். ஆனால் அவர்கள் அறிவித்த இந்த 87 மாவட்டங்களில், தமிழகத்தில் ஒன்று கூட இல்லை என்பது குறிப்பிடத் தகுந்தது.

இதிலே குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், இந்தியா ரேடியேட்டர்ஸ் என்ற நிறுவனம், தன்னுடைய விரிவாக்கத்திற்காக மனு செய்திருக்கிறார்கள். அப்படி மனு செய்திருக்கிற அந்த விரிவாக்கத்திற்கு அனுமதி கொடுப்பதில் கூட மைய அரசு நமக்கு கடிதம் எழுதியிருக்கிறது ; இந்த ஜீரோ இண்டஸ்ட்ரீஸ் என்று சொல்லப்படுகிற, அவர்கள் குறிப்பிடுகிற தொழிலில் பின்தங்கிய மாவட்டத்திற்குப் போனால்தான், இந்த எக்ஸ்டென்



ஷன் கிடைக்கும் என்று அதில் அறிவித்திருக்கிறார்கள். நமக்கே இது கடிதமாக வந்திருக்கிற காரணத்தால் சொல்கிறேன். அதே போல எதற்கெடுத்தாலும், இந்த 87 பின்தங்கிய மாவட்டங்களில் ஏதாவது ஒன்றிற்குப் போனால் தான் லெட்டர் ஆப் இன்டென்ட் கிடைக்கும் என்று கன்டிஷன் போட்டு அனுப்பிவிடுகிறார்கள்.

எனவே, இந்த நிலைமை நீடிக்குமேயானால் புதியதாக தொழிற்சாலைகளே தமிழகத்தில், எந்த வகையிலும் வராமல் போய் விடுமோ என்ற அபாயமும், அதேபோல ஏற்கெனவே இருக்கிற தொழிற்சாலைகளிலும் விரிவாக்கம் வராமல் போய் விடுமோ என்கிற அபாய நிலையும் தமிழகத்திலே தற்போது ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நான் ஏற்கெனவே சொன்னேன்; 40 வட்டங்கள் தமிழகத்திலே எந்தவித தொழிலும் இல்லாத நடுத்தர தொழிலும் இல்லாத வட்டங்களாக இருக்கின்றன, என்று. ஆகவே, இந்தியா முழுவதும், தாலுக்கா அல்லது பிளாக்கை, அடிப்படையாக வைத்துக்கொண்டு, அதை பேசிக் யூனிட்டாக வைத்துக்கொண்டு—ஒரு தொழிலும் இல்லாத பிளாக் அல்லது ஒரு தொழிலும் இல்லாத தாலுக்கா— என்ற அடிப்படையாக வைத்துக்கொண்டு—மைய அரசு கணக்கு எடுத்தால்தான் பரவலாக தொழிற்சாலைகள் எல்லா இடங்களிலும் வரமுடியும்.

மாண்புமிகு மைய அமைச்சர் திவாரி அவர்களிடத்திலே கூட நான் சொன்னேன். நீங்கள் இன்னும் உத்திரப்பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களில் உள்ள மாவட்டங்கள்தான் பின்தங்கிய மாவட்டங்கள் என்று நினைப்பீர்களேயானால், தொழில் துவங்குவதற்கு உத்திரபிரதேசத்திலும், பீகாரிலும் 50, 60 பிளாக்குகள் என்று எடுத்துக்கொள்வீர்களேயானால், தமிழகத்தில் 10, 20 பிளாக்குகள் என்ற அடிப்படையிலாவது வைத்து தொழில் துவங்க அனுமதி கொடுத்தால்தான் தொழில் முன்னேற்றம் பரவலாக வரும் என்றும், தமிழகத்திலும் தொழில் வளரும் என்று சொன்னேன். ஆகவே, அந்த வகையிலே, பிளாக்குகள் அல்லது ஊராட்சிகள் அல்லது தாலுக்கா யூனிட்டுகள்என்ற அடிப்படையில் வைத்துத்தான் ஜீரோ இண்டஸ்ட்ரீஸ் என்று சொல்லப்படுகிற, தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்று மைய அரசை மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டுதான் இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அதேபோல பல மாண்புமிகு உறுப்பினர்கள் நேவல் அக்காடமி பற்றிச் சொன்னார்கள். இந்த நேவல் அக்காடமியைத் தமிழகத்திலே ஆரம்பிக்கலாம் என்று ஆயிரம் ஏக்கர் நிலத்தை அதற்காக செங்கல்பட்டு மாவட்டத்திலே ஒதுக்கித் தருவதாக நாம் அவர்களுக்கு கடிதம் எழுதியிருந்தோம். மாநில அரசு அதை ஏற்க இணக்கமாகக் கருத்து தெரிவித்துத் தான் கடிதம் எழுதியிருந்தோம். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களையும், மற்றும் பல சம்பந்தப்பட்ட மைய அமைச்சர்களையும்,

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சந்தித்துப் பேசினார். மைய அமைச்சர் வெங்கட்ராமன் அவர்களுக்கும் இது குறித்து கடிதம் எழுதினோம், அதற்கு அவர்கள் எழுதிய பதில் கடிதம் எல்லாம் இங்கே என்னிடத்தில் இருக்கிறது. ஆனாலும்கூட, திடீரென்று அந்த நேவல் அக்காடமியை கேரளாவிற்கு கொடுத்திருக்கிறார்கள். அங்கே இதற்காக நிலம் ஒதுக்கப்பட்டதிலே ஏதோ பிரச்சினை என்று கூடச் சொன்னார்கள். அதாவது நில ஆர்ஜிதம் செய்வதிலே. அந்த நிலங்களை நேவல் அக்காடமிக்குக் கொடுப்பதால் விவசாயம் பாதிக்கப்படுகிறது என்ற காரணத்தைக்காட்டி அங்கே போராட்டம் கூட நடப்பதாகத் தெரிகிறது. ஆனால், இங்கே நாம் நிலத்தைக்கூட அதற்காக ஒதுக்கியிருக்கிறோம். இப்போதும்கூட காலம் தாழ்ந்துவிடவில்லை...... (குறுக்கீடு).

(பிற்பகல் 1-30)

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நேவல் அக்காடமி வைப்பதற்கு உரிமை கேரளத்திற்கு போனது குறித்து இந்த அவையிலே பிரச்சினை எழுப்பப்பட்டபோது கூட முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பது, நகரத்தினுடைய அழகு கெட்டுப் போகும் என்பதினால், இந்தக் கோரிக்கையை நாம் வலியுறுத்தவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆனால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான முயற்சி எடுக்கப்பட்டது என்றும் செங்கல்பட்டிலே கூட நில ஆர்ஜித ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டன என்றும் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. வெங்கட்ராமன் அவர்கள்கூட அதுபற்றிச் சொல்லி இருப்பதாக நான் கருதுகிறேன் தமிழக அரசு அந்தப் பிரச்சினையிலே சரியான அக்கறை செலுத்தவில்லை என்பதாக பத்திரிகை கூட எழுதி இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. அ. ரகுமான்கான் : எழுத்தாளர் திரு. பார்த்தசாரதி அவர்களும் கூட குற்றச்சாட்டு சொல்லி இருக்கிறார்கள். இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புள்ளி விவரத்தோடு சொன்னால் இந்த சபைக்கும் நாட்டுக்கும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தத் தொழில் இங்கே வந்தால் அதனால் இயற்கை அழகு கெட்டு விடும் என்றும், எனவே அந்தத் தொழில் வேண்டாம் என்றும் அவர்கள் பேசவில்லை. சென்னைக்கு அருகே வந்தால் அதனால் அழகு கெடலாம் என்ற உணர்வோடுத் தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள்



சொன்னதாக எனக்கு நினைவு. அதற்கும் முன்னாலே மாண்புமிகு முதல்வர் அவர்களே மைய அரசுக்கும், பாரதப் பிரதமருக்கும் பல்வேறு நிலைகளிலே கடிதம் எழுதி இருக்கிறார்கள் ஏறக்குறைய 944 ஏக்கர் செங்கற்பட்டு மாவட்டத்திலே காட்டாங்குளத்தூருக்கு அருகே தொழில் துவங்குவதற்காக நிலத்தை இனாமாகக் கொடுக்கத் தயார் என்று தொழில் துறையின் சார்பிலே இங்கிருந்து பாதுகாப்புத்துறை அமைச்சருக்கும் பாரதப் பிரதமர் அவர்களுக்கும் கடிதங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அதைப் போலவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பாதுகாப்புத்துறை அமைச்சர் அவர்களை நேரிலே பார்த்தும் சொன்னார்கள். பாரதப் பிரதமரிடத்திலேயும் நேரிலே சொன்னார்கள். 1983-ஆம் ஆண்டு மே திங்கள் 2-ஆம் நாளிலே இண்டியன் எக்ஸ்பிரஸ்ஸிலே திரு. ஆர். வி. அவர்களின் பேட்டி வந்திருக்கின்றது.

அந்தப் பேட்டியிலே சொல்கின்றபோது தமிழ்நாட்டிலே நேவல் அக்காடமி ஆரம்பிப்பதற்கான பரிசீலனை இல்லை என்று சொல்லி இருந்தார். கொஞ்ச நாள் கழித்து 1982-ஆம் ஆண்டு மே திங்கள் 26-ஆம் நாள் அன்று இண்டியன் எக்ஸ்பிரஸ்ஸிலே, ஒரு செய்தி வந்தது, அது கேரளாவிற்குப் போய் இருக்கின்றது இது தொடர்பாக பல கடிதங்கள் பல தேதிகளில் எழுதப்பட்டிருக்கின்றது. பாரதப் பிரதமர் உட்பட மத்திய அமைச்சர்களை நேரிலே பார்த்தும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், அது என்ன காரணத்தாலோ கேரளாவிற்கு மாற்றப்பட்டது. கேரளாவிற்கு மாற்றப்பட்டாலும் கூட அங்கே நடைமுறைப்படுத்தப்படவில்லை. அங்கே நில ஆர்ஜிதம் செய்வதில் தகராறு என்று பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கின்றது. அதை வைத்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டியதற்கு ஏற்ப அந்த உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டு நாம் மத்திய அரசினை வலியுறுத்துகிறோம். இப்போதும் கூட ஒன்றும் கெட்டுவிடவில்லை. நாம் ஒதுக்கிய இடம் அப்படியேதான் இருக்கின்றது. இன்னமும் இனாமாகத் தருவதற்குத் தயார். கேரளாவிற்கும் வேண்டும் என்றால் மத்திய அரசு வேறு ஏதாவது தொழில்களை அல்லது பாதுகாப்புத்துறை அமைச்சர் தன்னுடைய கையிலே வைத்திருக்கின்ற டிஃபன்ஸ் யூனிட்டுகளில் ஏதாவது ஒன்றை அங்கே போட்டுக்கொள்ளலாம். இந்தப் பிரச்சினை தீர்ந்ததற்குப் பிறகு. அதற்காக ஒதுக்கப்பட்ட நிலம் இன்னும்அப்படியேதான் இருக்கின்றது, இன்னமும் இனாமாகத் தருவதற்குத் தயார். அதைத்தவிர, மாநில அரசு இன்னும் என்ன உதவி வேண்டுமானாலும் செய்வதற்குத் தயார். ஆகவே, மைய அரசு இந்தச் சூழ்நிலையில் கூட அதைப் பரிசீலனை செய்யும் என்று நாம் மனப்பூர்வமாக நம்புகிறோம். நாம் ஏற்கெனவே சொன்னது போல் பின்தங்கிய மாவட்டங்கள் என்று அறிவிப்பது குறித்து மாநில அரசின் கருத்தினை மைய அரசு உதாசீனப்படுத்தாமல் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற வேண்டுகோளையும் இங்கே வைக்க விரும்புகிறேன்

அடுத்து ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்களும் மற்றவர்களும் சொன்னார்கள். அந்தத் தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில் மூன்று விரிவாக்கம் வருகின்றது என்றும் அதிலே ஒன்றுதான் உத்திரபிரதேசத்திற்குச் செல்கின்றது என்றும், இரண்டு இங்கேதான் வர இருக்கின்றது என்றும் திரு. திவாரி அவர்கள் சொன்னார்கள். ஆனால், அது எந்த ஆண்டு என்று கேட்டபோது 7-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அது பற்றி யோசனை செய்யப்படும் என்று சொன்னார்கள். நான் சொல்வது என்னவென்றால், 3 விரிவாக்கமல்ல, 30 விரிவாக்கம் வேண்டுமானாலும் கொண்டு வாருங்கள்; அதை உத்திர பிரதேசத்திற்கு வேண்டுமானாலும் கொண்டு செல்லுங்கள் ; ஆனால், முதல் விரிவாக்கம் தமிழ்நாட்டிலேதான் இருக்க வேண்டும் என்பதுதான். அந்தக் கலர் பிலிம் தயாரிக்கின்ற யூனிட்டுதான் இங்கே வருவதாக இருந்தது. அது வரவில்லை என்றால் என்ன ஆகும். பொதுவாக ஒரு தொழிற்சாலையின் விரிவாக்கம் சிஸ்ட்டமாட்டிக்காக வரவில்லை என்றால் இலாபத்திலே இயங்குகின்ற தொழில் கூட நஷ்டத்திற்குச் சென்றுவிடும். ஆகவே, ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலையின் விரிவாக்கம் இங்கே அனுமதிக்கப்படவில்லை என்றால் அதனால் இருக்கின்ற தொழில் பாதிப்பிற்குள்ளாகும். பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை ஏற்படும். எனவே, முதல் விரிவாக்கத்தை ஊட்டியிலே ஏற்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் நான் மீண்டும் மைய அரசுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து ' ட்ரேட் ப்ரீ ஜோன் ' இங்கே ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காக விமான நிலையத்திற்கு அருகே இடம் 100 ஏக்கர் ஒதுக்கித் தருவது குறித்து ஏற்கெனவே கடிதம் எழுதியிருக்கிறோம் மத்திய அரசுக்கு. குஜராத்தில் ஒன்றும், மகாராஷ்டிரத்தில் ஒன்றும் ஆக 2 டிரேட் ப்ரீ ஜோன் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டு இருக்கின்றன. இன்னும் 2 அனுமதிப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. அதில் ஒன்று நிச்சயமாக சென்னைக்கு வேண்டும் என்று நாம் இடம் கொடுத்துக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதையும் மத்திய அரசு நிச்சயமாக கவனிக்கும், பரிசீலிக்கும் என்று நம்பலாம். அதைத் தொடர்ந்து நாம் கேட்டுக் கொண்டிருக்கிற பெட்ரோ கெமிக்கல் காம்பிளக்ஸ் அதைப் போலவே எலக்டிரானிக் கார்ப்பரேஷன் மூலமாக பிக்சிட் அளிப்பதற்கான நாம் அனுப்பி இருக்கிற அந்த மனு இப்படி பல்வேறு மனுக்கள், பாளையம் சிமெண்ட் ஆலை மனு, அதைப்போலவே கூட்டுறவுத் துறையில் திருத்தணி சர்க்கரை ஆலை, மயிலாடுதுறை சர்க்கரை ஆலை. இப்படிப்பட்ட கூட்டுறவுத் துறையில் பப்ளிக் செக்டர் பொதுத்துறையிலும் ஏற்கெனவே மத்திய அரசுக்கு போயிருக்கிற மனுக்களை சாதகமாக பரிசீலிக்க வேண்டும் என்ற அந்த வேண்டுகோளை இந்த நேரத்தில் மத்திய அரசுக்கு இந்த மன்றத்தின் வாயிலாக நான் எடுத்து வைக்க கடமை பட்டுள்ளேன்.



நலிவுற்ற ஆலைகளைப் பொறுத்தவரைக்கும் ஏற்கனவே மூடப்பட்ட பல ஆலைகளை இந்த அரசு வந்த பிறகு எடுத்து நடத்தி வருகிறது. குறிப்பாக கோயம்புத்தூருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் போகும் போது ஜோதி, ஜெயலட்சுமி என்கின்ற இரண்டு பஞ்சாலைகளும் அந்த பகுதியில் மூடப்பட்டிருந்தன, அது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வந்து அவர்கள் அங்கேயே திறப்பதாக அறிவிப்பு செய்துவிட்டு வந்தார்கள். அதற்குப் பின்னால் அந்த இரண்டு ஆலைகளும் இன்றைக்கு திறக்கப்பட்டு இருக்கின்றன என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள மகிழ்ச்சியடைகிறேன். அதைப் போலவே புதிதாக தொடங்க இருக்கிற தொழிற்சாலைகளின் அடிப்படையில் சிலவற்றை அறிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாடு உருக்கு நிறுவனம், அரக்கோணத்தில் சுமார் 7 கோடி ரூபாய் செலவில் அதை விரிவாக்கம் செய்ய இருக்கின்றது. அதைப் போலவே நைட்ரிக் அமிலம் மற்றும் அமோனியம் நைட்ரிக் தொழிற்சாலை ஒன்று சுமார் 35 கோடி ரூபாயில் டிட்கோ நிறுவனம் அமைக்க முடிவு செய்து இருக்கிறது. ஜீனில் ஆல்கலையன் கெமிக்கல்ஸ் என்ற தொழிற்சாலை ஒன்று மாநில செலவில் ரூபாய் 60 கோடி செலவில் டிட்கோ நிறுவனம் அமைப்பதற்கு முடிவு எடுத்து இருக்கிறது. அதைப்போலவே டீசல் ஆட்டோ ரிக்ஷா தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்படும். வானவில் லைசன்ஸ் கெமிக்கல்ஸ் அதனுடைய நிறுவனத்தை விரிவுபடுத்தி உற்பத்தியைத் துவக்க இருக்கிறது டிட்கோ நிறுவனம் 40 கோடி ரூபாய் செலவில் கைக்கடிகாரங்கள் தொழிற்சாலை ஒன்று நிறுவ இருக்கிறது. அதைப்போலவே பேண்டா எரிபொருள் தொழிற்சாலை 12 கோடி ரூபாய் செலவில் துவக்க இருக்கிறது. ஏற்கெனவே சொன்னேன். வெடி மருந்து தொழிற்சாலை ஒன்று அதற்கான பணிகளை துவக்க இருக்கின்றது என்று நான் சுட்டிக்காண்பித்தேன். அதைப் போலவே பிரியர்ஸ் தொழிற்சாலை, மூக்குக் கண்ணாடி தொழிற்சாலை, 2 எரி சாராயம் வடிப்பகங்கள் ஒவ்வொன்றும் 1.75 இலட்சம் செலவிட்டில் ஏற்கனவே பெரம்பூரில் ஒன்றும் சேலத்தில் ஒன்றும் அது சர்க்கரை ஆலைகளோடு இணைந்து ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

ஏற்கெனவே தொழில் துறையில் பின்தங்கியபகுதிகளாக மாநில அரசு 24 தாலுக்காக்களைப் பல்வேறு மாவட்டங்களில் அறிவித்து இருக்கின்றன. இன்னும் சில வட்டங்களை பின் தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசுகிறபோது பலரும் வலியுறுத்தினார்கள். ஏற்கனவே பல தடவை இந்த மன்றத்திலேயும், வெளியிலேயும் இன்னும் ஒரு 6 தாலுக்காக்களை தொழில் துறையில் பின் தங்கிய பகுதியாக அறிவிக்கப்படும் என்று ஏற்கனவே அறிவித்து இருந்தோம். அதன்படி குமரி மாவட்டத்தில் தோவாளை வட்டம் தொழில் துறையில் பின் தங்கிய பகுதியாக அறிவிக்கப்படுகிறது. அதைப் போல சேலம் மாவட்டத்தில் ராசிபுரம், மதுரை மாவட்டத்தில் பழனி, கோவை மாவட்டத்தில் அவிநாசி, நீலகிரி மாவட்டத்தில்

குன்னூர், பெரியார்மாவட்டத்தில் தாராபுரம், நெல்லைமாவட்டத்டத்தில் நாங்குநேரி தாலுகா இரண்டாக பிரிக்கப்பட்ட காரணத்தினால் ஏற்கனவே பின்தங்கிய தாலுக்கா என்று வசதிகளைப் பெற்றுக்கொண்டு இருந்த ராதாபுரம் பகுதி விடுப்பட்டு போனது. எனவே அந்தப் பகுதியும் தொழிற்துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே 7 தாலுக்காவும் 15 சத வீதம் கேப்பிட்டல் சப்சிடியும், கடன் வசதி போன்றவை பெறுவதற்காக இந்த 7 தாலுக்காக்களும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதிலே சி.பி.ஐ. இருக்கிறது. சி.பி.எம். இருக்கிறது, தி.மு.க. இருக்கிறது. எனவே கட்சி பாகுபாடு இல்லாமல் இந்த பகுதிகள் தொழிற் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள மகிழ்ச்சியடைகிறேன். அதைப்போல புதுக்கோட்டை மாவட்டத்தில் கந்தர்வகோட்டை ஏற்கனவே பின்தங்கிய பகுதியாக இருந்தது. அதிலே புதுக்கோட்டை செமி-சப்சிடைஸ்டு தாலுக்காவாக இருந்தது. புதுக்கோட்டை, கந்தர்வகோட்டை என்று இரண்டாக பிரிக்கப்பட்டது. கந்தர்வகோட்டை இப்போது மத்திய அரசு அறிவிக்கிற கேப்பிட்டல் சப்சிடி பெறுகிற வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது காரணம் அது புதுக்கோட்டை தாலுக்கா என்ற காரணத்தினால்.

(பிற்பகல் 1-40)

எனவே மாநில அரசு மத்திய அரசை எப்படி நாம் கேட்டு நாங்குநேரியை இரண்டாகப் பிரித்தபோது ராதாபுரத்தை ஏற்றுக் கொண்டு அறிவித்திருக்கிறதோ அதைப்போலவே கந்தர்வகோட்டையை தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக — ஏன் என்றால் புதுக்கோட்டை பகுதியிலே உள்ளடங்கிய பகுதிதான் கந்தர்வகோட்டை, அது இரண்டாகப் போன காரணத்தினாலே சப்சிடி மற்ற வாய்ப்புகள் இல்லாமல் போகிறது—மைய அரசு அந்த ஒரு தாலுகாவையாவது உடனடியாக அறிவிக்க வேண்டும், ஏற்கனவே இருந்த பகுதி தாலுகாவாக ஆக்கப்பட்ட காரணத்தினால் இல்லாமல் போகிறது என்று நாம் எழுதியிருக்கிறோம். அந்த வேண்டுகோளை இந்த நேரத்திலே திருப்பிச் சொல்வதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன்.

புதிதாக 700 விசைத்தறிகள் பவர் லூம்ஸ் தமிழ்நாட்டிலே உருவாக்க வேண்டுமென்பதற்கு மைய அரசு அனுமதித்து இருக்கிறது. 70 விசைத் தறிகள் கொண்டதாக 10 இடங்களில் 10 மாவட்டங்களில் விசைத்தறிக் கூடங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாவட்டங்கள் எந்த எந்த இடங்கள் என்பது பின்னாலே அறிவிக்கப்படும். மொத்தத்திலே 700 விசைத்தறிகள் 10 இடங்களில் 10 மாவட்டங்களில் அமைக்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.





நான் ஏற்கெனவே சொன்னதைப் போல் 5 இடங்களில் சுமார் 35 கோடி ரூபாயிலே கூட்டுறவு நூற்பாலைகள் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் ஓராண்டுக்குள்ளே உற்பத்தியைத் தொடங்கக்கூடிய முறையிலே கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கெனவே நான் சுட்டிக்காட்டியதைப் போல் மாநிலஅரசு தன்னுடைய நிதியாதாரங்களுக்குட்பட்டு சிப்காட், டிட்கோ, தொழில் முதலீட்டு நிறுவனம் ஆகியவை அதிக பட்ச அளவிலே கடன் வசதிகளைக் கொடுத்தாலும் அதைப்போலவே சப்ஸிடி போன்றவற்றைக் கொடுத்து எவ்வளவு உற்சாகப்படுத்தமுடியுமோ அந்த அளவுக்கு தொழில் ஆரம்பிக்கிறவர்களை மிக அதிகமான அளவிலே உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

இன்னொன்றையும் நான் முதலிலேயே சொன்னேன். சில இடங்களில் நாம் முதல் இடத்தில் இருக்கிறோம், ஜெனரல் சப்ஸிடி போன்றவற்றில் நாம் முதலிடத்தில் இருக்கிறோம். ஐ.டி.பி.-யிலிருந்து கடன் வாங்குவதிலே இரண்டாவது இடத்திலே இருக்கிறோம். சிலவற்றிலே, 3-வது, 4-வது இடத்திலே இருக்கிறது, தொழிற்சாலைகளின் எண்ணிக்கை உற்பத்திப் பெருக்கம் இவைகளைப் பார்க்கிறபோது. ஆனால் மைய அரசு முழுமையாக அனுமதிக்குமானால் உதவி, பங்கு அல்லது ஷேர் சென்ட்ரல் செக்டார் புராஜெக்ட்டிலே அதிகமாகக் கிடைக்குமானால் 3-வது, 4-வது இடத்திலே இருக்கிற தமிழ்நாடு இன்னும் இரண்டாவது இடத்திற்கு முதலாவது இடத்திற்கு வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களுக்கெல்லாம் நான் ஏற்கெனவே முடிந்தவரை பதில் சொல்லியிருக்கிறேன். யாருக்காவது பதில் சொல்லாமல் விடப்பட்டிருக்குமானால் அவர்களுடைய கருத்துக்கள் நிச்சயம் அரசின் கவனத்திலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நெடுமாறன் அவர்கள் பேசுகின்றபோது அட்வைசரி கமிட்டி பற்றிச் சொன்னார்கள், அது அடிக்கடி கூட வேண்டுமென்றும் சொன்னார்கள். அடிக்கடி கூட வேண்டுமென்று நாம் அறிவித்திருக்கிறோம். மாதத்திற்கு ஒரு தடவை கூடும். அதிலே அதிகமான அளவுக்கு உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். 40 பேர்கள் போடுகிறோம். கூட்டத்திற்கு 10, 15 பேர்கள்தான் வருவார்கள். 10, 15 பேர்களுக்கும் குறைவாக இருந்தால் அது நன்றாக இருக்காது என்ற காரணத்தினாலே 40 பேர்கள் என்று போட்டு இருக்கிறோம். அதிலே தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் இடம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கு இடம் கொடுத்தால் தொழில் தகராறுகளைப் பற்றி

பேசுகிற இடமாக அது ஆகிவிடும். தொழில்கள் ஆரம்பிப்பதற்கான ஆலோசனை கூறுகிற இடமாக இருக்காது. எனவே, தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளைப் போடவில்லை. டெக்னோகிராட்ஸ், தொழிலதிபர்கள், அதிகாரிகள் இந்த மட்டத்திலேதான் அந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய யோசனைகளை இந்த அரசு கவனத்திலே எடுத்துக்கொள்ளும், ஏற்கெனவே சொன்னதுபோல் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் — திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பேசிய உறுப்பினர்கள் தவிர வேறு யாரும் எந்தவிதமான குற்றத்தையும் இந்தத் துறையின்மீது சொல்லவில்லை. அதுவும் திரு. துரைமுருகன் கூட அங்கொன்றும் இங்கொன்மாகத் தேடி புத்தகத்திலே இருக்கிற புள்ளி விவரங்களைத்தான் எடுத்துப் படித்துச் சொல்லியிருக்கிறார். அதைப்போலவே திரு. சிதம்பரமும் பேசுகின்றபோது எழுத்துத் தவறைத்தான் சுட்டிக் காட்ட முடிந்ததே தவிர மற்ற தவறையோ குறையையோ சொல்ல முடியவில்லை. எனவே அந்த அளவுக்கு குறை சொல்ல இயலாத அளவுக்கு தமிழ்நாட்டில் வேகமான தொழில் வளர்ச்சி தொழில்துறையின் பல்வேறு பிரிவுகளிலும் நடைபெற்றிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

4. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(ஈ) பேரவை அலுவல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கிணங்க பேரவையின் நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்:—

19—4—1983 செவ்வாய்க்கிழமை. .. 1. 1974—75 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு (விவாதமின்றி).

2. மேற்படி நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு—அறிமுகம் செய்தல்.





3. மாண்புமிகு நீதிபதி திரு கே.எஸ். இராமமூர்த்தி விசாரணைக் கமிஷன் அறிக்கை மீது அரசு எடுத்த நடவடிக்கை குறித்து விவாதிக்க, மாண்புமிகு திரு. எஸ். ஆண்டித் தேவர் அவர்கள் கொடுத்துள்ள தீர்மானத்தின் மீது விவாதம் ஒரு மணி நேரம்.

4. மானியக் கோரிக்கைகள்—

7—மாநில சட்டமன்றம்.
8—தேர்தல்கள்.
42—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்.
43—பல்வகை
57—பல்வகை மூலதனச் செலவு.
58—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்.

20—4—1983 புதன்கிழமை. .. 15—காவல் துறை.
16—தீயணைப்புப் பணிகள் ஆகியவற்றின்மீது விவாதத்திற்குப் பதிலுரை.

1983—84 ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு—அறிமுகம் செய்தல்.

21—4—1983 வியாழக்கிழமை. .. இரண்டு நிதி ஒதுக்க சட்டமுன்வடிவுகள் நிறைவேற்றுதல்.

மற்ற அரசினர் சட்ட முன்வடிவுகள்.

22—4—1983 வெள்ளிக்கிழமை
23—4—1983 சனிக்கிழமை.
} அரசினர் சட்டமுன்வடிவுகள்—ஆய்வு செய்தலும், நிறைவேற்றலும்.

24—4—1983 ஞாயிற்றுக்கிழமை .. விடுமுறை.

25—4—1983 திங்கட்கிழமை. .. மகாவீர் ஜெயந்தி—விடுமுறை.

[1983 ஏப்ரல் 18

| | |
|---|---|
| 26–4–1983 செவ்வாய்க்கிழமை<br>27–4–1983 புதன்கிழமை. | அரசினர் சட்டமுன்வடிவுகள்—ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். |

அரசினர் சட்ட முன்வடிவு கீழ்க்கண்ட வரிசைப்படி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறும்:—

1. The Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Bill, 1983.
2. The Tamil Nadu Entry Tax Bill, 1983 if received and introduced.
3. The Tamil Nadu General Sales Tax (Amendment) Bill (L.A. Bill No. 2/83)
4. The Tamil Nadu Entertainments Tax (Second Amendment) Bill 1983 (L. A. Bill No. 6 of 1983).
5. The Tamil Nadu Advertisement Tax Bill, 1983 (L.A. Bill No. 8 of 1983).
6. The Tamil Nadu Debt Relief (Amendment) Bill, 1983 (L. A. Bill No. 16 of 1983).
7. The Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Amendment Bill.
8. The Tamil Nadu Payment of pension to Tamil Scholars and Miscellaneous Provisions Bill, 1982.
9. The Municipalities (Amendment) Bill if received and introduced.

## 7. வரவு-செலவுத் திட்டம் 1983–84 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

### கோரிக்கை எண் 24—தொழில்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள், இரெ. இராசமாணிக்கம், என். பழனிவேல், எம். ஆறுமுகம் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்ப பெற்றுக் கொள்ளப்பெற்றனவாகக் கருதப் பெற்றன.

திருவாளர்கள், கே. எம். தங்கமணி, எஸ். என். இராமசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்ப பெற்றுக் கொள்ளப்பெற்றன.



1983 ஏப்ரல் 18]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,37,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்"

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

### கோரிக்கை எண் 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

திரு. தி. கா. நல்லப்பன் அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றது.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், கே. எம். தங்கமணி, ரா. கிருஷ்ணன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 19,92,11,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 19—4—1983 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–48 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

257. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வாகன விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 1—12—1982 ஆம் தேதியிடப் பெற்ற உள் துறையின் 3038 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை [1939 ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

258. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு நகராட்சி மருத்துவ பணிவிதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 22—8—81 ஆம் தேதியிடப்பெற்ற ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 1498 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5 1920) 304 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

192. திரு தீர்த்தராமன், எம். எல். ஏ. அவர்கள் உறுப்பினர்கள் தங்கும் விடுதியில் தாக்கப்பெற்றது குறித்த பிரச்சினை மீது உரிமைக் குழுவின் அறிக்கை (தமிழ்).

193. 9—2—1983 ஆம் தேதியன்று சட்டமன்றப் பேரவையில் நடந்த நிகழ்ச்சி குறித்த பிரச்சினை மீது மேற்படி குழுவின் அறிக்கை (தமிழ்).

194. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது அறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) (ஆங்கிலம்).

195. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும் விடைகளும் (1 முதல் 50 வரை.)

196. மேனிலைப் பள்ளி தொழிற்சார் கல்வியை மாற்றி அமைத்தல் பற்றி தமிழக அரசால் நியமிக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் அறிக்கை டிசம்பர் 1982 (தமிழ்).

## இணைப்புகள்.

### தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சட்டமன்றப் பேரவைமுன் வைக்கப்பெறும் உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல்.

வரிசை எண்கள் 1-லிருந்து 50 வரையிலான வினாக்களுக்கான அட்டவணைப் பட்டியல்.

| உறுப்பினர் பெயர். | வினாக்களின் வரிசை எண். |
|---|---|
| (1) | (2) |
| 1. திரு. ஜே. எஸ். இராசு .. | 44 |
| 2. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம். | 29 |
| 3. திரு. எஸ். டி. உகம்சந்த் ... | 16, 45, 46, 47. |
| 4. திரு. சி. கணேசன் .. | 19 |





| உறுப்பினர் பெயர். | வினாக்களின் வரிசை எண். |
|---|---|
| (1) | (2) |
| 5. திரு. ஏ. டி. குலசேகர் .. | 21, 22, 23. |
| 6. திரு. செ. செம்மலை .. | 20. 32, 43. |
| 7. திரு. இரா. தாமரைக்கனி .. | 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 12, 13, 14, 15, 17, 18, 24, 25, 26, 27, 28, 33, 34, 35, 42. |
| 8. திரு. பெ. சு. திருவேங்கடம் | 10, 11, 48, 49. |
| 9. திரு. பி. எஸ். துரைசாமி .. | 50 |
| 10. திரு. ப. நெடுமாறன் .. | 36 |
| 11. வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன். .. | 40, 41 |
| 12. திரு. த. வேணுகோபால் .. | 30, 31, 37, 38, 39 |

### தமிழ்நாட்டில் பட்டுக்கூடு உற்பத்தியை பெருக்கும் திட்டம்

வினா 12343—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பட்டுக்கூடு உற்பத்தியை பெருக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் பட்டுக்கூடு உற்பத்தியை பெருக்கும் பொருட்டு பட்டு விவசாயிகளுக்கு தொழில் நுட்ப அறிவுரை வழங்க செயல்முறை விளக்கப் பயிற்சி நிலையங்கள் பட்டுக் கூடு விற்பனைக் கூடங்கள், பட்டு நூற்பு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற அடிப்படை வசதிகளை ஆண்டு தோறும் அரசு ஏற்படுத்தி வருகின்றது. மேலும் புதிதாக பட்டுத் தொழிலில் ஈடுபடும் விவசாயிகளுக்கு பயிற்சியும், பயிற்சி முடிந்த பின் ரூ. 300 மதிப்புள்ள பட்டு வளர்ப்பு தளவாடங்களின் விலையில் 50சதவீதம் மான்யமாகவும் வழங்கப்படுகின்றது

பட்டு விவசாயிகள் ஆர்வமுடன் தொழிலில் ஈடுபட, அதிக முன்னேற்ற மடைந்துள்ள பகுதிகளில் முசுக்கொட்டைச் செடி ஒரு ஏக்கரில் பயிரிட ரூ. .00 மான்யமாகவும் ரூ. 1,500 மதிப்புள்ள பட்டுப் புழு வளர்ப்பு சாதனங்கள் வாங்க மற்றும் ரூ. 3,000 மதிப்புள்ள பட்டுப் புழு மனைகள் கட்ட, அவற்றின் மதிப்பில் 25 சதவீதம் முறையே ரூ. 375-ம், ரூ. 75-ம் மான்ய மாகவும் வழங்கப் படுகின்றது.

மேற்கண்ட இத்திட்டங்களினால், 1981–82 ஆம் வருடம் அதிகப்படியாக 5,000 ஏக்கர் நிலப்பரப்பில் முசுக்கொட்டை செடி சாகுபடி செய்யவும், ரூ. 1·5 கோடி மதிப்புள்ள 5 இலட்சம் கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தியாகும் எனவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2—

அணைக்கட்டுகளில் வயர்லெஸ் கருவிகள் அமைக்கும் திட்டம்.

வினா 12348—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வெள்ள அபாயம் பற்றி அறிவிக்க அணைக்கட்டுகளில் வயர்லெஸ் கருவி அமைத்து தகவல் தெரிவிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயலுக்கு வரும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) 1961 ஆம் ஆண்டு வெள்ளத்துக்குப் பின், வெள்ள அவசர திட்டத்தின் கீழ் வயர்லெஸ் கருவிகள் வாங்கப்பட்டு அவைகள் சென்னை, தஞ்சாவூர், கல்லணை, கீழணை, மேட்டூர் அணை, பவானிசாகர், பெரியாறு அணை, மேலணை, இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி, பொள்ளாச்சி ஆகிய இடங்களில் பொருத்தப்பட்டு காவல்துறை மூலம் இயக்கப்படுகின்றன. (high frequency) கருவிகள் பரம்பிக்குளம், ஆளியாறு பாசனத் திட்டப் பகுதிகளில் எட்டு இடங்களில், நிறுவப்பட்டுள்ளன. அவை பொதுப்பணித்துறை மற்றும் மின்வாரியத்துறை அதிகாரிகளால் இயக்கப்பட்டு வருகின்றன. பெரியாறு வைகைத் திட்டப் பகுதிகளில் ரூபாய் 15·60 இலட்சம் செலவில் (high frequency) கருவிகள் அமைப்பதற்கான திட்டத்துக்கு அரசால் அனுமதி அளிக்கப் பட்டுள்ளது. வேறு செயற்குறிப்பு ஏதும் தற்போது **அரசிடம் பரிசீலனையில் இல்லை.**





3—

திருச்சி கலையரங்கத்திற்கு மாற்று பெயர் சூட்டும் திட்டம்.

வினா 12394—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

திருச்சி கலையரங்கத்திற்கு தியாகராஜ பாகவதர் மன்றம் என்று பெயர் சூட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

விடை—

திருச்சி காலயரங்கத்திற்கு ' தியாகராஜ பாகவதர் மன்றம் ' என பெயர் மாற்றப்பட்டுள்ளது.

4—

திருவில்லிபுத்தூர் தொகுதியில் எண்ணெய் செக்குகளுக்கு கடன்கோரி பெறப் பெற்ற மனுக்கள்.

வினா 12401—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதியில் எண்ணெய் செக்குகளுக்கு கடன் கோரி 1977 முதல் 1981 அக்டோபர் முடிய எத்தனை மனுக்கள் வந்துள்ளன ?

(ஆ) அம்மனுக்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

விடை—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதியில் எண்ணெய் செக்குகளுக்கு கடன் கோரி 1977 முதல் 1981 அக்டோபர் முடிய கீழ்க்கண்டவாறு மனுக்கள் வந்துள்ளன.

| வருடம். | | | மனுக்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| 1977–78 | .. | .. | 25 |
| 1978–79 | .. | .. | 54 |
| 1979–80 | .. | .. | 83 |
| 1980–81 | .. | .. | 26 |
| 1981–82 | .. | .. | 25 |

(ஆ) 1981–82-ஆம் ஆண்டு பெறப்பட்ட மனுக்களுக்குத் தவிர மற்ற அனைத்து மனுதாரர்களுக்கும் மின் செக்குகள் வழங்கப்பட்டுவிட்டன.

5—

தமிழ்நாட்டில் கிடைக்கும் சாம்பல் நிறப் பாறைகளை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் திட்டம்.

வினா 12409—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ்நாட்டில் சாம்பல் நிறப் பாறைகளை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உளளதா ?

விடை—

அரசுக்குச் சொந்தமான தமிழக கனிம நிறுவனம் 1979-80 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து சாம்பல் நிறப் பாறைகளை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்து வருகிறது.

6—

தொழில்துறையில் பின்தங்கிய தேர்ந்தெடுக்கப்பட்ட தாலுக்காக்கள்.

வினா 12413—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தொழில்துறையில் பின்தங்கிய தாலுக்காக்களாக எந்தெந்த தாலுக்காக்கள் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளன ?

(ஆ) அந்த இடங்களில் என்னென்ன தொழில்கள் தொடங்கப்படும்.

விடை—

மைய அரசு மூலதன மான்ய உதவித் தொகை திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட 33 தாலுக்காக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

தருமபுரி மாவட்டம்

1. தருமபுரி வட்டம்.
2. ஹரூர் வட்டம்.
3. ஓசூர் வட்டம்.





4. கிருஷ்ணகிரி வட்டம்.
5. ஊத்தங்கரை வட்டம்.
6. பாலக்காடு வட்டம்.
7. தெங்கனிக்கோட்டை வட்டம்.

மதுரை மாவட்டம்.

8. திண்டுக்கல் வட்டம்.
9. மேலூர் வட்டம்.
10. நிலக்கோட்டை வட்டம்.
11. திருமங்கலம் வட்டம்.
12. உசிலம்பட்டி வட்டம்.
13. வேடசந்தூர் வட்டம்.

வட ஆற்காடு மாவட்டம்.

14. திருப்பத்தூர் வட்டம்.
15. வாணியம்பாடி வட்டம்.
16. வேலூர் வட்டம்.
17. வாலாஜாபேட்டை வட்டம்.

இராமநாதபுரம் மாவட்டம்

18. அருப்புக்கோட்டை வட்டம்.
19. முதுகுளத்தூர் வட்டம்.
20. பரமக்குடி வட்டம்.
21. இராமநாதபுரம் வட்டம்.
22. சாத்தூர் வட்டம்.
23. ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டம்.
24. சிவகெங்கை வட்டம்.
25. திருவாடானை வட்டம்.
26. திருப்பத்தூர் வட்டம்.

27. காரைக்குடி வட்டம்.

28. ராஜபாளையம் வட்டம்.

29. விருதுநகர் வட்டம்.

புதுக்கோட்டை மாவட்டம்.

30. ஆலங்குடி வட்டம்.

31. குளத்தூர் வட்டம்.

32. திருமயம் வட்டம்.

33. புதுக்கோட்டை வட்டம்.

இதுபோன்ற மூலதன உதவித்தொகை அளிக்கும் திட்டத்தை மைய அரசு ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் வராத கீழ்க்கண்ட 24 தாலுக்காக்களுக்கு மாநில அரசு நிதியிலிருந்து செயலாக்கும் பொருட்டு அரசு தேர்ந்தெடுத்துள்ளது.

செங்கற்பட்டு மாவட்டம்.

1. மதுராந்தகம் வட்டம்.
2. பொன்னேரி வட்டம்.
3. கும்மிடிப்பூண்டி வட்டம்.

மதுரை மாவட்டம்.

4. பெரியகுளம் வட்டம்.

வட ஆற்காடு மாவட்டம்.

5. போளூர் வட்டம்.

6. செங்கம் வட்டம்.

7. வந்தவாசி வட்டம்.

8. செய்யார் வட்டம்.

புதுக்கோட்டை மாவட்டம்.

9. அறந்தாங்கி வட்டம்.

10. ஆவுடையார் கோவில் வட்டம்.



தென் ஆற்காடு மாவட்டம்.

11. செஞ்சி வட்டம்.

12. திருக்கோயிலூர் வட்டம்.

13. உளுந்தூர்பேட்டை வட்டம்.

14. கள்ளக்குறிச்சி வட்டம்.

15. திட்டக்குடி வட்டம்.

16. சிதம்பரம் வட்டம்.

17. காட்டுமன்னார்கோயில் வட்டம்.

18. திண்டிவனம் வட்டம்.

தஞ்சாவூர் மாவட்டம்.

19. ஒரத்தநாடு வட்டம்.
20. பேராவூரணி வட்டம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

21. முசிறி வட்டம்.
22. அரியலூர் வட்டம்.

திருநெல்வேலி மாவட்டம்.

23. விளாத்திகுளம் வட்டம்.
24. நாங்குநேரி வட்டம்.

கீழ்க்கண்ட தொழில்கள் இம்மாநிலத்தில் எங்கு துவக்கப்பட்டாலும் அவைகளுக்கு மூலதன மானியம் அளிக்க அரசு முடிவு செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

(1) எலக்ட்ரானிக்ஸ்.

(2) அடிப்படை மருந்துகள் மற்றும் ஷெட்யூல்டு மருந்துகள் தயாரித்தல்.

(3) ஆட்டோமொபைல் துணைத் தொழில்கள் மேற்கண்ட தொழில்களில் உருவாக்கப்பட்ட மூலதனத்தில் 10 சதவீதம் அல்லது நிரந்தரமாக பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் ரூ. 20,000 என்ற விகிதத்தில் வேலை வாய்ப்பு ஏற்படுத்துதல். இதில் எந்தந்தத் தொகை குறைவோ அத்தொகை மான்யமாக அளிக்கப்படும்.

(ஆ) தொழிலில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில் என்னென்ன தொழில்கள் தொடங்க வேண்டும் என அரசு வரையரை செய்யவில்லை.

7—



## சேலம் கூடுதல் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வழங்கப்பட்ட போலி கண்டக்டர் உரிமம்

வினா 12421—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் உள்ள கூடுதல் வட்டார போக்குவரத்து அலுவலத்தில் கண்டக்டர் லைசென்ஸ் போலியாக 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கொடுக்கப்பட்டதாக அரசுக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், சம்பந்தப்பட்டவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

8—

## பெரியார் மாவட்டத்தில் புதிய தொழிற்பேட்டை ஏற்படுத்துதல்

வினா 12441—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டத்தில் புதிய தொழிற்பேட்டை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பெரியார் மாவட்டத்தில் வெள்ளக்கோவில், தாராபுரம் ஆகிய இடங்களில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டமும், ஈரோட்டில் தோல் தொழிலுக்கான தொழிற்பேட்டை அமைக்கும் திட்டமும், 'சிட்கோவின்' பரிசீலனையில் உள்ளன. ஏற்கனவே ஈரோட்டில், அரசு தொழிற்பேட்டை ஒன்றும், தாராபுரத்தில் பட்டுத் தொழிலுக்கான சிறிய தொழிற்பேட்டை ஒன்றும் உள்ளன.





9—

## திருவில்லிப்புத்தூர் தொகுதியில் பிரஷ் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம்

வினா 12454—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் பிரஷ் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

10—

## கலசப்பாக்கம் ஒன்றியத்தில் உணவுக்கு வேலைத் திட்டத்தில் எடுக்கப்பட்ட வேலைகள்

வினா 12519—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், கலசப்பாக்கம் ஒன்றியத்தில் 1980—81-ல் உணவுக்கு வேலைத் திட்டத்தில் எடுக்கப்பட்ட வேலைகள் எத்தனை?

(ஆ) எந்தெந்த கிராமங்களில் எடுக்கப்பட்டன?

(இ) முடிக்கப்படாமல் உள்ள வேலைகள் எத்தனை?

விடை—

(அ) கலசப்பாக்கம் ஒன்றியத்தில் வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் 36 வேலைகள் எடுக்கப்பட்டன.

(ஆ) மொத்தம் 21 கிராமங்களில் 36 வேலைகள் எடுக்கப்பட்டன. (கிராமங்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது*)

(இ) ஏதும் இல்லை, 36 வேலைகளும் 31—3—1981க்குள்ளேயே முடிக்கப்பட்டுள்ளன.

---

* பக்கம் 154 இல் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

11—

### திரையரங்குகளில் காட்சிகள் காட்டப்படுவதற்கான விதிமுறைகள்

வினா 12520— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள திரையரங்கத்திற்கு வாரத்திற்கு இத்தனை காட்சிகள் காட்டப்பட வேண்டுமென வரையறுக்கப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) அதை மாற்றும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நிரந்தர அல்லது பகுதி நிரந்தர திரையரங்குகள், ஒரு நாளில் அதிக பட்சம் 4 காட்சிகள் நடத்தலாம். இது தவிர, உள்ளூர் பண்டிகை நாட்கள் அல்லது பொது விடுமுறை நாட்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சிறப்பு காட்சி அதிகப்படி நடத்தலாம். பொது விடுமுறை நாட்களில் மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் ஒரு சிறப்புக் காட்சி நடத்த, உரிமையாளர்கள் உரிமம் வழங்கும் அதிகாரிக்கு முன்னரே அறிவிக்கவேண்டும். பண்டிகை நாட்களில் ஒரு சிறப்பு காட்சி நடத்த உரிமம் வழங்கும் அதிகாரிகளின் முன்அனுமதி பெறவேண்டும்.

டூரிங் திரையரங்குகளில் தற்போது ஒரு நாளைக்கு இரண்டு காட்சிகள்தான் நடத்தலாம்.

(இ) தற்போது டூரிங் திரையரங்குகளில் பகல் காட்சி நடத்தக் கூடாதென அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதைத் தவிர, நிரந்தரப் பகுதி நிரந்தர திரையரங்குகளில் தற்போது அனுமதிக்கப்பட்ட காட்சிகளை மாற்றும் உத்தேசம் ஏதும் இல்லை.

12—

### சென்னை வடபழனி-ஆற்காடு சாலைக்கு கவியரசர் கணணதாசன் பெயர் வைக்கும் திட்டம்

வினா 12525—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, வட பழனி—ஆற்காடு சாலைக்கு கவியரசர் கண்ணதாசன் பெயர் இட வேண்டும் என அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?



விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

13—

### தென்னாற்காடு மாவட்டத்தில் மரச் சிற்பத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்

வினா 12536—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், சின்னசேலம் மற்றும் கள்ளக் குறிச்சியிலும் மரச் சிற்பத் தொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

தற்சமயம் இல்லை. ஆயினும் மரச் சிற்ப வேலை செய்வோர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தென்னாற்காடு மாவட்டத்தில் ஆரம்பிக்கும் செயற் குறிப்பு தொழில் வணிக இயக்குநரின் பரிசீலனையில் இருக்கிறது.

14—

### காவல்துறை வாகனப் பராமரிப்பு பணிமனையை நவீனப்படுத்துதல்

வினா 12555—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அருகே உள்ள போலீஸ் வாகனப் பராமரிப்பு பணிமனையை நவீனப்படுத்தும் செயற் குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா ?

(ஆ) மதுரை, கோவையில் போலீஸ் வாகனப் பராமரிப்பு பணிமனை நிறுவும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

விடை—

(அ) சென்னைக்கு அருகே ஆவடியில் உள்ள காவல் துறையின் போக்குவரத்துப் பணிமனை மற்றும் பயிற்சிப் பள்ளியினை ரூபாய் 10,00,000 (ரூபாய் பத்து இலட்சம்) செலவில் மேம்படுத்துவதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(ஆ) ஆம்.

[1983 ஏப்ரல் 18

15—

நெல்லை மாவட்டத்தில் மேலும் விதைப் பண்ணைகள் நிறுவுதல்

வினா 12559—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டத்தில் மேலும் விதைப் பண்ணைகளை நிறுவும் செயற் குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா?

விடை—

திருநெல்வேலி மாவட்டத்தில் அரசு விதைப் பண்ணைகள் நிறுவுவதற்கான செயற் குறிப்பு அரசின் ஆய்விலுள்ளது.

16—

மதுராந்தகம் வட்டத்தில் நெற் பயிர்களை பூச்சிகள் தாக்குதலைத் தடுக்கும் நடவடிக்கை

வினா 12568—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டத்தில் நெற் பயிர்களை பூச்சிகள் தாக்கி நெல் விளைச்சல் இவ்வாண்டு பாதித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கை யாது ?

விடை—

(அ) மதுராந்தகம் வட்டத்தில் நெற் பயிரில் நாவாய்ப் பூச்சி தாக்கியது. ஆனால் உடனடியாக பூச்சி மருந்துகள் ஒட்டு மொத்தமாக தெளிக்கப்பட்டதால் நெல் விளைச்சல் பெருமளவில் பாதிக்கப்படவில்லை.

(ஆ) மதுராந்தகம் வட்டம், எல். என். புரம் புதூர் கிராமங்களில் நெல் சுமார் 80 ஏக்கரில் நாவாய்ப் பூச்சியால் தாக்கப்பட்டது. பூச்சி மருந்துகள் தூவுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்தப்பட்டது. மேலும் இளம் பயிர்களில் குருத்துப் பூச்சி காணப்பட்டதின் பேரில் ஒட்டு மொத்தமாக சுமார் 1,059·33 ஏக்கரில் மருந்து தெளிக்கப்பட்டது,



1983 ஏப்ரல் 18]

மற்ற கிராமங்களில் பூச்சிகளின் தாக்குதல் பயிருக்கு சேதத்தை விளைவிக்கும் அளவில் காணப்படாததால் முன் எச்சரிக்கையாக பூச்சி மருந்துகளும், தூவுவான்களும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. மேலும் பூச்சி பாதிப்புகளை வயல் விளக்க அலுவலர்களைக் கொண்டு அறிவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு இப்பகுதியில் பூச்சி தாக்குதல் அவ்வப்போது விரைவாகக் கட்டுப்படுத்தப்பட்டது.

17—

வடாற்காடு மாவட்டத்தில் மரம் வளர்ப்பதைத் தீவிரப் படுத்தும் திட்டம்.

வினா 12571—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் மரம் வளர்க்கும திட்டத்தைத் தீவிரப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதன் விவரம் யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) வடாற்காடு மாவட்டத்திலும் மரம் வளர்க்கும் திட்டத்தை தீவிரப்படுத்த வனத்துறையில் திட்டங்கள் உள்ளன. கீழ்க்குறிப்பிட்டவாறு 1981–82 ஆம் ஆண்டில் வடாற்காடு மாவட்டத்தில் 6,560 எக்டேர் பரப்பளவில் மரம் வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.—

| | எக்டேர் |
|---|---|
| (1) சமூக நலக் காடுகள் .. .. .. .. | 4,485 |
| (2) கான் சிறு மகசூல் .. .. .. .. | 170 |
| (3) தேக்கு .. .. .. .. .. | 150 |
| (4) விறகு மரம் .. .. .. .. .. | 1,400 |
| (5) சந்தனம் .. .. .. .. .. | 100 |
| (6) கூழ் மரம் .. .. .. .. .. | 200 |
| (7) அழிந்த காடுகளை மீண்டும் உண்டாக்குதல் .. | 50 |
| மொத்தம் .. | 6,560 |

இதைத் தவிர சாலைகள், இருப்புப் பாதை, ஆறு, கால்வாய்க் கரை ஓரங்களில் சுமார் 130 கிலோ மீட்டர் நீளத்திற்கு கன்றுகள் நடப்படவிருக்கிறது. மேலும், 3,000 குடும்பங்களுக்கு அவர்களின் சொந்த நிலங்களில் மரங்கள் பயிர் செய்வதற்கு நாற்றுகள் வழங்கப்படும். இவைகளுடன் மேலும், 4.50 இலட்சம் நாற்று

கள் பொது மக்களுக்கு நடுவதற்காக வழங்கப்படவிருக்கிறது. 1982–83 ஆம் ஆண்டில் சுமார் 6,120 எக்டேரில் இம்மாவட்டத்தில் கன்றுகள் நட்டு மரம் வளர்க்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

18—

### தஞ்சை மாவட்ட கடலோரப் பகுதிகளில் மீன்பிடி பண்ணைகள் அமைத்தல்

வினா 12574—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளில் மீன்பிடி பண்ணைகளை அமைப்பது குறித்து அரசு ஆய்வு செய்து உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கொச்சியிலுள்ள மத்திய கடல்மீன் ஆராய்ச்சி நிலையம் (Central Marine Fisheries Research Institute) தமிழ்நாட்டுக் கடலோரப் பகுதிகளை அளவாய்வு (Servey) செய்து உவர்நீர் மீன் பண்ணைகள் அமைக்கப் பொருத்தமான இடங்களைக் கண்டறிந்தது. இந்த ஆய்வின் விளைவாக தஞ்சை மாவட்டக் கடலோரப் பகுதிகளான ஏரிபுரக்கரை மற்றும் தொண்டியக்காடு ஆகிய இடங்களில் உவர்நீர் மீன்விளக்கப் பண்ணைகள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. அதிராம்பட்டினத்தில் கூட்டுறவு முறையில் ஒரு உவர் நீர் இறால் உற்பத்திப் பண்ணை அமைக்கப்பட்டு வருகிறது. மேலும், அதிராம்பட்டினத்திலேயே, வேளாண்மை மறுநிதி மற்றும் வளர்ச்சிக் கழக (Agricultural Refinance Development Corporation) நிதியுதவியுடன் 50 ஹெக்டேர் பரப்பளவு உள்ள உவர்நீர் மீன் பண்ணையொன்று அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

19—

### வேடந்தாங்கல் சரணாலயத்திலுள்ள கடம்ப மரங்கள்

வினா 12593—திரு. சி. கணேசன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சிறுப்பாக்கம் தொகுதியைச் சார்ந்த வேடந்தாங்கல் சரணாலயத்தில் இருந்த கடம்ப மரங்கள் செத்துவிட்டதால் பறவைகளின் வருகை அதிக அளவில் இல்லை என்பது உண்மையா ?

(ஆ) 1979–80 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பணியகளின் எண்ணிக்கை எவ்வளவு ?



விடை—

(அ) உண்மை இல்லை. தேவையான மரங்கள் வேடந்தாங்கல் சரணாலயத்தில் உள்ளன. 1.300 கடம்ப மரங்களும் 10,000 கருவேல மரங்களும் உள்ளன. 1980–81ஆம் வருடத்திலும் மற்றும் இவ்வருடத்திலும் பருவ மழை தவறிய போதிலும் பறவைகள் எப்போதும் போல வந்து கொண்டு இருக்கின்றன. இந்த வருடம் சுமார் 10,000 பறவைகள் வந்துள்ளன.

(ஆ) 1979–80 ஆம் ஆண்டில் இச்சரணாலயத்திற்கு 32,000 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

20—

### ஓமலூர் வீட்டுவசதி சங்க விவகார எல்லைக்குள் தொளசம்பட்டி, முத்துநாயக்கன்பட்டி ஆகிய ஊர்களை சேர்த்தல்.

வினா 12602—திரு. செ. செம்மலை : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வீட்டுவசதி சங்க விவகார எல்லைக்குள் தொளசம்பட்டி, முத்துநாய்க்கன்பட்டி ஆகிய ஊர்களைச் சேர்க்க, அப்பகுதி மக்களிடமிருந்து கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வீட்டுவசதி சங்க விவகார எல்லைக்குள் தொளசம்பட்டி, முத்துநாயக்கன்பட்டி ஆகிய ஊர்களைச் சேர்க்க அப்பகுதி மக்களிடமிருந்து கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை. ஆனால், மேற்படி கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் தனது விவகார எல்லையை தொளசம்பட்டி, முத்துநாயக்கன்பட்டி, கருப்பூர், பாகல்பட்டி, காமலாபுரம் ஆகிய கிராம பஞ்சாயத்துக்களுக்கும் மற்றும் தாரமங்கல நகர பஞ்சாயத்துக்கும் விரிவுபடுத்த துணை விதி திருத்த பிரேரணை ஒன்றை சேலம் மண்டல துணைப் பதிவாளர் (வீட்டு வசதி) அவர்களுக்கு அனுப்பியிருந்தது. கிராமிய வீட்டுவசதி சங்கங்கள் அப்பகுதியில் உள்ளதாலும், நகரப்பகுதி கூட்டுறவு சங்கங்கள் அப்பகுதியில் உள்ளதாலும், நகரப்பகுதி கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் விவகார எல்லைக்குள் கிராமங்களைச் சேர்க்கக் கூடாது என்று அரசு ஏற்கனவே ஆணையிட்டுள்ளதாலும், தொளசம்பட்டி, முத்துநாயக்கன்பட்டி ஆகிய ஊர்களை ஓமலூர் வீட்டுவசதி சங்க விவகார எல்லைக்குள் கொண்டு வருவது சாத்

தியமில்லை என்றுச் சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டது. எனவே இம்முடிவிற்கேற்ப சங்கத்தின் கோரிக்கையை மாற்றியனுப்புமாறு மேலும் அறிவுரை வழங்கப்பட்டது. அவ்வாறே சங்கமும் தார மங்கலம் நகர பஞ்சாயத்து பகுதியை மட்டும் தனது விவகார எல்லையில் சேர்க்குமாறு கோரி புதிய பிரேரணையை சேலம் துணைப்பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களுக்கு அனுப்பியுள்ளது.

21—

### கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை

வினா 12619—திரு. ஏ. டி. குலசேகர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தொத்து நோய் வார்டில் கட்டில்கள் போதிய அளவு இல்லாதிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) இது குறித்து அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

(அ) கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை தொத்து நோய்ப் பிரிவில் போதிய அளவு கட்டில்கள் உள்ளன. இந்தப் பிரிவில் 20 படுக்கைகள் இருக்கின்றன. ஆனால், இதற்கு ஒதுக்கப்பட்டுள்ள எண்ணிக்கையைக் காட்டிலும் அனுமதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. ஒரு மாதத்திற்கு தோராயமாக 456 நோயாளிகள் என்ற ரீதியில் 1981 ஆம் ஆண்டு 5,486 நோயாளிகளுக்கு இப்பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது.

(ஆ) உரிய காலங்களில் பழுதுள்ள கட்டில்கள், பழுது பார்ப்பதற்காக அனுப்பி அவை திரும்பப் பெறப்பட்டதும், அக்கட்டில்கள் மீண்டும் வார்டுகளுக்கு வழங்கப்படுகிறது. பழுது பார்க்கவே முடியாத கட்டில்கள் கண்டனம் செய்யப்பட்டு ஒதுக்கப்படுகின்றன. அக்கட்டில்களுக்குப் பதிலாகப் புதிய கட்டில்கள் வரப்பெற்று தொற்று நோய் வார்டுக்கும் மற்ற வார்டுகளுக்கும் வழங்கப்படுகின்றன.

22—

### கோவை மருத்துவக் கல்லூரி பயிற்சி மருத்துவர் விடுதி

வினா 12624—திரு. ஏ. டி. குலசேகர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மருத்துவக் கல்லூரி பயிற்சி மருத்துவர் விடுதிக்கு முன் உள்ள (குப்பை) டம்பிங் சென்டர் மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்குள் வேறு சரியான இடம் இல்லாத காரணத்தால், குப்பை டம்பிங் சென்டரை (Dumping center) மாற்ற அரசிடம் உத்தேசம் ஏதும் இல்லை. ஆனால், ஒரு நாளைக்கு இரண்டு தடவை வீதம் மாநகராட்சி துப்புரவு ஊழியர்கள் இக்குப்பைகளை அப்புறப்படுத்தி சுத்தம் செய்கின்றனர்.

23—

### கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கோபால்ட் யூனிட் கருவி வாங்கும் திட்டம்

வினா 12626—திரு. ஏ. டி. குலசேகர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு கோபால்ட் யூனிட் கருவி வாங்க அரசிடம் திட்டமுள்ளதா?

விடை

கோபால்ட் 60 டெலிதெரபி கருவி அமைப்பதற்கான கட்டிடம் கட்டுவதற்கான வரைபடங்களும், மதிப்பீடுகளும் சம்பந்தப்பட்ட பொதுப்பணித்துறை நிர்வாகப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

24—

### கொடைக்கானல் மலையில் தரமான உருளைக் கிழங்கு பயிரிடும் திட்டம்.

வினா 12644—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், கொடைக்கானல் மலையில் தரமான உருளைக்கிழங்கு (விதை) பயிரிடப்பட்டு விவசாயிகளுக்கு குறைந்த விலையில் கொடுக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ): இல்லை. இருப்பினும் உருளைக்கிழங்கு மேம்பாட்டுத் திட்டம் கொடைக்கானல் பகுதியில் செயலில் இருந்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தரமான நோயற்ற உருளைக்கிழங்கு விதை தனியார் பண்ணைகளில் தோட்டக்கலைத் துறையினரால் உற்பத்தி செய்யப்பட்டு உருளைக்கிழங்கு சாகுபடியாளர்களுக்கு இலாப நட்டமின்றி (No loss and no profit) விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

25—

ஒட்டப்பிடாரத்தை சுற்றுலா தலமாக்கும் திட்டம்

வினா 12647—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வ. உ. சி. பிறந்த ஒட்டப்பிடாரம் சுற்றுலா தலமாக்கும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயலுக்கு வரும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் இல்லை.

26—

திருத்தணி திருவள்ளூர் பகுதிகளில் பால் குளிர் பதன நிலையம் அமைத்தல்.

வினா 12657—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ்நாட்டில் திருத்தணி, திருவள்ளூர் பகுதிகளில் பால் குளிர் பதன நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசுலனையில் உள்ளதா ?

விடை—

ஆம்.

27—

சிவகாசியில் சிறுவர்களுக்கான பள்ளி சாரா கல்வித் திட்டம்

வினா 12659 திரு. இரா. தாமரைக்கனி மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம், சிவகாசியில் சிறுவர்களுக்கு பள்ளி சாரா கல்வித் திட்டத்தை செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயலுக்கு வரும்?



விடை—

(அ) மற்றும் (ஆ): சிவகாசியில் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் பணியாற்றிவரும் சிறுவர், சிறுமியர்களுக்கு எழுத்தறிவு ஊட்டும் வண்ணம் 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22 ஆம் நாள் முதல் அவ்வூரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பள்ளிச்சாராக் கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

28—

நிலவள வங்கி மூலம் கிணறு தோண்ட அளிக்கப்படும் கடன் மானியத் தொகையை அதிகரிக்கும் செயற் குறிப்பு.

வினா 12661—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ்நாட்டில் நிலவள வங்கியின் மூலம் கிணறு தோண்ட அரசு கொடுக்கும் கடன்களில் மானியத் தொகை ரூ. 500-ஐ உயர்த்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

தமிழ்நாட்டில் நிலவள வங்கிகளின் மூலம் கடன் பெற்று தோண்டப்படும் புதிய கிணறுகளுக்கு அரசு கொடுக்கும் மானியத் தொகை 14—7—1981 முதல் ரூ. 500ஐ ரூ. 1,000 ஆக உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

29—

தென் காசியிலிருந்து ஆயக்குடிக்கு மண்ணெண்ணெய் கடத்தல்

வினா 12679—திரு ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரனம் மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1981 ஆம் ஆண்டு, நவம்பரில் தென்காசியிலிருந்து ஆயக்குடிக்கு சுமார் 1,000 லிட்டர் மண்ணெண்ணெய் சட்ட விரோதமான முறையில் கடத்தப்பட்ட பொழுது பிடிபட்டுள்ளது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இதுபற்றிய விவரம் என்ன ?

(இ) இதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ): 11–11–1981 அன்று ஆயக்குடி, தென்காசி நெடுஞ்சாலையில் ஆயக்குடியைச் சார்ந்த திரு. சிட்டு என்பவர் இரட்டை மாட்டு வண்டியில் விற்பனை ரசீது, பர்மிட் எதுவும் இல்லாது 800 லிட்டர் மண்ணெண்ணெய் நான்கு பீப்பாய்களில் எடுத்துச்சென்றபோது தென்காசி காவல் துறையினர் 800 லிட்டர் மண்ணெண்ணெய்யுடன் வண்டியையும் மாடுகளையும், கைப்பற்றினர். இது சம்பந்தமாக செங்கோட்டை துணைக் குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. கைப்பற்றப்பட்ட மண்ணெண்ணெய் நீதிமன்றத்தின் ஆணைப்படி விற்கப்பட்டு ரூ. 1,468 நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டது. வழக்கு திருநெல்வேலி உணவுத்துறை காவல் பிரிவின் புலனாய்வில் இருக்கிறது.

30—

சென்னை—பெங்களூர் குளிர்சாதன பேருந்து விடல்.

வினா 12685—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சென்னைக்கும் பெங்களூருக்கும், திருவண்ணாமலை வழியாக குளிர்சாதன பேருந்து விடும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

இல்லை.

31—

சென்னை சாத்தனூர் அணைக்கு விரைவுப் பேருந்து விடல்

வினா 12689—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சென்னையில் இருந்து சாத்தனூர் அணைக்கு விரைவு பேருந்து விடுவதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



விடை—

இல்லை.

32—

தமிழ்நாட்டில் நடத்தப்பட்டு வரும் சீர்திருத்தப் பள்ளிகளின் எண்ணிக்கை.

வினா 12706—திரு. செ. செம்மலை: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நடத்தப்பட்டு வரும் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை என்ன?

(ஆ) அதில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

(அ) (1) அரசு சீர்திருத்தப் பள்ளிகள்—9.
(2) தனியார் சீர்திருத்தப் பள்ளிகள்—14.

| | | மாணவர்கள் | மாணவியர்கள். |
|---|---|---|---|
| (ஆ) | (1) அரசு சீர்திருத்தப் பள்ளிகள். | 2,169 | 361 |
| | (2) தனியார் சீர்திருத்தப் பள்ளிகள். | 572 | 366 |

33—

கேசரிகுளிஹல்லா ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் செயற்குறிப்பு.

வினா 12711—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தருமபுரி மாவட்டம் பாலக்கோடு வட்டத்தைச் சேர்ந்த திருமால்வாடி கிராமத்து அருகே ஓடும் கேசரிகுளிஹல்லா ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[1983 ஏப்ரல் 18

விடை—

(அ) மற்றும் (ஆ) : தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், திருமால்வாடி கிராமம், பெல்லுஹள்ளி அருகில் கேசரிகுளிஹல்லா ஆற்றின் குறுக்கே 134.09 மி.க. அடி கொள்ளளவு கொண்ட ஒருநீர்த்தேக்கம் ரூ.279 இலட்சம்மதிப் பீட்டுச் செலவில் அமைக்க அரசு ஆணை எண் 1943, பொதுப் பணித்துறை, நாள் 19—1—1981-ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் தருமபுரி மாவட்டத்தில் 4,000 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசனம் பெற்று கூடுதலாக 3,940.28 டன் உணவு உற்பத்தி செய்யப்படும்.

34—

வணிகவரித் துறை கோட்டங்களை பிரித்தமைத்தல்.

வினா 12748—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

வணிகவரித் துறையில் தற்பொழுது உள்ள கோட்டங்களை மேலும் பிரிக்கும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

இல்லை.

35—

மல்லியில் கால்நடை அபிவிருத்தி நிலையம் அமைத்தல்.

வினா 12751—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் வட்டம், மல்லியில், கால்நடை அபிவிருத்தி நிலையம் அமைக்கும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

இல்லை.



1983 ஏப்ரல் 18]

36—

மதுரை தொழில்நுட்பக் கல்லூரியின் அச்சுக் கலை வகுப்புத் துவக்கும் திட்டம்.

வினா 12766—திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதுரை தொழில் நுட்பக் கல்லூரியில் அச்சுக்கலை ( Printing Technology ) வகுப்பைத் துவக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதுமுதல் துவக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

37—

வடார்காடு மாவட்டத்திலுள்ள தொழில் மையங்கள்.

வினா 12772—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்ரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் மொத்தம் எத்தனை தொழில் மையங்கள் உள்ளன ?

(ஆ) அவைகள் எங்கெங்கு அமைக்கப்பட்டுள்ளன ?

விடை—

(அ) மற்றும் (ஆ): வடஆற்காடு மாவட்டத்தில் ஒரு மாவட்டத் தொழில் மையம் வேலூரில் அமைக்கப்பட்டுள்ளது.

38—

நரியப்பட்டு கிராம அரிசனங்களுக்கு வீட்டுவசதி.

வினா 12775—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதியில் நரியாப்பட்டு அரிசனங் களுக்கு வீட்டு வசதி கோரி விண்ணப்பம் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில். அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

[!983 ஏப்ரல் 18

விடை—

(அ) ஆம்.

(ஆ) கோரிக்கை தக்க தருணத்தில் பரிசீலிக்கப்படும்.

39—

தண்டாரம்பட்டு தொகுதியில் கிராமக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்படும் கடன்.

வினா எண். 12783—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதியில் பெருமணம், தலையாம் பள்ளம் ஆகிய கிராமக் கூட்டுறவுச்சங்கங்களில் பங்குத் தொகை வசூலிக்கப்பட்டு நீண்ட காலமாகக் கடன் வழங்கப்படாமல் இருப்பது குறித்து அரசுக்கு விண்ணப்பம் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை வட்டம் பெருமணம் கிராமத்தை விவசார எல்லையாகக் கொண்ட ஆருத்திராப்பட்டு விவசாய சேவை கூட்டுறவுச் சங்கத்தின் 13 உறுப்பினர்களிடமிருந்தும் தலையாம்பள்ளம் விவசாய சேவை கூட்டுறவுச் சங்கத்தின் 14 உறுப்பினர்களிடமிருந்தும் 1980 ஆம் ஆண்டு சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மத்திய காலக்கடன் வழங்கும் பொருட்டு பங்குத் தொகை வசூலிக்கப்பட்டது. உழவு மாடு வாங்கும் காரியத்திற்கான மத்தியக் காலக்கடன் வழங்கும் குறியீடு தீர்ந்துவிட்ட காரணத்தால் மேற்கண்ட உறுப்பினர்களுக்கு உடனடியாகக் கடன் வழங்க இயலவில்லை. ஆனால் ஆருத்திராப்பட்டு சங்கத்தின் 13 உறுப்பினர்களுக்கு டிசம்பர் 1981-ல் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. தலையாம்பள்ளம் சங்கத்தின் 14 உறுப்பினர்களுக்கும் பயிர்க்கடன் வழங்குவதற்கு ஆண்டுக்கடன் அளவு மனு தயாரிக்கப்பட்டு உள்ளது.



1982 ஏப்ரல் 18]

40—

வேடசந்தூர் நகரில் பெண்களுக்கான விடுதி அமைக்கும் செயற்குறிப்பு.

வினா 12799—வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் நகரில் பெண்களுக்கான விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

41—

மதுரை மாவட்ட விவசாயிகளுக்கு பூச்சி கொல்லி மருந்து, உரம் முதலியவற்றிற்கு வழங்கப்பட்ட மானியம்.

வினா 12805—வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்கீழ்க்கண்டவினாவுக்கு விடையளிப்பாரா—

1981ஆம் ஆண்டு வறட்சி துயர் துடைப்பு பணியின் மூலம் மதுரை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு பூச்சிகொல்லி மருந்து, உரம் ஆகியவைகளுக்கு வழங்கப்பட்ட மானிய உதவித் தொகை வட்டம் வாரியாக எவ்வளவு ?

விடை—

வேளாண்மைத் (ஏபி. 2) துறை.

| வரிசை எண். | வட்டத்தின் பெயர். | மானியம் வழங்கியது. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1. | திண்டுக்கல் | 5.34 |
| 2. | பழனி | 7.38 |
| 3. | திருமங்கலம் | 9.15 |
| 4. | நிலக்கோட்டை | 4.59 |
| 5. | மேலூர் | 1.18 |
| 6. | உசிலம்பட்டி | 5.56 |
| 7. | வேடசந்தூர் | 4.20 |
| 8. | மதுரை (தெற்கு) | 0.81 |
| 9. | பெரியகுளம் | 0.64 |
| 10. | நத்தம் | 1.85 |
| | கூட்டுத் தொகை | 40.70 |

42—

ஒரத்த நாட்டில் கோழி வளர்ப்புத் துறை ஆய்வாளர் பயிற்சி நிலையம் தொடங்கும் திட்டம்.

வினா 12815—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தஞ்சை மாவட்டம் ஒரத்த நாட்டில் கோழி வளர்ப்புத் துறை இன்ஸ்பெக்டர் பயிற்சி நிலையம் தொடங்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையில், கால்நடை ஆய்வாளர்களுக்கும் மற்றும் விவசாயி களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. அப்பயிற்சியின் பாடத் திட்டத்தில் கோழி வளர்ப்புக்கான பயிற்சியும் சேர்க்கப்பட்டுள் ளது. எனவே கோழி வளர்ப்புக்கென்று இன்ஸ்பெக்டர் பயிற்சி நிலையம் ஒன்று தனியே தொடங்கவேண்டிய அவசியம் ஏதும் இல்லை.

43—

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நூற் நிலையம் அமைக்கும் திட்டம்.

வினா 12849—திரு. செ. செம்மலை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நூல்நிலையம் அமைக் கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறுவப்படும் ?

(இ) அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

விடை—

(அ) பல்கலைக் கழகங்களில் நூல்நிலையம் அமைக்கும் பொறுப்பு அந்தந்த பல்கலைக் கழகங்களையே சாரும். அதற் கேற்ப தமிழ்ப் பல்கலைக் கழகமும் நூல்நிலையம் அமைக்கும் பணியினை ஏற்றுள்ளது.

(ஆ) தற்போது சிறிய அளவில் நூலகம் இயங்கி வருகிறது.





(இ) தமிழ்ப் பல்கலைக் கழகம் நூலகம் அமைப்பதற்காக தனது வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்து அதே அள வுக்கு ரூ. 20.50 இலட்சம் 1981–82 ஆம் நிதி ஆண்டில் நிதி யுதவி கோரியுள்ள ஒரு கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதுபோன்ற பல்வேறு கருத்துருக்களைப் பரிசீலித்து முடிவு எடுக்குமுன், 1981–82ஆம் நிதி ஆண்டில் உடனடியாக செய்யப் பட வேண்டியிருக்கும் நூலகம் அமைத்தல், மரச்சாமான்கள் மற்றும் இதர சாதனங்கள் வாங்கவும் இதுபோன்ற மற்ற தொட ராச் செலவினங்களுக்கு முதல் தவணையாக ரூ. 25.00 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

44—

பி. டி. பயிற்சி பெற்று வேலை கிடைக்காமலிருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை.

வினா 13033—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பி. டி. பயிற்சி பெற்று வேலை கிடைக்காமல் இருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 1981 முடிய எவ்வளவு ?

விடை—

வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலைக் காகக் காத்திருக்கும் பி.டி. மற்றும் பி. எட்., பயிற்சி பெற்றவர் களின் எண்ணிக்கை (1981 டிசம்பர் 31 முடிய) 12,843.

45—

மதுராந்தகத்திலிருந்து நகரப் பேருந்துகள் விடல்.

வினா 13064—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டம் புளியர்ண கோட்டை, Z எண்டத்தூர் மார்க்கமாக மதுராந்தகம்—பெரிய வெண்மணி நகரப் பேருந்து விடப்படுமா ?

விடை—

மதுராந்தகத்திலிருந்து புளியர்ணகோட்டை Z . எண்டத்தூர் வழியாக பெரிய வெண்மணிக்கு நகரப் பேருந்து விடும் திட்டம் ஏதும் இல்லை.

46—

வினா 13065—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

மதுராந்தகம் தொகுதி வையாவூர் மார்க்கமாக மதுராந்தகம்-உத்திரமேரூர் நகரப் பேருந்து விடப்படுமா ?

விடை—

மதுராந்தகத்திலிருந்து வையாவூர் வழியாக உத்திரமேருருக்கு நகரப் பேருந்து விடும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

47—

வினா 13066—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகத்திலிருந்து கூவத்தூர், வீரபோகம், சூனாம்பேடு கிராமங்களுக்கு நகரப்பேருந்துகள் விடப்படுமா ?

விடை—

மதுராந்தகத்திலிருந்து கூவத்தூருக்கும் மதுராந்தகத்திலிருந்து வீரபோகத்துக்கும் இடையே உள்ள தூரம் 30 கிலோ மீட்டருக்கு அதிகமாக இருப்பதால் மேற்படி இரண்டு கிராமங்களுக்கும் மதுராந்தகத்திலிருந்து நகரப் பேருந்து விட இயலாது. மதுராந்தகத்திலிருந்து சூனாம்பேடு வரை நகரப் பேருந்து விடுவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து இத்திட்டத்தில் நகரப் பேருந்து விட விண்ணப்பிக்குமாறு தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

48—

திருச்சியிலிருந்து வேலூர் செல்லும் திருவள்ளுவர் விரைவு பேருந்து.

வினா 13205—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருச்சியிலிருந்து திருவண்ணாமலை வழியாக வேலூர் சென்று வந்த திருவள்ளுவர் விரைவு பேருந்து நிறுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?



விடை—

(அ) ஆம்.

(ஆ) இத்தடம் தொடர்ந்து நட்டத்திலேயே இயங்கியதாலும், இத்திட்டத்தின் பயணி இருக்கை விகிதம் (Occupancy Ratio) குறைவாக இருந்தமையாலும் இத்திட்டத்தில் இயக்கப்பட்ட பேருந்துகள் 1981 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20 ஆம் தேதி முதல் நிறுத்தப்பட்டன. மீண்டும் இத்தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்து கழக பேருந்துகளை இயக்கும் சாத்தியக்கூறு இல்லை.

49—

வேலூரில் சட்டக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு.

வினா 13209—திரு. பெ. சு. திருவெங்கடம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு வேலூரில் சட்டக் கல்லூரி அமைக்கும் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் நிலை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

50—

கிருஷ்ணகிரி-பச்சூர் ரெயில் நிலையம் வரை நகரப் பேருந்து விடல்

வினா 13246—திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரியிலிருந்து பச்சூர் ரெயிலடி நிலையம் வரை (வழி-பருகூர்) டவுன் பஸ் விட அரசிற்கு எண்ணமுண்டா ?

(ஆ) ஆமெனில் எப்போது முதல் செயல்படுத்தப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரியிலிருந்து பச்சூர் ரயிலடி வரை உள்ள தூரம் 30 கிலோ மீட்டருக்கு மேற்பட்டிருப்பதால் நகரப் பேருந்து விட இயலாது.

[1982 ஏப்ரல் 18

(திரு. பெ. சு. திருவேங்கடம், எம். எல். ஏ. அவர்களால் கேட்கப்பட்ட உடுக்குறியிடாத வினா 12519-க்கான விடையைக் காண்க).

கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம்.

1980-81-ல் வேலைக்கு உணவுத் திட்டத்தில் வேலைகள் எடுக்கப்பட்ட கிராமங்களின் பெயர்கள்.

| வரிசை எண்ணும், கிராமத்தின் பெயரும். | எடுக்கப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1. அலங்காரமங்கலம் .. | 1 காந்தமாரியம்மன் குளம் |
| 2. அனியாலை .. | 1 அனியாலை குளம் ஆழப் படுத்துதல், |
| 3. ஆணைவாடி .. | ஆணைவாடி காயாம்பாடி சாலை அமைத்தல். |
| 4. தேவராயன்பாளையம் .. | 1 பள்ளந்தாங்கல் ஆழப் படுத்துதல். |
| 5. எர்ணாமங்கலம் .. | 2 (1) எர்ணாமங்கலம்ஏரி ஆழப் படுத்துதல். (2) எர்ணாமங்கலம் குளம். |
| 6. கெங்கவரம் .. | 1 ரொக்கப்பன் ஏரி ஆழப் படுத்துதல். |
| 7. கடலாடி .. .. | 3 (1) கடலாடி ஆடுதுன்னா ஏரி (2) கடலாடி ஏரி வரத்துக் கால்வாய். (3) கடலாடி நாயக்கன் குளம் |
| 8. கலசபாக்கம் .. | 1 கலசபாக்கம் ஆற்றுக்கால் வாய். |
| 9. விண்ணுவாம்பட்டு .. | 2 (1) விண்ணுவாம்பட்டு ஏரி ஆழப்படுத்துதல். (2) பாசிகுளம் ஆழப்படுத்து தல். |
| 10. காலூர் .. .. | (1) காலூர் ஏரி வரத்துக் கால் வாய். |
| 11. கோவிலூர் .. .. | 3 (1) கோவிலூர் கோமுப்பேரி சிறுபாசனம். (2) கோவிலூர் மாமரத்தூர் சிறுபாசனம். (3) கோவிலூர் பாமண்டி குட்டை. |



1982 ஏப்ரல் 18]

| (1) | (2) |
|---|---|
| 12. லாடவரம் .. .. | 1 லாடவரம் அனியாலை சாலை சல்லிப் போடுதல். |
| 13. மேலாரணி .. .. | 1 மேலாரணி குடிதண்ணீர் குளம். |
| 14. மேல்வில்வராயநல்லூர் .. | 3 (1) நட்சத்திர கோயில் சாலை. (2) மேல்வில்வராய நல்லூர் கொந்தன் வரத்துக் கால் வாய். (3) வாணியர் குளம். |
| 15. காடகம் .. | 2 (1) பாடகம் கருமந்தாங்கல் ஏரி ஆழப்படுத்துதல். (2) முத்தம்மா குளம் (எ) வெட்டி குளம். |
| 16. பூண்டி .. .. | 1 பூண்டி குளம் ஆழப்படுத்து தல். |
| 17. பிராயம்பட்டு .. | 1 பிராயம்பட்டு ஏரி ஆழப் படுத்துதல். |
| 18. சீட்டம்பட்டு .. | 2 (1) சீட்டம்பட்டு ஏரி ஆழப் படுத்துதல். (2) சீட்டம்பட்டு நரசிங்குளம். |
| 19. தென்மகாதேவமங்கலம் . | 2 (1) தென்மாதி மங்கலம் சாராயக்குட்டை. (2) தென்மாதி மங்கலம்பூஜை குளம். |
| 20. வன்னியனூர் .. .. | 1 வன்னியர் குளம் ஆழப் படுத்துதல். |
| 21. கீரனூர் .. .. | 5 (1) கீரனூர் புத்தேரி ஆழப் படுத்துதல். (2) கீரனூர் காளப்பன் ஏரி ஆழபபடுத்துதல். (3) கீரனூர் கோமுட்டேரி குளம ஆழப்படுத்துதல். (4) கீரனூர் அரியாத்தா குளம ஆழப்படுத்துதல். (5) கீரனூர் ஊத்தகுளம் ஆழப்படுத்துதல். |

Y211, 81 N.2 N83.53.1
தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் சென்னை-600 008. 136039